உதயணனின்

சிங்களத்துப் புயல்

சீதை பதிப்பகம்

பதிப்புரை

பண்டையத் தமிழகம் சேர சோழ பாண்டியர்கள் என மூவேந்தர்களால் ஆளப்பட்ட முத்தமிழ் நாடாகத் திகழ்ந்தது. அண்டை நாட்டார் படையெடுப்புக்கு இடம் கொடுக்காமல் அவ்வப்போது சண்டையிட்டாலும், விட்டுக் கொடுத்தும் தொட்டுத் தொடர்ந்தும் நல்லுறவுகளைப் பேணிவந்தனர் மூவேந்தரும். அயலாரையும் புயலாக மாறித் துரத்தியடித்து வலிமையான ஆட்சியை நடத்தினார்கள். மக்களும் நம்பிக்கையோடும், மதிப்போடும் செழிப்போடும் வாழ்ந்தனர். மாற்றார்கள் மண்ணைக் கவரா வண்ணம் நாட்டுப்பற்றுடன் காத்தொழுகினர். எனவே மாற்றார் எளிதில் உள்ளே நுழையாமல் ஒதுங்கியே இருந்தனர்.

எனினும் மூவேந்தரும் அவ்வப்போது அண்டை நாட்டார் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களை அடங்கி இருக்கச் செய்தனர். அண்டை நாடான சிங்களம் தமிழ் மக்களைக் கொண்டு தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டு வந்த நிலப்பகுதியாகும். மூவேந்தர்களும் அவ்வப்போது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தியே வந்துள்ளனர். அடங்கி வாழ்ந்த சிங்களவர் தமிழ்நாட்டின்மீது படையெடுத்ததற்கான சான்றுகள் கிடைத்தில.

தமிழ்மன்னர்கள் படையெடுத்துச் சென்ற நிலப்பகுதிகளை நேரடியாகத் தமது ஆட்சியின்கீழ் கொண்டுவராமல் வென்ற பகுதிகளில் உள்ள சிற்றரசர்களிடமும் ஆதரவளித்தவர்களிடமும் விட்டுவந்தனர். ஆனால் காலப்போக்கில் வல்லாண்மை பெற்றவர்கள் தம்மைத் தாமே சுயாட்சி மன்னர்களாக மாற்றிக் கொண்டுவிட்டார்கள். விடுதலை பெற்ற வேந்தர்களாக உலாவந்தார்கள். அப்படித்தான் உலகத்தையே கட்டியாண்ட தமிழன் தனக்கெனப் பிடித்த நாடுகளை வைத்துக்கொள்ளாமல் தடங்களை மட்டும் பதித்து வந்தான். அப்படியே சிங்களத்திலும் நடந்தது.

tamilebooks.net

தமிழ்மன்னர்கள் சிங்களத்தின்மீது படையெடுத்ததைப் போலச் சிங்களர்கள் தமிழ்மன்னர்கள் மீது படையெடுத்தார்களா என்பதற்கான சான்றுகள் கிடைத்தில. எனினும் துருவித் துருவி ஆராய்ந்ததன் விளைவாக கி.பி. 1166ஆம் ஆண்டு சிங்கள மன்னன் ஒருவன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வந்ததாகவும் பாண்டிய நாட்டின் ஒருபகுதியை வென்று அதனை மாற்று வழியில் இங்குள்ள பாண்டிய சிற்றரசனிடமே விட்டுச் சென்று மறைமுக ஆதாயம் அடைந்ததாகக் காணப்படும் சிறிய குறிப்பினை அடிப்படையாக வைத்துச் **சிங்களத்துப் புயல்** இன்னும் இந்தச் சரித்திர நாவலை நாவலாசிரியர் உதயணன் எழுதியுள்ளார். அவருடைய நுட்பமான ஆய்வும் சரித்திரச் சான்றுகளைத் தெளிவுபடுத்தும் ஆர்வமும் இந்நூலின் மூலம் வெளிப்படுதலைக் காணலாம்.

ஏற்கெனவே பல சரித்திர நாவல்களை எழுதியுள்ள ஆசிரியரின் கைவண்ணம் இந்நாவலில் பளிச்சிடுதலைக் காணலாம். எளிய நடை, தெளிவான தொடர்ச்சி, பழகுதமிழ்ச் சொல்லாட்சி, கருத்துகளைக் கோவையாகச் சொல்லும் முனைப்பு ஆகியன இந்நூலை அலங்கரிக்கின்றன.

அவருடைய பல நாவல்களையும் வெளியிட்டுள்ள எமது பதிப்பகத்தின் மூலம் இந்நூலையும் வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகிறோம். தமிழ் சிங்கள உறவுகளை ஆய்பவர்களுக்கு இந்நாவல் மிகவும் பயன்படும் என நம்புகிறோம்.

பதிப்பகத்தார்

tamilebooks.net

முன்னுரை

சேர சோழ பாண்டியர்கள் தமிழகத்தின் அண்டை நாடான சிங்களத்தைப் போரில் வென்று தமிழராட்சியை நிறுவிய சந்தர்ப்பங்கள் பண்டைய சரித்திரத்தில் நிரம்பவே இருக்கின்றன. ஆனால் சிங்களவர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்து போரிட்டுத் தமிழக ஆட்சியைக் கைப்பற்றியதாகவோ ஆண்டதாகவோ சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறதா என்று பார்த்தால் ஒரே ஒரு காலகட்டத்தைத்தான் சொல்ல முடியும். அது கி.பி. 1166-ஆம் ஆண்டு. அதில்கூட சிங்களவர் தமிழகம் முழுவதையும் கைப்பற்றிவிடவில்லை. பாண்டிய ராஜ்யத்தை மட்டுமே போரிட்டுக் கைப்பற்றினார்கள். கைப்பற்றித் தங்களது நேரடி ஆதிக்கத்தில் ஆட்சி செய்ய முடியாமல் மாற்று பாண்டியமன்னனை அமரவைத்துத் திரை மறைவில் ஆதாயப்பட்டார்கள். இப்படி ஒரே ஒரு அரிதான சம்பவம் கண்ணில்படவே அதை அடிப்படையாக வைத்துக் கொண்டேன். சிறு நாடான சிங்களத்தால் கட்டுக் கோப்பான தமிழகத்தில் எப்படிக் கால் வைக்கவும் கோலோச்சவும் முடிந்தது. இதற்குத் தமிழ் வரலாற்றில் தெளிவான குறிப்புகள் இல்லை. எனவே ஆராய்ந்து தெளிவுபெற வேண்டியிருந்தது. அந்த ஆராய்ச்சிக் காற்றே இங்கே புயலாய் வெளிப் பட்டிருக்கிறது.

இதைப் படித்ததுமே 'இதை ஏற்கனவே சாண்டியல்யன் '**கன்னிமாடம்**' என்ற பெயரில் எழுதிவிட்டாரே? மேத்தா '**சோழ நிலா**' என்ற தலைப்பில் சொல்லி விட்டாரே? என்று யாரும் அவசரமான முடிவிற்கு வரவேண்டியதில்லை. சரித்திரம் படித்தோருக்கு இச்சிங்களப் புயலின் கதைப் பகுதிக்குரிய வித்தியாசத்தை உணர முடியும். கி.பி. 1166 முதல் 1191 வரையிலான 25 ஆண்டுகளில் சோழர், சிங்களர், பாண்டியர் ஆகியோரின் அரசியலில் புயல்வீசி அலைக்கழித்தது. இதை மூன்று பகுதிகளாய்ப் பிரித்தால் முதல் பகுதிகள் சிங்களத்துப் புயல். இரண்டாம் பகுதி **கன்னிமாடம்**. இரண்டும் மூன்றும் கலந்த பகுதி **சோழநிலா**. எனவே குழப்பம் வேண்டாம்.

மேற்சொன்ன கன்னிமாடத்திலும் சோழ நிலாவிலும் நீங்கள் சந்தித்த குலசேகர பாண்டியன், வீரபாண்டியன்,

tamilebooks.net

விக்கிரம பாண்டியன், ராஜாதிராஜன், பராக்கிரம பாகு, இலங்காபுரன், மழவராயன், பெரியபல்லவராயர், அண்ணன் பல்லவராயன் ஆகியோரை இக்கதையிலும் நீங்கள் சந்திக்கிறீர்கள். ஏனென்றால் இவர்களெல்லாம் அந்த 25 ஆண்டுகளுக்குரிய பொதுவான உண்மையான பாத்திரங்கள். மற்றபடி கற்பனை மாந்தர்களாய்க் கடலழகி, ரோகண நங்கை ஆகியோரும் உண்டு.

காலம் சென்ற வரலாற்று அறிஞர்களான பேராசிரியர் கே. நீலகண்ட சாஸ்திரிகள், சதாசிவ பண்டாரத்தார் ஆகியோரது நூல்கள் இக்கதைக்கான வழித் தடயங்களை வகுத்துத் தந்திருக்கின்றன. அந்த வகையில் அந்தப் பெரு மக்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டாக வேண்டும்.

இப்புயலைப் புத்தகமாய் மிக அழகாக வெளிக் கொணர்ந்துள்ள பிரசுரத்திற்கும், நல்லமுறையில் முகப்பு ஓவியத்தை வடித்துள்ள மாருதி அவர்களுக்கும், நேர்த்தியான விதத்தில் அச்சிட்டுள்ள அச்சகத்தாருக்கும் என் மனம் நிறைந்த நன்றி.

சென்னை - 94
24-05-2012

— உதயணன்

tamilebooks.net

சிங்களத்துப் புயல்

(சரித்திர நாவல்)

1

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

— குறள், 467

சோழமண்டல கடற்கரைக்குக் கிழக்கே வங்கக் கடலில் வாலை மீனின் வடிவமாய்த் தோன்றும் அந்த ராமேஸ்வரத்திற்கு உண்டானதொரு வால்போல் நீண்டு சிங்களத்தை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த கூடல் நகரின் கடற்கரையினைக் காமக் கன்னியெனக் கட்டித் தழுவிக் கொண்டிருந்த கடலரசனின் மன்மத லீலைகளைக் கண்டுச் சிரித்துச் சிரித்துச் சிவந்த செவ்வானத்தில் ஆடி அடங்கிய ஆரணங்கு போல் களைத்த நிலையில் ஆழ்ந்து கொண்டிருந்தான் கதிரவன். ராமனின் கால்பட்டு புண்ணியத்தின் பாற்பட்ட ராமேஸ்வரத்திலிருந்த சோமேஸ்வரர் ஆலயத்திலிருந்து எழுந்த சாயங்கால பூசை மணியோசை அக்கூடல் நகர் கடற்கரையில் மெதுவாய் எதிரொலித்து ஓய்ந்தது. வீரியம் குறைந்து கதிரவன் தலை வாயிலில் மறைய மறைய பொற் தகடு போல் பலத்துக் கொண்டிருந்த கடற்கரை வரண்டு போன கன்னியின் அதரங்கள் போல் பொலிவிழந்து கொண்டிருந்தது. மங்கிக் கொண்டிருந்த அப்பிரகாசத்திற்குப் பரிகாரம் செய்வதுபோல் கடலரசனும் தன் அலைகளாகிய கை கால்களால் வெண்நுரைகளை எழுப்பியும் பேரொலிகளை எழுப்பியும் புத்துயிர் அளித்துக் கொண்டிருந்தான். அக்கூடல் நகர் முழுக்க முழுக்கப் பரதவர்கள் மட்டுமே வாழ்ந்து வந்த இடமாயிருந்ததால் தற்போதைய

tamilebooks.net

அந்தி மாலை நேரத்தில் கடற்கரை முழுதும் அவர்களது எண்ணிக்கையே நிறைந்திருந்தது.

கட்டு மரங்களையும் சிறிய படகுகளையும் செலுத்திக் கடலில் நெடுந்தூரம் சென்று நாள் முழுதும் ஈடுபட்டுப் பலதரப் பட்ட கடல்வாழ் இனங்களைக் கொண்டு வந்து கடல் நகர் கரையிலே குவிப்பதும், குவித்த நேரத்திற்குள்ளாகவே அவற்றைக் கலைக்கும் வகையில் பலதரப்பட்ட மக்கள் கூடி விலைபேசி வாங்கிச் செல்வதும், அவர்களிடம் பெற்ற வெள்ளிக் காசுகளைப் பந்தமேற்றி வைத்துக் கொண்டு எண்ணி எண்ணிப் பார்ப்பதும், அதிகப்படியான விலைபேசிப் பெற்றவர்கள் பணங்களை வாங்கி அளவுக்கு அதிகமாவே குடித்துவிட்டுக் கடற்கரை மணலில் இஷ்டப்படி ஆடி ஓடுவதும், கள்ளைப் பெறாதவர்கள் கள்ளைவிட அதிகம் மயக்கும் பெண்களைக் கொள்ளை கொண்டு கட்டிப் பிடித்து விளையாடிப் பற்களைக் காட்டுவதும், இரவு நேரம் ஏறுவதே தெரியாமல் சந்தோஷக் களையுடன் திரிவதும் கூடல் நகர் பரதவர்களின் வாடிக்கை தான் என்றாலும் இன்றென்னவோ அனைவரும் சோர்ந்தவர்களாய்க் காணப் பட்டார்கள். பின்னால் அங்கே நடக்கப் போகும் விபரீதத்தை அவர்கள் தற்போது அறிந்திருக்க முடியாதுதான். ஆனால் அவர்களிடம் காணப்பட்ட வாட்டம் பின்னால் விபரீதத்தை உணர்ந்து கொண்ட மாதிரி இருந்தது.

கரையிலே வந்து இறங்கியவர்கள் தோள்களில் வலைகளை மட்டுமின்றிக் கவலையையும் சுமந்தவராய்க் காணப்பட்டார்கள். அவர்கள் தோளில் சுமந்த வலைகளை வாங்கிக் கடற்கரை மணலில் விரித்து உலர்த்திய பெண்களின் முகங்களில் கவலையே விரிந்திருந்தது. பரதவரிடம் மீன்களை வாங்கித் தமிழகத்தில் பல பகுதிகளுக்கும் கொண்டுசென்று விற்றுப் பிழைத்த வணிகர்க ளான அஞ்சுவண்ணத்தவர் நிரம்பவே வந்திருந்தாலும் அவர்களிடம் சம்பிரதாயமாகவே விலைபேசி விற்ற பரதவர்கள் பந்தங்களைக் கொளுத்தினார்களேயன்றி மகிழ்ச்சித் தீ மூட்டினா ரில்லை. பந்தங்களின்கீழ் அமர்ந்தார்களே தவிர காசுகளைக் கொட்டி எண்ணினாரில்லை. எண்ணாத காரணத்தால் கள்ளை வாங்கும் முயற்சியில் இறங்கவில்லை. களியாட்டம் இல்லாமல் காரிகைகளின் கலகலப்பும் இல்லாமல் கடற்கரையிலே அமைதி சூழத் தொடங்கவே கடலலைகளின் ஓசை பேரோசையாய்க் கேட்டது. அலைகள் கரையிலே மோதினாலும் அங்கிருந்தவர் களுக்கென்னவோ தத்தம் இதயங்களிலேயே மோதித் தாக்குவது போல் கேட்டது. கடலைத் தொட்டிலாகவும் கரையைப் பாயாக வும் கருதும் அப்பரதவர்கள் தற்போது அவ்விரண்டையும் எண்ணிப் பெரு மூச்செறிந்தார்கள். சண்ட மாருதங்கள் வீசிய

tamilebooks.net

போதெல்லாம்கூட துக்கப்படாதவர்கள் தற்போது எதை நினைத்தோ துவண்டுகிடந்தார்கள்.

இரவு நேரம் மெல்ல மெல்ல முகிழ்த்தது. பொன்மயமாய் விளங்கிய சுற்றுப்புறம் அவர்களது மனங்களைப் போலவே இருள் மயமாய் ஆயிற்று. மாலை மறைந்த நேரத்திலேயே மேகங்கள் நிறைந்து தழைத்து விட்டதால் வானத்தில் எங்கோ ஓரிரு நட்சத்திரங்கள்தான் தென்பட்டன. எழில் நிலவு முற்றிலுமாய்த் தென்படவில்லை. கடற்காற்று மற்றும் அலையோசை ஆகிய இரண்டு மட்டுமே இயல்பாய் இயங்கிக் கொண்டிருந்தன.

கவலைகளைச் சுமந்து சிலைகளைப் போல் அமர்ந்திருந்தவர்களில் பலர் கசமுசவென்று பேசத் தலைப்பட்டார்கள். "இது உண்மையாக இருக்குமா?" என்று கேட்டுக் கொண்டார்கள். "அப்படித்தான் கேள்விப் பட்டோம்" என்று சொல்லிக் கொண்டார்கள். "நம் கதி அதோ கதிதான்" என்று வருந்திக் கொண்டார்கள். பீதி பாதியும் சந்தேகம் பாதியுமாய் அவர்களை அரித்துக் கொண்டிருந்த நிலையில் திடீரென அனைவரது கண்களும் கடலின் பக்கம் திரண்டன; விரிந்தன வியப்பால்.

கூடலுக்குத் தெற்கே கடலில் தொலைவில் புள்ளிகளான விளக்குகள் பல தெரிந்தன. அதைக்கண்ட பரதவர்கள் "அதோ அதோ"-என்று பரபரப்படைந்தார்கள். தொலைவில் தெரிந்த அந்த விளக்குகளின் பரிமாணம் சிறிது நேரத்தில் பெரிதாயிற்று. அடுத்த சில நொடிகளில் ஏதோ கடலே பற்றி எரிவதுபோல் பிரம்மாண்டமான தீச்சுவாலையொன்று அதே திசையில் எழுந்தது. "கலம் பற்றிக்கொண்டு விட்டது" என்றார்கள் சிலர். "இல்லை, இல்லை. கலம் பற்றிக் கொள்ளவில்லை. கற்பூரத்தை மலைபோல் குவித்துக் கொளுத்தியிக்கிறார்கள்" என்றார்கள் வேறு சிலர். சர்ச்சைகள் பற்பல நடந்து கொண்டிருக்கையில் பிரம்மாண்டமாய் எரிந்த சுவாலை அணைந்தது. விநோதமான காட்சிகள் தோன்றி மறைந்து கொண்டிருந்த நிலையில் பெரும் பீதிக்கு ஆளான பரதவர்கள், "அப்படியானால் அவை போர் மரக்கலங்கள் தானா?" என்றும் "கேள்விப்பட்டது உண்மைதானா?" -என்றும் பலவிதமாய் வினவிக் கொண்டார்கள். அவர்களது தீர்மானங்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் கடற் பகுதியிலிருந்து 'பூம்பூம்' மென்று கொம்புகள் ஊதப்படும் ஒலிகளும் போர்ச் சங்குகள் ஊதப்படும் ஒலிகளும் பெரிதாக எழுந்தன. அந்த ஒலிகளைத் தொடர்ந்து பற்பல மரக்கலங்கள் கரையை நோக்கி விரைவாக வரவும் தொடங்கின. அதுவரை அமைதியாக இருந்த கடல் பிராந்தியம் திடீரென

tamilebooks.net

உயிர்பெற்றது போல் கடற்கரை மணலில் அமர்ந்திருந்த பரதவர்கள் எழுந்து நானாவிதக் கூச்சலிட்டவாறு நகரை நோக்கி ஓடலானார்கள். கொம்புகள் ஒலி தொடர்ந்து கேட்டது. அடுத்த சில நாழிகைகளுக்கு அப்பிராந்தியத்தில் பலவித அரவங்களும் இரைச்சல்களும் எழுந்தவாரிருந்தன.

கடற்கரைக்குக் கணிசமான தொலைவில் மரக்கலங்கள் நங்கூரமிட்டு நிற்கவும், சிறிய படகுகள் இறக்கப்படவும், கலங்களிலிருந்து பலரும் அவற்றில் இறங்கிக் கரையை நோக்கி நகரவும் தலைப்படலானார்கள். கரையிலே வந்து குழுமியவர்கள் புயலென விரைந்து கூடாரங்களை அடிப்பதிலும், மாமிசங்களை வேகவைத்துப் பதனப்படுத்துவதிலும் ஈடுபட்டார்கள். அக்காரியங்கள் பூரணமாக முடிந்து விட்டபின் அதை உணர்த்தும் பொருட்டு அதிர்வேட்டு ஒன்றும் போடப்பட்டது. அதையடுத்து வாத்தியக் குழுவினர் கடற்கரையில் வெவ்வேறு வாத்தியங்களைத் தாங்கி இசைத்தபடி நின்றார்கள். விதவிதமான வாணங்கள் வானில் விடப்பட்டன. நங்கூரமிட்டு நின்றிருந்த மரக்கலங்களில் பிரதான மரக்கலத்திலிருந்து பெரிய நூலேணி ஒன்று இறக்கப்பட்டது. அந்த ஏணியில் இறங்கினான் ஒரு மனிதன். கலத்தின் அருகில் நின்றிருந்த அழகியதொரு படகில் அமர்ந்தான். படகோட்டிகள் இருவர் துடுப்பு வலித்தார்கள். படகு மணற்மேடிட்ட கரையருகே வந்ததும் அந்த மனிதனைத் தாங்கிக் கொண்டுபோக வீரர்களில் நால்வர் நின்றிருந்தார்கள். அவர்களை நோக்கிய அந்த மனிதன் அவர்களை விலகும்படி கைகளால் சைகை செய்தான். படகை விட்டு இறங்கிச் சர்வ அலட்சியமாக நீரில் நடந்து கரைக்கு வந்தான் அவன்.

ஆறடிக்குக் குறைவில்லாத உயரமும் மூன்றடிக்குக் குறைவில்லாத குறுக்களவும் கொண்டிருந்த அந்த மனிதன் நடந்து சென்றபோது பெரியதோர் அரக்கன் நடந்து செல்வது போலவே இருந்தது. கரிய நிறம் பெற்றிருந்த அவனது முகத்தில் முறுக்கேரிய கரிய மீசை அவனையொரு பயங்கர மனிதனாக அடித்திருந்தது. விலையுயர்ந்த ஆபரணங்களை உடலிலும் விலை பேச முடியாத அலட்சியத்தை முகத்திலும் தாங்கி வந்த மனிதனை வாத்தியங்களும் வேட்டுக்களும் வரவேற்றன. கடற் கரையில் கணக்கற்று நின்றிருந்த வீரர்கள் "இலங்காபுரி மாதண்ட நாயகர் வாழ்க வாழ்க" என்று போட்ட வாழ்த் தொலிகள் அலையோசையை நிகர்த்தன.

சிங்களத்தின் பிரதான படைத் தலைவனும், சிங்கள மன்னன் பராக்கிரம பாகுவின் நம்பிக்கைக்குப் பாத்திர மானவனும், பின்னால் நடைபெற்ற போர்களில் வெற்றி வாகை சூடி நீலக் கடலை வீரர்களின் ரத்தத்தால் சிவப்பாக்கினானென

tamilebooks.net

'மகாவம்ச'த்தினால் பாராட்டப்பட்டவனும், தண்ட நாயகனுமான இலங்காபுரன் இவ்விதமாய்த் தமிழ்மண்ணில் காலடி வைத்து வீரர்கள் அமைத்த எழிற் கூடாரத்தில் பிரவேசித்து அமர்ந்தபோது சிங்களத்து நாட்டியக்காரி பிரவேசித்தாள். மணலே மேடையாய் அலையோசையே வாத்தியமாய் அமைய நடனமாடினாள், அப்பெண். அதை சர்வ சகஜமாகவே ரசித்தான் இலங்காபுரன். நடனத்தை அடுத்து மதுவும் விருந்தும் படைக்கப்பட்டன. அதையும் சாதாரணமாகவே ஏற்றுக் கொண்டான். நங்கூரமிடப்பட்ட படகுகளின் எண்ணிக்கை, கடற்கரையில் இருக்கும் வீரர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை உபதளபதிகள் எடுத்துச் சொன்னார்கள்.

"சரி" என்று மட்டும் சொல்லிக் கொண்டானே தவிர அதிகம் பேசிக் கொள்ளவில்லை.

ஆர்ப்பாட்டங்கள் ஒருவாறு ஓய்ந்தபின் உபதளபதிகளில் மூத்தவனான சிங்கன் இலங்காபுரனை நெருங்கி "ஆலோசணை யைக் காலையில் துவக்கலாம் அல்லவா?" தயங்கியவாறு வினவினான்.

சிங்கனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்து விஷமமாகச் சிரித்த இலங்காபுரன் "சிங்கா, சிங்களத்தை விட்டுப் புறப்பட்டபோது நாளும் நேரமும் பார்த்தோமா?" என்று கேட்டான்.

"இல்லை தளபதி."

"இப்போது மட்டும் ஏன் பார்க்க வேண்டும்" அமைதியாகக் கேட்டான் இலங்காபுரன்.

"அதற்கில்லை. களைப்பாக இருக்குமே என்றுதான் சொன்னேன்?"

"சிங்கா, கூடலிலிருந்து சிங்களம் எவ்வளவு தூரம்?"

"கொஞ்ச தூரம்தான்."

"கூப்பிடு தூரம் என்பார்கள் இல்லையா."

"ஆம் தளபதி."

"அங்கிருந்து புறப்பட்ட என் மரக்கலத்தில் நான் என்ன செய்தேன்??"

"அதாவது . . . ."

"பட்டு மஞ்சத்தில் சயனித்தபடி வந்தேன்."

"அது. . . ."

tamilebooks.net

"அடியாள் ஒருத்தி காலையும் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தாள் . . ."

"ம்."

"கடற்கரைக்கு வந்ததும் நேரே கூடாரத்திற்கு வந்து அமர்ந்தேன். மதுவும் மாவிருந்தும் தரப்பட்டன."

"அதற்கென்ன தளபதி?"

"சிங்கா, கூப்பிடு தூரத்திலுள்ளதோர் ஊரிலுள்ள மஞ்சத்தில் படுத்தபடி பயணம்செய்து, மது அருந்தி விருந்து உண்ட எனக்குக் களைப்பு இருக்குமானால் நானெப்படி தளபதியாக முடியும்."

சர்வ சாதாரண விஷயத்திற்குப் போய் இலங்காபுரன் வியாக்கியானத்தைச் சொன்னாலும் அவனது சுறுசுறுப்பைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை உபதளபதியால்.

"அப்படியானால் இப்போதே ஆலோசனைக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்றான்.

"செய் சிங்கா. களைப்பு என்பது இலங்காபுரனிடம் இல்லாத ஒன்று. நாள் என்றும் வேளை என்றும் இலங்காபுரன் பார்க்க மாட்டான். போகப் போக நீயே அனைத்தையும் புரிந்து கொள்வாய்" என்றான் இலங்காபுரன்.

ஃஃ ஃஃ ஃஃ

நடுநிசி நேரம் போனபின் ஆலோசனை தொடங்கியது. இரவின் தொடக்கத்தில் தழைத்திருந்த மேகங்கள் பரதவர்களைப் போல் அகன்று விட்டிருந்ததால் வானில் சந்திரன் புலப்பட்டது. நட்சத்திரங்களும் தெரிந்தன. நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே தவித்துக் காணப்பட்ட சப்தரிஷி மண்டலத்தைப்போல் சிங்கள வீரர்கள் பலருக்கிடையில் உபதளபதிகள் மட்டும் தனியே ஆலோசனைக்காக மணற்பரப்பில் கூடினார்கள். நிலவுபோல் இலங்காபுரனும் அவர்களுக்கிடையில் வந்தமர்ந்தான்.

"நாம் இப்போது முதன் முதலாகச் செய்ய வேண்டியது இக்கூடல் நகரையும் ராமேஸ்வரத்தையும் நம் வசமாக்கிக் கொண்டு நமது பிரதான தளமாக மாற்ற வேண்டியதுதான் இல்லையா?" என்று ஆரம்பித்தான் ஓர் உபதளபதி.

"தமிழர்களோடு மோதப் போகும் நமது நடவடிக்கை எந்த அளவிற்குக் கைகூடும் என்பதை முதலில் ஆராய்வோம்" என்றான் சிங்கன்.

tamilebooks.net

சிங்கனின் பேச்சைக் கேட்டுச் சிரித்தான் இலங்காபுரன்.

"சிங்கா, உனக்கு நமது நோக்கம் குறித்துச் சந்தேகம் இருக்கிறதா?" என்று வினவவும் செய்தான்.

"ஆலோசிக்கலாம் என்பதற்காகச் சொன்னேன்" என்று இழுத்தான் சிங்கன்.

"சிங்கா, எந்த ஒரு காரியத்தையும் நன்றாக எண்ணிய பிறகுதான் துணிய வேண்டுமே தவிர துணிந்தபின் எண்ண முயற்சிக்கக் கூடாது. நம்முடைய இந்த முயற்சி நன்றாக எண்ணித் துணியப்பட்ட முயற்சி. நமது மாமன்னர் பராக்கிரம பாகு எண்ணாமல் எதிலும் இறங்குவதில்லை. ஞாபகமிருக்கட்டும்."

ஆணித்தரமாகக் கூறி நிறுத்தினான் இலங்காபுரன். அதையடுத்துக் கூடல் நகரையும் ராமேஸ்வரத்தையும் கைக்கொள்வது பற்றிப் பேச்சு திரும்பியது.

"கூடலும் ராமேஸ்வரமும் நமக்கு மிக முக்கியம். தமிழகத்திற்கும் சிங்களத்திற்கும் பாலம் போல் அமைந்துள்ள இவ்வூர்கள் நமது முயற்சிகளுக்கான முக்கியப் பாதை. இது நம் வசம் இருந்தாலொழிய நமது முயற்சிகள் எளியவைகளாய் அமையாது. அதற்கான வழிகளைச் சொல்லுங்கள்" என்றான் இலங்காபுரன்.

உபதளபதிகள் பலவாறு சொல்லலானார்கள்.

"நமது படைப்பிரிவு ஒன்றை அனுப்பி போரிட்டு அழிப்போம்."

"மரக்கலங்களை இத்தீவினைச் சுற்றிலும் நிறுத்தி அனைவரையும் வளைத்து அழித்து விடுவோம்."

"அனைவரையும் தமிழகத்தை நோக்கி விரட்டிவிட்டால் நல்லது. அவர்களால் இங்கு தொல்லை விளையாது."

இப்படிப் பலரும் பலவிதமான உபாயங்களைச் சொன்னார்கள் என்றாலும், அவற்றில் ஒன்றும் இலங்காபுரனைக் கவரவில்லை.

"ஏதாவது ஒரு வகையில் போர் செய்ய வேண்டும் என்றுதானே சொல்கிறீர்கள்?" என்று கேட்ட இலங்காபுரன் "இந்தக் கூடலில் வசிக்கிறவர்கள் யார்?" என்று வினவினான்.

"பரதவர்கள்" எனறார்கள் தளபதிகள்.

"சதா கடலில் திரியும் பரதவர்கள் பகல் இரவு என்று பாராமல் கடற்கரையிலேயே கிடப்பவர்கள். அப்படிப் பட்டவர்களில் ஒருவராவது தற்போது இருக்கிறார்களா?"

tamilebooks.net

"இல்லை."

"ஏன் இல்லை?"

"அதாவது . . . ."

"நமது வரவை உணர்ந்து ஓடியிருக்க வேண்டும்."

"ஆம்"

"ஏன் ஓட வேண்டும்?"

"படைகள் என்றால் பயந்து ஓடுவது இயல்புதானே தளபதி?"

"நானும் அதைத்தான் சொல்கிறேன். பயந்து ஓடியிருக்கிறார்கள். இதுவரை எந்த எதிர் நடவடிக்கையிலும் இறங்கவில்லை.

"அதனால்?"

"நம்மை எதிர்க்கும் நிலையில் அவர்கள் இல்லை. இவர்களோடு போரிட வேண்டுமா நாம்? படைக்கலன்களை வீணாக்க வேண்டுமா? நேரத்தை விரயமாக்க வேண்டுமா?"

"அப்படியானால் வேறு. . ."

சொன்னான் இலங்காபுரன். உபதளபதிகள் வியந்து போனார்கள்.

2

"முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படிபயனும் பார்த்துச் செயல்"

— குறள் 676

கூடல் நகரையும் ராமேஸ்வரத்தையும் தன் வசப்படுத்த இலங்காபுரியின் தண்டநாயகன் கூறிய வழியினைக் கேட்டு அவனது உபதளபதிகள் வியந்தார்கள் என்றால் அதில் காரணமில்லாமலில்லை. அவ்வளவு எளிமையாக இருந்தது வழி. ஏற்கனவே பரதவர்களின் நிலையை வேறு இலங்காபுரன் அலசிக் காட்டியிருந்தானாதலால் தற்போது அவன் கூறிய உபாயம் எளிதில் வெற்றி பெறும் என்று தோன்றியது உபதளபதிகளுக்கு.

தற்போது ஓர் உபதளபதி கேட்டான்.

"தளபதி, பரதவர்களின் தலைவனை அழைத்து எல்லோரையும் நம்மிடம் சரணடையும் படியும் தவறினால் அனைவரையும் அடியோடு அழித்துவிட நேரிடும் என்றும் கூறச்

tamilebooks.net

சொல்கிறீர்கள். அப்படியே நாமும் சொல்லும் பட்சத்தில் பரதவர்கள் தற்போதிருக்கும் நிலையில் கட்டாயம் சரணடைவார்களே தவிர மறுக்க மாட்டார்கள். ஆனால் அவ்வாறு சரணடையும் அவர்களை வைத்துக்கொண்டு நாமென்ன செவ்வது?"

"இரண்டு வழிகள் இருக்கின்றன" என்றான் இலங்காபுரன்.

"இரண்டு வழிகளா?"

"ஆம். இங்கே கூடலிலும் ராமேஸ்வரத்திலும் தங்கும் வீரர்களுக்குச் சமைத்துப் போடவும் வேண்டிய வசதிகளைச் செய்து முடிக்கவும் ஆட்கள் தேவை."

"இவர்களில் சிலரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிறீர்களா?"

"ஆம். இது முதல் வழி. பிறகு நமது சிங்கள நாட்டில் உள்ள புத்த விஹாரங்களின் நிலை உங்களுக்குத் தெரியும்."

"அதாவது . . . ."

"இந்தத் தமிழர்களின் ஈழப்படையெடுப்பின் போது அநியாயமாக அழிக்கப்பட்ட அவை இன்னும் புதுப்பிக்கப் படாமல் இருக்கின்றன. அவைகளை அப்படியே விட்டு விடுவதா?"

"பரதவர்களைக் கொண்டு. . . ."

"ஆம். தமிழர்கள் அழித்தவற்றைத் தமிழர்களைக் கொண்டே புதுப்பிப்போம். அதுதான் பொருத்தமானது. இது இரண்டாவது வழி" என்றான் இலங்காபுரன்.

திட்டம் கச்சிதமர்க இருந்ததால் யாரும் மறுப்பு தெரிவிக்கவில்லை. நள்ளிரவில் துவங்கிய ஆலோசனை சிறிது நேரத்திலேயே முடிந்தது.

விடிந்தவுடன் பேரிகைகளை இடியென முழக்கி பரதவர்களின் தலைவனுக்கு அழைப்பு விடுத்தார்கள் சிங்கள வீரர்கள். ஆனால் தலைவன் என்று சொல்லிக் கொண்டு எவரும் வராததால் சிங்கள வீரர்கள் பேரிகைகளுடன் நகரில் அனைவரையும் சரணடையும்படி கட்டளையிட்டார்கள். கூடல் நகர மக்கள் என்றுமே கேட்டிராத கட்டளையைக் கேட்டார்க ளாதலால் கதி கலங்கினார்கள், பொழுது விடிந்தாலும் தங்கள் வாழ்வில் இருளே சூழ்ந்து விட்டதாகக் கருதினார்கள்.

சிங்களவரின் கொடுமைக்குப் பயந்து பலர் தத்தம் உடமைகளோடு சரணடைந்தார்கள். அவர்களைத் தங்கள்

tamilebooks.net

வீரர்களுக்கு உதவ நியமித்துக் கொண்டார்கள் உபதளபதிகள். அதே சமயம் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகக் கணிசமான மக்கள் சரணடைய மறுத்ததால் சிங்களவர் நாச வேலைகளில் இறங்கலானார்கள்.

எதிர்ப்புத் தெரிவித்த தமிழர்கள் கொல்லப்பட்டும் சிறை பிடிக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டார்கள். சில இடங்களில் குடியிருப்புகள் கொளுத்தி நாசம் செய்யப்பட்டன. ஆலயங்களில் ஒளிந்தவர்கள் அவற்றோடு சேர்த்து அழிக்கப்பட்டார்கள். பெண்களில் பலர் மானபங்கமடையவும் அங்கஹீனப்படவும், நேர்ந்தது. ஆயுத பலமும், ஆள்பலமும், போர் வெறியும், கட்டுப்பாடற்ற போக்கும் நிறைந்திருந்ததால் சிங்களப் படைகள் அத்தீவின் மக்களை எளிதில் ஒடுக்கினார்கள். எதிர்ப்புகாட்டிச் சிறைப் பட்டவர்களும் அங்கஹீனமடைந்தவர்களும் இரண்டு மரக்கலங்களில் சிங்களத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

தமிழர்களின் எதிர்ப்பு வாசனை பூரணமாக அகற்றப்பட ஆறேழு நாட்களாயின. அதற்குப்பின் மரக்கலங்களில் வந்திருந்த சிங்களப் போர் வீரர்கள் அனைவரும் கடலிலும் ராமேஸ்வரத்திலும் முழுதுமாக ஆக்கிரமித்துக் கொண்டார்கள். சோமேஸ்வரர் ஆலயத்திற்கருகே இலங்காபுரனுக்குப் பாசறை போடப்பட்டது.

அனைத்தும் முடிந்தபின் அனைவரும் பாசறையில் கூடி உல்லாசமாகக் கழித்தார்கள். பிறகு அவர்களது இரண்டாவது கட்ட ஆலோசனை துவங்கியது.

"முதல் வெற்றியை அடைந்துவிட்டோம்" என்று ஆரம்பித்தான் சிங்கன்.

"தவறு. முதல் நஷ்டத்தை அடைந்து விட்டோம்" என்றான் இலங்காபுரன்.

"நஷ்டமா?" வியப்புடன் வினவினான் சிங்கன்.

"ஆம். ஒருவித பாதுகாப்புமற்ற ஒரு சாதாரணத்தீவைப் பிடிக்க ஆறு நாட்களுக்கு நமது சக்தியை உபயோகித்தோமே, அது இலங்காபுரனைப் பொறுத்தவரை ஒரு நஷ்டம்தான்."

"ஓரிரு நாட்களிலேயே முடித்திருக்கலாம். ஆனால் அப்படி முடிய வேண்டுமானால் நாச வேலைகளை நிரம்பச் செய்ய வேண்டி வந்திருக்கும். அப்படிச் செய்திருந்தால் கூடலும் ராமேஸ்வரமும் சீரழிந்து போயிருக்கும். அப்படி ஆகக்கூடாது என்பதால்தான் ஒவ்வோரிடத்திலும் எச்சரிக்கை விடுத்து சரணடைய நேரமும் அளித்துக் காத்திருந்து செயல்பட்டோம். இவையெல்லாம் தளபதிக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்" என்றான் ஓர் உபதலைவன்.

tamilebooks.net

இலங்காபுரன் இதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. கண்கள் இரண்டையும் மூடிக் கொண்டு முறுக்கேறிக்கிடந்த மீசையைத் தடவியபடி அமர்ந்திருந்தான். அபாயகரமானதும் ஆழ்ந்த நோக்கம் கொண்டதுமான யோசனைகளை உருவாக்கும் போதெல்லாம் இலங்காபுரன் இவ்வாறு நடந்து கொள்வதை உணர்ந்திருந்த உபதளபதிகள் அவனாகப் பேசும் வரை மௌனமாக இருந்தார்கள்.

இலங்காபுரன் கண்களைத் திறந்து "சரி. இனி நமது நோக்கம் பற்றிப் பேசுவோம். நாம் சிங்களத்தைவிட்டு எதற்காகப் புறப்பட்டோம் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்" என்று கூறி நிறுத்தினான்.

"எதற்கும் சற்று விரிவாகக் கூறினால் நல்லது" என்றான் ஓர் உபதலைவன்.

"உப தளபதிகளே! தங்களுக்குள் சண்டைவிட்டு மாண்டு போவதென்பது தமிழர்களுக்குச் சகஜம் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படியொரு சண்டை தற்போது பாண்டிய நாட்டில் நடந்து வருகிறது" என்றான் இலங்காபுரன்."

சிங்கன் குறுக்கிட்டு "நீங்கள் குறிப்பிட்ட சண்டை பாண்டிய மன்னர்களுக்கிடையிலா?" என்று கேட்டான்.

"ஆம். பராக்கிரம பாண்டியன்தான் தற்போது மதுரையின் மன்னன். அவனுக்கும் அவனது தாயாதியான குலசேகர பாண்டியனுக்கும்தான் தற்போது பெரும் பூசல் உண்டாகியிருக்கிறது. பராக்கிரம பாண்டியர் நமது சக்கிரவர்த்திகளிடம் உதவி கோரியிருக்கிறார்."

"பராக்கிரம பாண்டியர் மதுரையின் மன்னராக இருக்கிறாரென்றால் அவரிடம் சகலவசதிகளும் இருக்க வேண்டுமல்லவா? . . ." என்று கேட்டான் சிங்கன்.

"அதனாலென்ன?"

"அப்படியிருந்தும் குலசேகர பாண்டியனை ஒடுக்க அவரால் முடியவில்லையா?"

"சிங்கா, சிங்கத்திடம் பெரும் பலம் இருக்கலாம். ஆனால் அத்தனைப் பெரிய பலமும் ஒரு சாதாரண நரியின் தந்திரத்தால் இருக்குமிடம் தெரியாமல் போய்விடும்."

"குலசேகர பாண்டியனை நரி என்கிறீர்களா?"

"அவன் கடைந்தெடுந்த குள்ள நரி. அதில் சந்தேக மெதுவும் கிடையாது. ஆகவேதான் நாடாளும் மன்னனின் முன்னால் சமமாக நின்று எதிர்க்க முடிகிறது. அத்துடன் அவனுக்குப்

tamilebooks.net

பலரது ஆதரவு இருந்து வருகிறது. பராக்கிரம பாண்டியனின் பக்கத்தில் இருந்துகொண்டு அவனுக்கே துரோகம் செய்யும் கயவர்களில் பலர் தற்போது குலசேகர பாண்டியனின் நண்பர்களாக ரகசியமாகவும் பகிரங்கமாகவும் இருந்து வருகிறார்கள். அதனால்தான் குலசேகரன் குலங்கெடுக்கும் முயற்சியில் தெம்புடன் இருந்து வருகிறான்..."

"அப்படியானால் அவர்களை எதிர்கொள்ளும் நமது முயற்சி அவ்வளவு எளிதாக இருக்காது இல்லையா தளபதி? பலமான எதிர்ப்பை எதிர்பார்க்கலாம் அல்லவா?" என்று கேட்டான் உபதளபதி ஒருவன்.

"உபதளபதி, நாமிருக்கும் இந்த ராமேஸ்வரத்திலும் கூடலிலும் இருந்தவர்கள் வெறும் பரதவர்கள். படைவீரர்கள் அல்லர். ஆயுதம் எடுத்து முறையாகப் போரிடவும் தெரியாது. அவர்களை ஒழுங்குபடுத்தி இயக்கும் தலைவனும் இங்கில்லை. அப்படி இருந்தே அவர்கள் நமக்குக் காட்டிய எதிர்ப்பு எப்படி இருந்தது என்பதைக் கவனித்தாய் அல்லவா? அப்படி இருக்கும்போது மண்டலங்களாகவும், வளநாடுகளாகவும், சிற்றூர்களாகவும் பிரிக்கப்பட்டுச் சிற்றரசர்களாலும் காவல் அதிகாரிகளாலும் முறையாகப் பரிபாலிக்கப்பட்டுவரும் தமிழகத்திலிருந்து சாதாரணமான எதிர்ப்பையா எதிர்பார்க்க முடியும்? இந்தத் தமிழகம் உயர்ந்தாலும் சரி, தாழ்ந்தாலும் சரி அதற்கு இந்த அமைப்புதான் அடிப்படைக் காரணமாக அமையும்."

இவ்வாறு விளக்கிவிட்டு அனைவரது முகங்களையும் கவனித்தான் இலங்காபுரன். அவை எந்தவிதக் குழப்பமும் இல்லாமல் தெளிவாக இருந்ததைக் கொண்டு மகிழ்ச்சி கொண்டான். சிறிது நேரம் வரை பேசாமல் கடற்பகுதியை நோக்கினான். அவனது நெஞ்சைத் தாலாட்டுவது போல் கடற்காற்று ரம்மியமாக வீசி அவனைத் தழுவி ஓடியது. கூடல் நகரின் கோடியில் உயர்ந்து நின்ற கலங்கரை விளக்கத்தின் மேலே பெரிதாய் எரிந்த எண்ணை விளக்கும் சோமேஸ்வரர் ஆலயத்தின் மூல கோபுரத்தின் உச்சியில் எரிந்த அகல் விளக்கும் அவனைப் பார்த்துக் கண்சிமிட்டுவதுபோல் படபடத்தன. நிலவைச் சுற்றிக் கிடந்தப் பஞ்சு மேகங்கள் சில அவனிடம் தூது சொல்ல வருவதுபோல் நகர்ந்து வரத்துவங்கின. படைப் பாசறைகளில் இருந்த யானைகளில் ஒன்றிரண்டு அந்த அகால வேளையில் ஓலமிட்டது அமைதியான குரலில் பயங்கரமாக எதிரொலித்தாலும் அந்த ஓலம் தன் படைகளை நினைவூட்டியதாலோ என்னவோ உவகையே கொண்டான் இலங்காபுரன்.

tamilebooks.net

பேச்சு மீண்டும் தொடர்ந்தது. சிங்கன் கேட்டான்:

"நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன?"

"குலசேகர பாண்டியனை ஒடுக்க வேண்டும். . . ?"

"ஒடுக்க வேண்டும் என்றால். . . ?"

"சிறைப்பிடித்து சிங்களத்திற்குக் கொண்டு போக வேண்டும். அல்லது கொன்று இக்கடலில் எரிந்துவிட வேண்டும். பராக்கிரம பாண்டியர் ஆட்சிபுரிய அமைதியான தொரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். . . ?"

"அப்படியானால் பாண்டிய நாட்டில் தற்போது நிலவும் நிலைமைகளை அறிய வேண்டியது அவசியமாகிறது" என்றான் சிங்கன்.

"ஒற்றர்களை உடனடியாகப் பாண்டிய நாட்டிற்கு அனுப்ப வேண்டியதுதான்" என்றான் ஓர் உபதளபதி.

"ஒற்றர்களை அனுப்ப வேண்டியது உண்மைதான். ஆனால் பாண்டியன் நாட்டிற்கல்ல, சோழ நாட்டிற்கு" என்றான் இலங்காபுரன்.

"என்ன, சோழ நாட்டிற்கா?" என்று அனைவரும் ஒரு சேரக்கேட்டார்கள்.

"நண்பர்களே, ஒரு செயலைச் செய்கிறோமென்றால் அதன் முடிவைப்பற்றி மட்டும் யோசிக்கக்கூடாது. இடையில் வரக்கூடிய இடையூறுகளைப் பற்றியும் ஆராய வேண்டும். பின் விளைவுகளைப் பற்றியும் ஆராய வேண்டும். பின் விளைவுகளையும் யோசித்துப் பார்க்க வேண்டும் . . ."

"இதற்கும் ஒற்றர்களைச் சோழ நாட்டிற்கு அனுப்புவதற்கும் என்ன சம்மந்தம்?" கேட்டான் சிங்கன்.

"சிங்கா, தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ள தமிழர்களுக்கு எந்த அளவிற்குத் தெரியுமோ அந்த அளவிற்குத் தங்களுக்குள் உதவிக் கொள்ளவும் அவர்களுக்குத் தெரியும். . ."

"சரி. . ."

"பாண்டியர்களின் பூசல்களில் சிங்களவரான நாம் தலையிடுகிறோம் என்றால் பக்கத்தில் இருப்பவர்கள் சும்மாவா இருப்பார்கள்?"

"அதாவது. . ."

"சோழர்களும் தமிழர்கள்தான் பாண்டியர்களைப் போல். ஆகவே தமிழ் நாட்டில் சிங்களத்தினர் காலடி எடுத்து வைக்கும்போது ஒன்று சேர்ந்து கொள்வார்கள். பாண்டியரின்

tamilebooks.net

உதவிக்கு இச்சோழர்கள் அழைக்கப்பட்டும் வரலாம். அப்படி நிகழுமானால் அவர்களையும் சமாளிக்க வேண்டிய நிலை நமக்கு வந்து சேரும் இல்லையா?"

"உண்மைதான் தளபதி. . ."

"பாண்டியர் பூசலில் தலையிடும் நமக்குச் சோழர்களால் இடையூறு உண்டாக வாய்ப்புண்டு. அதை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். பாண்டியரது பூசலைத் தீர்த்தபின் நடக்கக் கூடிய பின் விளைவுகளை யோசித்துப் பார்ப்பதும் அவசியம். ஆகவே கங்கைகொண்ட சோழபுரத்திற்குத்தான் ஒற்றர்களை உடனடியாக அனுப்பவேண்டும் சிங்கா. . ."

"அனுப்பி?"

"சோழர்கள் பாண்டியர்களுக்கு உதவும் நிலையில் இருக்கிறார்களா என்பதை அறிய வேண்டும். . ."

"தங்களுக்குள் உதவிக் கொள்ளக் கூடியவர்கள் தமிழர்கள் என்று தாங்கள்தான் சொன்னீர்களே. . ."

"நான் அவர்களது பண்பைச் சொன்னேன். யாரிடம் வேண்டுமானாலும் பண்பிருக்கலாம். ஆனால் அப்பண்பு நிறைவேற வேண்டுமானால் அதற்கேற்ற சூழ்நிலை நிலவ வேண்டுமல்லவா?"

"அதாவது. . ."

"தர்மம் செய்வது ஒருவனது பண்பு என்று வைத்துக் கொள். அந்த தர்மத்தை அவன் செய்ய வேண்டுமானால் பெற்றுக் கொள்வதற்கு ஆட்கள் இருக்க வேண்டுமல்லவா?"

"உண்மைதான் தளபதி. . ."

"சோழர்கள் தற்போது உதவும் நிலையில் இல்லை என்று கேள்விப்பட்டேன்."

"ஏன்?"

"சோழ மன்னன் இரண்டாம் ராஜராஜன் மரணமடைந்து விட்டதாகச் செய்தி கிடைத்தது. . ."

"அவன் இறந்தால் என்ன?"

"நாட்டை யார் ஆள்வது?"

"மக்கள் இல்லையா அவனுக்கு?"

"மகன் இருக்கிறான். . ."

"பின் என்ன?"

tamilebooks.net

"வயது ஐந்து தானே ஆகிறது?"

"உண்மையாகவா?"

"ஆம் சிங்கா, சோழ அரியணையில் ஏறச் சரியான ஆள் அங்கே இல்லை. ராஜராஜனோடு இளவலாய் இருந்து வந்தவன் அரியணை ஏற முடியாமல் இருக்கிறான்."

"ஏன்?"

"தெரியவில்லை. சோழநாட்டில் ஏதோ பலமான சூது நடக்கிறது சிங்கா. அது எப்படிமுடியும் என்று புரியவில்லை. அதையெல்லாம் அறிந்து வரத்தான் ஒற்றனை அனுப்ப விரும்புகிறேன். நான் ஊகித்தபடி அங்கே நிலைமைகள் இருந்து விட்டால் நம்முயற்சி மிகவும் எளிதாகிவிடும், சோழ நாட்டை ஒரு வழியாக்கி விட்டே பாண்டிய நாட்டில் நாம் காலடி எடுத்து வைக்கலாம்." என்று கூறிக் கொண்டே போனான் இலங்காபுரன். அவனது முகம் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கியதைக் கண்ட உபதளபதிகள் மௌனமானார்கள்.

கனவுலகில் இருந்து இலங்காபுரன் விடுவிக்கப்பட்டான். தொலைவிலிருந்து கேட்ட அர்த்த ஜாமபூசை ஒலியினால் அவன் பேச முற்பட்டதும், "ஒற்றர் பிரிவினரை அனுப்பட்டுமா?" என்று கேட்டான் சிங்கன்.

சற்று யோசித்த இலங்காபுரன், "மிகவும் எச்சரிக்கையாகச் செய்ய வேண்டிய காரியம் இது. சோழ நாட்டு நிலைமைகளைத் தெரிந்து கொள்வது மட்டும் முக்கிய வேலை அல்ல. நாம் ஒற்றறிகிறோம் என்பதே தெரியாமல் வைத்திருக்க வேண்டியது முக்கியம். ஆகவே உபதளபதிகளில் ஒருவரையே ஒற்றனாக அனுப்ப ஏற்பாடு செய் சிங்கா" என்று கூறவும் விரைவிலேயே அதற்கான ஆயத்தத்தையும் செய்து முடித்தான் சிங்கன்.

அப்போது பாசறைக்கு வெளியே சலசலப்பு எழுந்தது.

சிங்கள வீரர்கள் சிலர் உள்ளே நுழைந்தார்கள்.

"என்ன கூச்சல் அங்கே? என்ன நடந்தது" என்று விசாரித்தான் இலங்காபுரன்.

"ஐயா, நமது அறிவிப்புகளைக் கேட்டும் நம்மிடம் சரணடையாமல் இத்தனை நாட்களாக மறைந்திருந்தவள் ஒருத்தியைப் பிடித்திருக்கிறோம். அவள் ஏதேதோ பேசிப் பெரும் சாகசம் செய்கிறாள். தங்களைக் காண வேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததால் இழுத்து வந்திருக்கிறோம். உள்ளே கொண்டு வரவா? அல்லது அட்டில் சாலைக்குச் சோறு சமைக்க அனுப்பி விடவா?" என்று கேட்டான் சிங்கள வீரன்.

tamilebooks.net

"அவளை இங்கே கொண்டு வா?" என்று கட்டளை இட்டான் இலங்காபுரன்.

அவர்கள் கொண்டு வருவதற்கு முன்பாகவே அங்கு வந்து நின்றாள் ஒரு பேரழகி.

3

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

— குறள் 504

கட்டளையிட்டுக் கொண்டிருக்கும்போதே கட்டுக்களை உதறிவிட்டு வந்த குதிரையைப் போல் தன் பாசறைக்கு வந்து நின்ற கட்டழகியைக் கண்டான் இலங்காபுரன். கண்களைப் பார்த்த கோணத்திலிருந்து அகற்ற முடியாமல் அப்படியே நிலைத்து விடும்படி ஆகிவிட்டது சிங்களத்தின் தண்ட நாயகனுக்கு. அழகி என்றும் பேரழகி என்றும் வர்ணிக்கப்பட்டுப் பல பெண்கள் சிங்களத்து அந்தப்புரத்திலும் அங்காடிகளிலும் தனக்கு முன்னால் நிறுத்தப் பட்டதைக் கண்டிருக்கிறான் அவன். ஆனால் அப்போதெல்லாம் வந்திராத வியப்பும் மலைப்பும் இக்கட்டழகியைக் கண்ட நேரத்தில் அவனுக்கு வந்து சேர்ந்தன.

அகராதியில் உள்ள வார்த்தைகளுக்கெல்லாம் அவன் உதாரணங்களைக் கண்டிருந்தான். ஆனால் அப்படிக் கண்ட உதாரணங்களையெல்லாம் உண்மையாகவும் பொருத்தமாகவும் அவன் கருதியதில்லை. ஆனால் தற்போது அழகு என்ற சொல்லுக்கு உதாரணம்போல் நின்ற நேரிழையைக் கண்டபின் அதன் பொருத்தத்தைப் பரிபூரணமாக உணர்ந்தான். உணர்ந்து கொண்டதை நம்புவதற்கும் அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. கணநேரத்தில் சித்தத்தை மயக்கிவிட்ட அச்சிங்காரி மட்டும் சர்வ சகஜமாகவே பாசறையின் வாசலில் நின்றாள்.

பசுமை நிறைந்த மலை உச்சியில் செழித்து வளர்ந்த பூச்செடியைப் போல் வளமான மேனியும் வண்ண வண்ணமான உடுப்புகளும் கொண்டிருந்தாள் அப்பூங்கொடி. கிடைக்கப் பெற்ற அழகை வளர்க்க மட்டுமே வாழுகின்றவள் போல், இருந்தாளாதலால் ஒருவித குறைவையும் அக்காரிகையிடம் காணமுடியவில்லை. படைப்பில் அங்கங்கள் அனைத்துமே அளவு சிதறாமல் அமைந்திருந்ததாலோ என்னவோ அவளோடு ஒப்புமைப் படுத்திப் பார்க்க எதையும் இலங்காபுரனால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

tamilebooks.net

கூடலில் காலை வைத்த நேரம் அவனைப் பொறுத்தவரை நல்ல நேரமாகத்தான் இருக்கவேண்டும். கடல் கண்டு, கலைவிருந்து கண்டு, காம்போச நாட்டின் கனிரசம் கண்டு, கனிசமான நாவிருந்தும் கண்டு, கூடல் மண்ணின் ஆதிக்கமும் கண்டவனுக்கு தற்போது கட்டழகியின் காட்சியும் கிடைத்ததால் விண்டுவிண்டு விழுங்கும் பராரியைப்போல் திக்குமுக்காடினான் அந்த ஆறடி ஆடவன். வாசலில் வந்து நின்ற வனிதையோ சாதாரணப் பெண்தான். ஆகவே பெண்களுக்குரிய சாதாரண இயல்பே அவளிடம் வெளிப்பட்டது. தன்னை ஓர் ஆடவன் உற்று நோக்கிக் திக்கித் திணறுகிறான் என்றால் அதற்கு எது காரணமாக இருக்க முடியுமோ அதை அவளும் தற்போது உணர்ந்து கொண்டு சில வினாடிகளுக்கு மோகனச் சாரலினை வீசியபடியே இருந்தாள். மயங்குவதற்கு ஒருவன் கிடைத்து விட்டால் தங்களுக்கு வேலை குறைவு என்று எண்ணுபவர்கள் பெண்களாதலால் தற்போது இத்தெரிவைக்கும் அதிக வேலை இல்லாதிருந்தது.

சில கணங்கள் அப்பாசறைப் பகுதி சிலையெனச் சமைந்து விட்டது. இலங்காபுரன் சற்று தெளிந்த பின் சுற்றிலும் ஒரு முறை நோக்கினான். அக்கட்டழகிக்குப் பின்னால் நின்றிருந்த சிங்கள வீரர்கள் அவளது அத்துமீறலை விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் போகும் சங்கடமான நிலையில் நின்றார்கள். அதையெல்லாம் கண்டபின் பூரணமாகத் தெளிந்து விட்ட இலங்காபுரன் அப்பெண்ணை உரிய தோரணையில் பார்த்து "உன் பெயரென்ன பெண்ணே?" என்று கேட்டான் சாதாரணக் குரலில்.

அவள் சினந்துவிட்ட காரணத்தால் சிவந்து விட்டிருந்தாள் செண்பகமலர்போல். அச்சினச் சிவப்பு இன்னும் இருந்ததால் அவள் செவ்விதழ்களைத் திறந்தபோது வெளிப்பட்ட வார்த்தைகளும் சூடாகவே இருந்தன.

"வாசலிலேயே நின்று கொண்டுதான் நான் போக வேண்டுமா? உள்ளே உட்கார இடம் கிடையாதா?" என்று தன் நிலை, சுற்றுப்புறம் ஆகியவற்றை அறியாதவள் போல் இயல்பாகவும் சூடாகவும் கேட்டாள் அவள்.

இதைக் கேட்டதும் இலங்காபுரனுக்குச் சினம் தலைக் கேறி கோப வார்த்தைகள் நாக்களவில் வந்துவிட்டன. ஆனால் திடீரென அடக்கிக்கொண்ட அவன், "இலங்காபுரனோடு பேசுவதற்கு இடம் கேட்டவர்கள் இதுவரை யாருமில்லை பெண்ணே தெரியுமா" என்று நிதானமாகக் கேட்டான்.

"அதற்கு நான் என்ன செய்யட்டும்?" என்றாள் அவள்.

tamilebooks.net

அந்தப் பதில் அவனை அசரவைத்தது. அது மட்டுமின்றி அவள் மீது ஓர் அக்கறையும் உண்டாக்கியது. அவள் சாதாரணமானவளாக இருப்பாள் என்று தோன்றவில்லை. தன் வீரர்கள் அவளிடம் உண்டாக்கிய கெடுபிடிகளையும் மீறி அவள் தன்னிடம் அஞ்சாமலும் சகஜமாயும் பேசுவதைக் கண்ட அவனுக்கு அவள்மீது ஓர் ஈடுபாடு ஏற்பட்டது. அவளிடம் அவசரப்படலாகாது என்று தீர்மானித்துக் கொண்டான். ஒருவனைச் சந்திக்க நேரும்போது அவசரத்திற்கு ஆளாகாமல் அவனிடம் உள்ள குணங்களையும் குற்றங்களையும் அறிந்து இரண்டில் எது மிகுதியாக ஏற்றுகொள்வதுதான் விவேகமானது என்று அறிவுறுத்தப்பட்ட வள்ளுவன் நெறிக்கு ஏற்ப தெரிந்து தெளிய விரும்பினான் அவன்.

எனவே அவருக்குப் பின்னால் நின்ற வீரர்களையும் பாசறையில் குழுமியிருந்த உபதளபதிகளையும் விலகும்படி கட்டளையிட்டான். அவர்கள் அகன்ற பின் உள்ளே இருந்த ஆசனம் ஒன்றில் அவளை அமரும்படிச் சொன்னான். பூ பெயர்ந்து பாத்திரத்தில் விழுந்தாற் போலிந்தன அவள் அசைந்த விதமும் அமர்ந்த விதமும்.

அவள் அமர்ந்ததும், "பெண்ணே, எல்லா விஷயத்திலேயும் கடுமையாக நடந்து கொள்கிற நான் உன் விஷயத்தில் இந்த அளவிற்கு மாறி நடந்திருக்கறேனே, அது ஏன் தெரியுமா?" என்று கேட்டான் அவன்.

"பெண்களுக்கு முன்னால் மாற்றங்கள் ஏற்படுவது சாதாரணம். . . "என்று அவள் சற்று அதிகப் பிரசங்கித்தன மாகவே சொன்னாள்.

"அத்தனைக் கர்வம் உனக்கு வேண்டியதில்லை அதோடு பெண்களைக் கண்டதும் பற்களைக் காட்டித் தன்னை இழப்பவனல்ல இந்த இலங்காபுரன். . . " என்றான் அவன் அசராமல்.

அவள் அவனை விஷமமாகப் பார்த்தாள். "இவ்வளவு பேசும் நீ வாசலில் நின்ற என்னை ஏன் அப்படி கண் கொட்டாமல் பார்த்தாயாம்?" என்று கேட்பது போலிருந்தது அப்பார்வை.

அவனும் அதை உணர்ந்து கொண்டவனாய், "என்ன அப்படிப் பார்க்கிறாய் பெண்ணே? வாயிலில் நின்ற உன்னைக் கண்வாங்காமல் பார்த்துவிட்டு இப்படிப் பேசுகிறேனே என்று நினைக்கிறாயா?" - என்று கேட்டதும், 'ஏன், நினைக்கக்கூடாதா?' என்றாள் அவள்.

tamilebooks.net

"உன்போன்ற அழகியை நான் கண்டதில்லை. ஆகவே தான் உன்னைக் கண்டதும் பிரமித்துப் போனேன். இது உண்மைதான். அதற்காக உன்மீது மயங்கி நின்று விடுவேன் என்று எண்ணி விடாதே. பிரமிக்கக் கூடிய அம்சங்கள் உலகில் இருக்கலாம். ஆனால் பிரமிக்க வைக்கும் விஷயங்களுக்கெல்லாம் அடிமை யாகி இந்த இலங்காபுரன் தன்னை இழந்து விடுவதில்லை. நினைவில் வைத்துக்கொள். உன்னிடம் மயங்கி என் கடுமையை நான் குறைத்துக் கொள்ளவில்லை. நீ பயனுள்ளவளா என்பதை அறிந்து கொள்ள விரும்பியே மரியாதையைத் தந்தேன்" என்றாள் அதிகாரத் தோரணையில்.

அவளோ ஆம்பல் மலர்ந்தாற்போல் இதழ்விரித்து சாம்பல் குருவிகள் போல் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?" வினாவினான் இலங்காபுரன் குழம்பிய குரலில்

"ஐயா, இங்கே உள்ளவர்களையெல்லாம் அடித்துப் பயமுறுத்திச் சரணடைய வைத்தீர்களே, அவர்களிடமெல்லாம் ஏன் இத்தகைய மரியாதையைக் காட்டவில்லை? அல்லது உபசரிக்க உங்களுக்கு நேரமில்லை என்பதாலா? எனக்கு மட்டும் ஏன் மரியாதை?"

இலங்காபுரன் அசராமலேயே சொன்னான்:

"பெண்ணே, சிங்களத்திலிருந்து இங்கே வந்து இந்த இடத்தை என் வசப்படுதும் நான், எப்படியெப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நீ என்ன நியாயம் கூறுவது? எந்த சட்டம் என்னை இங்கே கட்டுப்படுத்தும்? நான் போட்டது தானே சட்டம்? நான் விரும்பினால் மரியாதை கிடைக்கும். இல்லையென்றால் உதை கிடைக்கும். இவற்றுக் கெல்லாம் நான் ஏன் பதில் சொல்ல வேண்டும்?"

இப்படிக் கூறிவிட்டு அப்பெண்ணை உற்று நோக்கினான். அவள் எதுவும் பேசவில்லையாதலால் தொடர்ந்து பேசமுற்பட்டு, "சரி, உன் வழியிலேயே பேசுகிறேன். இங்கே கடலுக்கு வந்ததுமே அனைவருக்கும் மரியாதை கொடுத்து அழைப்பு விடுத்தேன். எத்தனை பேர் அதைப் பெற்றுக் கொண்டார்கள்? 'அடி மேல் அடிவைத்தால் அம்மியும் நகரும்' என்று உங்கள் தமிழர்களே சொல்வதுண்டு. அது போல் அடித்தும் உதைத்தும் தான் இங்குள்ளவரை வழிக்குக் கொண்டு வர முடிந்தது: நீயும் அந்த வகையில்தான் முரட்டுத்தனமாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறாய், எல்லோருடனும் கிடைத் திருந்தால் அவர்களைப் போல் நீ சிங்களத்திற்கோ அல்லது சமையல் கட்டிற்கோதான் அனுப்பப்பட்டிருப்பாய். யாருடைய

tamilebooks.net

அதிஷ்டமோ தெரியவில்லை. நீ தனியாக இங்கு வந்தது மட்டுமின்றிச் சரியான நேரத்திற்கும் வந்திருக்கிறாய். நாங்கள் பேசிய விஷயத்திலும் நீ பயன்படக்கூடும் என்றும் தோன்றியது. ஆகவே தான் ஆசனமும் மரியாதையும் தரப்பட்டிருக்கின்றன, போதுமா?" என்று ஆணித்தரமாகக் கூறி நிறுத்தினான்.

தொடக்கத்திலிருந்தே அலட்சியமாகவும், நிர்ப்பயமாகவும் சகஜமாகவும் தான் அந்தப் பெண் பேசி வந்தாள். இலங்காபுரனின் தொடக்கப் பேச்சுக்களைக் கேட்டபோது கூட அவனைப் பற்றிப் பெரிதாக அவள் எண்ண முற்படவில்லை. ஆனால் அவன் கடைசியாக மரியாதையைப் பற்றிப் பேசிய பேச்சு அவளைச் சற்றுத் தயக்கப்படவே வைத்தது. நினைத்தபடி 'பட்பட்'டென்று தற்போது அவள் பேச முற்படவில்லை. அதைச் சிங்களத் தண்ட நாயகனும் ஓரளவிற்கு உணர்ந்து கொண்டு, "இப்போது சொல், உன் பெயரென்ன?" என்று கேட்டான்.

"கடலழகி. . ." அடக்கமாகக் கூறிக் கொண்டாள் அந்தப் பெண்.

இலங்காபுரன் லேசாகப் புன்னகை செய்தான். "பெயரும் அழகாகத்தான் இருக்கிறது; பொருத்தமாகவும் இருக்கிறது" என்று சிலாகித்து விட்டு, "நீயும் பரதவர்களைச் சேர்ந்தவள் தானா?" என்று கேட்டான்.

"இல்லை. தேவரடியாள்" என்றாள் அவள்.

"அப்படியென்றால் . . . ?"

"ஆலயத்தில் நடனமாடியும் பணிவிடை புரிந்தும் வருகிறேன்."

"எந்த ஆலயத்தில்? இந்த சோமேஸ்வரர் ஆலயத்திலா?"

"ம் . . ."

"உன் ஊரே இதுதானா?"

"இல்லை. நான் எங்கோ பிறந்தவள். இந்த ஆலயத்திற்கு இருபத்தைந்து காசுகளுக்கு அடிமையாக விற்கப்பட்டவள். . ."

"அடடா . . . " என்று அங்கலாய்த்த இலங்காபுரன், "வேடிக்கையைப் பார்த்தாயா கடலழகி? ஆடவர்களை யெல்லாம் அடிமைகளாக்கிவிடக் கூடியவர்கள் இப்பெண்கள். சில நேரங்களில் பெண்களும் ஆண்களால் அடிமைகளாகிறார்கள். இல்லையா?" என்று கேட்டு, "உன் பெயருக்கும் இந்த பரதவர் தொழிலுக்கும் ஒரு சம்மந்தமும் இல்லை அல்லவா?" என்று வினவினான்.

tamilebooks.net

"எனக்கு இப்பெயரைச் சூட்டியவர்கள் பரதவர்கள். கடலில் எனக்கிருந்த பரிச்சயத்தைக் கண்டு இப்படி வைத்து அழைத்தார்கள்..."

"அப்படியா? அப்படியானால் நீ பெயருக்கேற்றவள் தான்..." என்றான் இலங்காபுரன்.

கடலழகி தன் கேள்விகளுக்கு ஒழுங்காகப் பதில் சொல்லிக் கொண்டு வருவதைக் கண்டு உள்ளூரச் சிரித்துக் கொண்டே, "ஏன் பெண்ணே, என் வீரர்கள் சரணடையச் சொல்லிப் பேரிகை கொட்டியது உன் காதில் விழவில்லையா?" என்று கேட்டான் சற்றே கடுமையான குரலில்.

அவள் மௌனமாக இருந்ததால், "கேட்பது காதில் விழவில்லையா?" என்றான் அதே குரலில்.

"விழுந்தது..." என்றாள் கடலழகி.

"பேரிகை சத்தம் கேட்டதல்லவா?"

"ம்..."

"ஏன் சரணடையவில்லை?"

"பயமாக இருந்தது..."

"பயமா? எதற்காக?"

"பிடிபட்டால் சிங்களத்திற்கு அனுப்பி விடுவீர்களோ என்று..."

"அப்படி யார் சொன்னார்கள்..."

"பேசிக் கொண்டார்கள்..."

"சரணடையாமல் இருந்து விட்டால் மட்டும் உன்னை விட்டுவிடுவார்களா?"

".....

"இப்போது மட்டுமென்ன, உன்னை நான் சிங்களத்திற்கு அனுப்பினால் என்ன செய்வாய்?"

".....

"பதில் சொல் பெண்ணே..."

அவள் இடிந்து போனவளைப்போல் அமர்ந்திருந்தாள். அதைக் கண்டு கடகடவெனச் சிரித்த இலங்காபுரன் "கடலழகி" என்று மெதுவாகவும் மதுரமாகவும் அழைத்தான்.

"ம்..." என்றாள் அவள் மெல்லிய குரலில்.

tamilebooks.net

"பயந்து விட்டாயா. . . ?" தொடர்ந்து கேட்டான் இலங்காபுரன்.

அதற்கும் அவள் "ம்" என்று சந்தேக நிலையில் முணுமுணுத்தாள்.

அவளைச் சற்றே நெருங்கி வந்து அமர்ந்த இலங்காபுரன், "பயப்படாதே கடலழகி. உன்னைச் சிங்களத்திற்கு அனுப்ப மாட்டேன்" என்றான்.

அவள் மௌனமே சாதித்தாளாதலால் மேலும் பேச்சைத் தொடர்ந்து "இன்று நீ எல்லா வகையிலும் கவர்ந்து விட்டாய் கடலழகி. நீ சிங்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியவள் அல்ல. இங்கேயே இருக்க வேண்டியவள். என்னுடனேயே இருக்க வேண்டியவள். இனி நீ தேவரடியாளல்ல. யாருக்கும் நீ அடிமையல்ல. உனக்குத்தான் நான் அடிமை. . ." என்றான் இணங்கிய குரலில்.

கடலழகி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். சில நொடிகள் தான் இருக்கும். ஆனால் அவள் பார்வையை அப்போது அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஃஃ ஃஃ ஃஃ

கடலழகி காலடி வைத்த தினத்திற்கு அடுத்த நாளிலிலிருந்து பாசறையில் கனிசமானதொரு மாற்றம் ஏற்பட்டதைக் கண்டார்கள் தங்கள் வீரர்கள். எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கடலழகி இங்காபுரனுடன் சேர்ந்தே காணப்பட்டாள். அவர்கள் இருவரிடையே இருந்த நெருக்கமும் அதிகமாகவே இருந்தது. சந்தித்த புதியதில் நிந்தனைக்கு ஆளான அப்பெண் சொந்தக்காரி போல் உறவாடிய விதம் அவர்களுக்கு விந்தையாக இருந்தது. ஆனால் அவர்களைப்பற்றிக் கடலழகியோ இலங்காபுரனோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. கடற்கரைப் பகுதிகளில் நேரகாலமின்றிக் கூடித் திரிந்தார்கள். கடலில் நீந்தியும் விளையாடினார்கள். அவனது செயல்களையும் தன்னிடம் காட்டும் விஷமங்களையும் கண்ட அவள், "பெண் களைக் கண்டு பல்லைக் காட்டிக் கொண்டிருக்க மாட்டேன் என்றீர்களே, இப்போது நீங்கள் செய்வதெல்லாம் என்னவாம்? துறவறமா?" என்று கேட்டுச் சிரித்தபோது, "எந்த நேரத்திலும் பற்களை உதடுகளுக்குள் மூடிக்கொண்டு விட முடியும் கடலழகி. போகப் போக நீயே புரிந்து கொள்வாய்" என்று கூறி அவனும் சிரித்தான்.

tamilebooks.net

இப்படி உல்லாசமாகப் பொழுதைக் கழித்த இல்ங்காபுரன் சோழநாட்டிற்கு ஒற்றன் ஒருவனைச் சிங்கன் அனுப்பிவைத்த போது சாதாரணமாகவே நடந்து கொண்டான். இரவு வேளை வந்ததும் கடலழகியை அழைத்துக் கொண்டு கடற்கரைச் சோலை ஒன்றுக்குச் சென்றான். புன்னை மரத்தின் கீழே அமர்ந்தான். அவன் எப்போது அமருவான் எனக் காத்திருந்த அப்புன்னை மரம் பூக்களை அவன் மேலும், அவள் மேலும் சொரிந்தது. மேலே விழுந்த பூக்களை நீக்கினான் இலங்காபுரன். பூவை விட மென்மையான பூவையின் முகம் தெரிந்தது. அந்த எழில் முகத்தைக் கைகளால் பிடித்த இலங்காபுரன் "கடலழகி" என்று அழைத்தான்.

"ம்" என்றாள் அவள்.

"சிங்களத்திற்குச் செல்ல உனக்குப் பிடிக்கவில்லை அல்லவா? என்று கேட்டான்."

"ம்" என்றாள் அவள்.

"அப்படியானால் சோழ நாட்டிற்குப் போகிறாயா?" திடீரெனக் கேட்டான் அவன்..

"சோழ நாட்டிற்கா?" என்றாள் அவள்.

அப்போது அருகில் சிறு சலசலப்பு கேட்டது. அந்தக் கணத்திலேயே தன் குறுவாளை எடுத்து மின்னல் வேகத்தில் வீசினான் இலங்காபுரன். சலசலப்பு இடத்தில் "ஹ" என்ற ஓலம் பெரிதாகக் கேட்டது.

கடலழகி திகைத்தான்.

4

"ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்"

— குறள், 588

தன்னுடன் பேசிக் கொண்டே விபரீதமானதொரு காரியத்தில் இறங்கி விட்டதையும் "ஹ"வென ஓலம் எழுந்ததையும் உணர்ந்த கடலழகி ஒருவித பீதியுடன் நோக்கினாள் இலங்காபுரனை. அவனோ எந்தவிதப் பரபரப்பும் இல்லாதவனாய் அமர்ந்திருந்தான்.

"ஏதோ ஓலம் கேட்டதே" சந்தேகத்துடன் வினவினாள் அவள்.

tamilebooks.net

"ஆம், எனக்கும் கேட்டது. . ." என்றான் இலங்காபுரன்.

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? அந்த ஓலத்திற்கும் உங்களுக்கும் சம்மந்தமில்லையா. . . ?" தொடர்ந்து கேட்டாள்.

"அதெப்படிச் சொல்கிறாய்?"

"நீங்கள் குறுவாளை எறிந்ததும் தானே அந்த ஓலம் எழுந்தது?"

"அப்படியா ? வா போய் பார்க்கலாம்" என்று கூறி அவனையும் அழைத்துக் கொண்டு சலசலப்பு எழுந்த புதரருகே சென்றான் இலங்காபுரன்.

புதரைத் தன் காலால் துழாவிய அவன் பிறகு குனிந்து எதையோ இழுத்து வெளியே மணலில் போட்டான். நல்ல நிலவொளியில் ரத்த காயத்துடன் கிடந்த அந்த மனித சடலத்தைப் பார்த்த கடலழகிக்கு ரத்தம் உறைந்த மாதிரி இருந்தது.

"இறந்து விட்டான் போலிருக்கிறதே ? என்றான் ஒரு விதப் பீதியுடன்.

"ஆம், அப்படித்தான் நினைக்கிறேன்....?

"யார் இது?"

"இவனை ஏன் கொன்றீர்கள்?"

"எனது ஒற்றன் என்னையே ஒற்றறிந்தால் அவன் அடையவேண்டியது மரண தண்டனைதானே கடலழகி?"

"இவன் உங்களை ஒற்றறிந்தானா?"

"இல்லாவிட்டால் இந்த இரவு நேரத்தில் இந்தப் புதருக்குள் இவனுக்கென்ன வேலை? இங்கே என்ன ஓடிப்பிடித்தா விளையாடுகிறார்கள்? சொல் கடலழகி..."

"இவன் இருப்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

"பெண்ணே, தளபதியாக இருப்பவனுக்கு அறிவானது நன்றாகச் சானைபிடித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். சுற்றி நடப்பவைகளை அறிந்து கொள்ள முடியாதவன் தலைவனாகவே இருக்க லாயக்கற்றவன்" என்று கூறிவிட்டு "சரி வா போகலாம்" என்றான்.

"இவனை இப்படியே விட்டுவிட்டுப் போவதா?" என்று கேட்டாள் அவள்.

"அதுதான் நல்லது. இவன் அடைந்த நிலையை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமா ? இல்லையா?

tamilebooks.net

"இப்படி இங்கே விட்டுவிட்டால் எல்லோரும் வருவார்களா?"

"எல்லோரும் வருகிறார்களோ இல்லையோ... இவனை ஏவி விட்ட மேதை நிச்சயம் வருவான். நானளித்திருக்கும் தண்டனையைத் தெரிந்து கொள்வான்.."

"நீங்கள் தான் கொன்றீர்கள் என்று எப்படித் தெரியும்?"

"அதோ பார் கடலழகி.... அவனது மார்பில் பாய்ந்திருக்கும் குறுவாளின் பிடியைப் பார். தந்தத்தினால் செய்யப்பட்ட பிடி அது. இதைக் கண்டதும் விவரத்தைப் புரிந்து கொள்வான்."

"இவனை எதற்காக கொன்றீர்கள் என்பதை எப்படித் தெரிந்து கொள்வார்கள்?"

"கடலழகி, இவனை ஏவி விட்டவனுக்குக் கூடவா காரணம் தெரியாது? அது மட்டுமல்ல, இந்த இலங்காபுரனின் குறுவாளும் சரி, நெடுவாளும் சரி அவசியமில்லாமல் வெளிப்படுவதில்லை என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே புரிந்து கொள்வதில் ஒரு சிரமமும் இருக்காது. இனி இது போன்ற அசட்டு முயற்சியில் இறங்க மாட்டார்கள்."

"உங்கள் வீரர்களே இப்படி நடந்து கொண்டால் எப்படி?"

"அவர்களும் மனிதர்கள் தானே? திடீரென்று வந்து சேர்ந்த பொண்ணொருத்தியுடன் தன் தலைவன் அதிக ஈடுபாடு கொள்கிறான் என்றால் யாருக்குத்தான் சந்தேகம் உண்டாகாது?"

"அப்படி ஏன் எண்ணுகிறீர்கள்? திடீரென முளைத்த என்னால் உங்களுக்கு வரக்கூடிய ஆபத்தை உத்தேசித்துக் கண்காணித்திருக்கக் கூடாதா?"

"ஆபத்தா? எனக்கா? அதுவும் ஒரு பெண்ணாலா? கடலழகி, உன் பெண் புத்தியை நன்றாகவே காட்டுகிறாய். எனக்கு வரக்கூடிய ஆபத்திற்காக எனக்குப் பின்னால் ஒரு மெய்க்காப்பாளன் இருப்பான் என்று நீ எண்ணுவதே என் கௌரவத்திற்குக் குறைவான விஷயம்."

"அப்படியென்றால் ஏன் இவனைக் கொன்றீர்களாம்?"

"அசட்டு வீரனையா நான் கொன்றேன்? இல்லை கடலழகி . . . நான் கொன்றது சதிகாரனை. விரைவிலேயே இவனை ஏவிய புல்லுருவியும் வெட்டப்படுவான். விஸ்தாரமான பயிர் நிலத்தில் ஒரு களைப்பயிரும் இருக்கக் கூடாது. இருப்பதாகத் தெரிந்தால் உடனடியாக அகற்றிவிட வேண்டும்" என்று கூறிக்கொண்ட இலங்காபுரன், "அது போகட்டும். . . சோழ நாட்டிற்குப்

tamilebooks.net

போகிறாயா என்று கேட்டேன் அல்லவா, அதற்குப் பதில் சொல்" என்றான்.

"எதற்காகச் சோழ நாட்டிற்குச் செல்ல வேண்டும்?" என்று கேட்டாள் கடலழகி.

"ஒற்றறிந்து வரத்தான். . ."

"நானா. . . ?"

"நீயேதான். இந்த வேலைகளுக்குத் தெரிவைகள் தான் தகுதியானவர்கள்."

"அப்படியானால் ஏற்கனவே ஓர் ஒற்றனை ஏன் அனுப்பினீர்களாம்?"

"அனுப்புகிறோம் என்றார்கள். சரியென்றேன்" என்று கூறிச் சிரித்த இலங்காபுரன், "கடலழகி, ஒற்றர் வேலையை எளிதாக நினைத்துவிட்டாயா? சற்று ஏமாந்தால் நம் காலை வாரிவிட்டு விடும் காரியம் அது. ஒருவனையே நம்பியிருந்துவிடும் முயற்சியல்ல அந்த வேலை. ஒன்றுக்கு மேற்பட்டவரை அனுப்பிச் செய்திகளைச் சேகரித்து அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் சரியான ஒற்று வேலைக்கு அடையாளம். அதோடு நான் எதிர்பார்க்கும் சோழநாட்டு விவகாரம் மிகவும் முக்கியமானது. எதிர்காலத் திட்டங்களின் அடிப்படையே இதுதான். ஆகவே மிகவும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டிய கட்டாயமிருக்கிறது. எனக்குப் பெண்தான் இதற்கு ஏற்றவள் என்று நான் எண்ணிய வேளையில்தான் நீ கொண்டு வரப்பட்டாய். என் நினைவும், உன் வரவும் பொருத்தமாக அமைந்துவிட்டதாலேயே நீ வித்தியாசமான முறையில் நடத்தப்பட்டாய். இல்லையென்றால் இந்நேரம் அனுராதபுரத்தில் ஆலயப் பணியில் அமர்த்தப்பட்டிருப்பாய்" என்று விளக்கினான்.

"நான் போய் அங்கே என்ன செய்யவேண்டும்?"

"அதையெல்லாம் இங்கே பேச வேண்டாம். எல்லா வற்றையும் விளக்கமாகச் சொல்றேன். வா. . . பாசறைக்குப் போகலாம்" என்று கடலழகியை அழைத்துக்கொண்டு பாசறைக்குத் திரும்பினான் இலங்காபுரன்.

அங்கே அவளது பணி அவளுக்கு விளக்கப்பட்டது. ராமேஸ்வரத்திலிருந்து தஞ்சைக்குச் செல்லும் தேவரடியார் கூட்டத்துடன் அவளும் செல்வதுபோல் ஏற்பாடு செய்யப் பட்டது. அவள் செல்லவேண்டிய நாளும் குறிக்கப்பட்டது. அவளது புறப்பாட்டைப் பாதி ரகசியமாகவும், பாதி பகிரங்க மாகவும் செய்து உபதளபதிகளுக்குள் அதிகமான சந்தேகம் மூண்டுவிடாதபடி பார்த்துக்கொண்டான் இலங்காபுரன்.

tamilebooks.net

அவள் புறப்பட்டபோது, "ரொம்ப எச்சரிக்கையாக இரு கடலழகி. எப்போது என்னை ஒற்றறிய என் உப தளபதிகள் முயன்றார்களோ அதிலிருந்தே அவர்கள் அனுப்பிய ஒற்றனை அதிகமாக நம்ப முடியவில்லை என்னால். ஆகவே என் நம்பிக்கையின் சின்னமாய் உன்னை அனுப்பி வைக்கிறேன். விரைவிலேயே தமிழகத்தில் பிரவேசிக்கப் போகிற சிங்களப் புயலுக்கு முன் உன்னைத் தென்றலாக அனுப்பி வைக்கிறேன். உனது பிரவேசம் சரித்திரப் பிரவேசமாகவே அமையட்டும் போய் வா" என்று கூறினான்.

"என்னை இவ்வளவு நம்பிக்கையோடு அனுப்பி வைக்கிறீர்களே, எப்படி?" கேட்டாள் கடலழகி.

"இதற்குப் பதில் சொல்ல நான் தயாராக இல்லை" என்றான் இலங்காபுரன்.

• "நேற்று வந்தவள் நான். உங்களை ஏமாற்றலாமில்லையா?" கேட்டாள் அவள்.

"உபதளபதிகள் என்றிலிருந்தோ என்னுடன் இருந்து வருபவர்கள். அவர்களும் தான் ஏமாற்றுகிறார்கள் என்றான் இலங்காபுரன்.

"ஏமாற்றத்திற்கும் நீங்கள் தயார்தானா?"

"எனக்கு நம்பிக்கை உண்டு. அதே சமயம் ஏமாறுகிற வனுமல்ல" என்றான் இலங்காபுரன். கூறிவிட்டுக் கண்களை மூடினான். அவனது கைகள் பெரும் மீசையை நோக்கிச் சென்றன.

ஃஃ ஃஃ ஃஃ

கும்பகோணத்திற்கு அருகே தற்போது காணப்படும் தாராசுரம் என்னும் ராஜராஜேஸ்வரத்திலிருந்து எழுந்த அர்த்தஜாமப் பூசையொலியானது இரவின் அமைதியை மட்டும் கிழிக்காமல் தொலைவில் - பழையாறையில் - ஆயிரத்தளி அரண்மனையில் - நிலாமாடத்தில் அமர்ந்திருந்தப் பிரமுகர் களின் அமைதியையும் மௌனத்தையும் கிழித்தது.

அமர்ந்திருந்தது என்னவோ நிலாமாடம்தான் என்றாலும் அன்றையத்தினம் அமாவாசை நாளாக இருந்த காரணத்தால் நிலவின் ஒளி அங்கே இல்லை. அழகிய பெண் அமர்ந்து சிரித்த இடத்தில் அரக்கன் வந்து ஆடினாற்போல் கரிய இருள் அந்த மாடம் முழுதும் பூரணமாய் விரவியிருந்தது. அங்கே அமர்ந்திருந்த பிரமுகர்கள் சாதாரணமானவர்களல்லர். சோழ

tamilebooks.net

நாட்டின் எதிர்காலத்தைச் சுமந்து வழி நடத்திச் செல்ல வேண்டியவர்கள். ஆனால் இருளுக்கு அவர்களது அருமை தெரிந்திருக்க நியாயமில்லையாதலால் இன்னாரென அறிந்து கொள்ள முடியாத வகையில் அனைவரையும் தன்னுடன் பிணைத்துக் கொண்டிருந்தது.

அந்தப் பொருத்தமற்ற பிணைப்பைக் கண்டு சினந்த தாலோ என்னவோ . . . அந்த ஆயிரத்தளி அரண்மனையின் மையத்தில் வளர்ந்திருந்த நாவல்மரக் கிளையில் அமர்ந்திருந்த ஆந்தைகள் மிரட்டுவதுபோல் கத்தவும் செய்தன. ஒரு வகையில் அவற்றின் கத்தலொளி ராஜ ராஜஸ்வரத்தின் மணி யோசைக்குப் பின்னணிபோல் அமைந்துவிடவே நிலாமாடப் பிரமுகர்கள் நீண்ட நேர மௌனத்திற்குப் பின் சற்றே அசைந்தார்கள்.

அவர்களில் கோடியில் அமர்ந்திருந்தவரும் வடபெண்ணை யாற்றுப் பகுதியின் சிற்றரசருமான சித்தரையர் பேச முற்பட்டுத் தன் சலிப்பை வெளியிட்டுக் கொண்டார்.

"மூன்று நாட்களாகக் கூடி நிலா மாடத்தில் காற்று வாங்கியதுதான் மிச்சம். ஒன்றையும் பேசி முடித்ததாகத் தெரியவில்லை. இன்றும் அமாவாசையைத் தான் கண்டிருக்கிறோமே தவிர முடிவு எதையும் காணவில்லை."

இதைக் கேட்டதும் கடற்படைத் தளபதியான அமரகோன் பேசமுற்பட்டு, "சலிப்படைவதில் பயனில்லை. நாம் ஆராய இறங்கியிருக்கும் விவகாரம் சாதாரணமானதல்ல. இதைச் சித்தரையர் புரிந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது" என்றான்.

"சாமர்த்தியமாகப் பேசுவது வேறு. சாமர்த்தியமாய்ப் பேசுவதாக எண்ணிக் கொள்வது வேறு. இதைக் கடற்படைத் தளபதி முதலில் புரிந்துகொள்வது நல்லது" என்றார் சித்தரையர் கிண்டலான விதத்தில்.

"நீரும் நானும் பல விஷயங்களைப் புரிந்து கொள்ள வேண்டியதென்னவோ உண்மைதான். ஆனால் அதற்கு இந்த நிலா மாடம் தேவையில்லை. அதுவும் இந்த அமாவாசை நேரத்தில்" என்றான் அமரகோன் கிண்டலில் தானும் சளைத்தவனல்ல என்பது போல்.

"இப்படியொரு மாமேதையைக் கடற்படைத் தளபதி யாய்ப்பெற சோழ நாடு பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும்" என்று இடக்காகச் சொன்னார், சித்தரையர்.

"அப்படியானால் தன்னை யார் என்று கூறிக் கொள்கிறார் சித்தரையர்?" என்றார் அமரகோன்.

tamilebooks.net

சித்தரையர் ஏதோ கூறப்போனார். அந்த நேரத்தில் திருக்கோவிலூர் சிற்றரசரான கரிய பெருமாள் குறுக்கிட்டுப் பேசலானார்:

"நிறுத்துங்கள். கவலைப்பட வேண்டிய நேரத்தில் கேலி பேச வேண்டாம். அண்ணன் பல்லவராயரே, நீங்கள் பேசுங்கள். பேச வேண்டியவர் நீர்தான். சோழநாட்டில் மூண்டுவிட்ட கலகத்திற்குப் பரிகாரம் செய்வது ஒரு புறம் இருக்கட்டும். காலியாகிவிட்ட சோழ அரியணையில் யாரை அமர்த்துவ தென்பது பற்றிச் சொல்லுங்கள். மக்களின் பூசல்களை மீறி இரண்டாம் ராஜராஜரின் தயாதியின் புதல்வரும் அவரால் இளவரசுப்பட்டம் கட்டப்பட்டவருமான எதிரிலி பெருமாளை அமர்த்தலாமா? அல்லது இரண்டாம் ராஜராஜரின் புதல்வரும் ஐந்து வயது பாலகனுமான குலோத்துங்கனை அமர்த்தலாமா? அல்லது இவ்விருவரையுமே விடுத்து யானையின் வசம் மாலை ஒன்றினைக் கொடுத்து யாருக்காவது போட வைத்து அவனை அமர்த்தலாமா? மூன்றில் ஒன்றை விரைவில் செய்வது நல்லது. ராஜராஜர் இறந்து ஒரு திங்கள் ஆகிறது. இன்னும் அரியணையில் யாரும் அமர்த்தப்படவில்லையென்றால் விபரீதங்கள் பெருகும். மதுரையில் பாண்டியர்கள் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் நம்மீது பாயலாம். நுழைநரியான சிங்கள மன்னனுக்கும் ஆதாயம் திரட்ட வாய்ப்பு உண்டாகி விடும். . ."

இதைக் கேட்டதும் அந்தப் பிரமுகர் கூட்டத்தில் முக்கியமானவாய்க் கருதப்படுபவனும், சோழநாட்டில் பிரசித்திப் பெற்றவனும், அஞ்சாநெஞ்சமும், தீர்க்க சிந்தனை உள்ளவனும், சோழரின் பிரதான சேனாதிபதியும், சோழ முதலமைச்சரின் இளைய சகோதரனுமான அண்ணன் பல்லவராயன் சங்கடத் துடன் அசைந்தான். திடகாத்திரமான அவனது தேகம் அந்த இருட்டில் பூதமெனக் காட்சியளித்தது. கரிய பெருமாளின் கேள்வியை ஒரு முறை நினைவு கூர்ந்தான் அவன். அவனைப் பொருத்தவரை சோழ நாட்டில் தற்போது உண்டாகியிருந்த கலகம் நியாயமற்றதாகவே பட்டது.

விக்கிரம சோழனுக்கு இரண்டாம் குலோத்துங்கனும் சோழமாதேவியும் மக்களாய்ப் பிறந்தார்கள். இந்த இரண்டாம் குலோத்துங்கனுக்கு இரண்டாம் ராஜராஜன் மகனாகப் பிறந்து முறைப்படி சோழ அரியணையும் ஏறினான். ஆனால் அவன் காலந்தாழ்த்தித் திருமணம் செய்து கொண்டானாதலால் முதுமைப்பிராயத்தின் தொடக்கத்தில்தான் அவனுக்குப் புத்திர பாக்கியம் உண்டாயிற்று.

tamilebooks.net

அப்படி முதுமைக் காலத்தில் தோன்றிய மகன்தான் மூன்றாம் குலோத்துங்கன். சோழ மன்னர்கள் தங்கள் ஆட்சிக் காலத்திலேயே தனது மூத்த மகனுக்கு இளவரசுப்பட்டம் கட்டித் தனக்குப் பின்னால் அரியணை ஏற ஏற்பாடு செய்துவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஆனால் ராஜராஜன் தன் கடைசி காலத்தில் தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டவில்லை. ஏனெனில் அவனது மகன் மூன்றாம் குலோத்துங்கன் அப்போது சிறு குழந்தை. அதே சமயம் யாருக்குமே இளவரசு பட்டம் கட்டாமலேயே இருந்து விட அவனது மனம் இடமளிக்கவில்லை. திடீரென தனக்கு மரணம் சம்பவித்து விட்டால் சோழ நாட்டின் கதி அதோ கதியாகி விடுமே என்று கலங்கினான்.

அதற்கு ஏற்றாற் போலவே அவனது ஆட்சியின் கடைசி காலத்தில் அண்டை நாட்டவர் படைகளைப் பெருக்குவதில் ஈடுபட்டார்கள். சோழனின் ஆதிக்கத்தில் இருந்து வந்த சிற்றரசர் களில் பலர் தனிச்சையாகச் செயல்பட முனைந்தார்கள். சோழ அதிகாரிகளுக்குள்ளும் பிணக்குகள் இருந்தன. எனவே சோழ அரசியலில் பூரண அனுபவம் கொண்டிருந்த முதலமைச்சரான பெரிய பல்லவராயரை அழைத்து ஆலோசனை நடத்தினான் ராஜராஜன்.

அதன்படி விக்கிரம சோழரது மகளும், தன் அத்தையுமான சோழமாதேவியின் புதல்வனான எதிரிலி பெருமாளை** அழைத்து இளவரசுப் பட்டம் கட்டித் தனக்குப் பிறகு சோழ நாட்டை ஆளவேண்டிய உரிமை அவனுக்கே உண்டு என்பதைப் பகிரங்கமாக அறிவித்தான்.

எதிரிலிபெருமாள் அப்போது வாலிபப் பருவத்தினனாயும் வீரப்புதல்வனாயும் இருந்தான். பட்டம் கிடைப்பதற்கு முன்பாகவே அவனது வீரப்பிரதாபங்களும், அறிவுத்திறமையும் சோழநாட்டில் பிரசித்தமாய் இருந்தன. சுந்தரசோழரின் மூத்த புதல்வனான ஆதித்த கரிகாலனைப் போல் அஞ்சா நெஞ்சம் படைத்தவனாய் இருந்த காரணத்தினால் மக்கள் அவனைக் கரிகாலன் என்றே அழைத்தார்கள். அப்பெயரே அனைவருக்கும் தெரிந்த பெயராய் இருந்தது.

** Ethirili Perumal was a grandson of Vikrama Chola Perhaps by a daughter otherwise unknown.

— page 357 'The Cholas' by Thiru. K. A. N. Sastri.

tamilebooks.net

கரிகாலனுக்கு இளவரசுப் பட்டம் கட்டப்பட்டுச் சில ஆண்டுகளே கழிந்த நிலையில், இரண்டாம் ராஜராஜன் காலமானான். ஆனால் அவன் காலமானதுமே யாரும் எதிர்பாராத வகையில் சோழ நாட்டில் கலகம் உண்டாயிற்று. கரிகாலன் மன்னனாக முடிசூடி எதிர்ப்புகள் ஆங்காங்கே கிளம்பின. எதிர்ப்புகளை மீறிக் கரிகாலனுக்கு முடிசூட்ட முடியாத நிலையில் ராஜராஜனுடன் தோள் நின்று காத்தவர்களெல்லாம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு திங்கள் பொழுதும் ஓடிவிட்டிருந்தது.

ஃஃ ஃஃ ஃஃ

சிந்தனையில் ஆழ்ந்த அண்ணன் பல்லவராயன் பேசுவதற்குள் கங்கநாட்டில் சோழர்களின் பிரதிநிதியாக இருந்து வந்தவனான காஞ்சிபுர பரமேஸ்வரன் குறுக்கிட்டு, "பல்லவராயரே, எல்லா நேரங்களிலும் மக்களைப் பொருட்படுத்துவதென்பது முடியாத காரியம். ஆகவே தற்போது மக்களை ஒதுக்கித்தள்ளுங்கள். பூசல் செய்வோரைச் சிறையில் தள்ளிவிட்டு இளவல் எதிரிலி பெருமாளான கரிகாலரை அமர்த்துங்கள். பாலகனையும் பாமரனையும் அமர்த்துதல் விபரீதத்தில்தான் முடியும்..." என்றான்.

இதைக் கேட்டுப் புன்முறுவல் செய்தான் அண்ணன் பல்லவராயன். "பரமேஸ்வரா, எதிரிலி பெருமாள் அரியணை ஏறுவதில் மக்கள் மட்டும் எதிர்ப்புக் காட்டவில்லை. வேறு பல முக்கியஸ்தர்கள் இருக்கிறார்கள்" என்று சொல்லவும் செய்தான்.

"யார் அவர்கள்? சொல்லுங்கள் சேனாதிபதி. நான் பாடம் கற்பித்து அனுப்புகிறேன். யானையைப் பின்னால் வைத்துக் கொண்டு பூனை குறுக்கே வந்துவிட்டதே என்றா தயங்குவது?" என்றான் பரமேஸ்வரன்.

அப்போது பின்னால் இருளில் ஏதோ சத்தம் கேட்கவே பாய்ந்தோடினான் பரமேஸ்வரன்.

5

"அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்"

— குறள், 428

நிலாமாடத்தில் நள்ளிரவில் நிகழ்த்திய பேச்சிற்கிடையே சலசலப்பு தோன்றியதும் எப்போதும் கவனத்துடன்

tamilebooks.net

இருப்பவனான காஞ்சிபுர பரமேஸ்வரன் நிலா மாடத்தின் படிகளில் இறங்கி ஓடினான். மாடத்தின் கீழே வரை சென்றும் அவனது கண்களுக்கு யாரும் புலப்படவில்லை. சற்றே ஏமாற்றத்துடன் மேலே வந்து அமர்ந்தான்.

"யாராவது வந்தார்களா?" என்று திருக்கோவிலூர் சிற்றரசர் கேட்டபோது "ஒரு இழவும் தெரியவில்லை" என்று அலுப்போடு சொல்லிக் கொண்டான் அவன்.

அதைக் கேட்ட அண்ணன் பல்லவராயன், "யார் வந்து விட்டுப் போயிருந்தாலும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் நாம் பேசுகிற விஷயம் ரகசியமானதல்ல. அனைவருக்கும் தெரிந்ததுதான்" என்று கூறிவிட்டு மேலே பேசலானான்.

"பரமேஸ்வரா, அதோ தெரிகிறதே ராஜராஜேஸ்வரர் ஆலய கோபுரம், அது எப்படி நிலையாக நிற்கிறது என்று யோசித்திருக்கிறாயா? அமைத்த விதத்தைப் பொறுத்தே அது நிலையாக நிற்கிறது. அது எப்படி வேண்டுமானாலும் ராஜராஜர் கட்டியிருக்கலாம். ஆனால் உறுதியாய்க் காலங்காலமாய் நின்று நிலைப்பதற்கு எப்படி அமைக்க வேண்டுமோ அந்த முறையைத்தான் மேற்கொண்டார் மாமன்னர். அரியணையில் ஒருவரை அமர்த்தி விடலாம். ஆனால் அமர்த்தப்படுபவர் நிலையாக இருப்பாரா என்பதை யோசிக்க வேண்டும்.

ஆட்சியில் ஒருவர் அமர்கிறார் என்றால் அது யாருக்காக? தனக்காகவா? இல்லை பரமேஸ்வரா, மக்களுக்காக. யாரை நாம் ஆளப் போகிறோமோ அவர்களது வெறுப்புக்களுக்கிடையில் நாம் ஆள்வது விபரீதத்தில்தான் போய் முடியும். மக்களைப் பகைத்துக் கொள்ளும் மன்னனால் எதைச் சாதிக்க முடியும்? எதிரிலி பெருமாள் பெரும் வீரர். திறமை சாலி. நல்ல உள்ளம் கொண்டவர். ஆனால் அவற்றை மக்கள் இதயப் பூர்வமாகப் புரிந்துகொள்ள வேண்டும்."

இப்படிக் கூறிச் சற்று நிறுத்திய அண்ணன் பல்லவராயன் சற்றுப் பொறுத்து, "பரமேஸ்வரா, நமது சக்கரவர்த்திகள் முதலாம் ராஜராஜசோழத் தேவரின் ஆட்சி காலத்தில் சோழ சாம்ராஜ்யத்தின் விஸ்தீரணமும் தற்போது இரண்டாம் ராஜராஜரின் காலத்தில் இருக்கும் விஸ்தீரணமும் உனக்குத் தெரியும். அவரது ஆட்சியில் சோழ சாம்ராஜ்யம் ஒன்பது மண்டலங்களாக இருந்தன. மலை மண்டலமான சேர நாடு தற்போது நம் வசத்தில் இருக்கிறதா?" என்று கேட்டான்.

tamilebooks.net

"இல்லை."

"வேங்கை மண்டலமான வேங்கி நாடு நமது வசம் இருக்கிறதா?"

"இல்லை."

"அதிராஜராஜ சோழ மண்டலமான கொங்கு நாடு?"

"இல்லை."

"ராசராச பாண்டி மண்டலமான பாண்டிய நாடு?"

"இல்லை."

"நிகரிலி சோழ மண்டலமான நுளம்பாடி?"

"அதுவும் இல்லை."

"முடிகொண்ட சோழ மண்டலமான கங்க நாட்டில் நீ இருந்து வருகிறாய். அங்கேயும் இதே கதைதான் என்பது உனக்கே தெரியும்."

"ஆம்."

"இத்தனை மண்டலங்களும் சுயேச்சை பெற்றுவிட்ட நிலையில் நமது ஆதிக்கத்தில் தற்போது இருக்கும் எஞ்சியுள்ள பகுதியான சயங்கொண்ட சோழ மண்டலமான தொண்டை நாட்டிலும், சோழ மாமண்டலமான பொன்னி நாட்டிலும் கூடப் பற்பல அதிகாரிகளும், சிற்றரசர்களும், வளநாடுகளும் கரிகாலருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்களென்றால் நீ வெறும் கைகால்களை உதறி என்ன பயன்? இவைகளெல்லாம் நாம் யோசிக்க வேண்டிய அஞ்ச வேண்டிய அம்சங்கள். அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சியே ஆகவேண்டும் பரமேஸ்வரா. அப்படி அஞ்சாமல் உணர்ச்சி வசப்படுவது பேதமை."

பரமேஸ்வரனால் உணர்ச்சி வசப்படாமல் இருக்க முடியவில்லை. "தாங்கள் சொல்வதெல்லாம் சரி, கரிகாலருக்கு எதிர்ப்பு இருப்பதால் ஐந்து வயது பாலகனால் ஆட்சி நடத்திவிட முடியுமா?" என்று கேட்டான்.

"எதிரிலி பெருமாளுக்கு இளவரசுப் பட்டம் கட்டப் பட்டதும் மன்னரால் உரிமை தரப்பட்டதும் வெறும் கேலிக் கூத்துக்கள் தானா. . . ? அவை அப்படியே ஒதுக்கப்பட வேண்டியதுதானா?" என்று கேட்டான் கடற்படைத் தளபதி அமரகோன்.

"மக்கள் விரும்புகிறார்கள் என்று மரக்கட்டையை அரியணையில் அமர்த்திவிட முடியுமா?" என்றுகேட்டார் வடபெண்ணைச் சிற்றரசர்.

tamilebooks.net

அண்ணன் பல்லவராயனின் நிலை சங்கடமானதாய் இருந்தாலும் அவன் நிதானத்தைக் கைவிடவில்லை. அனை வருக்கும் சமாதானம் கூற முற்பட்டு, "நண்பர்களே சோழ நாட்டிற்கு இது போன்ற சங்கடங்களொன்றும் புதியவைக ளல்ல. சுந்தர சோழரின் புதல்வர் அருள்மொழி வர்மர் முடிசூடிய போதும், அதிராஜேந்திரர் காலமாகி அனபாயர் முடிசூடிய போதும் இத்தகைய இக்கட்டுகள் உண்டாயின. ஆனால் அவையனைத்தும் நல்ல முறையில் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இப்போது மட்டும் ஏன் அஞ்ச வேண்டும்? இன்னும் சில நாட்கள் பொறுப்போம். மக்களின் மனம் எப்போதுமே ஒரே நிலையாய் இருப்பதில்லை என்பது வரலாறு கூறும் உண்மை" என்றான்.

இந்த நிலையில் திருக்கோவிலூர் சிற்றரசர் கரிய பெருமாள் பேசினார்.

"பல்லவராயரே, அருள் மொழி வர்மர் முடிசூடவிருந்த போது பூசல்கள் உண்டானது உண்மைதான். ஆனால் அவருக்கு மாற்றாக அரியணை ஏறுவதற்கு உத்தமச் சோழரான மதுராந்தகர் இருந்தார். ஆகவே பிரச்சனை தீர்ந்தது. ஆனால் தற்போது கரிகாலருக்குப் பதில் வேறுயார் இருக்கிறார்கள்? இதேபோல் அனபாயரான முதலாம் குலோத்துங்கரின் பட்டாபிஷேகத்தைப் பற்றியும் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் முடி சூடவிருந்தபோது பூசல்கள் நிலவிய தென்னவோ உண்மைதான். ஆனால் அவர் முடிசூடுவதை எதிர்த்து அவை உண்டாகவில்லை அதிராஜேந்திரர் மரணமடைந்தது குறித்துத்தான் எழுந்தன. ஆகவே தற்போது நிலவும் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டது."

"நான் சொல்வதெல்லாம் மக்களின் இயல்பைத்தான் நண்பரே. மூன்று கால கட்டங்களும் மூன்று விதத் தன்மை கொண்டவைகளாகவே இருக்கட்டும். மக்கள் தொடக்கத்தில் இருந்த மாதிரியே கடைசி வரை இருக்கவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறேன் நான். இந்த மூன்றுவிதச் சூழ்நிலைகளிலும் மக்களாகவே பூசல்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள். என்று நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. திரியைத் தூண்டிவிட சிலர் பின்னால் இருந்தார்கள். அவர்களை இனம் கண்டு களைந்ததும் பிரச்சனை தீர்ந்தது. மக்கள் மாறினார்கள். தற்போதைய நிலையும் அப்படித்தான் இருக்க வேண்டும். இந்த ஆலோசனைக் கூடத்தில் நீங்களெல்லாம் வந்து கூடியிருக்கும் போது முக்கியமான சிலர் மட்டும் ஏன் வரவில்லை. நமது சோழ மண்டலத்தின் அதிபதி நாராயண சம்புவரையர் ஏன் வரவில்லை? கொடும்பளூர் சிற்றரசரை ஏன் காணவில்லை?

tamilebooks.net

சேதி நாட்டுக் காடவராயருக்கு என்ன வந்தது? பேராயங்களின் தலைவர்கள் என்ன ஆனார்கள்? இவர்களால் எல்லாம் ஏன் இந்தக் கலகங்கள் தோன்றியிருக்கக் கூடாது? இவற்றை யெல்லாம் ஆராயும் முயற்சியை. மேற்கொண்டால்களைப் பயிரை எளிதாக நீக்கிவிடலாம்."

"ஏன் பல்லவராயரே, இந்த இக்கெட்டான நிலையில் நமது பேரமைச்சர் பெரிய பல்லவராயர் எங்கே போய்விட்டார்? ஒருவேளை அவரும் நீங்கள் சொன்னவர்களோடு சேர்ந்து விட்டாரா?" கேட்டார் கரிய பெருமாள்.

"அவர்மீது களங்கம் கற்பிக்க வேண்டாம். தன் நண்பனைப் போல் பழகிய சோழமன்னர் மாண்ட சோகம் அவரை விட்டு விலகவில்லை. அவர் எங்கும் போய்விடவில்லை. பழையாறையில் தான் இருக்கிறார். நீங்கள் சந்தேகிப்பது போல் நேருமானால் சகோதரன் என்றும் பாராமல் என் வாள் அவர் மார்பில் பாயும். கவலை வேண்டாம் . . ."

"நாம் போய் அவரைச் சந்தித்தால் என்ன?" வினவினான் காஞ்சிபுர பரமேஸ்வரன்.

"எதுவும் தேவையில்லை" என்று புதுக் குரலொன்று அங்கே பிரவேசித்தது.

"குரலையடுத்து பந்தமொன்றும் அந்நிலா மாடத்திற்கு வந்தது. பந்தத்தை ஏந்தியபடி வந்த மனிதனின் முகம் தெரியவில்லை. அந்த மனிதனே பந்தத்தைத் தன் முகத்தருகே தூக்கிப் பிடித்தான். அடுத்த கணமே அனைவரும் எழுந்து தாங்களா?" என்று ஒரு சேரக் கேட்டார்கள். கடற்படைத் தளபதி பந்தத்தை வாங்கிக் கொண்டான்

"அனைவரது வியப்புக்கும் ஆளான அந்த மனிதன், நானேதான் நண்பர்களே. உங்கள் விசுவாசத்திற்கும் குழப்பத்திற்கும் ஆளாகியுள்ள கரிகாலன்தான்?" என்று சொல்லவும் செய்தான்.

மக்கள் எதிர்ப்புக்கும், சதியாளர்களின் எதிர்ப்புக்கும், நண்பர்களின் சங்கடத்திற்கும் ஆளாகி, இளவரசுப் பட்டமிருந்தும், அரியணையில்அமர வேண்டிய காலம் வந்தும், அவ்வாறு அமர முடியாமல், கேள்விக் குறியான எதிர் காலத்தைச் சுமந்தவனும், இரண்டாம்ராஜராஜனின் அத்தை மகனும், சோழமாதேவியின் வயிற்றில் உதித்தவனுமான கரிகாலனை அந்த நேரத்தில் ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. கறுத்துக் கிடந்த அந்தகாரத்தில் விளக்கு போல் தோன்றிய

tamilebooks.net

கரிகாலனுக்குப் பிராயம் ஒன்றும் அதிகமில்லை. சுமார் இருபது வயதே இருக்கலாம். ஆனால் அவ்வளவு சிறிய பிராயம் என்று அவனது உடற்கட்டினைப் பார்த்தால் கூற முடியாது.

பன்னிரண்டாம் பிராயம் தொட்டே ஆதித்த கரிகாலனைப் போல் வீரவிளையாட்டிலும், உடற்பயிற்சியிலும், வேட்டை விவகாரங்களிலும் இடைவிடாது ஈடுபட்டிருந்தானாதலால் பெருவீரனுக்குரிய உடற்கட்டும் தோரணையும் அவனிடம் வந்து சேர்ந்திருந்தன. அரச அந்தஸ்தை நிழலாக வைத்துக்கொண்டு அந்தப்புரத்தையே ஆஸ்தானமாகக் கொள்ளும் பழக்கம் அவனிடம் அமையவில்லையாதலால் உடல் கட்டுக்கோப்புடன் இருந்தது.

ராஜராஜருடன் பெயருக்கு மட்டும் இளவரசனாய் இல்லாமல் வாய்ப்பு கிடைத்த நேரத்திலெல்லாம் நிர்வாகத் தைச் சுமந்து பழகினானாதலால் அரசியல் அறிவு அவனிடம் நிரம்பி இருந்தது. ஒளி படைத்த கண்களைக்கொண்டிருந்த அவன் இளவலாய் இருந்த காலத்திலும் எளிமையாய் இருந்தான். ஆதலால் அனைவராலும் கவரப்பட்டவனாயும் இருந்தான். அக்கவர்ச்சி அல்ப ஆயுசானது என்று அவன் எதிர்பார்க்க வில்லை. மன்னர் மாண்டபின் மக்கள் மாறினர். அவன் நடமாடிய இடத்திலெல்லாம் நாட்டியமாடவும் தயாராய் இருந்த மக்கள் அவனது இடத்தைக் கண்டாலே போர்க்கொடி பிடிக்கலானார்கள்.

இப்படிப்பட்டதொரு துர்பாக்கியத்தைச் சுமந்து கொண்டிருந்தும் தற்போது அதன் சாயல்கூடத் தெரியாமல் வந்து நின்ற இளவலைக் கண்டபோது அனுபவசாலியான அண்ணன் பல்லவராயன்கூட அசந்து போனான். ஏதோ பேசவும் முற்பட்டான். ஆனால் அவனைப் பேச வேண்டாம் என்று சைகை செய்த இளவல், "உங்கள் குழப்பங்களும் சங்கடங்களும் இன்றோடு தீர்ந்தன. அனைவரும் தங்கள் பணிகளைக் கவனிக்கலாம் . . ." என்று கூறியதும் "என்ன சொல்கிறீர்கள் பிரபு?" என்று அனைவரது சார்பிலும் கேட்பது போல் கேட்டான் அமரகோன்.

"உண்மைதான் நண்பர்களே. அரியணையில் அமர்வது குறித்து உங்களுக்குள் சர்ச்சைகள் வரவேண்டியதில்லை. இனி வரவும் கூடாது. நான் அரியணையில் அமரப்போவதில்லை. இப்போதைய நிலைக்குப் பொறுத்தமான. . . மக்களால் விரும்பக் கூடியவரையே அரியணையில் அமர்த்தியாகி விட்டது. விவகாரத்தைப் பறையறைவித்து விட்டுத்தான் வருகிறேன்.

tamilebooks.net

எனவே கவலையை விடுங்கள். நான் என் பணியைத் துவக்குகிறேன். நான் செய்தாக வேண்டிய பணி அது. சிங்களவரின் விஷமம் பெருகிவிட்டதென்றும் தமிழகத்தை விழுங்கிவிட சிங்களத்துப் புலைச்சேரியில் கடற்படை கட்டுவ தாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அவனது இம்முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிந்தால்தான் உண்டு. இல்லை யென்றால் வெட்ட முடியாத மரமாக வளர்வதோடு அதன் ஆணிவேர்கள் பற்பல இடங்களிலும் படர்ந்து தமிழகக் கோட்டையை அழித்துவிடும். கடற்படைத் தளபதி, நீ உடனடி யாக நமது கடற்படையைத் தாயார் செய். இன்னும் மூன்று நாட்களில் நாம் ஈழநாட்டிற்குப் புறப்பட வேண்டும் . . .” எனறு நிதானமாகக் கூறிய கரிகாலன் பதிலுக்குக் காத்திராமல் நிலாமடத்தை விட்டு இறங்கினான்.

இளவலின் வரவைப் போலவே பேச்சும் விந்தையாய் இருந்தது அவர்களுக்கு. அதுவரை அவர்கள் விவாதித்த பிரச்சனையைவிட இளவலின் பேச்சே அதிக குழப்பத்தை உண்டாக்கியது. அதுவரை அவர்களோடு ஒருவராக அமர்ந்திருந்து ஒரு வார்த்தையும் பேசாதிருந்த தானதிகாரியான சோழசம்புவரையர் நமட்டுச் சிரிப்பை உதிர்த்தார், இளவல் அகன்றபின். இளவலின் பேச்சு நம்புகிற மாதிரியும் இல்லை. நம்பாமல் ஒதுக்கி விடுகிற மாதிரியும் இல்லை. இந்த நிலையில் தடதடவென சத்தமொன்று எழுந்தது.

அனைவரும் நிலாமாடத்தில் படிக்கட்டுகளை நோக்கி னார்கள். அங்கே ஏதோ உருவம் கீழே இறங்க முற்படுகையில் தடுமாறி விழுந்த மாதிரி தெரிந்தது. அதை உறுதிபடுத்திக் கொள்ள பரமேஸ்வரனும் மிக வேகமாகப் படிக்கட்டுகளில் இறங்கினான். ஆனால் மறுகணம் கீழேயிருந்து எழுந்து வந்ததொரு குறுவாள் அவனது தோளில் பாயவே ‘ஹா’ வென இரைச்சலிட்டு வீழ்ந்தான். வாலெறிந்த உருவம் இருளில் மறைந்தது.

இந்தக் குழப்பங்கள் போதாதென்று வேறொன்றும் வந்து சேர்ந்தது. காஞ்சிபுரம் பரமேஸ்வரனின் மீது எறியப்பட்ட குறுவாளைச் சோதித்துப் பார்த்தபோது அவ்வாளில் பாண்டியரின் இலச்சினை பொறிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. ‘அப்படியானால் இருளில் மறைந்திருந்தவனும், பேச்சுக் களை ஒட்டுக் கேட்டவனும், கத்தியை எறிந்தவனுமான ஒற்றன் பாண்டிய நாட்டவனா?’ என்று யோசிக்க வேண்டியவனானான் அண்ணன் பல்லவராயன்.

tamilebooks.net

பாண்டியநாடு சோழ நாட்டிடம் எந்த நேரத்திலும் உதவியை நாடும் பட்சத்தில் இப்படியொரு ஒற்றன்வருவது சாத்தியமா என்று கேட்டுக் கொண்டே அவன் பதில் பெற முடியாமல் தவித்தான். இதற்கிடையில் தலைநகரில் போர் மும்முரங்கள் செய்யப்படலாயின.

'இளவல் இலங்கைக்குப் போகிறாராமே?' என்றும், 'இளவல் அரியணையில் அமரவில்லையாமே' என்றும், 'அரியணையில் ஆள் அமர்த்தப்பட்டு விட்டதாமே' என்று எல்லாம் மக்கள் பேசிக் கொண்டார்கள். 'நாகைப் பட்டிணத்திலிருந்து என்றைக்குப் புறப்படுகிறது போர்க் கலங்கள்?' என்று சிலர் வினவிக்கொண்டார்கள். 'பதவியில் அமரவில்லை என்றாலும் உதவி செய்கிறார் இளவரசர்' என்றும் 'நாட்டைக்காக்க இளவரசர் பதவிக்காகப் போட்டியிடாமல் சிங்களத்திற்குப் போகிறார்' என்றும் பலர் கரிகாலனின் பேரில் அனுதாபம் கொள்ளவும் செய்தார்கள்.

அவர்களது பேச்செல்லாம் மெய்யாகிற வகையில் இரண்டு நாட்கள் கழித்து நாகையிலிருந்து கரிகாலனும் புறப்பட்டான். அவன் புறப்பட்டுப்போன மறுநாள் பேரிடியொன்று விழுந்தது பல்லவராயனின் தலையில். காலமாகி விட்ட சோழ மன்னர் இரண்டாம் ராஜராஜனின் புதல்வர்கள் காணாமல் போய்விட்ட தாகச் செய்தி கிடைத்தது. இனியும் கைகளைக் கட்டிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று தீர்மானித்த அண்ணன் பல்லவராயன் பேரமைச்சரைச் சந்திக்கச் சென்றான். அங்கே அவனுக்கு வேறொரு வியப்பு காத்திருந்தது. 'ஒற்றறிய முயன்றதாக' பெண்ணொருத்தி பிடிப்பட்டிருந்தாள் அங்கே. அவள் வேறு யாருமில்ல கடலழகிதான்.

ஃஃ ஃஃ ஃஃ

குழப்பங்களும் புதிர்களும் அடுக்கடுக்காகத் தலையில் இறங்கிக் கொண்டிருந்தன சோழநாட்டில். ஆனால் கூடலிலோ இவ்விரண்டும் உருவாவதற்கான அறிகுறிகள் கூட இல்லை. அதனால் தானோ என்னவோ இலங்காபுரன் உற்சாகமாக் காணப்பட்டான்.

கூடலுக்கு அருகே கடலில் தொட்டிலைப் போல் தவழ்ந்தாடிக் கொண்டிருந்தது அவனது பிரத்தியேகப் படகு. அப்படகிலே அமர்ந்திருந்த இலங்காபுரனின் அருகில் அமர்ந்திருந்த அழகியும் சிங்களத்திலிருந்து பிரத்தியேகமாகத் தான் வரவழைக்கப்பட்டிருந்தாள். அவள் ஆடை புனைந்திருந்த விதமும் ஆபரணங்களை அணிந்த விதமும் பிரத்தியேகமாகவே

tamilebooks.net

இருந்தன. அவளை அவன் பார்த்த விதமும் பார்த்துச் சிரித்த விதமும் கூட பிரத்தியேகமாகத்தான் இருந்தன. தன் அரக்கக் கைகளால் அல்லிக் கொடி போலிருந்த அவளைத் தொட்டிழுத்தான் அவன். தொட்ட இடம் கன்றிப் போயிற்று. அதைச் சுட்டிக் காட்டினான் அவள். சிரித்தான். "பார்த்தாயா பெண்ணே நான் தொட்டாலே உன் உடல் கன்றிப் போய் விட்டது? இப்படியிருந்தால் உன்னிடம் நான் எதை எதிர் பார்த்துப் பெற முடியும்?" என்று கேட்டு இடியெனச் சிரித்தான். அந்த இடியோசையைப் மீறுகிற வகையில் கரையிலிருந்து எழுந்தது பேரிகையொலி ஒன்று.

6

"அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்"

— குறள், 483

பேரிகை கொட்டி கணிசமான நேரமானபின் இலங்கா புரனை நோக்கிக் கரையிலிருந்து புறப்பட்டது ஒரு படகு. அப்படகில் வந்தவன் இலங்காபுரனின் படகில் இறங்கினான்.

தன் படகில் வந்து நின்றவனைக் கண்டதும் "வா சிங்கா" என்று சகஜமாக வரவேற்றான் இலங்காபுரன்.

இலங்காபுரனின் வரவேற்பு சிங்கனுக்கு இனிக்கவில்லை.

"பேரிகை கொட்டினோம்" என்று ஏதோ சண்டையைத் துவக்குபவன் போல் சொன்னான் சிங்கன்.

"சொன்னாள் இவள்" என்றான் இலங்காபுரன்.

"உங்களுக்குக் கேட்கவில்லையா?"

"அதனாலென்ன?"

"பேரிகை கொட்டினால் கரைக்குத் திரும்பவேண்டும்."

"ஆம் . . ."

"முக்கியமான காரணம் இருக்கிறது என்று அர்த்தம்."

"ஆம் . . ."

"பின் ஏன் கரைக்குத் திரும்பவில்லை?"

"இதைக் கேட்கத்தான் இங்கு வந்தாயா?" கரகரத்த குரலில் கேட்டான் இலங்காபுரன்.

"நான் கேட்டதில் தவறில்லையே. . ."

tamilebooks.net

"சிங்கா, என்னையே ஒற்றறிபவன், என்னையே சந்தேகிக் கிறவன், என்னையே கேள்வி கேட்கிறவன் ஆகியோர்களைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை, அப்படி யாராவது முயன்றால் அவர்கள் என்ன கதியை அடைவார்கள் என்பது உனக்கே தெரிந்திருக்கும்" என்றான் இலங்காபுரன்.

தன்னை ஒற்றறிய முற்பட்டவனைக் கொன்றுவிட்டதையே இலங்காபுரன் நினைவூட்டுகிறான் என்பது தெளிவாகப் புரிந்தது சிங்கனுக்கு. அது மட்டுமல்ல, இதுபோன்ற காரியங்களைச் செய்வதில் இலங்காபுரன் சிறிதும் தயங்குவதில்லை என்பதும் தெரிந்தது. ஆகவே, தான் பேசிய முறையை மாற்றிக்கொண்ட சிங்கன், "தலை போகிற செய்தி கிடைத்திருக்கிறது" என்றான்.

"யாருடைய தலை?" கேட்டான் இலங்காபுரன்.

சிங்கனுக்கு எரிச்சலாக இருக்கவே, "என்னுடைய தலை என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்" என்று கூறிவிட்டு, "கடலழகி சோழர்களிடம் பிடிபட்டு விட்டாளாம். போதுமா?" என்று கேட்டான்.

இலங்காபுரன் அதிரவில்லை. "சரி" என்றான்.

சிங்கனுக்கு என்னமோ போல் இருந்தது. ஒருவேளைதான் கூறியது வேறு மாதிரி அவனது காதில் விழுந்து விட்டதோ என்றெண்ணிய அவன், "நான் கூறியது. . ." என்று இழுத்தான்.

"கடலழகி சோழர்களிடம் சிக்கி விட்டாள். இதுதானே செய்தி?" என்று இலங்காபுரன் சொன்னதும் சிங்கன் திகைத்துப் போனான். குடிமூழ்கக்கூடிய செய்தியைச் சொல்லியும் இலங்காபுரன் சகஜமாக இருந்ததை அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஆகவே, "நீங்கள் அனுப்பிய ஒற்றர் எதிரிகளிடம் சிக்கிவிட்டாள். இது விபரீதமாக முடியாதா?" என்று கேட்டான்.

"முடியாது. . ."

"முடியாதா. . ."

"அவளைப் பிடிபடச் சொன்னதே நான்தான்."

சிங்கன் அத்துடன் கடலழகியைப் பற்றிப் பேசவில்லை. "நாம் அனுப்பிய ஒற்றன் பத்திரமாகத் திரும்பிவிட்டான். சோழ நாட்டைப் பற்றி நிறைய செய்திகளைக் கொண்டு வந்திருக் கிறான்" என்றான்.

"சரி. . ."

"அவனை இங்கேயே அனுப்பி விடட்டுமா?"

tamilebooks.net

"எதற்கு?"

"செய்திகள் தேவையில்லையா?"

"எனக்கெல்லாம் தெரியும் சிங்கா."

"ஒற்றன் இன்னும் உங்களைச் சந்திக்கவே இல்லை."

"எனக்கிருக்கிற ஒற்றன், ஒருவன் மட்டுமே இல்லை."

"அப்படியானால். . .?"

"புரிந்து விட்டதல்லவா? போய் வா சிங்கா. உங்களை யெல்லாம் காலையில் சந்திக்கிறேன்" என்றான் இலங்காபுரன். சிங்கன் சில கணங்கள் விழித்தான். பிறகு விடுவிடுவென படகை விட்டு இறங்கினான். திரும்பினான் தன் படகில்.

சிங்கன் சென்ற பின் தங்கச் சிலையென அமர்ந்திருந்த அழகி சிங்கமென நின்றிருந்த சிங்களத்துத் தண்டநாயகனை நோக்கினாள். அவன் எங்கோ பார்த்துக் கொண்டிருந்ததையும் அவனது சிந்தனையும் எங்கோ சென்று விட்டதையும் உணர்ந்தாள். பூத்துக் குலுங்கும் மலர்ச்செடி போல் தானிருப்பதையும் சட்டை செய்யாமல் வேறெந்த உலகிற்கோ சென்றுவிட்ட மாதிரி இருந்த அவனது தோரணையைக் கண்டாள். சிரித்தாள். அப்போதும் அவன் கனவுலகைவிட்டு மீளவோ அவளை நோக்கித் திரும்பவோ இல்லை. உண்மையில் அவன் பெரியதொரு கனவுலகில் பிரவேசித்து விட்டிருந்தான். சோழநாட்டு விவகாரம் குறித்து அவனுக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. தான் போட்ட திட்டப்படி கடலழகி நடந்து கொண்டிருந்த விதம் அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அந்த வகையில் தனக்குப் பாதி வெற்றி கிடைத்துவிட்டதாகவும் கருதினான் அவன். நேரத்திலும் வேளையிலும் நம்பிக்கை யில்லாதவனான அவன், 'கடலழகி வந்த நேரம் நல்ல நேரம்தான்' என்று சொல்லிக் கொண்டு அதற்காகச் சிரித்துக் கொள்ளவும் செய்தான். சிங்களத்தை விட்டுப் புறப்பட்ட போது சிங்கள வேந்தன் பராக்கிரம பாகு கூறியவற்றை நினைவு கூர்ந்தான்.

கடற்படையைத் தயாராக்கி விட்டு இலங்காபுரனை அழைத்த மன்னன் வினவினான்: "இலங்காபுரா, உன்னை இப் போது எதற்காகத் தமிழகத்திற்கு அனுப்புகிறேன் தெரியுமா?"

எல்லோருக்கும் தெரிந்த விஷயத்தை எதற்காகக் கேட்கிறார் இவர் என எண்ணினான் இலங்காபுரன். ஆனாலும் காட்டிக் கொள்ளாமல், "பாண்டிய நாட்டில் குழப்பம் செய்யும் குலசேகர பாண்டியனை ஒடுக்கிப் பராக்கிரம பாண்டியனின் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு" என்றான்.

tamilebooks.net

மன்னன் இதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்து, "பைத்தியக்காரா, பாண்டியனின் ஆட்சியை நிலைநிறுத்து வதற்காகவா சிங்களப் படைகள் அனைத்தையும் உன்னோடு அனுப்புகிறேன்?" என்று கேட்டுவிட்டு, "மதுரையில் எந்தப் பாண்டியன் அமர்ந்தால் நமக்கென்ன?" என்றான்.

"பின் எதற்காக உதவி செய்ய என்னை அனுப்புகிறீர்கள்?"

"உதவத்தான் அனுப்புகிறேன். ஆனால் யாருக்கு? அந்தப் பாண்டியனுக்கா? இல்லை இலங்காபுரா இல்லை. பாண்டிய னுக்கு உதவுவதாகத்தான் நாம் செல்கிறோம் என்று சரித்திரம் சொல்ல வேண்டும். ஆனால் உள்நோக்கம் நமக்கு அது இல்லை. சிங்கள சாம்ராஜ்ய விஸ்தரிப்புதான் நமது நோக்கம். அதற்குத்தான் இப்பயணம்."

"தாங்கள் சொல்வது?. . ."

"குலசேகர பாண்டியனாலும் சரி, பராக்கிரம பாண்டிய னாலும் சரி, நமக்கொன்றும் அவர்களால் லாபமில்லை. ஆனால் அதே சமயம் அந்த இரு பாண்டியர்களுக்குக் கூட ஒருவருக் கொருவரால் லாபமில்லை. இதை மனதில் வைத்துக்கொண்டு பாண்டிய நாட்டை நாம் விழுங்கிடவிட வேண்டும்."

"முடியக் கூடிய காரியமா அது?"

"நமக்குச் சாதகமான காலம் நிலவுகிறது இலங்காபுரா. தமிழர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வது நமக்குமிகவும் அனுகூலம். நம்மிடம் உள்ள படைபலமும் கணிசமானது. இப்படி இருக்கையில் முடியாத காரியம் என்ன இருக்கிறது? நீ பாண்டிய நாட்டுக்குப் போய் குலசேகரனை ஒடுக்குவதற்கு முன்பாக மக்கள் எவனை விரும்புகிறார்கள் என்று கவனி. விரும்பாதவனை வேலை தீர்த்துவிடு. விரும்புகிறவனை அரியணையில் அமர்ந்து. அவன் அங்கே பொம்மையாக இருப்பான். ஆட்சி என் கையில் இருக்கும்."

"அதாவது. . ."

"ஏன் தயங்குகிறாய்? நீ பாண்டிய நாட்டில் எதைச் செய்தாலும் எளிதில் வெற்றிபெற முடியும். ஏனென்றால் பாண்டியனுக்கு உதவக்கூடிய பெரிய சக்தியான சோழர்கள் தற்போது குழம்பிய நிலையில் இருப்பதாகத் தென்னிலங்கை வளஞ்சியர்கள் (இலங்கை வணிகர்கள். தமிழகத்தில் தங்கி வாணிபம் செய்தவர்கள்) மூலம் கேள்விப்பட்டேன். ஆகவே நீ செல். படையுதவி போதவில்லை என்று கஷ்டப்படாதே. கடாரத்து மன்னர் நமக்குப் போதிய உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார். எந்த நேரத்திலும் அவரிடமிருந்து படைகளைத் தருவித்துக்

tamilebooks.net

கொள்ளலாம். உன்மீது பெரும் நம்பிக்கையை வைத்து அனுப்புகிறேன். சிங்களத்திற்குப் பொற்காலம் பிறக்க வேண்டுமென்றால் அதற்கு இந்தப் பயணம்தான் நுழைவாயில். இன்று இச் சிங்களத்திலிருந்து புறப்படும் நீ வெற்றி வீரனாகத் திரும்பும்போது அமைச்சர் பதவி தயாராய் இருக்கும். ரோகண நங்கை மாலையும் கையுமாய்க் காத்திருப்பாள். புலவர்கள் உன்னைச் சரித்திரத்தில் பொறிக்க வந்து நிற்பார்கள். போய்வா."

ஃஃ ஃஃ ஃஃ

மன்னர் கூறியபடி அமைச்சர் பதவியும் சிங்கள அழகி ரோகண நங்கையும் தயாராகக் காத்திருப்பது போலவே தோன்றியதால் கனவுலகம் அவனை முழுதுமாய் ஆழ்த்தியது. இருக்கிற உலகை மறந்து சிலைபோல் நின்றிருந்தான் அவன். கலத்தின் கீழ்த் தளத்தில் நான்கு பேர் அமர்ந்தபடி துடுப்பு வலித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மட்டும் இரைச்சல் போடா திருந்தால் இலங்காபுரனும் கனவுலகை விட்டு நீங்காதிருந்திருப்பான். தற்போது அதிலிருந்து மீண்டுவிட்ட அவன் பக்கத்தில் நின்றிருந்த பெண்ணை நோக்கினான். வைத்த விழி வாங்காமல் நோக்கினான். அவனிடம் உண்டாகியிருப்பது வித்தியாசமான பார்வை என்பதை அறிந்தாள் அந்த அழகி. அடுத்து எண்ணுவதற்குள் அவளைச் சிறிய மான்குட்டி ஒன்றைத் தூக்குவது போல் தூக்கினான் இலங்காபுரன். அவனது முரட்டுச் செயலைத் தாங்காமல் கைகால்களை உதறினாள் அவள். அவனுக்கு அதெல்லாம் ஒரு தடையாகவே இல்லை. அள்ளி எடுத்து அவளது அல்லி இதழ்களில் தன் அரக்க உதடுகளை அழுந்தப் பதித்து அவளது இடையில் ஒரு கரத்தை வைத்துத் தன்னை நோக்கி இழுத்து அணைத்துக் கொண்டான். அவனது செயல்களைக் கண்ட அவளுக்கு அவன் அசாதாரணமான நிலையில் இருக்கிறான் என்பது புரிந்தது. எனவே எதிர்க்கும் மனமின்றி, எதிர்க்கும் சக்தியுமின்றி எதற்கும் தயாராகி முள்ளிடைப்பட்ட மலர் போல் நடந்து கொண்டாள். முரட்டுக் காமுகனைப் போல் நடந்து கொண்ட அவன் தோலை எறிவது போல் அவளைத் தளத்தில் தள்ளினான்.

பிறகு அவளை அனுப்பிவிட்டுத் தனிமையில் இருந்தான்.

ஃஃ ஃஃ ஃஃ

கலத்தின் மேல்தளத்தில் காலை நீட்டியபடி தனியே அமர்ந்திருந்த சிங்களத்துத் தண்டநாயகன் நெடுநேரமாக

tamilebooks.net

அமைதியாகவே சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான். அவனது அபரிமிதமான மகிழ்ச்சியைக் கண்டு கேலி பேசுவதுபோல் நட்சத்திரங்கள் கண் சிமிட்டின. கடலலைகள் எந்த நேரத்திலும் தொல்லை தந்தபடி இருக்கும் விடலைப் பிள்ளைகளைப் போல் ஆரவாரித்துக் கொண்டிருந்தன. துடுப்பு வலித்துக் கொண்டிருந்த இருவர் பெரிதும் சலித்திருந்தார்கள். எஜமானனைக் கொண்டுபோய் கரையில் சேர்த்துவிட்டு ஓய்வெடுக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டதைக் கண்ட அவர்களில் ஒருவன் காற்றின் போக்கைக் கவனித்தபின் துடுப்பு வலிப்பதை நிறுத்திவிட்டு மேல் தளத்திற்கு வந்தான். "பிரபு" என்று குரல் கொடுத்துவிட்டு "திரும்பும் நேரம் ஆகிவிட்டது" என்று கூறிவிட்டுத் திடீரென கடலில் எதையோ உற்று நோக்கினான்.

இலங்காபுரனின் பார்வையும் அந்தத் திசையில் திரும்பியது.

"பிரபு, யாரோ நம் படகை நோக்கி நீந்தி வருகிறார்கள்" என்றான் படகோட்டி.

இலங்காபுரன் எழுந்து நின்றபடி நீந்தி வந்துகொண்டிருந்தவனை ஒருமுறை பார்த்துவிட்டு "அவனை கீழ் அறைக்குக் கொண்டுவா" என்று கூறிவிட்டுக் கீழே இறங்கினான்.

அடுத்த சில நிமிடங்களில் நீந்தி வந்தவன் படகில் ஏற்றப்பட்டுக் கைத்தாங்கலாகக் கீழறைக்குக் கொண்டுவரப் பட்டான். உள்ளே பந்தமொன்று எரிந்தது. அதற்குப் பக்கத்தில் கிடத்தப்பட்டதும் அவனைக் கண்ட இலங்காபுரனின் கண்கள் விரிந்தன. "நீயா?" என்றான் வியப்புடன். அந்த மனிதன் உதடுகளை விரித்து "மோசம்" என்ற ஒற்றைச் சொல் ஒன்றை மட்டுமே உதிர்த்தான். மறுகணம் அவனது நினைவு தவறியது. அவனை நன்றாக ஒருமுறை பார்த்தான் இலங்காபுரன். அவனது உடலில் காயங்கள் பல இருந்ததையும் அவை பச்சைக் காயங்களாய் இருந்ததையும் கண்ட அவனுக்கு ஏதேதோ கற்பனைகள் தோன்றின. போதாத குறைக்கு அவனது வாயிலிருந்து 'மோசம்' என்ற சொல் வேறு வெளிப்பட்டதால் பெரிதும் குழம்பிப் போன அவன், "டேய், படகைச் சீக்கிரம் கரைக்குக் கொண்டு போ" என்றான் படகோட்டியிடம்.

படகு கணங்களில் கரையை அடைந்தது. அங்கே காத்திருந்தவர்களை அழைத்த இலங்காபுரன், "கலத்தில் இருக்கும் நுளம்பனைக் கொண்டுபோய் உடனடிச் சிகிச்சைகளைச் செய்யுங்கள். நினைவு திரும்பியதும் என்னிடம் சொல்லுங்கள்" என்று கட்டளையிட்டான்.

tamilebooks.net

கட்டளைகள் தாமதமின்றி நிறைவேற்றப் பட்டாலும் சிங்களத் தண்டநாயகனிடம் பொறுமையில்லாதிருந்தது. நிமிடத்திற்கொரு முறை "நினைவு திருப்பி விட்டதா?" என்றும் "சீக்கிரமாக அவனுக்கு மயக்கம் தெளிவியுங்கள். இல்லை யென்றால் உங்கள் தோலை உரித்து விடுவேன்" என்றும் சொல்லிக்கொண்டே இருந்தான்.

ஒரு வழியாக அதிகாலை நேரத்தில் நுளம்பனின் நினைவு திரும்பியது. அவனை இலங்காபுரனின் பாசறைக்குக் கொண்டு வந்தார்கள் ரொம்பவும் பொறுமையிழந்திருந்த இலகாபுரன் "என்ன நடந்தது நுளம்பா?" என்று வினவினான்.

நுளம்பனிடம் விரிந்தது ஒரு கதை. யாரும் எதிர்பாராத கதை அது. அதைக் கேட்டதுமே இலங்காபுரனின் முகம் அளவு கடந்த கோபத்தைக் காட்டும் வகையில் பயங்கரமாகச் சிவந்தது. கண்கள் மூடின. கைகள் மீசையைத் தொட்டன. என்னாகுமோ என்று கலங்கினார்கள் உபதளபதிகள்.

7

"நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது"

— குறள், 864

சிகிச்சைகள் சிறப்பான முறையில் அளிக்கப்பட்டிருந்ததால் நினைவு திரும்பிய போது நுளம்பன் கனிசமாகத் தேறியிருந்தான். பாசறைக்குக் கொண்டு வந்தபின் பருகுவதற்குப் பாலும் தரப்பட்டதால் அவனிடம் தெளிவும் பிறந்திருந்தது. உள்ளே இருந்தவர்களோடு அவனும் மர ஆசனத்திலேயே அமர்ந்து கொண்டான். அதுவரை காத்திருந்த இலங்காபுரன் மேலும் பொறுக்க மாட்டாமல், "என்ன நடந்தது நுளம்பா?" என்று வினவியதும், "குடி மூழ்கி விட்டது தளபதி, நாம் மோசம் போனோம்" என்றான் நுளம்பன்.

"செய்தியைச் சொல் . . ." ஊக்கினான் தண்டநாயகன்

"ரொம்பவும் எதிர்பார்க்காத செய்தி தளபதி . . ."

"சீக்கிரம் சொல் . . ."

"நாம் பாண்டிய நாட்டிற்கு வரப்போகிறோம் என்பது பாண்டியனுக்குத் தெரிந்து விட்டிருக்கிறது. . . "

"இதுதான் எதிர்பார்க்காத செய்தியா?" எரிந்து விழுந்தான் இலங்காபுரன்.

tamilebooks.net

"கோபப்படாதீர்கள் ஐயா. நாம் வருகிறோம் என்பது குலசேகரப் பாண்டியனுக்குத் தெரிந்துவிட்டது விபரீதத்தில் முடிந்து விட்டது."

"எந்த விபரீதத்தில்?"

"குலசேகரன் தன் வேலையைக் காட்டிவிட்டான்."

"என்ன வேலையை?"

"ஐயா, நாம் யாருக்கு உதவ வந்தோமோ அவரைக் கொன்று விட்டான் குலசேகர பாண்டியன். . ." என்று துக்கத்துடன் சொல்லிக்கொண்டான் நுளம்பன்.

இலங்காபுரன் நம்பவில்லை. "இது உண்மையா?" என்று இடிஇடிப்பது போல் கேட்டான் நுளம்பனிடம்.

"ஆம் தளபதி பராக்கிரம பாண்டியர் கொலைசெய்யப் பட்டார். அவரது குடும்பம் அழிக்கப்பட்டுவிட்டது."

"என்னது?"

"காலம் தாழ்த்தினால் நீங்கள் பெரும் வேலியாக அமைந்து விடுவீர்கள் என்று குலசேகர பாண்டியனுக்குத் தெரிந்திருக் கிறது. அது மட்டுமல்ல. பராக்கிரம பாண்டியரைப் பற்றியும் அவரது பலவீனத்தைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான். வெறுங் கோபக்காரரும், மனத்தைரியம் இல்லாதவருமான பராக்கிரம பாண்டியரைப் பகைத்துக் கொள்வதிலும் அதில் வெற்றி பெறுவதிலும் என்ன சிரமம் இருக்க முடியும் சொல்லுங்கள்."

இலங்காபுரன் உடனடியாக எதையும் கேட்காத நிலையில் சிங்கன் குறுக்கிட்டு, "இச்சம்பவம் எப்படி நடந்தது நுளம்பா?" என்று வினவினான்.

"சதிசெய்து கொல்லப்பட்டார். . ." என்றான் நுளம்பன்.

"என்ன சதி?"

"பேச்சு வார்த்தைக்கென்று திருமாளிகைக்கு அழைக்கப் பட்டு விஷ உணவால் கொல்லப்பட்டு விட்டார். அவரது மனைவியும் மக்களும் அவர்களது மாளிகையில் தீயிட்டு கொளுத்தப்பட்டார்கள். . ."

இலங்காபுரன் கேட்டான்.

"பராக்கிரம பாண்டியரின் மகன் வீரபாண்டியன் என்ன ஆனான்?"

tamilebooks.net

"சம்பவம் நடந்த நாளில் நல்ல வேளையாக அவர் மதுரையில் இல்லை. சம்பவம் நடந்த பின்பும் வெளிப்பட வில்லை. எனவே தலை மறைவாக இருக்கிறார் என்று தெரிகிறது."

"உன்னுடலில் ஏன் இத்தனைக் காயங்கள் உண்டாயின?"

"தளபதி. நான் அங்கே செய்து கொண்டிருந்த ஒற்றர் வேலையைக் குலசேகர பாண்டியன் தெரிந்து கொண்டு விட்டான். மன்னனைக் கொன்ற கையோடு என்னையும் ஒழித்துவிட முயன்றிருக்கிறான். பாண்டிய நாட்டைவிட்டு நான் தப்புவதே பிரம்ம பிரயத்தனமாகப் போய் விட்டது. அவனது வீரர்களிடம் சிக்கி அரைப் பிணமாகித் தப்பி கடலில் விழுந்தவன்தான் நான். ஒருநாள் முழுதும் ரணக்களையோடு நீந்தி வந்து சேர்ந்தேன்..."

"இச்சம்பவம் நடந்து எத்தனை நாட்களாகிறது?"

"நான்கு நாட்கள்..."

"குலசேகரப் பாண்டியன் இப்போது எங்கிருக்கிறான்?"

"மதுரையில் தான் இருக்க வேண்டும்."

இதைக் கேட்டதும் பற்களை நறநறவெனக் கடித்தான் இலங்காபுரன். எரிமலையெனச் சிவந்தது அவனது முகம். தான் நினைத்தபடி அனைத்தும் நடப்பதாய் எண்ணி அளவுக்கு அதிகமாகவே மகிழ்ந்திருக்கையில் திடீரென அந்நினைப்பிலும் மகிழ்ச்சியிலும் மண் விழுந்துவிட்டதால் அளவு கடந்த கோபமுண்டாகி அவனது முகம் அலங்கோலமாக மாறியது.

தான் கனவு கண்ட அமைச்சர் பதவி அகன்று விட்ட மாதிரியும், தனக்கு மாலை சூட்ட வேண்டிய சிங்களத்து அழகி கிட்டாமல் போன மாதிரியும் தோன்றவே ஆத்திரத்தில் ஆசனத்தை இடியின் வேகத்தில் அடித்து ஒடித்தான். உடைத்த துண்டுகள் உபதளபதிகள் மீது தெறித்தன. இலங்காபுரனின் சுபாவம் அவர்களுக்குத் தெரியுமாதலால் தற்போது என்னாகுமோ என்று கலங்கினார்கள். விடியும் நேரத்தில் தன் கனவின் பேரில் இருள் விழுந்துவிட்ட ஏமாற்றத்தால் நெருப்பெனச் சிவந்த அவனது கண்கள் பாசறையில் இருந்த அனைவரையும் எரித்து விடுவன போல் நோக்கின. "ஏன் எல்லோரும் உட்கார்ந்திருக்கிறீர்கள்? வேடிக்கை பார்க்கவா? போங்கள் எல்லோரும். முட்டாள்கள், மடையர்கள்..." என்று சீறி விழுந்தான். அர்த்தமில்லாத அந்த வார்த்தைகளைக் கேட்ட உபதளபதிகள் செய்வதறியாமல் தவித்தார்கள். இலங்காபுரன் தன் கண்களை மூடினான். அவனது கைகள் அவனது மீசையை

tamilebooks.net

நோக்கிச் சென்றன. அதைக் கண்ட சிங்கன் இலங்காபுரனைத் தனிமையில் விட்டு அனைவரையும் அழைத்துக் கொண்டு பாசறையை விட்டு வெளியேறினான்.

இரண்டு நாட்கள் கழிந்தன. ஆனால் அந்த இரண்டு நாட்கள் இலங்காபுரனின் போக்கில் நிரம்ப மாறுதல்கள் இருந்தன. யாரிடமும் அவன் பேசவில்லை. வலுவில் பேச வந்தவர்களையும் சந்திக்க மறுத்தான். ஒவ்வொரு நாளும் ஒரு வேளையிலாவது பெண்களை நாடி வரும் அவன், நாடி வந்த பெண்களையும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

நுளம்பனின் செய்தியைக் கேட்ட வேகத்தில் இலங்காபுரன் நிதானமிழந்திருப்பதாகவே எண்ணியிருந்த உபதளபதிகள் அவன் இரண்டு நாட்களுக்கு மேலும் மௌனத்தைத் தொடரவே கவலைப்பட்டார்கள். என்ன செய்யலாம் என்று தீர்மானிக்க அனைவரும் கூடினார்கள்.

"இப்படி இருந்தால் எப்படி நுளம்பா?" என்று சிங்கன் ஆரம்பித்தான்.

"பாண்டிய நாட்டில் நிலைமைகள் தலைகீழாக ஆகிவிட்ட நிலையில் நாம் எதிர் நடவடிக்கையில் இறங்க வேண்டாமா? என்று கேட்டான் வேறோர் உபதளபதி"

"நாம் பேசாமலிருந்தால் வெற்றிக் களிப்பில் இருக்கும் குலசேகர பாண்டியன் நம்மை நோக்கி வந்துவிட்டால் நமது நிலைமை கஷ்டம்" என்றான் மற்றொருவன்.

"அரசியலில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடைபெறுவது சகஜம். இதற்குப் போய் தண்டநாயகர் கலங்கிவிட்டால் எப்படி?" கேட்டான் மற்றொருவன்.

சிங்கன் குறுக்கிட்டு, "நுளம்பா, தண்டநாயகர் இந்த அளவிற்குக் குழம்பித் தவிக்க வேண்டியது அவசியம்தானா?" என்றான்.

"சிங்கா, நீங்களெல்லாம் சிங்களத்தைவிட்டு ஏன் வந்தீர்கள்?" கேட்டான் நுளம்பன்.

"அதுதான் தெரிந்த விஷயமாயிற்றே. . ."

"அப்படியானால் மீதியையும் தெரிந்து கொள்ள வேண்டியதுதானே. . ."

"நீ என்ன சொல்கிறாய்?"

"சிங்கா, பராக்கிரம பாண்டியனை ஆட்சியில் நிலைநிறுத்தத்தானே நீங்கள் வந்தீர்கள் ?"

"ஆமாம்"

tamilebooks.net

"அதற்குள் பராக்கிரம பாண்டியன் கொல்லப் பட்டுவிட்டான் இல்லையா?"

"ஆமாம்"

"பிறகு நமக்கென்ன வேலை தமிழகத்தில் ? அங்கு நாம் ஏன் செல்ல வேண்டும் ?

" நீ சொல்வது..."

"பராக்கிரம பாண்டியன் உயிரோடு இருந்தாலும் பரவாயில்லை. இறந்து போனபின் நாம் அங்கு போய் செய்வதற்கு என்ன இருக்கிறது?"

"ஏன் நுளம்பா, பராக்கிரம பாண்டியன் செத்தால் என்ன? அவன் மகன் வீரபாண்டியன் இல்லை? அவனை நாம் ஆட்சியில் அமர்த்த வேண்டியதுதானே"

"வீரபாண்டியன் உயிரோடு இருக்கிறான் என்று என்ன நிச்சயம்"

"இல்லையா. . ."

"கொலைச் சம்பவம் நடந்தபோது அவன் மதுரையில் இல்லை. அவ்வளவுதான். அதை வைத்துக்கொண்டு அவன் உயிரோடு இருக்கிறான் என்று எப்படிச் சொல்வது? பராக்கிமனைக் கொன்ற குலசேகர பாண்டியனுக்கு அவன் மகன் வீர பாண்டியனைக் கொல்ல வேண்டும் என்பது தெரியாதா? இத்தனை நாட்களாகக் கைகளைக் கட்டிக் கொண்டா இருப்பான்? நிச்சயமில்லாத விவகாரம் இது. . . இதை நம்பி எப்படித் தமிழகம் போவது? அதோடு இன்னொரு விஷயம்."

"என்னது. . ."

"வீரபாண்டியனை அரியணையில் அமர்த்தினால் என்ன என்று கேட்கிறாயே, அதற்கு நமது மன்னரது அனுமதி வேண்டாமா . . .?"

"இதிலென்ன மறுப்பு இருக்கப் போகிறது . . . தந்தை இறந்து விட்டாரென்றால் மகனை அரியணையில் அமர்த்துவது நியாயம் தானே . . ."

"சிங்கா, அரசியலில் தந்தை வேறு, மகன் வேறு, அதில் சாதாரண பந்த பாசங்களை எதிர்பார்ப்பதற்கில்லை. நமது சிங்கள மகாவம்சத்தையே எடுத்துக்கொள். தந்தையை எதிர்த்துக்கொண்ட மகன் இல்லையா . . . தந்தையைக் கொன்ற மகன் இல்லையா . . ."

"இதை ஏன் சொல்கிறாய்?"

tamilebooks.net

"நமது மன்னர் பராக்கிரம பாண்டியருக்கு உதவ முன் வந்தாரென்றால் அவரைப் பற்றி மன்னருக்கு நன்றாகத் தெரியும். அதோடு பாண்டியர் வலுவில் வந்து உதவி செய்யுபடி கோரினார். ஆனால் வீர பாண்டியரிடமிருந்து இதுவரையில் கோரிக்கை எதுவும் வரவில்லை. நிச்சயமில்லாத சூழ்நிலையில் அழையாத விருந்தாளியாகப் போய் படைகளைக் காவு கொடுக்க எந்த மன்னர் தயாராக இருப்பார்? மேலும் வீர பாண்டியனைப் பற்றி மன்னருக்கு விரிவாகத் தெரியாது. அவன் எப்படி நடந்து கொள்வானோ . . . இந்தத் தமிழர்களின் இயல்புதான் வினோதமாக இருக்கிறதே சிங்கா. இன்று அடித்துக் கொள்கிறார்கள். மறுநாள் அணைத்துக் கொள்கிறார்கள். இவர்களை எப்படி நம்புவது? அறிமுகமாகாத வீரபாண்டியனை நம்பி நாம் ஏன் சிரமத்தில் விழவேண்டும்?"

"எதற்கும் நமது மன்னரிடம் தண்டநாயகர் விவரத்தைச் சொன்னால்தானே . . ."

"என்னவென்று சொல்வது? 'நான் தமிழ் நாட்டிற்குப் போவதற்கு முன் பாண்டியன் கொல்லப்பட்டான்' என்றா? 'இத்தனை நாட்களாகக் கூடலில் என்ன செய்து கொண்டிருந்தாய்?' எனறு மன்னர் திருப்பிக்கேட்டால் என்ன பதில் சொல்வார் தண்டநாயகர் . . . சிங்கா, நம் தண்டநாயகரின் பேரிலும் தவறிருக்கிறது. அவர் தேவையில்லாமல் அளவுக்கு அதிகமான நாளைக் கடத்திவிட்டார். கொஞ்சம் முன்பாகவே அவர் தமிழகத்திற்குப் புறப்பட்டிருந்தால் கொலை நிகழ்ச்சி தடைபட்டுப் போயிருக்கலாம் அல்லவா? அந்த வகையில் தண்டநாயகர் சற்றே அஞ்சுகிறார் என்று நினைக்கிறேன்."

"நுளம்பா, அவரொன்றும் கூடலில் அனாவசியமாக நாட்களைக் கடத்தவில்லை. ஒற்றர்களை ஏவிச் செய்திகளை சேகரித்தார்."

"ஒற்றர்களை ஏவட்டும். அதற்காகக் கூடலிலே இவர் இருக்க வேண்டுமா . . ?"

"அவர் திட்டம் என்ன தெரியுமா? சோழ நாட்டு நிலைமை அறிந்து கொண்டு தமிழகத்தையே விழுங்கத் திட்டமிட்டார். அதற்காகவே கூடலில் நாட்களைக் கடத்தினார். செய்திகளுக் காகப் பொறுத்திருந்தார்."

"மன்னரின் திட்டம் அதில்லையே சிங்கா . . . சோழர் நிலைமையை ஆராயவும் தமிழத்தை விழுங்கவுமா அவர் உங்களை அனுப்பினார்? இல்லை. . . இல்லை. . . பராக்கிரம பாண்டியரைக் காப்பதற்கு அனுப்பினார். அதில் கவனம் செலுத்தாமல் தனித் திட்டம் தீட்ட இவர் யார்?"

tamilebooks.net

"நுளம்பன் இவ்வாறு சூடாகக் கேட்டபோது அவன் தலையில் பட்டு பொட்டென்று கீழே விழுந்தது ஒரு பொருள். அதை எடுத்தான் நுளம்பன். அது ஓர் ஓலைச் சுருளாக இருக்கவே பிரித்துப் படிக்கவும் செய்தான். படித்ததும் அவனது முகம் சவமென வெளுத்தது. திரும்பிப் பார்த்தான். பாசறைக்கு வெளியே அரக்க உருவமாய் இலங்காபுரன் நின்றிருப்பது தெரிந்தது. நுளம்பனும், உபதளபதிகளும் வெலவெலத்துப் போனார்கள். இலங்காபுரன் உள்ளே வந்து அமர்ந்தான். அவனது முகம் வரண்டு கிடந்தது. அனைவரையும் ஒரு சுற்று பார்த்தான். பிறகு நுளம்பனை நோக்கி, அவனிடமிருந்து ஓலைச் சுருளையும் நோக்கி, படித்தாகி விட்டதா. . ." என்று கேட்டான்.

"படித்தேன்" தடுமாறியபடி சொன்னான் நுளம்பன்.

"என்ன அது. . . " தொடர்ந்து கேட்டான் இலங்காபுரன்.

"ஓலை சாசனம்" - சொன்னான் நுளம்பன்.

"எழுதியிருப்பது யார். . ."

"நமது மாமன்னர்."

"என்ன எழுதியிருக்கிறார். . ."

"இந்தப் படையெடுப்பு சம்மந்தமாக முடிவெடுக்கும் சகல உரிமைகளையும் உங்களுக்கு அளித்திருப்பதாக எழுதியிருக்கிறார்"

"இதிலிருந்து என்ன புரிகிறது. . ."

"எல்லா உரிமைகளும் உங்களுக்கு இருக்கிறதென்பது புரிகிறது."

"இலங்காபுரன் மடையனல்ல என்பதையும் புரிந்துகொள். சதியும் அதிகப்பிரசங்கதித்தனமும் அவனுக்குப் பிடிக்காது என்பதையும் புரிந்துகொள்" என்று இடியெனச் சொற்களை உதிர்த்த இலங்காபுரன், 'இந்தக் குட்டி மந்திராலோசனை சபை எத்தனை நாட்களாக நடக்கிறது? இதன் தலைவன் யார்? இதில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள்?' என்று சிங்கனை நோக்கிக் கேட்டான்.

பதில் சொல்லத் தடுமாறினான் சிங்கன். அதைக் கண்ட இலங்காபுரன் "என்னை ஒற்றறிய முற்பட்டவன் என்ன ஆனான் என்பது நினைவிருக்கிறதா சிங்கா? என்று கேட்டான்."

"இருக்கிறது!"

"அப்படியானால் ஒற்றறியத் தூண்டியவனை என்ன செய்யவிருக்கிறேன் என்பதும் நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்."

"இருக்கிறது."

"அவனும் வெட்டப்படுவான் களப்பலியாக."

tamilebooks.net

நிர்தாட்சனியமாகவும் கொடூரமாகவும் சொற்களை உதிர்த்தான் தண்டநாயகன். அதைக் கேட்டு அனைவருமே பீதியுற்றிருந்தார்கள். அவனது வாளால் ஒருவன் மாளப்போகும் கோரத்தை எண்ணி நடுங்கினார்கள். இந்த நிலையில் நுளம்பனை நோக்கிய இலங்காபுரன், "நுளம்பா அவரவர் வேலையை மட்டும் அவரவர் செய்வதுதான் நல்லது. அதற்காகத்தான் தனித்தனிப் பதவிகள் இருக்கின்றன. நான் கேட்கும்போது ஆலோசனைகளை நீங்கள் சொல்லலாம். மற்றபடி என்னைப் பற்றி நீங்களாக எந்த ஆலோசனையையும் செய்ய வேண்டியதில்லை. இதுவே கடைசி முறையாக இருக்கட்டும். மீண்டும் உங்களது குட்டி மந்திரலோசனையை நான் கண்டாலோ அல்லது கேள்விப்பட்டாலோ அனைவரது தலைகளையும் சீவி கடலில் எறியத் தயங்கமாட்டேன். எனக்குள்ள அதிகாரங்களைப் பற்றி ஓலை சாசனம் விளக்கியிருக்கும்" என்று கூறிவிட்டு மௌனமானான்.

சங்கடமான நிமிடங்கள் சில கடந்தபின் நுளம்பன் சற்று திடப்படுத்திக் கொண்டு "நாம் இனி செய்ய வேண்டியது பற்றித் தெரிவித்தால் நல்லது" என்றான்.

"அதுவிஷயமாகத்தான் நீங்களெல்லாம் பேசினீர்களே, என்ன முடிவவெடுத்தீர்கள்?"

"முடிவேதும் எடுக்கவில்லை."

"அதற்குள் நான் வந்து விட்டேனாக்கும்" விஷமமாகக் கேட்டான் இலங்காபுரன்.

"முடிவெடுக்கவொன்றும் நாங்கள் கூடவில்லை தண்டநாயகரே. அது எங்கள் வேலையல்ல என்பதும் தெரியும். நீங்கள் இரண்டு நாட்களாக நடந்து கொண்ட விதம் பலருக்கும் புதிராக இருக்கவே என்னிடம் வினவினார்கள். அதையொட்டி எழுந்த பேச்சில் இயல்பான வாதங்கள் உண்டாயிற்றே தவிர, நீங்கள் குற்றம் சாட்டுகிறமாதிரி 'குட்டி மந்திராலோசனை' எதையும் திட்டமிட்டுக் கூட்டவில்லை நாங்கள். எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போது ஐயங்கள் உண்டாவது சகஜம். அதை விவாதிப்பதிலும் தவறில்லை. அதோடு நாங்களும் தவறாக எதையும் விதாதித்து விடவில்லை. என்பது நீங்கள் சற்று நிதானமாக யோசித்துப் பார்த்தாலே தெரியும். இருந்தும் நீங்கள் தலை சீவுவதைப் பற்றிக் கூறுகிறீர்கள். என் தலையை நான் பெரிதாகக் கருதுபவனாக இருந்திருந்தால் பாண்டியரிடம் அடிபட்டுக் குற்றுயுயிரும் கொலையுயிருமாய் ரணக்காயங்களோடு இந்த உப்புக்கடலில் நீந்தி ஏன் உங்களிடம் வரவேண்டும்? என்னைப் பெரிதாக எண்ணியா பாண்டிய நாட்டில் ஒற்றர் வேலையைச் செய்து கொண்டிருந்தேன்?

tamilebooks.net

இல்லை தண்ட நாயகரே. ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். தங்களுக்கும் எங்களுக்கும் பதவியில் வித்தியாச மிருக்கலாம். நாட்டுப் பற்றில், வித்தியாசமிருக்க முடியாது. அந்தப் பற்றுதான் என்னை ஒற்றனாக வைத்திருக்கிறது. கடலில் நீந்தி உங்களிடம் வரவழைத்திருக்கிறது. நான் வந்ததும் அதற்காகத் தானே தவிர 'குட்டி மந்திராலோசனை' செய்வதற்கல்ல. இதை நீங்கள் புரிந்து கொண்டால் போதுமானது."

நுளம்பனின் திடீர் ஆவேசப் பேச்சைப் பொறுமை இழக்காமல் கேட்டுக் கொண்டான் இலங்காபுரன். இடையே ஏதும் பேசவில்லை. முடித்த பின்பும் அது விஷயமாகப் பேசவில்லை. அப்போதைக்கு அது சம்மந்தமாகப் பேச வேண்டிய அவசியம் இல்லை என்றும் கருதினான். எனவே பேச்சை மாற்றி, "நுளம்பா, பாண்டிய நாட்டில் நெடு நாட்களாக இருந்து உலவியவன் நீ. தற்போது பாண்டிய நாட்டில் படையெடுப்பதானால் எந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம்? எது சிறப்பாக இருக்கும்?" என்று அமைதியாகவே கேட்டான்.

திட்டத்தைச் சொன்னான் நுளம்பன். இலங்காபுரனே வியக்கும் சிறப்புத் திட்டமாய் இருந்தது அது.

8

"ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கள் போற்றிச் செயின்"

— குறள், 493

போர்த் திட்டம் பற்றி இலங்காபுரன் தன்னிடம் வினவியதும், "அப்படியானால் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதென்று முடிவு செய்துவிட்டீர்களா" என்று கேட்டான் நுளம்பன்.

"வேண்டாம் என்றால் சிங்களத்திற்குத் திரும்பச் சித்தமாக இருக்கிறேன்" என்றான் இலங்காபுரன்.

அவன் உண்மையாகப் பேசுகிறானா அல்லது தன்னைப் பார்த்து நகைக்கிறானா என்பது நுளம்பனுக்குப் புரியவில்லை. அதை உணர்ந்து கொண்ட இலங்காபுரன் "என்ன நுளம்பா, அப்படிப் பார்க்கிறாய்? உனக்கு விருப்பமென்றால் திரும்பிவிடத் தயார்" என்றான்.

"என் விருப்பம் ஒரு பொருட்டா?"

tamilebooks.net

"அந்தஸ்து வித்தியாசத்தைப் பார்க்கிறாயா? அந்தஸ்தில் வித்தியாசம் இருந்தாலும் நாம் இருவரும் நாட்டுப்பற்றில் சமமானவர்கள்தானே"

நுளம்பனுக்கு இதைக் கேட்டதும் ஒரு மாதிரியாகப் போய்விட்டது. தான் பேசியதைத் தனக்கே குத்தலாகச் சொல்லியதிலிருந்து தன் ஆவேசத்தை அவன் விரும்பவில்லை என்பது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. இந்த நிலையில் பேசமுற்பட்ட தண்டநாயகன், "ஆவேசமாகப் பேசிவிட்டால் எல்லாம் நியாயமாகிவிடாது. நுளம்பா மன்னனுக்கும் நாட்டுப் பற்று உண்டு. மக்களுக்கும் நாட்டுப் பற்று உண்டு. இருவரது பற்றுக்களும் சமமாக இருக்கலாம். அதற்காக அவனவனும் மன்னனாக நடந்து கொண்டுவிட முடியுமா? அப்படி நடந்து கொண்டால் என்னாகும்? பற்றுக்கள் சமமாக இருந்தாலும் அவரவர்களும் தங்கள் நிலை பெயராமல் நடந்து கொண்டால் தான் காரியமாற்றமுடியும். நீ உப தளபதிகளுடன் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்ததாகச் சொல்கிறாய். இந்த இயல்பான பேச்சு ஆங்காங்கே நடந்தால் என்னாகும்? படைகளுக்குள் அவநம்பிக்கை உண்டாகாதா? அது படைகளுக்கு நல்லதா? தலை சீவுவது பற்றியும் தெரிந்து கொள். நான் மிரட்டுவதும் விரட்டுவதும் என் அதிகாரத்தைப் பறை சாற்றிக் கொள்ள அல்ல. உங்களுக்குள் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தத்தான். ராமேஸ்வரத்தில் நாம் கால் வைத்த வேளை பாண்டிய நாட்டில் ஏதேதோ நடந்து விட்டது உண்மைதான். அதற்காக உடனடியாகச் செயல்பட அவசரப்பட்டு காரியத்தைக் கெடுப்பவனுமல்ல. நிதானப்பட்டு வெற்றியை இழப்பனும் அல்ல. போகட்டும். இப்போது சொல். நமது பயணத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. திட்டமிட்டபடி பாண்டிய நாட்டில் நுழைய வேண்டியதுதான். எங்கே நுழையலாம் என்பதைச் சொல்" என்றான்.

பாசறையில் இருந்தவர்கள் சகஜ நிலைக்குத் திரும்பினார்கள். நுளம்பன் கூறலானான்.

"ஐயா, நமது சிங்களத்தை எதிர்நோக்கும் பாண்டிய மண்டலத்தில் முக்கிய கேந்திரங்கள் மூன்று இருக்கின்றன."

"மூன்றா?"

"ஆம் முக்கியமானதும் பெரிய துறைமுகமுமான தொண்டி முதல் கேந்திரம். தொண்டிக்குத் தெற்கே பாசிப்பட்டிணமும் வடக்கே பொன்னமராவதியும் இருக்கின்றன. . ."

"புரிகிறது."

tamilebooks.net

"இவற்றில் தொண்டி மட்டும் கடற்கரைப் பட்டிணம். மற்ற இரண்டும் சற்று தள்ளி இருக்கின்றன."

"அது தெரியும்."

"குலசேகர பாண்டியர் பூசலை உண்டாக்கியதுமே இந்த மூன்று நகரங்களும் பலப்படுத்தப்பட்டன. பராக்கிரம பாண்டியர் கொல்லப்பட்டபின் மேலும் அவை பலப்படுத்தப்பட்டிருக்கும். ஏனென்று உங்களுக்கே தெரியும்."

"நீயும்தான் சொல்லேன்."

"பராக்கிரம பாண்டியருக்கு உதவ நாம் வரப்போவது குலசேகரபாண்டியனுக்குத் தெரியும். பராக்கிரம பாண்டியரை அவன் கொலை செய்துவிட்ட விஷயம் நமக்குத் தெரியும் பட்சத்தில் நாம் உடனடியாக நடவடிக்கையில் இறங்குவோம். தொண்டிதான் நமக்குத் தலைவாயில். அங்கே நுழைந்து பொன்னமராவதியையும் பாசிப்பட்டினத்தையும் பிடித்துக் கொண்டால் பாண்டிய நாட்டின் கடல்வழி அடைபடும். பிறகு எளிதில் நாம் முன்னேறலாம், மதுரையை நோக்கி. இது தெரிந்துதான் — இதற்கு எளிதில் இடமளித்து விடக் கூடாது என்பதால்தான்... இம்மூன்று நகரங்களைப் பலப் படுத்தியிருக்கிறான் பாண்டியன்."

"இருக்கலாம்."

"ஆகவே, நாம் நமது தந்திரத்தைக் காட்டுவோம்."

"அதாவது."

"நாம் இந்த மூன்று இடங்களில் நுழையவே வேண்டாம்."

"ஓகோ..."

"குலசேகர பாண்டியன் இத்தனை நாட்களாக ஆண்டு வந்த பகுதிகள் பலம் குறைந்து காணப்படுகின்றன. அதோடு நம்மை அங்கே எதிர்பார்க்கவும் மாட்டார்கள்..."

"ஏன்?"

"இப்போது பாண்டிய நாடென்பது இரண்டாக இல்லை. ஒன்றாகிவிட்டது. மதுரை பிரதான தலை நகரமாகிவிட்டது. எனவே நம்மைத் தென்பாண்டி மண்டலத்தில் அவர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள். அதோடு தென்பாண்டி மண்டலத்தை ஆண்டு கொண்டிருந்த குலசேகர பாண்டியன் பராக்கிரமனைக் கொன்ற கையோடு பெரும் பகுதி செல்வங்களையும் படைகளையும் மதுரைக்குக் கொண்டு போய் விட்டான். ஆகவே அவன் எதிர்பாராத இடத்தில் நாம் நுழைவோம்."

tamilebooks.net

"எந்த இடம் அது?"

"வையை ஆற்றுச் சங்கமத்திற்கருகில் நுழைந்து வையையின் தென் கரையை அடைவோம். அங்கிருந்து தெற்கு ராமநாதபுரத்தில் நுழைந்து நாசத்தை விளைவிப்போம். காவல் குறைந்திருக்கும் நிலையில் நமது முயற்சி எளிதாக இருக்கும். இதுவரை குலசேகர பாண்டியன் ஆண்டு வந்த தென்பாண்டி நாட்டை நம் வசப்படுத்தி விட்டால், பிறகு மதுரையை நோக்கி முன்னேற சிரமமிருக்காது."

"ஓகோ."

"தகுந்த இடத்தை அறிந்து கொண்டு பகைவரைச் சந்தித்தால் அவர்களைப் போதிய பலமில்லாதவர்கூட வென்று விடுவார்கள் என்று தமிழர்கள் சொல்லியிருக்கிறார்கள். நமக்கும் அதுவே சாதகமாக அமையட்டும். இனியும் தாமதிக்காமல் காரியத்தில் இறங்கினால் வெற்றி நிச்சயம்" என்று கூறி முடித்தான் நுளம்பன்.

திட்டத்தில் குறை எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆகவே தடையின்றி ஒப்புக் கொண்ட இலங்காபுரன் நடவடிக்கைகளில் இறங்கலானான். ராமேஸ்வரத்தில் ஒரு சிறு பகுதி படையை விட்டுவைத்தான். மற்ற படைகளை மரக்கலங்களில் ஏற்றி ஆயத்தப்படுத்தினான்.

ஒரு மரக்கலத்தில் சிலரை மட்டுமே வைத்துத் தொண்டித் துறைமுகத்தின் பக்கம் தலை காட்டுவதும் மறைவதுமாகச் செய்தான் பாண்டியரின் கவனத்தைத் திருப்புவதற்கு. அந்த ஏற்பாட்டைச் செய்தபின் அவனது போர்க்கலங்கள் ஆரவாரமின்றி ராமேஸ்வரத்தை விட்டுத் தென்மேற்கில் நகர்ந்தன. புறப்பட்ட இரண்டாம் நாள் இரவு வைகையின் சங்கமத்தை அடைந்தன. இருண்டு கிடந்த சங்கமப் பகுதிக்கு அருகே படகுகளில் மரக்கலங்களை நங்கூரமிட்டு இலங்காபுரன் படைகளைப் படகுகளில் இறக்கினான்.

பலர் படகுகளிலும் பலர் நீந்தியுமாய் அந்த இருளில் தமிழகத்தை விழுங்க வந்த சுறாமீன்களைப் போல் முன்னேறினார்கள். இரவுப் பொழுது முடிவதற்குள்ளாகவே அனைத்துப் படைகளும் வையையின் தென்கரையைச் சேர்ந்தன. தமிழகத்திற்கு வந்து சேர்ந்த பீடைபோல் காட்சியளித்த அந்த மாபெரும் படைத் தொகுதியைக் கண்ட இலங்காபுரன் தன் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டான். தன் திட்டத்தில் கல்லைப் போட்டு விட்டவனான குலசேகர பாண்டியனின் மீது பெரு ஆத்திரம் மூண்டது அவனிடம். அந்த ஆத்திரத்தைத் தென்பாண்டிய நாட்டின்மீது காட்டிக் கொள்வதென்று

tamilebooks.net

தீர்மானித்த அவன் படைகளைப் பொழுதுவிடிவதற் குள்ளாகவே நாச வேலைகளைத் துவக்க உத்தரவிட்டான்.

அடுத்த சில நிமிடங்களில் சிங்களத்துப் புயல் கோரத் தாண்டவத்தைத் துவக்கியது. வாணங்களைக் கொளுத்தி வீசியும் தீவைத்துமாய்த் தங்கள் வேலையைத் துவக்கிய சிங்கள வீரர்கள் மக்கள் இன்னதென விளங்கிக் கொள்வதற்கு முன்னாலேயே அவர்களைக் கொன்றார்கள். கொள்ளைக்காரனிடம் சிக்கிய அபலைப் பெண்ணைப்போல் அருகிலிருந்த ஊர்கள் அவர்களிடம் சிக்கிப் பொழுது விடிவதற்குள் அழுது கண்ணீர் வடித்தன. எதிர்த்தவர்கள் மட்டுமின்றிக் கண்ணில் பட்டவர் களும், தூங்கி வழிந்தவர்களும் நிர்தாட்சன்யமாக அழிக்கப் பட்டார்கள். வீடுகள் எரிக்கப்பட்டுப் பொருள்கள் சூறையாடப் பட்டன.

கூடலிலும் ராமேஸ்வரத்திலும் காட்டிய வேகத்தைவிட அதிக வேகத்தைச் சிங்கள வீரர்கள் இந்தப் பகுதிகளில் காட்டினார்கள். ஆகவே நாசத்தின் அளவு மிகவும் மோசமாக இருந்தது. இலங்காபுரனும் வெறித்தனத்தில் ஆணையிட்ட படியே இருந்தானாதலால் தென்பாண்டி மண்டலம் அல்லோல கல்லோலப் பட்டது. இதே ரீதியில் பதினைந்து நாட்களுக்கு அங்கே அட்டூழியங்கள் நடந்தன. வீரர்கள் விளைவித்த நாசங்களை இலங்காபுரனே நேரில் சென்று பார்வையிட்டான். திருப்திக்கு அறிகுறியாகத் தலையை ஆட்டியும் கொண்டான். அவனது மகிழ்ச்சியைக் கண்ட பாண்டிய நாட்டு மக்கள் கதி கலங்கினார்கள். தமிழர்அல்லாதாரும் பாண்டியர் அல்லா தாரும் அங்கே போரிட்ட துண்டு. ஆனால் அப்போதெல்லாம் கூட இத்தகைய நாசங்களையும் அட்டூழியங்களையும் மக்கள் கண்டதில்லை, தற்போது முற்றிலும் கேள்விப்பட்டிராத அக்கிரமத்தைக் கண்கூடாகக் கண்ட அவர்கள் இலங்காபுரனை வாய்வலிக்கும் வரை சபித்தார்கள். தமிழகத்திற்கு வந்து சேர்ந்த கேடாகவே அவன் வரவைக் கருதினார்கள். ஆனால் அவர்களது கருத்துகளையோ கவலைகளையோ இதர முணுமுணுப்புக் களையோ சிங்களத்துத் தண்டநாயகன் சட்டை செய்யவில்லை. தன் திட்டத்தில் மண்ணைப் போட்ட குலசேகர பாண்டியனுக்கு இதுகூடப் போதாது என்றே நினைத்தான். ஒரு வழியாகத் தென்பாண்டி நாட்டில் சிங்களக் கொடிகளைப் பறக்கவிட்ட இலங்காபுரன் படைகளை வையையாற்றங்கரைக்கு அழைத்தான். வெற்றி கொள்ளப்பட்ட ஊர்கள் பெரும் நகரங்களல்ல. அதோடு அவற்றைக் காத்து நின்ற காவல் தலைவர்கள் கொல்லப்பட்டும் சிறை செய்யப்பட்டுமாய் நீக்கப்பட்டு விட்டார்களாதலால் அவ்வூர்களைக் காத்து நிற்கத் தன்படைகளை அவன் நியமிக்க

tamilebooks.net

வில்லை. வையையின் தென்கரையில் படைகளைக் கூட்டிய அவன் தன் உபதளபதிகளை அழைத்தான். வெற்றித் திட்டத்தைத் தயாரித்து அளித்த நுளம்பனை வாய்விட்டுப் பாராட்டினான். பிறகு "இவ்வளவு எளிதில் இப்படியொரு வெற்றி கிடைக்கும் என்று நான் நம்பவில்லை" என்று தெரிவித்துக் கொண்டான்.

இதைக்கட்டதும் "சூட்டோடு சூட்டாக நமது அடுத்த திட்டத்தையும் நிறைவேற்றி விடுவது நல்லது" என்று ஆரம்பித்தான் நுளம்பன்.

இலங்காபுரனுக்கும் அந்தவிதமாகவே தீர்மானம் உண்டாகியிருந்ததால், "அந்தத் திட்டத்தையும் நீயே சொல் நுளம்பா" என்றான்.

"உடனடியாக நாம் கரையோரமாகவே முன்னேறி மதுரையை நெருங்குவோம்..." என்றான் நுளம்பன்.

"அது அவ்வளவு எளிதான காரியமா?" என்று இலங்காபுரன் வினவியதும், "ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டான் நுளம்பன்.

"நாம் இங்கே வந்து எத்தனை நாட்களாகின்றன?"

"பதினாறு நாட்கள்..."

"இந்தப் பதினாறு நாட்களாக நாம் என்ன செய்தோம்?"

"நாச வேலைகளைச் செய்தோம்."

"நுளம்பா, கடந்த பதினாறு நாட்களாக அதுவும் பகிரங்கமாக நாம் செய்துள்ள காரியங்கள் குலசேகர பாண்டியனுக்குத் தெரிந்திருக்காது என்று நினைக்கிறாயா?"

"அதெப்படி தெரியாமல் போகும்?"

"தெரியும் பட்சத்தில் அவன் சும்மாவா இருப்பான்?"

"தளபதி, இத்தனை நாட்களாக நாம் எத்தனையோ காரியங்களைச் செய்திருக்கிறோம். ஆனால் இதுவரை பாண்டியன் ஏன் இங்கே வரவில்லை? நம்மை ஏன் சந்திக்கவில்லை?"

"நம்மை அவன் சந்திக்காமல் இருக்கப் போவதில்லை. ஆனால் இங்கே எதற்காக வரவேண்டும்? நுளம்பா, குல சேகர பாண்டியனுக்கு உண்மையிலேயே மதுரைதான் பெரிதாக இருக்க வேண்டும். ஆகவே அதை இழக்காமல் இருப்பதையே பெரிதாக எண்ணுகிறான் அவன். நம்மைச் சந்திக்க இங்கே அவன் வந்து விட்டால் வையை ஆற்றின் வடக்கே பாதுகாப்பு குறைந்து போகிறது அதோடு நம்முடன் இங்கே மோதிக் கொண்டிருக்கும்

tamilebooks.net

நேரத்தில் நமது படையின் வேறொரு பிரிவு தொண்டியின் பக்கம் நுழைந்துவிடலாம் என்ற சந்தேகம் அவனுக்கு உண்டாகியிருக்க வேண்டும். அப்படி நேரிட்டால் சிங்களப் படைகளுக்கு இடையே தான் சிக்கிவிட நேரும் என்பதும், அப்படிச் சிக்கி விட்டால் தன் கதி அதோ கதிதான் என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே தான் நம்மை நோக்கிவராமல் நம்மை எதிர்பார்த்து அங்கேயே காத்திருக்கிறான் என்று நினைக்கிறேன். இங்கே நிரம்பச் செல்வங்கள் இல்லை. நான் இங்கே வெற்றி பெற்றாலும் கூட என்னை அழித்து விட்டால் அனைத்து ஊர்களும் திரும்ப மீண்டுவிடும். ஆகவேதான் மக்கள் அழிவதையும் பொருட்படுத்தாமல் இங்கு வராமலேயே இருக்கிறான் அவன். இந்நேரம் நம்மைச் சந்திக்க அவன் அக்கறையில் தயாராக இருக்கலாம் என்பதே என் ஊகம். . . ”

“தளபதி, என் ஒற்றர்கள் விவரமறிந்து கொண்டு தான் வந்திருக்கிறார்கள். உங்கள் ஊகப்படி பாண்டியன் அக்கரையில் இல்லை. . .”

“அங்கு வந்து சேர எவ்வளவு காலமாகிவிடப் போகிறது நுளம்பா? அக்கரையில் இல்லையென்றாலும் நாம் மதுரையை நோக்கி முன்னேறும் வழியில் இடையில் சந்திக்கலாம் அல்லவா? அப்போது அவனது படைகள் எவ்வாறு எங்கெங்கே நகரும் என்பதை நாம் அறிந்து நடப்பது கஷ்டம். ஆகவே உன் திட்டம் ஆபத்தானது.”

“வேறு வழி?” கேட்டான் நுளம்பன்.

“பாண்டியனை நாம் இழுத்தால் தான் உண்டு. நம்மை நோக்கி நமக்குப் பாதுகாப்பான இடத்திற்கு அவனை இழுக்க வேண்டும். . .”

“மதுரையை நோக்கி முன்னேறுவதை விட்டுவிட்டுக் கடலோரமாகவே வடக்கில் முன்னேறி தொண்டியைத் தாக்கி அதைப் பிடித்துக்கொள்வோம். முக்கியத் துறைமுகம் நமக்குக் கிடைக்கும். அதை நம்வசம் விட்டுவிட்டுப் பாண்டியன் இருக்கமாட்டான். நம்மை நோக்கி வந்து தான் ஆகவேண்டும். நமக்குப் பின்னால் கூடலும் ராமேஸ்வரமும் இருக்கின்றன. நமக்குத் தேவையான படையுதவி சிங்களத்திலிருந்து தங்குதடையின்றி வந்து கொண்டிருக்கும். பாண்டியனை எளிதில் முறியடிக்கலாம். . .”

இந்த நேரத்தில் பாசறையில் பரபரப்பு ஏற்பட்டது. புரவிகளில் ஆரோகணித்தபடி சிங்கள வீரர்கள் வெகு வேகமாக ஊடுருவி வந்தார்கள். சிங்களப் பதாகைகளைத் தாங்கியும்

tamilebooks.net

கொம்புகளை ஊதியும் அவர்கள் உண்டாக்கிவிட்ட அமர்க்களம் அனைவரையும் வியக்க வைத்தது. அவர்களுக்குப் பின்னால் வெண்புரவிகளில் சிங்கள வீரர்கள் "வழிவிடுங்கள். ம்!ம். இளவரசியார் விஜயம் செய்கிறார்கள். . ." என்று குரல் கொடுத்தார்கள்.

உள்ளே பாசறையில் இருந்த இலங்காபுரனுக்கும் அக்குரல் கேட்டது. "யார் அந்த இளவரசி?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு அனைவரையும் குழப்பத்துடன் நோக்கினான். அந்த நிலையில் உள்ளே பிரவேசித்த புரவி வீரர்கள் அவனுக்குத் தலை வணங்கினார்கள்.

"இளவரசியார் விஜயம் செய்கிறார்கள். அழைத்து வர உத்திரவா" என்று பணிவோடு வினவினார்கள்.

"இளவரசியா? யார் அது?"- என்று அலட்சியமாகக் கேட்டான் இலங்காபுரன்.

அதற்கு வீரர்கள் அளித்த பதில் அவனைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது.

"உண்மையாகவா?" என்று மீண்டும் கேட்டான்.

"ஆம் தளபதி. ரோகண இளவரசியார் தான் விஜயம் செய்திருக்கிறார்கள்" என்றார்கள் வீரர்கள்.

இலங்காபுரனுக்குப் பிடிபடவில்லை. தனக்கு மாலையிடத் தயாராய் இருப்பதாகச் சிங்களத்து மன்னரால் கூறப் பட்டவளும், தென்னிலங்கை ரோகணத்தின் இளவரசியும், தன்னால் கவரப்பட்டவளுமான ரோகண நங்கை வந்திருக்கிறாள் என்ற செய்தி அவனைப் பரவசத்தில் ஆழ்த்தியது. தென்பாண்டி நாட்டை வென்றிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவளது சந்திப்பு நேருவது தன் பாக்கியம்தான் என்று கருதிய அவன் அப்படியொரு சந்தர்ப்பம் பராக்கிரம பாண்டியன் கொலை செய்யப்பட்டதாலேயே கிட்டியதால் அதற்குக் காரணமான குலசேகரப் பாண்டியனை விஷமமாகப் பாராட்டிக் கொள்ளவும் செய்தான். வருகிறவளிடம் தன் வெற்றிக்கதை பேசிப் பெருமைக் கொடி பிடிக்கத் தீர்மானித்த அவன், "டேய் யாரங்கே? இளவரசியைச் சிறப்பாக அழைத்து வாருங்கள். வாத்தியங்களும் வேட்டுக்களும் முழங்கட்டும். வாழ்த்தொலிகள் விண்ணை முட்டட்டும்" என்று இரைந்து கட்டளைவிட்டான்.

விரைவிலேயே அவளும் வந்து சேர்ந்தாள். இலங்காபுரன் சிறிதும் எதிர்பாராத செய்தியையும் கொண்டு வந்தாள் அவள். அதைக் கேட்டதும் தலையில் இடி இறங்கினாற் போலிருந்தது சிங்களத்துத் தண்டநாயகனுக்கு.

tamilebooks.net

9

"காண முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

— குறள், 772

மனம் கவர்ந்த மங்கையான ரோகண நங்கை மிகவும் சீரிய முறையில் வரவேற்கப்பட்டாள். பாசறையின் வாயிலில் முத்துப் பல்லக்கிலே தங்கச் சிலை போல் வந்திறங்கிய அவளை எதிர் கொண்டான் இலங்காபுரன். அந்தஸ்திற்கு அடையாளம் சொல்வதைப் போல் மிக விலை உயர்ந்த ஆடைஅணிகலன்களை அணிந்து தேவமகள் போல் காட்சியளித்த அவள் தன்னை எதிர்கொண்ட இலங்காபுரனைக் கண்டதும் சம்பிரதாயமாகவே தலையைக் குனிந்து வணக்கம் தெரிவித்தாள்.

செக்கச் செவேலென்று இருந்த அவளது எழில் முகத்தில் சித்திரம் வரைந்தாற்போல் தோன்றிய புருவங்களும், கண்களும், நாசியும் அதரங்களும் மிக நேர்த்தியாக அமைந்திருந்தன. சித்திரங்களைத் தாங்கிய செவ்வானம் போன்ற அவளது முகத்தின் ஓரங்களில் கண்களைத் தவிக்கச் செய்யும் கன்னங்கள் இரண்டும் பூவை விட மென்மையானதாய் இருந்தன. அந்த மென் கன்னங்கள் வழவழத்துக் கிடந்ததால் அவற்றின் மேல் வந்து விழுந்த பொன்னிறக் கூந்தலிழைகள் நிலையாய் இருக்க முடியாமல் அலைந்த விதமானது கன்னமும் குழலும் விளையாடுவது போல் எண்ண வைத்தன. அவளது அளவான காதுகளில் தொங்கிய முத்து மணிகள் இரண்டும் பிரகாசித்து ஒளியை அவளது கழுத்துப் பகுதியில் பிரதிபலித்த விதமானது மாயாஜலம் போலிருந்தது. இழுத்துக் கட்டப்பட்ட கூந்தல் விரிந்து கிடந்ததாய் அவளது அழகானது சொர்க்கம் கடை விரித்தாற்போல் இருந்தது.

பிறந்தது முதலாகவே அரண்மனை வாழ்வில் ஊறி அந்தப்புர வசதிகளில் மூழ்கி, அந்தஸ்து விவகாரங்களிலேயே திளைத்திருந்தாள். ஆதலால் அவளது தோற்றத்திலும் பாவனை களிலும் கம்பீரமிருந்தது. இலங்காபுரனுக்கு மாலையிடப் போகிறவள் என்று இலங்கை மன்னனால் அறிவிக்கப் பட்டிருந்தாலும் மாலையிடும் வேளை வரும்வரை அவள் அந்தஸ்தில் உயர்ந்த இளவரசியாதலால் தற்போது அந்த வித்தியாசத்தைக் காட்டிக் கொள்ளவே செய்தாள்.

காதல் மயக்கத்தில் இருந்த இலங்காபுரன் அதையெல்லாம் கவனிக்கவில்லை. அவளைப் பாசறைக்குள் அழைத்துச் சென்று

tamilebooks.net

தனி ஆசனம் போட்டு அமரச் செய்தான். வெளியிலேயே தங்கிவிட்ட உபதளபதிகளை உள்ளே வந்து அமரும்படி கூறினான். தான் பறைசாற்றிக் கொள்ளும் வெற்றிச் செய்தியைக் கேட்டு ரோகண நங்கை பெருமைப்பட்டுப் பாராட்டப் போவதை இவர்களும் கேட்கட்டுமே என்று அவ்வாறு செய்தான் இலங்காபுரன். அதையடுத்துச் சம்பிரதாயமாகப் பழரசம் கொண்டுவரப்பட்டு அனைவருக்கும் தரப்பட்டது.

சிறிது நேரம்வரை ரோகண நங்கை பேசுகிறாளா என்று எதிர்பார்த்தபடி மௌனமாய் இருந்த இலங்காபுரன் அவள் பேசாமல் அமர்ந்திருந்ததையும், அங்கே அமர்ந்திருந்தவர்களை நோட்டம் விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்டபின் பேச முற்பட்டு, "இளவரசியின் வரவை இங்கே நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை" என்றான்.

அவள் மெல்லிய குரலில் சொன்னாள்:

"கொஞ்ச நாட்களாக நீங்கள் எதிர்பார்க்காதவைகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன..."

அவள் எதைச் சொல்கிறாள் என்பதும் என்ன அர்த்தத்தில் சொல்கிறாள் என்பதும் இலங்காபுரனுக்கு விளங்கவில்லை.

சிங்கனுக்கு விளங்கிவிட்ட மாதிரி தோன்றியது. விளங்கிவிட்டதை வாயோடு வைத்திருக்க முடியாமல் வெளிப்படுத்த முற்பட்ட அவன், "இளவரசியார் சொல்வது முற்றிலும் உண்மை" என்றான்.

தனக்குப் புரியாத விஷயம் இவனுக்குப் புரிந்து விட்ட தாலும், தான் மறுமொழி சொல்வதற்குக் குறுக்கிட்டு விட்டதாலும் எரிச்சலடைந்த இலங்காபுரன், "என்ன உண்மை அது?" என்று கேட்டான்.

"தென்பாண்டிய மண்டல வெற்றி எதிர்பாராதது தானே?" என்றான் சிங்கன்.

சிங்கனுக்கும் கொஞ்சம் மூளை இருக்கிறது என்று சொல்லிக் கொண்ட தண்டநாயகன் பெருமையடித்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்துவிட்டது என்று கருதி, "தென் பாண்டி நாட்டை நம் வசமாக்கி விட்டோம் இளவரசி" என்று கம்பீரமான குரலில் சொன்னான்.

உடனே ரோகண நங்கை பரவச வார்த்தைகளை உதிர்ப்பாள் என்று எதிர்பார்த்த அனைவரும் ஏமாற வேண்டிய தாயிற்று. ரோகண நங்கை நமட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு, "மன்னர் சொன்னது சரியாகத் தான் இருக்கிறது" என்றாள்.

tamilebooks.net

"மன்னர் சொன்னதா. . . . என்ன சொன்னார் அவர்?" ஆவலோடு கேட்டான் இலங்காபுரன்.

"நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று சொன்னார்.

"எப்படி?"

"தென்பாண்டிய நாட்டை வென்றுவிட்டதாகச் சொல்வீர்கள் என்று?"

"இத்திட்டம் என் திட்டம் இளவரசி."

"இல்லையென்று யார் சொன்னார்கள்?"

"அதற்கில்லை நான் போட்ட இத்திட்டம் மன்னருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை."

"மன்னருக்குத் தெரியாமல் எந்த விஷயமும் நடக்காதென்று ரோகண நாட்டவர் நம்புகிறார்கள்."

"அப்படியானால் தெரியுமா?"

"இல்லையென்றால் என்னை ஏன் அனுப்புகிறார் அதுவும் இத்தனை ஆபத்துக்களுக்கிடையில்!"

"உங்களை மன்னரா அனுப்பினார்?"

இதைக் கேட்டு 'களுக்'கென்று சிரித்தாள் அவள்.

"ஏன் சிரிக்கிறீர்கள் இளவரசி?" சற்றே குழம்பிய நிலையில் கேட்டான் இலங்காரன்.

"சிங்களத்திலிருந்து நானாக இவ்வளவு தூரம் வருவேன் என்று நினைக்கிறீர்களா? இங்கே எனக்கென்ன வேலை இருக்கிறது?" சகஜமாய்ச் சொன்னாள் அவள்.

அவளது மனநிலையை இலங்காபுரனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதோடு தனக்கு மாலையிடப் போவதாக அறிவிக்கப்பட்டவள், பேசுகிற பேச்சாகவும் அவளது பேச்சு தோன்றவில்லை. குழப்பத்தால் உடனடியாக எதையும் பேசாமலிருந்த அவன் சற்று போனபின், "மன்னர் எதற்காக அப்படிச் சொன்னார்?" என்று கேட்டான்.

"நீங்கள் தென்பாண்டி நாட்டை வெற்றி கொண்டதாகத் தப்பு அபிப்ராயம் கொள்வீர்கள். என்பது அவரது கருத்து."

"தவறான அபிப்ராயமா? அதெப்படி? இப்போதைய நிலையை வேறெப்படி அழைக்க வேண்டும்?" சிறிது சினத்துடன் வினவினான் இலங்காபுரன்.

tamilebooks.net

"முயல் மீது விழுந்து வீழ்த்தப்பட்ட அம்பைவிட யானையின் மீது பட்டு வீழ்த்தாமல் போன அம்பே பெருமை தரத்தக்கது" என்றார் மன்னர்.

"அதாவது."

"ஐயா, தென்பாண்டி நாட்டில் எத்தனைக் கோட்டைகள் இருக்கின்றன?"

"எதுவுமில்லை."

"எவ்வளவு அரண்கள் இருக்கின்றன?"

"குறைவுதான்."

"படைகளாவது திரண்டிருந்தனவா?"

"இல்லை."

"கொள்ளையடிக்கச் செல்வங்களாவது உண்டா?"

"இல்லை."

"எதிர்ப்பு காட்டவாவது பெருங்கூட்டம் திரண்டதா?"

"இல்லை."

"இப்படிப்பட்ட ஒரு பரதேசத்தை வெற்றிக் கொள்வதும் முயலின் மீது அம்பெறிந்து வீழ்த்துவதும் ஒன்று என்று சொல்லலாம் அல்லவா?"

"மன்னர் அவ்வாறு சொல்கிறாரா?"

"ஆம். முயல் வேட்டையை விட்டுவிட்டு நீங்கள் யானையோடு பொருதப் போயிருக்கலாம் என்று கருதுகிறார் மன்னர். யானையை வீழ்த்தாமல் போனாலும் அகௌரவம் இல்லை என்று அபிப்பிராயப்படுகிறார் மன்னர்."

"குலசேகர பாண்டியனை யானை என்கிறீர்களா?"

"மன்னர் நினைக்கிறார். நாடாளும் மன்னனைக் கட்டுக் காவலோடு இருக்கும் மன்னனை, படைபலம் உள்ள மன்னனைச் சந்தித்துத் தோற்றிருந்தாலும் பரவாயில்லை என்று சொன்னார் அவர். வீணாக முயல் வேட்டையில் காலம் விரயமாவதை அவர் விரும்பவில்லை. ஏற்கனவே தாங்கள் செய்த காலதாமதத்தால் தான் பாண்டிய நாட்டின் நிலைமை தலைகீழாகி விட்டதென்று வருத்தப்படுகிறார். இதை நீங்கள் எதிர்பார்க்கவில்லை அல்லவா?"

இலங்காபுரனுக்குப் பெருத்த அவமானமாகப் போய் விட்டது. தன் கதை அனைத்தையும் சிங்கள மன்னர் அறிந்து வைத்திருந்தது மட்டுமின்றி, தன் வெற்றியை வெறும் 'முயல் வேட்டை' என்று கூறிவிட்டதையும், அந்தச் செய்திகூட தன்

tamilebooks.net

"காதலி" ரோகண நங்கையின் அதரங்களால் நேருக்குநேர் உச்சரிக்கப்பட்டதையும் கண்ட அவனுக்குப் பெரும் கோபமும் அதிகரித்ததால் காதல் மயக்கமும் சற்றே விலகியது. ஆகவே அதுவரை காட்டி வந்த மரியாதையை மறந்து, "இதைச் சொல்லத் தான் மன்னர் உன்னை அனுப்பினாரா?" என்று கடுகடுத்தான்.

அவனது ஆத்திரத்தைக் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்ட ரோகண நங்கை, "இது மிகவும் சிறிய விஷயம் ஐயா" என்றாள்.

"அது தெரிகிறது" முனகினான் இலங்காபுரன்.

"இதற்குப் போய் ரோகண நாட்டிலிருந்து அதுவும் என்னை அனுப்ப வேண்டுமா?"

"பின் வேறு வேலை என்ன உனக்கு?"

"வேறொரு செய்தியைச் சொல்லச் சொன்னார்."

"என்ன அது?"

"ஒருவேளை அது உங்களுக்குச் சின்ன செய்தியாக இருக்கலாமோ என்னவோ?"

"பீடிகை வேண்டியதில்லை. விஷயத்தைச் சொல்."

அவள் சற்று யோசித்துவிட்டு, "மன்னர் கூறச்சொன்ன விஷயம் இதுதான். தாங்கள் தளமாக அமைத்திருந்த கூடலையும் ராமேஸ்வரத்தையும் பாண்டியன் கைப்பற்றி விட்டான்" என்று இடியை எடுத்து வீசினாற்போல் தெரிவித்தான்.

"என்னது?" இரைந்தான் இலங்காபுரன். அவனுக்குக் கீழே இருந்த தரை விலகி ஓடுவதுபோல் இருந்தது.

ஃஃ ஃஃ ஃஃ

பேச்சின் தொடக்கத்தில் தனக்கு எதிர்பாராதவைகள் நடப்பதாக ரோகண நங்கை குறிப்பிட்டதற்கும் அவள் கூறிய செய்திகளுக்கும் இருந்த பொருத்தத்தை தற்போது சந்தேகமறத் தெரிந்து கொண்டான் இலங்காபுரன். சிங்களத்தை விட்டுப் புறப்பட்டபோது இருந்த நிலைக்கும் தற்போதைய நிலைக்கும் இருந்த வேறுபாடு அவனுக்குத் தெளிவாகவே புரிந்தது. அது மட்டுமல்ல. தான் ஒன்று நினைக்க விதி ஒன்று நினைத்துச் செயல்படுவதும் அவனுக்குப் புரிந்தது. கூடலை வசப்படுத்திய போதும் தமிழர்களைப் பற்றியும், அவர்களை வெல்வது பற்றியும், சிங்கள ஆதிக்கத்தை உண்டாக்குவது பற்றியும் அவன் போட்டிருந்த கணக்கெல்லாம் எவ்வளவு மடத்தனமானவை என்பதைத் தற்போது உணர்ந்து கொண்டான். நுளம்பன் தந்த திட்டத்தைக் கேட்டதுமே இந்தத் தமிழர்களைப் போர்த்

tamilebooks.net

தந்திரத்தால் எளிதில் வென்று விடலாம் என்று எண்ணியிருந்த அவன் தற்போது அதை மாற்றிக் கொண்டான். அவர்களைக் கொல்வதற்கு வேண்டுமானால் போர்த் தந்திரம் பயன்படுமே தவிர அவர்களை வெல்வதற்கு அந்தப் போர்த் தந்திரத்தோடு நுண்ணிய ராஜதந்திரமும் தேவை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டான். ஏமாற்றமும் அவமானமும் அடுத்தடுத்து உண்டாகி விட்டதால் அவனது மனம் புடம் போட்டத் தங்கமென மேலும் உறுதிப்பட்டது. சிங்கள மன்னரின் அறிவிப்பினால் ரோகண நங்கையின் பால் காதல் கொண்டிருந்த அவன் அதே மன்னரால் அதே நங்கையால் தன்மானக் குறைவான பேச்சையும் கேட்க நேர்ந்ததால் காதல் விலகியது. காதலை எதிர்ப்பார்த்துப் போர் நடவடிக்கையில் ஈடுபடுவதை விட போர் விவகாரங்களில் ஈடுபட்டு முடித்த பின்னர் தன்னைத் தேடி காதல் வரட்டும் என்று தெளிந்தான். அவனது மனமும் லேசாகியது. ஆகவே ரோகண நங்கையைத் தற்போது எந்தவிதத் தயக்கமுமின்றி தீட்சண்யமாகப் பார்த்தான். பிறகு கேட்டான்.

"பாண்டியனின் முயல்வேட்டை எப்போது நடந்தது?"

"முயல் வேட்டையா?" வியப்போடு கேட்டாள் ரோகண நங்கை.

"ஆம். சிங்கள மன்னரது கணக்குப்படி பார்த்தால் ஆதரவற்ற நிலையில் இருந்த ராமேஸ்வரத்தைப் பாண்டியன் வென்றதும் முயல் வேட்டைதானே? யானை தென்பாண்டிய நாட்டிற்கு வந்த பிறகுதானே பாண்டியன் அவ்வாறு செய்திருக்கிறான்?"

மெதுவாகச் சிரித்தாள் ரோகண நங்கை. அவளது சிரிப்பும் விஷமமும் பழகிப் போய்விட்டதால் அதைப்பற்றிக் கவலைப் படாத இலங்காபுரன், "ஏன் சிரிக்கிறாய்? இதற்கும் மன்னர் ஏதாவது சொல்லியிருக்கிறாரா?" என்று நமட்டுக் குரலிலேயே கேட்டான்.

"மன்னர் சொல்ல வேண்டுமா? தங்களுக்கே புரியக் கூடிய விஷயம்தானே?" என்றாள் அவள் சிரிப்பின் நிழலில்.

"ரோகணத்து இளவரசியார் சிரித்துப் புதிர் போடுவதை விடச் சிரிக்காமலேயே விளக்கிவிட்டால் இந்த முயல் வேட்டைக்காரனுக்கு வசதியாக இருக்கும்."

இளவரசிக்கோ இதைக் கேட்டதும் சிரிப்புத்தான் வந்தது. கும்பியிருந்த மொட்டு இதழ் விரித்தாற் போல் வாய் திறந்து சிரித்த அவள் "தண்டநாயகரே, நீங்கள் புதியதாக வந்து இந்தப் பகுதியை வசமாக்கிக் கொண்டீர்கள். இதை முயல்வேட்டை

tamilebooks.net

என்று மன்னர் சொன்னது சரி. ஆனால் கூடலை நீங்கள் வசப்படுத்தியிருந்தீர்கள். அதைக் கட்டிக்காக்க உங்கள் படைகளை நிறுத்தியிருந்தீர்கள். கூப்பிடால் உதவிக்கு வரும் தூரத்திலேயே சிங்களமும் இருக்கிறது. இந்த நிலையில் பாண்டியன் சிறியதொரு படைப் பிரிவை மட்டும் அனுப்பி அவ்வூர்களை மீட்டுக் கொள்கிறான். இது எப்படி முயல் வேட்டையாகும்?" என்றாள்.

"நான் வாதத்தில் இறங்கியது தவறுதான்" என்றான் இலங்கபுரன்.

"தென்பாண்டி நாட்டில் இறங்கியதும் துரதிருஷ்டமாகத் தவறாகி விட்டது" என்றாள் அவள்.

"அது மட்டுமல்ல இளவரசி. இதோ - இதைப் பெற்று வந்தேனே, இதுவும் தவறுதான். இதைக் கொண்டு போய் மன்னரிடம் கொடுத்து விடுங்கள்."

"இது என்ன?"

"ஓலை சாசனம், மன்னர் அளித்த சாசனம்."

"இதை ஏன் திரும்பக் கொடுத்துவிட வேண்டும்?"

"அர்த்தமில்லாத சாசனங்களை நான் சுமக்க விரும்பவில்லை இளவரசி."

"அர்த்தமில்லாத சாசனங்களா?"

"ஆம். தமிழகப் போரினை என் போக்கில் நடத்த இச் சாசனத்தில் மன்னரால் எனக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அதே மன்னர் என் நடவடிக்கைகளை 'முயல் வேட்டை' என்று உச்சரிக்க இளவரசி ஒருத்தியையும் அனுப்புகிறார். தான் அளித்த சாசனத்தை தானே உதாசீனப்படுத்துவதென்றால் அதற்கென்ன அர்த்தமிருக்க முடியும்? ஆகவே இதை அவரிடமே கொடுத்து விடுங்கள். . ."

அவள் பதிலேதும் செல்லாதிருக்கவே, "மன்னரது கட்டளைகள் வேறேதாவது உண்டா?" என்று கேட்டான் இலங்காபுரன்.

"இல்லை" என்றான் அவள்.

"நல்லது. மன்னரிடம் திரும்பும்போது என்னையும் என் செயலையும் குறைகூற இளவரசிகளுக்குச் சிரமம் தர வேண்டாம் என்று சொல்லுங்கள். வெற்றி வாகை சூடினாலன்றிச் சிங்களத்திற்கு இலங்காபுரன் உயிரோடு திரும்ப மாட்டான் என்றும் சொல்லுங்கள். . ." என்று திட்டவட்டமான குரலில்

tamilebooks.net

கூறிய சிங்களத் தண்டநாயகன் மறுமொழி எதிர்பாராமல் எழுந்து சென்றான்.

அன்றிலிருந்து அவனது சுபாவங்கள் பெரிதும் மாறின எதற்கெடுத்தாலும் சீறிவிழும் சுபாவம் அவனிடமிருந்து மறைந்தது. உபதளபதிகளுடனும் வீரர்களுடனும் கலகலப்பாகப் பேசினான். எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்பட்டான். வீரர்கள் செய்துவிட்ட தவறுகளைப் பொருட்படுத்தாமல் தட்டிக்கொடுத்தான்.

சில நாட்களுக்கு அங்கேயே தங்கிய ரோகண நங்கைக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுத்தான். தென்பாண்டிய நாட்டில் அவள் பார்க்க விரும்பிய இடங்களுக்கெல்லாம் பாதுகாப்புடன் சென்று வர ஏற்பாடு செய்தான். அதற்குப் பின் அவள் மன்னரது கட்டளைப்படி சோழநாட்டிற்குச் செல்ல விருப்பதாகக் கூறிய போது ரகசிய பயணத்திற்கும் வசதி செய்து அனுப்பி வைத்தான். நுளம்பனைப் பல இடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தான். செய்திகள் வர வர அவனது உடலில் சூடு பிடித்தது. பாண்டிய நாட்டை விழுங்கிவிடும் பயங்கரத்திட்டம் ஒன்றையும் உருவாக்கினான். அதைச் செயல்படுத்த முற்பட்ட போது அவன் ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த கடலழகியும் வந்து சேர்ந்தாள்.

10

"உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்களுள்
பாம்போடு உடனுறைந்தற்று"

— குறள், 990

பல்லவர்களின் கோநகராய் விளங்கி மகேந்திரவர்மன், ராஜசிம்மன், நந்திவர்மன் ஆகிய மாமன்னர்களை அளித்ததும், அருமந்த அப்பெருந்தகைகளின் மூலம் காலத்தால் கொள்ளையிட முடியாத சிற்பச் செல்வங்களையும் காண்போர் கொள்ளை கொண்டுவிடும் கற்றளிகளான கையிலாயநாதன் ஆலயத்தையும் பரமேச்சுர விண்ணகரத்தையும் வழங்கியதும், சாளுக்கிய ராஜவம்சத்தினரை வாழ்நாள் முழுவதும் ஏங்கிப் போராட வைத்ததும், பல்லவருக்குப் பின்னால் வல்லமையால் உயரத்திற்கு வந்த கரிகாலனின் வம்சத்தினரான சோழ நாட்டுப் பெருவேந்தர்களின் வட திசை அரணாக இலங்கி 'காஞ்சி இருக்கக் கலிங்கம் கொண்டான்' என்ற பெருமையை அனபாயனுக்கு விளைவித்துத் தந்ததும், புண்ணிய கேஷத்

tamilebooks.net

திரங்கள் ஏழினுள் ஒன்றாகி 'நகரேஷு காஞ்சி' என்று பெயர் பெற்றதும், தென் நாட்டுக் கலைப்பீடமாயும் விளங்கிய அக்காஞ்சி மாநகரின் பிரசித்திப் பெற்ற மேலை ராஜவீதியின் அருகிலும் திருவேகம்பன் ஆலயத்திற்கு முன்புமாய் அமைந்திருந்த பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்தில் கோபுரவாயிற் கதவுகள் அந்த விடியற்காலை வேளையில் கரகரவெனத் திறந்தபோது உறங்கிக் கிடந்த ஊரின் விழிகளும் திறந்து கொண்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

திரும்பும் இடமெல்லாம் திவ்ய தேசங்களே நிறைந் திருந்ததால் உதயகால வேளையில் அங்கிருந்தெல்லாம் எழுந்த வேதபாராயண திருவொலிகள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் எழுந்தருளும் எம்பிரானின் மேன்மையைத் திக்கெல்லாம் பறைசாற்றுவதாய் அமைந்தன.

சேவல் குரல் கேட்டு ஊர்விழிக்கும் நிலைமாறிக் கோயில் கதவொலி கேட்டுச் சேவல் கண் விழிக்கும் நகராதலால் தற்போதையை மணிக்கதவத்தின் அரவம் எழுந்ததுமே அவசரம் அவசரமாய்க் கண் விழித்த சேவல்கள், கடமையில் தவறிவிட்ட காவலாளிபோல் விழிந்து இடைவிடாமல் கூவி நின்றன. சேவல்களின் வாய் திறந்தபின், ஆம்பல்கள் வாய்திறந்தன. அவை வாய்திறந்து சிரித்ததால் வெளிப்பட்ட நறுமணம் நகர் முழுவதும் பரவியதால் கருங்குழல் படைத்த நங்கையர்கள் கண்விழித் தெழுந்தார்கள். 'கண்விழித்த பெண்கள் வாய்விரித்து விட்ட தால் உண்டான இரைச்சலில் ஊர் பூரணமாய் விழித்துவிட வேண்டியதாயிற்று. கோட்டைக் கதவுகள் இடியென முழங்கித் திறந்தன. வியாபாரிகள் இரைந்தார்கள். வாகனங்கள் இரைந்தன. வாத்தியங்கள் சப்தித்தன.

மங்கல வாத்தியங்கள் முழங்கவும் வேதியர்கள் பிரபந்தங் களை உச்சரிக்கவும் பறவையினங்கள் 'கிலாகிலா' சப்தங்களை எழுப்பியுமாய் மலரச் செய்த பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திற்கு முக்கியஸ்தர் ஒருவர் விஜயம் செய்வதாக இருந்த காரணத்தால் ஆலயம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. கோயில் காரியத்திற்கு உகந்த மலர்களைத் தருவிக்க அந்த ஆலயத்திற்கு நந்தவனம் ஒன்றை அமைத்து அதைப் பராமரிக்க நிவந்தங்களையும் முதல் குலோத்துங்கன் உண்டாக்கிவிட்டுப் போயிருந்தானாதலால் (இக்குறிப்பு காஞ்சிபுரம் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்தில் உள்ள கல்வெட்டுக்களில் காணப் படுகிறது) அரண்மனைச் சோலைகளை நிகர்க்கும் வகையில் அமைந்திருந்த நந்தவனத்திலிருந்த நங்கையர்கள் தங்களைக் காட்டிலும் மென்மையான மலர்களைப் பறித்து அர்ச்சனைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

tamilebooks.net

ஆலயத்தின் மூல கர்ப்பக்கிரகம் நந்தவனத்தின் பக்கத்திலேயே அமைந்திருந்ததால் மலர்கள் வாயிலிருந்து கிளம்பிய சுகந்தம் அர்த்த மண்டபத்திலும் உலவி அங்கிருந்த அர்ச்சகர்களையும் கிறங்க வைத்தது.

அன்றைக்கு நடக்கவிருந்த விசேஷப் பூசையையொட்டி மதுராந்தகத் தோட்ட வணிகர்களும் சாத்தன் குட்டைத் தெருவாரும் பெரிய மலர் மாலைகளையும், துளசிசரங்களையும் அளித்திருந்தார்கள். அஞ்சுக வண்ணத்தவர்கள் பட்டாடைகளைத் தந்திருந்தார்கள். புத்தச் சேரியிலிருந்து நிவேத்தியப் பொருட்கள் வந்திருந்தன. சாலா போகத்து உழவர்கள் அன்னதானத்திற்கான தானிய வகைகளை அனுப்பியிருந்தார்கள். திருமேற்றளியிலிருந்து அணிகலன்கள் தரப்பட்டிருந்தன. எனவே ஆலய திரு விக்கரகங்கள் சிறப்பான முறையில் 'திருவாபரணம்' சார்த்தப்பட்டு இதர ஏற்பாடுகளும் குறைவின்றிச் செய்யப்பட்டன.

கதிரவன் புறப்பட்டு முழுமுகத்தையும் காட்டிச் சிரித்த வேளையில் முக்கியஸ்தரின் விஷயத்திற்கான முரசுகள் அடிக்கப்பட்டன. வீரர்கள் புரவிகளில் அமர்ந்து கட்டியம் சொல்லியபடி முன்னே வந்தார்கள். அதையடுத்து வந்த யானையிலிருந்து இறங்கினார் அந்த முக்கியஸ்தர். சோழ சாம்ராஜயத்தின் ஆட்சிக்கு உட்பட்டதான மண்டலத்தைக் கட்டிக் காக்கும் பெரும் பொறுப்பு கொண்டவரும் கரிகாலன் மன்னன் முடி சூட்டுவது குறித்து அண்ணன் பல்லவராயன் கூட்டிய மந்திர லோசனையை நிராகரித்தவரும், முடிசூடுவது சம்மந்தமாய்ப் பிணக்குற்றவருமான நாராயண சம்புவரையர் இறங்கியபோது வேட்டுக்கள் முழங்கின.

அவருடன் சேதி நாட்டுச் சிற்றரசர் காடவராயரும் வந்திருந்தார் இருவரும் பூரண கும்பங்களுடன் வரவேற்கப் பட்டார்கள். அவர்களது முன்னிலையில் நிவேத்தியங்கள் நடந்தன. துரியோதனின் அவையில் பாண்டவரின் தூதனாய்ச் சென்று சூழ்ச்சிகளை நசுக்கி வீஸ்வரூபம் எடுத்துக் காட்டிய கிருஷ்ண வினோதத்தைப் பாண்டவதூதப் பெருமாளாக வடித்துக் காட்டியிருந்த சிற்பியின் தெய்வீகக் காட்சியினைக் கண்ட அப்பிரமுகர்கள் அடுத்து அன்னதானத்தையும் செய்தார்கள்.

வைபவங்கள் ஒருவாறு முடிந்தபின் உள்ளே குழுமியிருந்த அனைவரையும் வெளியேற்றினார்கள் வீரர்கள். அன்று முழுவதும் நாட்டு நலன் கருதி உண்ணாநோன்பு மேற்கொள்ளும் பொருட்டு விசேஷ பூசைகளை நடத்திய நாராயண சம்புவரையர்

tamilebooks.net

தற்போது சேதிராயருடன் ஆலத்தின் குளக்கரைக்கு வந்தார். இருவரும் குளக்கரையில் போடப்பட்டிருந்த கீற்றுப் பந்தலில் அமர்ந்தார்கள். நண்பகல் நேரமும் வந்து விடவே ஆலயக் கதவுகள் சாத்தப்பட்டு அவர்கள் இருவரைத் தவிர அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள். கோபுர வாயிலில் காவல் வீரர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

பந்தலின் கீழே அமர்த்திருந்த சேதிநாட்டுக் காடவராயர், "என்ன ஐயா விரதத்தைத் தொடங்கலாமா?" என்று கேட்டு விட்டு எதற்காகவோ சிரிக்கவும் செய்தார்.

"உமக்குச் சிரிப்பாக இருக்கிறதா அதுவும் இந்த நிலையில்?" என்று கேட்டுவிட்டு முறைத்தார் நாராயண சம்புவரையர்.

"எப்படிச் சிரிப்பு வராமல் போகும் சம்புவரையரே, விரதம் என்று சொல்லிவிட்டுக் கோவிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்து நாம் பேசப் போகும் விஷயம் சிரிப்பைத் தராமல் வேறு எதைத் தரும்?" கேட்டார் சேதிராயர்.

"நீர் என்ன சொல்கிறீர்? நமது பேச்சுக்களை ராஜவீதியின் மத்தியில் நடத்த வேண்டும் என்கிறீரா. . . ?"

"தேவையில்லை. ரகசிய பேச்சுக்கள் ஒதுக்குப் புறங்களில் தான் நடைபெறுவதுண்டு. நகருக்கு வெளியே தேவையான ஒதுக்குப் புறங்கள் இருக்கின்றன. அங்கே நடத்தலாம் அல்லவா?"

"ஆமாம், ஆமாம் இப்படியெல்லாம் அவரவர்களும் ஒதுக்குப் புறங்களைத் தேடிச் சென்றதால்தான் வெற்றிக்கு வழியின்றி ஒதுக்கப்பட்டு விட்டார்கள். பாழ் மண்டபங்களைத் தேடிப் போனவர்கள் பாழாய்ப் போனார்கள். . ."

"நாம் மட்டும் வெற்றி அடைந்து விட்டோமா என்ன?"

"நீர் என்ன சொல்கிறீர் சேதிராயரே. . ."

"ஐயா, நாம் எதிர்பார்த்தபடிதான் சோழ நாட்டில் நடந்திருக்கிறதா?"

"கரிகாலர் விஷயத்தைத்தானே சொல்கிறீர்?"

"ஆம், ஒற்றன் பார்த்திபன் கொண்டு வந்த செய்திகள் நமக்கு வெற்றியையா தந்திருக்கின்றன?"

இதைக்கேட்டதும் சற்றே மௌனமானார் நாராயண சம்புவரையர். பிறகு வினவினார்:

"ஏன் சேதிராயரே, செய்திகளையெல்லாம் உம்மால் நம்ப முடிகிறதா?"

tamilebooks.net

"நடந்து கொண்டிருக்கும்போது நம்பாமல் எப்படி இருக்க முடியும்?"

"செய்திகள் விந்தையாக இருக்கின்றன..."

"இருக்கலாம். ஆனால் உண்மை என்பது கண்கூடாகத் தெரிகிறது..."

"சேதிராயரே, அண்ணன் பல்லவராயன் போன்ற அறிவாளிகளுக்கே விளங்காத புதிராக இருக்கிறதைப் பார்த்தால் எனக்கென்னவோ குழப்பமாகத்தான் இருக்கிறது. இளவல் கரிகாலன் பட்டம் வேண்டாமெனச் சொல்லி நாகைக்குப் போய்விட்டான். கடலிலும் இறங்கிவிட்டான். இரண்டாம் ராஜராஜரின் சிறுபுதல்வர்கள் காணாமல் போய் விட்டார்கள். இந்த நிலையில் யாரை மன்னராக அமர்த்தி யிருக்கமுடியும் சொல்லும்? யார் இருக்கிறார்கள் அப்படி அமர? எவனுக்கு உண்டு அத்தனைத் தைரியம்?"

"நண்பரே, துணிவுள்ளவன் யாரோ அமர்ந்து விட்டதால் தான் கட்டளைகளும் பிறப்பிக்கப்படுகின்றன. பார்த்திபன் தான் சொன்னானே..."

"ஆம். முத்திரையிட்ட கட்டளைகள் அமைச்சருக்கு வந்து சேருகின்றன என்றும் அது யாரால் எங்கிருந்து வருகின்றன என்பது மர்மமாக இருக்கிறதென்றும், கட்டளை களில் ராஜமுத்திரை இருப்பதால் தட்ட முடியாத சங்கடத்தில் அதிகாரிகள் இருக்கிறார்களென்றும் பார்த்திபன் சொல்கின்றான். இதெல்லாம் நடக்கக்கூடிய காரியங்களா?"

"நடக்கின்றன நண்பரே. சந்தேகப்படுவதற்கு இடமில்லை..."

"கரிகாலன் முடிசூடினால் அவனது கட்டளைகளை நிராகரிக்க வேண்டுமென்றும் அவனோடு ஒத்துழைக்காமல் இருக்க வேண்டுமென்றும் சோழநாட்டு அதிகாரிகளில் முக்கியமானவர்களிடம் நான் சொல்லி வைத்திருந்தது உமக்கே தெரியும். என் பேச்சைக் கேட்க அவர்கள் அனைவரும் தயாராக இருந்ததையும் நீர் அறிவீர். அதிகாரிகள் அப்படிச் செயல் படுவதற்கு 'இதுதான் காரணம்' என்றும் கரிகாலனின் முடிசூட்டு விவகாரத்தை மக்களிடையே போட்டு வைத்தேன். இதுவும் உமக்குத் தெரியாமல் இருக்காது. ஆனால் அனைத்து ஏற்பாடுகளும் குலைந்துவிட்டன பார்த்தீரா? அதிகாரிகள் கட்டளைகளை நிறைவேற்றியே ஆகவேண்டிய நிர்பந்தம் வந்து விட்டதைக் கண்டீரா?"

"கண்டேன் ஐயா, அதிகாரிகள் வேறெப்படி நடந்து கொள்ள முடியும்? அவர்கள் எதிர்த்த கரிகாலன் தான்

tamilebooks.net

அரியணையில் அமரவில்லையே! ஆகவே கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டால் எப்படி மறுக்கமுடியும்? மக்களும் தத்தம் எதிப்புணர்ச்சிகளை விட்டுவிட்டார்கள் கரிகாலன் நீங்கி விட்டதால். எனவே அவர்களும் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். அப்படியிருக்கும்போது அதிகாரிகள் மட்டும் எப்படி எதிர்த்துக்கொள்ள முடியும்"

"மன்னனின் முகமும் தெரியவில்லை. விலாசமும் தெரியவில்லை. இப்படி இருந்துமா இவர்களெல்லாம் பேசாமலிருக்கிறார்கள்? ஒருவன் கூடவா கேள்வி கேட்காமலிருக்கிறான்?"

"சோழ அரசியல் பற்றி உமக்கு நான் சொல்ல வேண்டிய தில்லை. ராஜமுத்திரை பதிக்கப்பட்ட கட்டளையை எவனும் கேள்வி கேட்பதற்கில்லை. அந்தக் கட்டளையை மன்னன் தன் முகத்தைக் காட்டிக் கொண்டு தான் பிறப்பிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. மன்னரைத் தவிர ராஜமுத்திரையைக் கையாளும் உரிமை வேறு எவருக்கும் கிடையாதென்பது மறைந்து போன மன்னர் காலத்திலிருந்தே இருந்து வருவதால் அதைச் சந்தேகிப்பதற்கில்லை. அதோடு பிறப்பிக்கப்படும் கட்டளைகள் இயல்பாகவும் நியாயமானவைகளாகவுமே இருக்கின்றன. இந்த நிலையில் யார்தான் என்ன செய்ய முடியும்?"

நாராயண சம்புவரையர் அவநம்பிக்கையோடு தலையை ஆட்டினார்.

"நான் இதையெல்லாம் நம்பத் தயாராக இல்லை சேதியராயரே! பெரிய சூழ்ச்சி ஏதோ நடக்கிறது. நம்மைவிடப் பெரிய சதிகாரன் கங்கை கொண்ட சோழபுரத்தில் உலவுகிறான். அவனுக்குப் பெரும் துணிச்சல் இருக்க வேண்டும்" என்று கூறிப் பெருமூச்செறிந்த அவர், "கரிகாலனை அரியணை ஏற்கக்கூடாது என்று நாம் எதிர்ப்பு "தெரிவித்து வென்று விட்டது. பாவம்... அந்த அப்பாவியும் பயணமாகி விட்டான். இந்த இக்கெட்டான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஏதோ ஒரு குள்ளநரி சாமர்த்தியமாகப் புகுத்து விளையாடுகிறது. சேதிராயரே, கரிகாலனே அமர்ந்திருந்தால் கூட பரவாயில்லை. ஆனால் அவனுமின்றி இவனுமின்றி எவனோ ஒருவன் போர்த்துக் கொண்டு அமர்ந்திருப்பதை என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது. சற்று யோசித்துப்பாரும். இத்தனை வேலைகளையும் யாரால் செய்ய முடியும்? யாருக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது?" என்று வினவியதும்...

tamilebooks.net

"ஒருவேளை. . ." என்று ஆரம்பித்து நிறுத்தினார் சேதி நாட்டுக் காடவராயர்.

"சேதிராயரே, மறைந்த சோழமன்னருக்கு மூளையாக இயங்கியவன் யார்? சதா மன்னருடனேயே சுற்றித் திரிந்தவன் யார்?"

"பேரமைச்சர். . ."

"அமைச்சர் என்று சொல்லும். என்னைவிட அவனொன்றும் பெரும் அனுபவசாலி இல்லை. போட்டியாக எங்கே நான் முளைத்து விடுவேனோ என்று கருதியே சோழ நாட்டிலிருந்த என்னைத் தொண்டை நாட்டிற்கு அனுப்பி விட்டவன் அவன். தன்னைப் பெரும் அறிவாளி என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். அறிவைவிடக் கூரிய அரிவாள் என்னிடம் உண்டு சேதிராயரே! களம் கண்டு காயப்பட்டவன் நான். அவனோ காக்கை பிடித்தே காலம் தள்ளியவன். அந்தத் திருச்சிற்றம்பலமுடையான் பல்லவராயன் தான் இதற்குப் பின்னே இருக்க வேண்டும். . ."

"அதனால் நமக்கென்ன பயன் ஐயா; மக்கள்கூட கட்டுப்படத் தொடங்கிவிட்ட பின் நாமென்ன செய்ய முடியும்?"

"மக்களைப் பற்றி என்னிடம் சொல்லாதீர் சேதிராயரே. மக்களைப் பீதி உணர்ச்சியானது எப்படி வேண்டுமானாலும் மாற்றிவிடும். அவர்களை என் பக்கம் சாய்க்க எனக்குத் தெரியும். நன்றாகத் தெரிந்து கொள்ளும். இத்தனை நாட்களாக மன்னர் இருந்ததால் அவரது நிழலில் இருந்து விட்டான் அந்தத் திருச்சிற்றம்பலமுடையான். ஆனால் இப்போதைய நிலை வேறு. வெய்யிலில் நின்று கொண்டிருக்கிறான். இப்போது எப்படி அவனால் என்னை வென்றுவிட முடிகிறது என்பதைப் பார்த்து விடுகிறேன். . ."

"இவ்வளவு சொல்கிறீர்களே, இத்தனை நடந்தும் சோழநாட்டுத் தனாதிகாரியும் நமது சகாவுமான சோழ சம்புவரையரிடமிருந்து ஏன் ஒரு தகவலுமில்லை? அவர் ஏன் நம்மைச் சந்திக்கவில்லை? தலைநகரில் இருக்கும் அவருக்கு நம்மைவிட நிரம்ப விஷயங்கள் தெரிந்திருக்கும்? ஏன் வெளிப் படுத்தவில்லை? சாதாரண அதிகாரியல்ல அவர். அமைச் சருக்குச் சமமானவர். அவருக்குக் கூடவா உண்மை தெரியாது? அவருக்குக் கூடவா இது விஷயமாகச் சந்தேகம் வரவில்லை?"

"ஆகா! அந்தக் கயவனை நினைத்தால் பற்றிக் கொண்டுதான் வருகிறது. சேதிராயரே, அவனை என் குலமாயிற்றே என்பதாலும் முக்கியப் பதவி வகிக்கிறான்

tamilebooks.net

என்பதாலும் என் சகாவாக்கிக் கொண்டேன். அவன் இன்று துரோகியாகி விட்டான் போலிருக்கிறது. என் குலக் கோடரியான அவனையும் வேலை தீர்த்து விடவேண்டும். பகைவனை விடத் துரோகி ஆபத்தானவன்" என்று அலுத்துக் கொண்ட நாராயண சம்புவரையர், "நிலைமையை இப்படியே விட்டுக் கொண்டு நாம் வாழ முடியாது நண்பரே! பொற் குடத்திற்குள் எப்படி மனிதனும் பாம்பும் சேர்ந்திருக்க முடியாதோ அப்படித்தான் மனம் பொருந்தாதவரோடு சேர்ந்திருப்பதும். கரிகாலன் போனால் சரியாகும் என்று நினைத்தேன். ஆனால் தற்போதோ காலனே வந்திருப்பது போலாகிவிட்டது. நான் உடனடியாகத் தலைநகருக்குப் போக வேண்டும். அங்குள்ள நிலைமையை அறிந்து பலப்பரீட்சையில் இறங்க வேண்டியதுதான். எதற்கும் நீர் படைகளை ஆயத்தப் படுத்தி வையும். போகும் வழியில் கொடும்பாளூரானுக்கும் சொல்லிவிட்டுப் போகிறேன்" என்று கூறிப் பேச்சை முடித்துக் கொண்டபின் காலதாமதம் செய்யவில்லை. வாயிலில் காவலுக்கு நின்ற வீரர்களிடம் சொல்லிவிட்டு ஆலயத்தின் பின் சுற்றிலிருந்த நிலவரையின் வழியாக இருவரும் வெளியேறி னார்கள். காஞ்சி மாளிகையை அடைந்த பின்னர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு அன்றிரவே ஒற்றன் பார்த்திபனோடு புறப்பட்டார் நாராயண சம்புவரையர்.

அன்றிரவும் மறுநாள் பகலுமாய் விடாமல் புரவிகளில் பயணம் செய்த அவர்கள் இரண்டாம் இரவு சேந்த மங்கலத்தை யடுத்திருந்ததோர் எறிவீரப்பட்டினத்தை அடைந்தார்கள். கடைச் சங்க காலந்தொட்டே எறிவீரப் பட்டினங்கள் பன்னாட்டு வாணிபத்திற்குப் பெயர் போனவைகளாய் இருந்தால் இரவு ஏறி வெகுநேரமாகியும் அப்பட்டினம் வணிகக் காரியங்களால் கலகலப்பாக இருந்தது. கிழக்கு நாட்டு வார்த்தகர்களும் மேலை நாட்டு யவனர்களும், கிரேக்கர்களும், தென்னிலங்கை வளஞ்சியர்களுமாய்த் தமிழ் வணிகர்களோடு கூடி வித விதமான பண்டங்களைப் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஏற்றுமதியாகவிருந்த முத்துக்களும், பட்டாடைகளும், சந்தன மரங்களும் கடார நாட்டு வணிகர்களால் விலை பேசப்பட்டுப் பெரும் மரவண்டிகளில் ஏற்றப்பட்டன. வெளி நாடுகளிலிருந்து கொண்டு வந்து குவிக்கப்பட்ட அகில் வகைகளையும் கற்பூர வகைகளையும் தமிழகத்தின் வெவ்வேறு பகுதியினர் பேரம் பேசிப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். விலை மதிப்பான பண்டங்கள் மாற்றிக் கொள்ளப்படுவதால் பாதுகாப்பு செய்ய வேண்டி யிருந்தது. அப் பாதுகாப்பை நல்கும் பொருட்டு வேலும் வாளும் ஏந்திய எறிவீரர்கள் அங்குமிங்கும் புரவிகளில் சுற்றி வந்தார்கள்.

tamilebooks.net

அந்தக் கலகலத்த நகருக்கு வந்த சேர்ந்ததும் இரவு ஓய்வெடுக்கத் தீர்மானித்த நாராயண சம்புவரையர் எறிவீரப் பட்டிணத்து எல்லையில் இருந்த வணிகர் மாளிகையொன்றை அடைந்தார். மாளிகையின் பின்பகுதியை ஒழித்துவிட்டு அவர்களைத் தங்க அனுமதித்தான் காவலாளி. இருவருமே களைத்திருந்தாலும் வயதான காரணத்தால் விரைவிலேயே தூங்கிவிட்டார் நாராயண சம்புவரையர். இளைஞனாக இருந்த காரணத்தால் உடனடியாகத் தூங்காமல் மஞ்சத்தில் புரண்டான் ஒற்றன் பார்த்திபன். நள்ளிரவு கழிந்து பின்னிலவு தெரிந்த வேளை நெருங்கிய போது கண்களைக் கசக்கிக் கொண்டு தற்செயலாகச் சாளரத்தை நோக்கிய பார்த்திபன் திடுக்கிட்டான். சாளரத்தின் மூன்று நான்கு உருவங்கள் மெல்ல மெல்ல மேலேறி வருவது அவனது கண்களுக்குத் தெரிந்தது.

11

"ஆங்கமைவு எய்திய கண்ணும் பயனன்றே
வேந்தமைவு இல்லாத நாடு"

— குறள், 740

நள்ளிரவு நேரத்தில் அந்த எறிவீரப்பட்டினத்தின் எல்லை மாளிகையின் பின்புற சாளரத்தில் மொத்தம் நான்கு உருவங்கள் மெல்ல மெல்ல மேலேறி வருவதைக் கண்ட பார்த்திபன் அவைகள் தத்தம் வாயில் வாட்களைக் கவ்விக் கொண்டிருந்ததையும் கவனிக்கவே செய்தான். அசதியால் நன்றாகத் தூங்கிவிட்ட நாராயண சம்புவரையர் உள்ளறையில் இருப்பதையும், தான்மட்டுமே வெளித் தாழ்வறையில் இருப்பதையும் உணர்ந்துகொண்ட அவன் அடுத்த சில நிமிடங்களில் தான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை யோசித்துக் கொண்டான்.

தன்னிடம் வாளில்லை என்பதும் அவனுக்குப் புரியவே ஒருவிதத் தீர்மானத்துடன் மஞ்சத்திலேயே உறங்கிவிட்ட வனைப்போல் கிடந்தான். அந்த அறையிலும் சரி, உருவங்களின் கையிலும் சரி பந்தங்களேதும் இல்லையாதலால் கும்மிருட்டு சூழ்ந்திருந்தது. அப்போதைக்கு அந்த இருட்டையே சாதமாகக் கொண்ட அவன் கண்களைத் திறந்தபடியே மஞ்சத்தில் கிடந்தான். இதற்கிடையில் சாளரத்தில் அந்த உருவங்கள் முழுதுமாய் ஏறி உள்ளே 'தட்தட்' டெனக் குதித்தன. வாயில் பற்றிய வாட்களைக் கைகளில் பற்றித் துழாவிடியபடி தாழ்வறையை அடைந்தன.

tamilebooks.net

அவர்கள் தன்னை நோக்கி வருவதை உணர்ந்து கொண்டான் பார்த்திபன். அவர்களின் முகம் தெரிய வில்லையென்றாலும் அவர்களது பேச்சின் தொனியைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் தமிழர்களல்ல என்பதை மட்டும் தெளிவாகத் தெரிந்து கொண்டான். அடுத்த சில நிமிடங்களில் வியத்தகு சம்பவங்கள் நடைபெற்றன.

பார்த்திபன் மஞ்சத்தருகே வந்து நின்ற அவர்களில் ஒருவன் கேட்டான்:

"இவனை எழுப்பலாமா, அல்லது ஊட்டியில் வாளைப் பாய்ச்சித் தீர்த்துவிடலாமா?"

"ஊட்டியில் வாளைப் பாய்ச்சி உயிரைப் பறிக்க எவ்வளவு நேரமாகப்போகிறது? முதலில் இவனை எழுப்பி விசாரிப்போம்" என்றான் மற்றொருவன்.

இப்படிக் கூறியவன் வாளால் முரட்டுத்தனமாகப் பார்த்திபன் உடலில் உரசி, "டேய் எழுந்திரு. ம். . ." என்றான்.

அவர்கள் பேச்சைத் தொடங்கியதுமே கண்களை மூடிக் கொண்ட பார்த்திபன் கொஞ்சத்தில் எழுந்து விடவில்லை., நான்கைந்து தடவை அவர்களை அழைக்கும்படி செய்துவிட்டு அதிர்ந்தவனைப் போல் எழுந்து, "யாரது, மடையன் . . ." என்று வேண்டுமென்றே எரிந்து விழுந்தான்.

"கண்களைத் திறந்து பார் . . . புரியும்" என்றான் வாள்வீரன் ஒருவன்.

கண்களை ஏற்கனவே திறந்து விட்டிருந்த பார்த்திபன் சரியாக எதையும் பாராதவனைப்போல் அமர்ந்துகொண்டு, "என்ன புரியும்" என்று கேட்டான் அரை மயக்கத்தில் இருப்பவனைப்போல்.

"யார் மடையன் என்பது புரியும்" என்றான் வாள்வீரன் நிதானமாக.

பார்த்திபன் சுற்றிலும் ஒருமுறை பார்த்தான். நான்கு பேர் அவனது மஞ்சத்தைச் சுற்றி வாளை எந்த நேரத்திலும் அவனது உடலில் பாய்ச்சிவிடத் தயாராக நின்றிருப்பது தெரிந்தது. அதைப் பார்த்துவிட்டு "புரிந்து விட்டது" என்றான்.

"மிக்க சந்தோஷம்" என்றான் வாள்வீரன்.

"எதற்கு?"

"புரிந்து கொண்டதற்கு."

"உங்களை மடையர்கள் என்று நான் புரிந்து கொண்டது உங்களுக்குச் சந்தோஷமாக இருக்கிறதா?" என்றான் பார்த்திபன்.

tamilebooks.net

வாள் வீரன் ஒருவனது வாள் அவனது நெஞ்சைத் தடவியது. "எங்களை மடையர்களென்று சொல்வது புத்தி சாலித்தனமல்ல தெரியுமா?" என்று அவன் கேட்கவும் செய்தான்.

"இதில் புத்திசாலித்தனம் எங்கிருந்து வருகிறது? உண்மையைத்தானே சொல்கிறேன்?" சகஜமாக சொன்னான் பார்த்திபன்.

"என்ன உண்மை?"

"இருட்டில் - முழு தூக்கத்தில் - உரிய ஆயுதங்கள் எதுவுமின்றி தனியே படுத்திருக்கும் ஒருவனை நான்கு பேர் வாளும் கையுமாய் சூழ்ந்து நிற்கிறீர்களே நீங்களெல்லாம் எப்படிப் புத்திசாலிகளாக இருக்க முடியும்?"

பார்த்திபனின் துணிவு வாள் வீரர்களை அசரவைத்தது உண்மைதான் என்றாலும், வாள்பலமும் ஆள் பலமும் அவர்கள் பக்கமே அப்போதையை நிலையில் இருந்ததால் அவனது துணிவை அசட்டையே செய்தார்கள்.

"நீ தற்போது இருக்கும் நிலையில் இவ்வாறு பேசிக் கொண்டிருப்பது மட்டும் புத்திசாலித்தனம் என்று எண்ணுகிறாயா?" என்று கேட்டான் ஒருவன்.

"ஏன், என் நிலைக்கு என்ன?"

"எந்த, நேரத்திலும் நீ பிணமாகலாம்."

"அது உண்மை. ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால்..."

"ஆனாலென்ன?"

"மனிதனாகப் பிறந்த எவனும் எந்த நேரத்திலும் பிணமாகக் கூடியவன் தானே?"

"டேய், வீணாகப் பேசி அற்பாயுசாகச் சாகாதே, உண்மையச் சொல். எங்கே அவள்?"

"அவளா..." உண்மையாகவே வியந்து போய் கேட்டான் அவன்.

"ஆம் ஒரு பெண், அவள் இங்கேதான் நுழைந்தாள். எங்கே அவள்?"

"வேண்டுமானால் மடியைக் காட்டுகிறேன். சோதனை செய்து கொள்ளுங்கள்."

வாள் வீரன் ஒருவன் குறுக்கிட்டு "இவனோடு பேசிப் பயனில்லை. அதோ அந்த அறையில் பார்ப்போம்" என்றதும்

tamilebooks.net

நால்வரும் நாராயண சம்புவரையர் இருந்த அறைக்குச் சென்றார்கள். பார்த்திபனும் பின்னால் சென்றான். உள்ளே நுழைத்ததுமே மஞ்சத்தை அடைந்து உற்று நோக்கியபோது சம்புவரையர் படுத்திருப்பது தெரிந்தது.

"இது பெண்ணில்லை என்று நினைக்கிறேன்" என்றான் பார்த்திபன்.

அவன் பேச்சை அவர்கள் சட்டை செய்யாமல் தங்களில் ஒருவனை, "நீ போய் பந்தம் கொண்டு வா" என்றார்கள். அவன் கொஞ்ச நேரத்திலேயே பந்தத்துடன் வந்ததால் ஒரு வாள் வீரன் தாழ்வறைப் பகுதியில் ஏத்திப் பிடிக்க, மற்றவர்கள் தேடினார்கள். அங்கு எதுவும் தட்டுப்படாத நிலையில் அறைக்குள் சென்றார்கள்.

அவர்களது பைத்தியக்காரத்தனமான முயற்சியைக் கண்டு சிரித்துக் கொண்ட பார்த்திபன் அவர்கள் பின்பாகவே செல்லாமல் தன் மஞ்சத்தில் படுத்துக்கொண்டான். அப்படிப் படுத்தவன் தற்செயலாக அறைக்குள் இருந்த மஞ்சத்தின் பக்கமாகப் பார்த்தபோது திடுக்கிட வேண்டியதாயிற்று. நிலைமை மிதமிஞ்சிவிடக்கூடியதாய் தோன்றவே உடனடியாகத் தீர்மானமொன்றைச் செய்து கொண்டு, "அதோ. . . அதோ. . . அந்தப் பெண்" என்று இரைந்து கூவி விட்டு மஞ்சத்திலிருந்த கம்பளத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அறையின் ஓரத்தில் ஒதுங்கினான்.

அவனது குரலைக் கேட்டதுமே அவன் எதிப்பார்த்தபடி வாள் வீரர்கள் அறையிலிருந்து திமுதிமுவென வெளிப் பட்டார்கள். அதிலும் பந்தமேந்தியவனே முன்னால் வந்ததால் அவன் மீது இமைக்கும் பொழுதில் கம்பளத்தை வீசினான் பார்த்திபன். முரட்டுத்தனமாக வீசப்பட்ட கம்பளத்தில் சிக்கி வாள்மீது வீழ்ந்தது மட்டுமின்றி அவன் பிடித்திருந்த பந்தமும் கம்பளத்தில் மோதி அணைந்து விழுந்து விடவே இருள் மீண்டும் அங்கே சூழ்ந்தது.

அதுவரை பந்த வெளிச்சத்தில் இருந்ததால் எஞ்சிய மூவரும் திடீரெனச் சூழ்ந்த இருளில் எதையும் உடனடியாகக் காண முடியாமல் திணறினார்கள். ஆனால் இருட்டிலேயே இருந்த பார்த்திபனுக்கு அச்சிரமமில்லை; எனவே இரண்டாவது வீரனை எட்டி உதைத்து அவன் மீதே விழுந்து வாளைப் பறித்துக்கொண்டு விழுந்தவனின் நெஞ்சிலே மின்னல் வேகத்தில் பாய்ச்சவும் செய்தான்.

வாள்பட்டு வாய்க் கூச்சலிட்டான் வீரன். அச்சத்தம் மிகப் பயங்கரமாக எதிரொலித்தது தாழ்வறையில். அந்த வேகம்

tamilebooks.net

குறைவதற்குள்ளாகவே பார்த்திபன் கம்பளத்தில் சிக்கி உருண்டவனையும் அந்த வாளால் மரண காயப்படுத்தி விட்டானாதலால் போராடுவதற்கு இருவர் மிஞ்சினார்கள்.

மிஞ்சிய இரண்டு வீரர்களுக்குத் தற்போது இருள் பழகிவிட்டதால் பார்த்திபன் இருக்குமிடத்தைப் பார்க்க முடிந்தது. நிமிட நேரத்தில் தங்களை ஏமாற்றித் தங்களில் இருவரைக் கொன்றும்விட்ட பார்த்திபனை அங்கம் அங்கமாகத் துளைக்கும் ஆவேசத்துடன் அவர்கள் அவனை நெருங்கினார்கள். வாட்போர் மும்முரமாகத் துவங்கியது. துவங்கிய கொஞ்ச நேரத்திலேயே பாத்திபன் சாதாரண வாள் வீரன் அல்ல என்பதையும் புரிந்து கொண்டார்கள். அதே சமயம் அவர் களிடம் அதிக நேரம் போரிட்டுக் கொண்டிருக்க விரும்பாத பார்த்திபன் இருந்தாற் போலிருந்து தரையிலே அமர்ந்து வாள் வீரனொருவனின் இடையில் தன் வாளை நீட்டி இழுத்து விடவே பலமான காயப்பட்டு விட்ட அந்த வாள் வீரன் தள்ளாடி விழுந்தான். மற்றவன் சரேலென வாளை விலக்கிக் கொண்டு படிகளில் இறங்கி ஓடினான்.

ஓடியவனைப் பிடிக்க பார்த்திபன் விரும்பவில்லை. அதோடு ஓடியவனைத் துரத்தும் நிலையிலும் அவனில்லை. எனவே அணைந்து போன பந்தத்தைக் கீழே கொண்டு போய் ஏற்றிக்கொண்டு வந்தான்: மரணகாயம் பட்டு விழுந்திருந்த மூவரையும் பார்த்தான். மூவரும் யவனர்கள் என்பது அவர்களது முகத் தோற்றத்தால் தெளிவாகத் தெரிந்தது. அந்த அளவில் தெளிந்த அவன் பந்தத்தைத் தூக்கிப்பிடித்துத் திரும்பியபோது அழகிய பெண்ணொருத்தி நின்றிருப்பதைக் கண்டான். யவனவர்களோடு ஏன் போரிட நேர்ந்தது என்பது தற்போது நினைவிற்கு வந்தது.

மாளிகைக்கு அவன் முதலில் வந்தபோது எந்தப் பெண்ணும் கண்களுக்குத் தட்டுப்படாததோடு, தானிருந்த இடத்திலும் பெண்கள் இருக்க நியாயமில்லையாகையால் வாள் வீரர்கள் தன்னிடத்தில் பெண்ணைத் தேடி வந்தபோது சிரிக்கவே செய்தான். ஆனால் அவர்கள் பந்தத்தைக் கொண்டு வந்து அந்தகாரத்தை விலக்கி அறைக்குள்ளே சென்றபோது அவனும் தற்செயலாக அறையின் பக்கம் திரும்பினான். உள்ளே நாராயண சம்புவரையர் தூங்கிக் கொண்டிருந்த மஞ்சத்தின் கீழே கம்பள விரிப்பின் மறைவில் பெண்ணொருத்தியின் கூந்தல் சற்றே வெளியே தெரிகிறமாதிரி விலகியிருந்தது. அதை வைத்துக் கொண்டு வாள் வீரர்கள் தேடும் பெண்தான் அங்கிருக்க வேண்டும் என்று எண்ணினான். அறைக்குள் இருக்கும் வாள் வீரர்கள் பந்தத்தை எடுத்துக்கொண்டு மஞ்சத்தின் தலைப்புறம் வந்தால் இப்பெண் நிச்சயம் சிக்கிக்கொள்வாள் என்பது

tamilebooks.net

புரிந்தது. அவளைப் பற்றி யோசிக்க முற்படாமல் அவளை அவர்களிடமிருந்து பிரித்துவிடவே இரைச்சலை எழுப்பினான்.

நினைத்தபடி காரியம் முடிந்த திருப்தியில் திரும்பிய போது சிலையென நின்றிருந்தவளை அலையும் பந்த வெளிச்சத்தில் கண்ட பார்த்திபன் அவளது அழகில் ஒரு கணம் தடுமாறிய பின்பே தெளிவு பெற்றான்.

இதற்குள் அவனை அதே பந்த ஒளியில் கண்ட அப்பெண், "என்னைக் காத்ததற்கு மிகவும் நன்றி" என்றாள்.

அவன் பதிலேதும் பேசவில்லை.

அவள் சற்று சங்கடமடைந்தாலும் வேறு வழியில்லாமல் மேலும் பேச முற்பட்டு, "நீங்கள் மட்டும் இல்லாதிருந்தால் இந்நேரம் நான் எங்கிருந்திருப்பேனோ, எப்படி இருந்திருப் பேனோ தெரியாது" என்று கூறினாள்.

அப்போதும் அவன் பேசாததால், "ஏன்.. பேசமாட் டீர்களா?" என்று வினவினாள்.

பார்த்திபன் தன்னிடம் இருந்த பந்தத்தை மாடத்தில் இருந்த இரும்புத்தளையில் செருகிவிட்டு மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு அவளைப் பார்த்து "நீயும் உட்கார்" என்று மஞ்சத்தின் மறு கோடியைக் காட்டினான்.

"பரவாயில்லை" என்றாள் அவள்.

"மஞ்சத்தில் கீழேதான் உட்காரவோ படுக்கவோ விரும்புவாய் போலிருக்கிறது" என்றான் அவன்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவன் மேலும் கேட்டான்.

"போயும் போயும் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்த காரணம் என்ன? அப்படியென்ன விசேஷமிருக்கிறது அங்கே?" விஷமமாக வினவினான் பார்த்திபன்.

"தேர்ந்தெடுத்து அங்கே செல்லவில்லை. நிர்பந்தத்தால் நேர்ந்து விட்டது."

"என்ன நிர்பந்தம்?"

"யவனர்கள் துரத்தியதால் இந்த மாளிகைக்குள் நுழைந்தேன் ஒருவருக்கும் தெரியாமல். அந்த அறையில் நுழைந்தேன் மறைந்து கொள்ள. இதற்கிடையில் நீங்கள் இருவரும் வந்து விட்டதால் வெளியேற முடியாமல் உள்ளேயே இருக்கவும் முடியாமல் தவித்துப்போய் மஞ்சத்தின் கீழ் ஒளிந்தேன், தவறுதான்."

tamilebooks.net

"அதுமட்டுமல்ல தவறு. கூந்தலை நீளமாக வளர்ப்பதும் தவறுதான். இல்லையா" என்று கேட்டான் அவன்.

அவள் மௌனமாக இருந்தாள்.

"நீளமான கூந்தல் அழகிற்கு ஓர் அடையாளம்தான். ஆனால் ஆபத்துகள் அழகினால்தான் வருகின்றன" என்று அவனே மேலும் கூறிவிட்டு "யவனர்கள் உன்னைத் துரத்த வேண்டிய காரணம்?" என்று கேட்டான்.

"இதுதான்" என்று தன் கழுத்தில் இருந்த முத்து மாலையைக் காட்டினாள் அவள்.

"இதற்காகவா நீ துரத்தப்பட்டாய்?"

"ஆம். இது மிகவும் விலை உயர்ந்தது வீரரே. இதை உள்ளே வணிகரிடம் வாங்கும்போது இந்த யவனர்கள் பார்த்துவிட்டு நான் தனியே புறப்பட்டதும் துரத்திக் களவாட முயன்றிருக்கிறார்கள்."

"இவர்கள் திருடர்களா?"

"ஆம் வீரரே. இந்த எறிவீரப்பட்டினத்தில் விலை உயர்ந்த பொருள்கள் மட்டும் வருவதில்லை. திருடர்களும் கொள்ளையர்களும் கூட வருகிறார்கள்."

"எறிவீரர்களான காவல் வீரர்கள் இருப்பார்களே?"

"எனக்கும் அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் இங்கே வந்த பிறகு தான் உண்மையை அறிந்து கொண்டேன்?"

"என்ன உண்மையை?"

"திருடர்கள் சம்பாதிக்கும் பொருள்களில் காவல் வீரர்களுக்கும் பங்குண்டாம்."

"உண்மையாகவா?"

"அதுமட்டுமல்ல. சேந்தமங்கலச் சிற்றரசரே இத்தகைய திருடர்களை ஊக்குவிக்கிறாராம்"

"ஏன்?"

"படை திரட்டப் பணம் வேண்டுமாம்."

அவள் கூறிய செய்திகளையெல்லாம் கேட்ட பார்த்திபனுக்கு என்னவோ போலிருந்தது. பல நாடுகளிலிருந்து பலதரப்பட்ட பொருள்கள் வர்த்தகத்திற்கு வந்து குவியும் நாட்டில் திருடர்களும் அவர்களுக்குத் துணை செய்யும் காவல் வீரர்களும் இருந்துகொண்டு ஏய்ப்பதையும், அதற்காகவே சிற்றரசன் ஊக்கமளிப்பதையும் உணர்ந்தபோது வெட்கப்பட்டான் அவன். ராஜராஜர் இருந்தபோது இல்லாத

tamilebooks.net

கெடுதல்கள் எல்லாம் தற்போது வந்திருப்பதாகத் தோன்றியது அவனுக்கு. நாட்டிற்குச் சிறப்புக்கள் என்று பற்பல இருந்தாலும் சரியான வேந்தன் அமையாது போனால், அது நாடாக அமைவ தில்லை. இதைத்தான் பார்த்திபனும் நினைத்துக் கொண்டான்.

அப்பெண்ணிடம் ஏதோ கேட்க முற்பட்டபோது மாளிகையின் கீழிருந்து ஏதோ ஈனக் குரலோன்று கேட்டது. அதைச் செவியுற்ற பார்த்திபன், "ஏதோ முனகல் சத்தம் கேட்கிறதே. ஒருவேளை காவலாளியை இந்த யவனத் திருடர்கள் கட்டிப்போட்டுவிட்டு வந்திருப்பார்களோ" என்று கூறியபடி எழுந்தான்.

ஆனால் எழுந்ததுமே தள்ளாடினான். நிற்க முடியாமல் கீழே விழுந்தான்.

அந்தப் பெண் செய்வதறியாமல் சற்றே திகைத்துவிட்டு விடுவிடுவென கீழே இறங்கினாள். முனகல் வந்த பகுதிக்குச் சென்றாள். அங்கே பார்த்திபன் கூறியது போலவே காவலாளி கட்டிப் போடப் பட்டிருந்ததைக் கண்டாள். கட்டுக்களை அவிழ்த்துவிட்டு யவனர்களைப் பற்றிச் சுருங்கச் சொல்லிவிட்டு பார்த்திபன் மயக்கமடைந்தது பற்றியும் கூறினாள். இருவரும் மேலே வந்தார்கள்.

கீழே கிடந்த பார்த்திபனைச் சோதித்தபோது தான் அவனது இடது தோளில் குறுவாளொன்று பாய்ந்து சிதறி விட்டதற்கான அடையாளங்கள் தெரிந்தன. காயத்தை உற்று நோக்கிய அப்பெண், "ரத்த விரயம் உண்டாகி விட்டது. எலும்பிற்கு ஆபத்தில்லை" என்று கூறிவிட்டுக் காவலாளியிடம் சுடுநீரையும், பச்சிலை சாற்றையும் கொண்டு வரும்படி சொன்னான். அவனை இருவருமாக மஞ்சத்தில் விட்டார்கள்.

காவலாளி வரும் வரை அவனைத் தன் மடியில் படுக்க வைத்திருந்த அவள் அவனது முகத்திற்கு அருகே குனிந்து அவனைப் பார்த்தாள். கள்ளச் சிரிப்பு சிரித்தாள். காவலாளி வந்தபின் சிகிச்சையை அவளே நல்ல முறையில் செய்தாள். காற்றோட்டமாக இருக்கும் பொருட்டு அவனை இருவருமாகக் கீழ்கட்டிற்குக் கொண்டு போனார்கள்.

பொழுது விடிந்து பார்த்திபன் கண்விழித்தபோது நாராயண சம்புவரையர் கங்கைகொண்ட சோழபுரத்திற்குப் புறப்பட்டுப் போய் விட்டதாக அறிந்தான். அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்தான். அவள் நீராடச் சென்றிருப்பதாகத் தெரிவித்தான் காவலாளி. பார்த்திபன் உடனே நீராட்டுத் துறையை நோக்கி விடுவிடுவென நடந்தான். அவளைக் கண்டு, "நீ, யார்" என்று வினவினான்.

tamilebooks.net

சொன்னாள் அவள்.

திகைத்தான் பார்த்திபன்.

12

"ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே யுள"

— குறள், 1099

ஆதவனின் கிரணங்கள் தொட்டு எழுப்புவது போல் பட்டுப்பட்டு உறுத்திய போது கண் விழித்த பார்த்திபன் விழித்த சில வினாடிகளிலேயே தானிருக்குமிடம், தானிருந்த இடம், இரவில் நடந்த சம்பவம் ஆகியவற்றை நினைவூட்டிக் கொண்டு முகத்தைக் கழுவிக் கொண்டான். அப்போது தோளில் இருந்த கட்டினைக் கண்டான். இரவில் கண்டவளின் ஆபரணம் சற்றே கிழிக்கப்பட்டுக் கட்டாகப் போடப்பட்டிருந்த நேர்த்தியையும், குறுவாள் விளைவித்த காயம் அதிக வலியைத் தராத அளவிற்குக் குணமாகி விட்டிருந்த சிகிச்சையின் நேர்த்தியையும் அறிந்து சிரித்துக் கொண்ட அவன் மேலே சென்றபோது அங்கே ஒருவரும் இல்லாதது கண்டு திகைக்க வேண்டியதாயிற்று. பிறகு காவலாளியைத் தேடிப் பிடித்து நாராயண சம்புவரையரைப் பற்றி வினவினான்.

"அவர் புறப்பட்டுப் போய்விட்டார் ஐயா" என்றான் காவலாளி.

"தனியாகவா?"

"ஆம். உங்கள் காயத்தைப் பற்றியும் இரவுச் சம்பவம் பற்றியும் சொன்னோம். சிகிச்சை பெற்று பூரண குணமானபின் உங்களை வரவேண்டிய இடத்திற்கு வரச்சொல்லிவிட்டு அவர்புறப்பட்டு விட்டார்."

"அந்தப் பெண் எங்கே?"

"நீராடப் போயிருக்கிறார்."

"துறை எங்கிருக்கிறது?"

இதைக் கேட்டுச் சிரித்த அவன், "ஏன், அங்கே போகப் போகிறீர்களா?" என்று கேட்டான்.

பார்த்திபன் இதற்குப் பதில் கூறவில்லை. காவலாளியை மூர்க்கமாகப் பிடித்துத் தள்ளிவிட்டு மாளிகையின் பின்புறமாக

tamilebooks.net

நடந்தான். குயில்கள் பாடி மயில்கள் ஆடும் எழிலான சோலையில் நுழைந்தான். மலர் மணம் அவனைக் கண்டு சிரித்தது. சோலைக்கு அப்பால் சொர்க்கமென விரிந்திருந்த தாமரைத் தடாகத்தை அடைந்தான். தாமரைப் பூக்கள் அவனை வரவேற்றன. ஆனால் அவன் அந்தத் தடாகத்தில் பூ எதையும் எதிர்பார்த்து வரவில்லை. அதை விடமென்மையான பூவையை எதிர்பார்த்து வந்திருந்தான். பூவை இல்லாமல் அவனைக் கண்டு கேலிசெய்வது போல் பூக்களே அங்கு மலர்ந்திருந்ததால் ஏமாற்றமடைந்த அவன் 'சே' என்று அலுத்துக் கொண்டான்.

அப்போது அவனுக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் எழுந்தது.

"வரக்கூடாத இடத்திற்கு வந்துவிட்டு அலுத்துக் கொண்டால் எப்படி?"

திரும்பினான் அவன். அப்பெண் இருந்தாள். "நீ இங்கிருக்கிறாயா?" என்று கேட்டான் சினத்துடன்.

"ஏன் இங்கே என்னை எதிர்பார்க்கவில்லை போலிருக் கிறது" புன்னகையோடு கேட்டாள் அவள்.

"ஆமாம்" என்றான் முன் கோபத்துடன்.

"தடாகத்தில் எதிர்பார்த்திருப்பீர்கள்" என்று கிண்டலாகக் கேட்டாள் அவள். அதோடு அழகிய பற்களைக் காட்டிச் சிரிக்கவும் செய்தாள்.

பார்த்திபன் இரண்டே எட்டில் சென்று அவளது தோள்களை மூர்க்கமாகப் பிடித்து, "முதலில் இதைச் சொல். யார் நீ?" என்று கேட்டான்.

அவள் சகஜமாகவே காணப்பட்டாள். "அதற்கென்ன இப்போது அவசரம்?" என்று வினவினாள்.

"இப்போது தெரிந்தாக வேண்டும்" என்றான் அவன்.

"காப்பாற்றிய நேரத்தில் கூட என்னைப் பற்றிக் கேட்கவில்லையே. அப்போது இல்லாத அவசரம் இப்போதென்ன?" வினவினாள் அவள்.

பார்த்திபனுக்கு என்ன பதில் சொல்வதெனத் தெரிய வில்லை. தடாகத்தில் அவளைக் காண முடியாமல் போன ஏமாற்றத்தால் ஏதேதோ பேசி நடந்து கொண்டிருந்தான் அவன். அவளும் அதை ஓரளவிற்குப் புரிந்துகொண்டு, "ஏமாற்ற மடையும்போது ஒழுங்காகப் பேசவோ நடக்கவோ முடியாது தான்" என்றான்.

"என்னது?"

tamilebooks.net

"முதலில் கையை எடுங்கள். தோள் கன்றிவிட்டது."

தற்போதுதான் தன் அத்துமீறிய செயலை உணர்ந்து - அதிர்ந்து கைகளை எடுத்தான் பார்த்திபன்.

அவனது முரட்டுப் பிடி உண்டாக்கிய வலியை உணர்ந்து தன் தோளைத் தடவி விட்டுக் கொண்டு அவள், "இப்படியா முரட்டுத்தனம் செய்வது? தடாகத்தில் நீங்கள் எதிர்பார்த்தவள் இல்லை என்பதால் இப்படி என் தோள்களை வலிக்கச் செய்து விட்டீர்களே, அப்பா..." என்று சொன்னாள்.

அவள் ஏதோ பேச முற்பட்டதும், "நான் யார் என்று தானே கேட்கப் போகிறீர்கள்? சொல்லிவிடுகிறேன். நான் ரோகண இளவரசி ரோகண நங்கை. போதுமா?" என்றாள் அவள்.

"என்ன?"

"உண்மையாகத்தான் சொல்கிறேன். என் முகத்தைப் பார்த்தாலே தெரியுமே. நான் தமிழ்ப் பெண் மாதிரியா இருக்கிறேன்?"

அவள் முகத்தைப் பார்க்கும்படி சொன்னதாலோ என்னவோ அவனால் அவளது முகத்தைச் சகஜமாகப் பார்க்க முடியவில்லை.

எப்போதுமே செய்வதறியாமல் ஒரு காரியம் நடை பெறும்போது எந்தத் தயக்கமும் தோன்றுவதில்லை. ஆனால் அதே காரியம் தெரிந்து செய்ய நேரும்போது தயங்காமல் இருக்க முடிவதில்லை.

அவள் ஒன்றும் சொல்லாதிருந்தால் அவளையே உற்று நோக்கியபடியே இருந்திருக்க முடியும் அவனால். ஆனால் தற்போது அப்படி இயலாததால் அரைப் பார்வையில் அவளைக் கண்ட அவன் அவளது முகத்திலிருந்தச் சிங்களச் சாயலை அறிந்தான்.

முதல் நாள் இரவு மஞ்சத்தில் கீழிருந்து பந்தத்தின் கீழ் வந்தபோது அவள் தந்த காட்சியை அவன் சரியாகப் பார்த்திருக்கவிலையாதலால் அவளைத் தமிழ்ப் பெண் என்றே சாதாரணமாய் எண்ணியிருந்தான். அதோடு அப்போது அவள் பேசிய பேச்சும் சாதாரணமாகவே இருந்தது.

தற்போது சாயல் மாறி — நின்ற தோரணை மாறி — பேச்சின் தொனியும் மாறியிருந்ததைக் கண்டபோது அவள் கூறியதை நம்ப வேண்டியவனான்.

எதிர்பாராத நிகழ்ச்சியால் இரவு முடிந்ததாலும் — எதிர்பாராத செய்தியால் பொழுது விடிந்ததாலும் குழம்பிக்

tamilebooks.net

கிடந்த அவன் எதிர்பாராத பதிலையும் கேட்க நேர்ந்ததால் சிலை போல் நின்றான்.

"என்ன, மௌனமாகி விட்டீர்கள்? யோசனையா?" என்று அவளாக முன்வந்து கேட்டாள்.

"என்னை மன்னிக்க வேண்டும்..." என்று ஆரம்பித்தான் அவன்.

"மன்னிப்பா? எதற்கு?"

"நான் சாதாரண ஒற்றன்"

"இதற்காகவா மன்னிக்க வேண்டும்?"

"இல்லை இளவரசி..."

"பின்?"

"ரோகண நாட்டு இளவரசியை ஓர் ஒற்றன் மரியாதை குறைவாக அழைத்துப் பேசியதற்கு மன்னிக்க வேண்டும்."

"பேச மட்டும்தான் செய்தீர்களா?"

"இல்லை. மரியாதை குறைவாக நடந்து கொண்டும் விட்டேன். தோள்கன்றிப் போய் விட்டதா இளவரசி?"

"ஆம்."

"அப்படியானால் நான் தண்டனைக்குரியவன்..."

"தண்டனையைத்தான் தோளில் தந்திருக்கிறேனே?"

"மறந்து போய் விட்டேன் இளவரசி. தாங்கள் தான் எனக்குச் சிகிச்சை செய்தீர்களாம்..."

"அது மட்டுமல்ல..."

"ஆம். தங்கள் ஆடையைக் கிழித்துக் கட்டும் போட்டிருக் கிறீர்கள். அந்த நன்றியையும் நான் மறந்திருக்கிறேன். இதற்காகவும் நான் தண்டிக்கப்பட வேண்டும்..."

"என்ன தண்டனையை எதிர்பார்க்கிறீர்கள்?"

"இளவரசி, நேற்றிரவிலிருந்து எதிர்பாராத நிகழ்ச்சிகளே ஒவ்வொன்றாய் எனக்கு நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே நான் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை..."

இதைக் கேட்டுக் 'கிளுக்'கென்று சிரித்த அவள் "நன்றாகத்தான் குழம்பி விட்டீர்கள்..." என்று சொன்னாள்.

"குழம்பி விட்டேனா? புரியவில்லை இளவரசி..."

"எதையும் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை என்றீர்கள் அல்லவா?"

tamilebooks.net

"ஆமாம்..."

"பிறகு எதற்காக எதையோ எதிர்பார்த்து இங்கே வந்தீர்களாம்?"

"அது வந்து..."

"நான் சொன்னேனே நன்றாகக் குழம்பி விட்டிருக்கிறீர்கள் என்று. ஆகவே தான் ஏதேதோ பேசுகிறீர்கள்..."

"இளவரசி, நான் சாதாரண ஒற்றன்."

"அதைத்தான் சொன்னீர்களே..."

"தங்களைப் போல் தெளிவாகப் பேசத் தெரியாதவன்"

"பேசவே தெரியாதவன் என்று தான் சொல்லுங்களேன்."

"பார்த்தீர்களா? பேசவே தெரியாதவன் நான்..."

"ஆபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற மட்டுமே தெரிந்தவர் போலிருக்கிறது..."

"தவறென்றால் அதற்காகவும் என்னை மன்னிக்க வேண்டும்..." பணிவோடு தெரிவித்துக் கொண்டான் பார்த்திபன்.

அவளோ, "நீங்கள் மன்னிப்பு கோருவதே வினோதமாகத் தான் இருக்கிறது. உண்மையாகத்தான் மன்னிப்பு கோருகிறீர்களா என்று சந்தேகமாகவும் இருக்கிறது" என்றாள்.

"ஏன் இளவரசி?"

"வார்த்தைக்கு வார்த்தை இதையே சொல்லிக் கொண்டிருந்தால் சந்தேகம் வராமல் எப்படி இருக்கும்?"

"எளியவன் நான். என்னைப் பலவழிகளிலும் குற்றம் சாட்டுவது இளவரசியாருக்கு முடியக்கூடியது. அவற்றையெல்லாம் தாங்குவதென்பது இந்த எளியவனுக்கு முடியக் கூடியதல்ல. வருகிறேன்" என்று கூறி இரண்டடி எடுத்து வைத்தான்.

"நில்லுங்கள்..."

"ஏன் இளவரசி?"

"இப்படி வாருங்கள்."

"வந்தேன் இளவரசி."

"தண்டனையை அளிக்காமல் உங்களை எப்படி விட முடியும்?"

"பெறச் சித்தமாய் இருக்கிறேன்..."

tamilebooks.net

அடுத்தகணம் அந்த எதிர்பாராத தண்டனை கிடைத்து விட்டது. இமைக்கும் நேரத்தில் பார்த்திபனை நெருங்கி அவனது கன்னத்தில் பூ விழுவதுபோல் தன் இதழ்களைப் பொருத்தி எடுத்துவிட்டு வண்டு போல் பறந்தோடிச் சென்று விட்டாள் ரோகண நங்கை.

ஃஃ ஃஃ ஃஃ

வினாடி நேரத்தில் நடந்து விட்ட விந்தையினால் சிந்தை தடுமாறி அந்த இடத்திலேயே நின்று விட்ட பார்த்திபன் இன்பத் தவிப்பில் ஆழ்ந்து போனான்.

கன்னியர் பலர் அவனைக் கண்டு ஏங்கியதுண்டு என்றாலும் ஒருத்தியும் அவனது கன்னத்தில் முத்திரை யிட்டதில்லையாகையால் ரோகண நங்கையின் செய்கை அவனது உடலில் கிளுகிளுப்பை மூட்டியது. இளவரசியாய் இருந்தும், தொலைதூர நாட்டைச் சேர்ந்தவளாய் இருந்தும், தன்னைச் சாதாரண ஒற்றன் என்று தெரிந்தும் இப்படியொரு முத்திரையை அளித்துவிட்டுச் சென்றதிற்கான காரணத்தை எண்ணிப் பார்த்தான் அவன். அவளை யவனர்களிடமிருந்து காப்பாற்றியதென்னவோ உண்மைதான். ஆனால் அதற்காகப் போய் எந்தப் பெண்ணும் முத்தமிட்டு நன்றி தெரிவித்து விடுவாள் என்று சொல்ல முடியாது. இதை நன்றாக உணர்ந்து கொண்ட அவனுக்கு அது விஷயமாக மீதியை எண்ணிப் பார்க்கவே ஒருமாதிரியாக இருந்தது. தனக்குப் பதில் வேறு யாராவது அவளைக் காப்பாற்றிருந்தால் அவள் என்ன செய்திருப்பாள் என்றும் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான் அவன். யார் காப்பாற்றியிருந்தாலும் இப்படி முத்திரையிட்டிருப்பாளா? தன் ஆடையைக் கிழித்துக் கட்டுப் போட்டிருப்பாளா?

முத்தத்தால் சித்தம் குழம்பியிருந்த அவன் தனக்கு மட்டும்தான் இவ்விதமெல்லாம் அவள் செய்கிறாள் என்று எண்ணிக்கொண்டான். வேறுவிதமாக எண்ண அவளது மனம் இடம்தரவில்லை மொத்தத்தில். . . தன்னுடன் விஷமமாகப் பேசியது, கன்னத்தில் இதழ்களைப் பொறுத்திவிட்டுச் சென்றது. . . ஆகிய அனைத்தையுமே வெறும் நன்றியுணர்ச்சியில் செய்யவில்லை என்பதையும் அதையும் மீறியதோர் உணர்ச்சியிலேயே செய்திருக்கிறாள் என்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான் அவன்.

tamilebooks.net

அன்றெல்லாம் அவனது மனநிலை வினோதமாகவே இருந்தது. விரும்புகிற ஒன்றை நம்பமுடியாமலும், நம்பாமல் இருக்க விரும்ப முடியாமலுமாய் ஏதோ இனிப்பான முடிவு கிடைத்துவிட்ட மாதிரி இன்பச் சங்கடத்தில் ஆழ்ந்தான்.

அன்று இரவு வரை அவளும் அவனுக்குத் தட்டுப்பட வில்லை. காவலாளியும் எதையும் தெரிவிக்கிற வழியாயில்லை. அவளைச் சந்திக்க விரும்பிய ஆவலும், அவளைச் சந்திக்க முடியாமலிருக்கும் ஏமாற்றமும் அவனுக்குச் சற்றே கோபத்தை மூட்டின. ஆனால் அதே கோபம் மாளிகையின் பின் கட்டில் - மேலே உள்ளறையில்அவளைக் கண்டுவிட்டபின் சென்று விட்டது. உள்ளறையில் நாராயண சம்புவரையர் சயனித்திருந்த மஞ்சத்தில் மயிலென அமர்ந்திருந்தாள் ரோகண நங்கை. பந்தங்கள் பன்னிரண்டிற்கும் மேல் அறையில் எரிந்ததால் அவள் மீது விழுந்திருந்த ஒளிவெள்ளம் கூட அழகாகவும் அபரிமித மாகவும் இருந்தது. அலங்கரிக்கப்பட்ட தேர் போல் புதுப்பொலி வோடு விளங்கிய அவளைப் பின்னாலிருந்து கண் கொட்டாமல் பார்த்தான் பார்த்திபன். வெறும் கண்களால் பார்த்துக் கொண்டிருப்பதால் மட்டும் ஒரு பெண்ணின் மீதான மயக்கம் தீர்ந்து விடுவதில்லையாதலால் அவனோடு பேசத் தீர்மானித்த அவன், "இளவரசி. . ." என்று மெல்ல அழைத்தான்.

அவள் திரும்பவுமில்லை. பேசவுமில்லை.

"இளவரசி. . ." மீண்டும் அழைத்தான் பார்த்திபன்.

அவளிடம் மாற்றமேதும் உண்டாகவில்லை.

"கையில் போட்டிருக்கும் கட்டைப் பிரிக்க வேண்டும் இளவரசி. . ." என்றான் அவன்.

அவள் திரும்பினாள்.

"அதற்கு என்னை எதற்காக அழைக்க வேண்டும்?" ஒன்றும் தெரியாதவளைப் போல் கேட்டாள்.

அவள் குரலில் கனிவில்லை. பார்வையிலும் கனிவில்லை. சகஜமாக நடந்துகொள்வதுபோல் தோன்றினாள். அதைக் கண்டு சிரித்துக் கொண்டான் அவன். காதல் மிகுந்தவர்கள் ஏதும் தெரியாதவர்போல் நடந்து கொள்வதும் உண்டு என்பது அவனுக்குத் தெரியுமாதலால் அவனும் நடிக்கலானான்.

"கட்டுப்போட்டவர் தாங்கள். . ."

"அதனால் என்ன?"

"மிகவும் அழகாகப் போட்டிருக்கிறீர்கள்"

"ம். . ."

tamilebooks.net

"அதுவும் தங்கள் ஆடையினால் போட்டிருக்கிறீர்கள்"

"ம்..."

"சிகிச்சை மிகவும் நேர்த்தியாகச் செய்யப்பட்டதாகக் காவலாளியும் சொன்னான். ஆகவே..."

"ஆகவே?"

"கட்டைத் தாங்கள் பிரிப்பதே முறை"

"நான் யார் தெரியுமல்லவா?"

"இளவரசி என்று தாங்களே கூறினீர்கள்..."

"ஓர் இளவரசி உங்களுக்குக் கட்டுப்போடுவதென்பது சாதாரண காரியமில்லை."

"அது என் பாக்கியம்."

"புரிகிறதல்லவா?"

"நன்றாகப் புரிகிறது இளவரசி..."

"பாக்கியத்தை அடுத்தடுத்துச் செய்வார்கள் என்று எதிர்ப்பார்க்கிறீர்களா?"

"தண்டனையாவது கொடுங்களேன்?"

இதைக் கேட்டதுமே அவனை ஏறெடுத்துப் பார்த்தாள் அவள். அவன் கடகடவெனச் சிரித்தான். அவளுக்கும் சிரிக்க வேண்டுமென்றுதான் இருந்தது. சிரமத்துடன் அடக்கிக் கொண்டு, "எதற்காக இப்போது சிரிக்கிறீர்கள்?" என்று கோபப்பட்டவள் போல் கேட்டாள்.

"இளவரசியாருக்குப் புரியாத அளவிற்கொன்றும் இந்த எளிய ஒற்றன் சிரித்து விடவில்லை" என்றான் பார்த்திபன்.

ரோகண நங்கைக்கு என்ன பதில் சொல்வதென்று விளங்கவில்லை. சற்றுப் பொறுத்து, "ஒரு பெண்ணிடம் காட்ட வேண்டிய சாதாரண நாகரீகம்கூட இங்கிருப்பவர்களுக்குத் தெரியாது போலிருக்கிறது" என்றாள்.

"அது பெண்கள் காட்டும் நாகரீகத்தைப் பொறுத்தது" என்றான் பார்த்திபன்.

"என்னது?"

"நாகரீகத்தை எதிர்பார்க்கும் இளவரசியார் அதிகாலையில் இங்கிருப்பவனுக்கு வலிந்தளித்த தண்டனையைச் சற்று நினைவு படுத்திக் கொண்டால் இங்கிருப்பவர்களின் நாகரீகத்தைப் பற்றிக் குறைசொல்ல வேண்டிய அவசியம் வந்திருக்காது" என்றான் பார்த்திபன்.

tamilebooks.net

தன் செயலையே திரும்பத் திரும்ப சொல்லிக் காட்டிய அவனைச் சமாளிக்க ஒரே வழி தண்டனையை அளித்துவிடுவது தான் என்று முடிவு செய்த அவள், "உள்ளே வாருங்கள்" என்றாள்.

தண்டனையைப் பெற உள்ளே நுழைந்த அவன் அறைக் கதவைச் சாத்தித் தாளிட்டான். உள்ளுக்குள் இன்ப அலைகள் அவளிடம் பொங்கினாலும் அதன் பக்கத்திலேயே அர்த்தமற்ற அச்சமும் கலந்திருந்ததால் அவனை அச்சத்தோடு பார்த்தாள். ஒற்றன் அவளை நன்றாக ஏறெடுத்துப் பார்த்துவிட்டு அவளை நோக்கி ஓரடி எடுத்து வைத்தபோது அறைக்கதவு தட்டப்பட்டது.

எரிச்சலடைந்த பார்த்திபன் "யாரது?" என்று இரைந்தான். அதற்கு அவனுக்குக் கிடைத்த பதில் அவனது எரிச்சலை மட்டுமல்ல காமத்தையும் விரட்டியடித்தது.

13

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு"

— குறள், 631

தடாகத்தின் அருகில் ரோகண நங்கை எதிர்பாராமல் அளித்த 'தண்டனையை மாளிகை அறையில் மீண்டும் பெற விரும்பி அதற்கான அழைப்பையும் அவளிடமிருந்து பெற்று அறைக்குள் நுழைந்து கதவைத்தாளிட்ட மறுவினாடியே வெளிப்புறம் தட்டப்பட்டதால் பெரிதும் எரிச்சலடைந்தான் பார்த்திபன். விரும்பி ஏங்கும் இருவர் கொஞ்சப் புகுந்த நேரத்தில் இடைஞ்சல் வருவதைவிட அவர்களுக்குப் பெரிய துரதிஷ்டம் வேறு இருக்க முடியாது. அந்த வகையில் துரதிஷ்டசாலியாகி விட்ட பார்த்திபன் தன் காதலுக்கான அஸ்திவாரத்தைப் போட முடியாதவனாய் "யாரது" என்று எரிந்து விழுந்தபோது "வீரபாண்டியன்" என்று பதில் கிடைத்தது.

இந்தப் பெயரை பார்த்திபன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. குலசேகர பாண்டியனால் கொல்லப்பட்டவனான பராக்கிரம பாண்டியனின் மகனான வீரபாண்டியன் பாண்டிநாடு குழம்பிக் கிடக்கும் நேரத்தில் எங்கோ இருக்கும் எறி வீரப்பட்டினத்திற்கு வந்து இந்த அர்த்த ராத்திரியில் கதவைத் தட்டுவான் என்று யாருமே எதிர்பார்க்க முடியாதுதான். அத்தகையதொரு எதிர்பாராத நிலைக்கு ஆளான பார்த்திபனிடம் அதுவரை

tamilebooks.net

நிலவிய காம உணர்ச்சி கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து. பஞ்சணையை நோக்கிச் செல்லவிருந்த அவன் வாயிற்புறமே திரும்பி வந்து தாளை நீக்கிக் கதவைத் திறந்தான்.

கதவுக்கு வெளியே நின்றிருந்த வீரபாண்டியனைக் கண்டான் பார்த்திபன். அறைக்கு வெளியே நிலவிய மங்கலான வெளிச்சத்தில் வீரபாண்டியனின் வித்தியாசமான கோலம் நன்றாகப் புலப்பட்டது. கண்ட இடங்களில் அலைந்து கண்ட விஷயங்களில் புரண்டு வந்திருந்ததால் அவனிடம் பெருமூச்சும் ஆயாசமும் வெளிப்பட்டிருந்தன. அதற்குச் சாட்சி சொல்வது போல் மதுவின் வாசனை அவனைத் தழுவியிருந்தது. பேசுகிற நிலையில் அவன் இல்லை. பிறர் பேசினால் புரிந்து கொள்கிற நிலையிலும் அவனில்லை. அதைத் தெரிந்து கொண்ட பார்த்திபன் அவனிடம் எதையும் பேசாமல் உள்ளே செல்ல விட்டான். அறைக்குள் தடுமாறிபடி நுழைந்த வீரபாண்டியன் மஞ்சத்தில் தாறுமாறாக வீழ்ந்தான். அவனைச் சரியாகப் படுக்கச் செய்துவிட்டு வெளியே வந்த பார்த்திபன் ரோகண நங்கையிடம் "இளவரசனின் நிலையைக் கண்டாயா?" என்று கேட்டான்.

"இவர் இளவரசரா? எந்த நாட்டிற்கு?" என்று கேட்டாள் அவள்.

"உங்கள் நாட்டு மன்னர் யாருக்கு உதவ இலங்காபுரனை அனுப்பினாரோ அந்த பராக்கிரம பாண்டியனின் புதல்வன் இவன். இப்போது இவனுக்கு நாடும் இல்லை. வீடும் இல்லை. இவனைத் தவிர இவனது பரம்பரையில் எஞ்சியவர் யாரும் இல்லை. அனைவரும் குலசேகர பாண்டியனால் அழிக்கப்பட்டு விட்டார்கள். இவனது நிலை பரிதபமானது இல்லையா?" என்றான் பார்த்திபன்.

"பாண்டியன் நாட்டை விட்டுவிட்டு இவர் ஏன் இங்கு வர வேண்டும்?" கேட்டாள் அவள்.

"குலசேகரனின் கண்களுக்குப்படாமல் தப்ப நினைத்து எங்கெங்கோ அலைந்து இங்கே வந்திருக்க வேண்டும். அதிருக்கட்டும். நீ எதற்காக இங்கு வந்தாய்?" என்று கேட்டதும் கலகலவெனச் சிரித்த அவள், "இளவரசிக்கு வரவர மதிப்பு அதிகமாகிக் கொண்டே போகிறது" என்றாள்.

அவளை இளவரசி என்றே குறிப்பிட்டு வந்து தற்போது ஒருமையில் அழைத்து விட்டதை உணர்ந்த பார்த்திபன் ஏதோ சொல்ல எத்தனித்தபோது, "பரவாயில்லை" என்றாள் அவள்.

"எதற்கு" என்று கேட்டான் அவன்.

tamilebooks.net

"என்னைப் பெயர் சொல்லி அழைத்தாலே போதும்" என்றாள் அவள்.

அவள் தந்த உரிமையால் உள்ளூர மகிழ்ந்தாலும் காட்டிக் கொள்ளாமல், "அது தவறல்லவா?" என்று கேட்டான்.

"என்னைத் தேடி வந்து தண்டனையைக் கேட்டீர்களே, அது மட்டும் சரியா?"

அவள் காதல் வயப்படுகிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது. அதை உறுதிப் படுத்திக்கொள்ள விரும்பிய அவன், "வெறும் பேராசையால் அப்படி வந்து கேட்டு விட்டேன். ஆனால் உண்மையை மறைக்க முடியாது அல்லவா?" என்றான்.

"எந்த உண்மையை?"

"நான் வெறும் ஒற்றன் என்பதை."

"அதனால் என்ன?"

"மண்ணில் உழலும் புழு நான். விண்ணில் பறக்கும் பறவை நீங்கள். புழு பறவையை எண்ணி ஆசைப்படலாம். அடைய முடியுமா?"

"பறவையே தேடிவரும்போது ஏன் முடியாது?" என்று கேட்ட அவள்...

"பெயர் சொல்லி அழைக்க உங்களுக்கு விருப்பமில்லையா?" என்று மேலும் வினவினாள்.

சாமார்த்தியமாக அவள் கேட்டுவிட்டதைக் கண்ட பார்த்திபன் புன்முறுவல் கொண்டான். சாதாரணமாகப் பெண்கள் காட்டுகிற தயக்கத்தைக் காட்டாமல் இந்த ரோகணநங்கை வெளிப்படையாகவே இதயத்தைத் திறந்த அசாதாரணம் அவனைக் கவர்ந்தது.

"என் விருப்பங்களையெல்லாம் நான் சொல்லட்டுமா?" என்றான் பார்த்திபன்.

"உங்கள் வேலையைக் காட்டத் தொடங்கிவிட்டீர்கள்."

"என் வேலையையா? அதென்ன?'?

"ஆடவர்கள் வேலையை."

"ஆடவர்கள் வேலையையா?"

"ம். இடம் கிடைக்கும் வரையில் ஏங்குவது... இடம் கிடைத்ததுமே..."

"சொல். ஏன் நிறுத்திவிட்டாய்?"

tamilebooks.net

"புரிந்து விட்டதைப் போய் ஏன் கேட்கிறீர்கள்?"

"எனக்கு ஒன்றும் புரியவில்லை ரோகண நங்கை."

"ஆமாமாம்" என்று கூறிச் சிரித்தாள் அவள். அவனும் கூடவே சிரித்துவிட்டு, "கைக்கு வந்தது வாய்க்குக் கிடைக்காமல் போய்விட்டது" என்றான்.

"எதைச் சொல்கிறீர்கள்?"

"அதுதான் தண்டனை விவகாரத்தைத்தான் சொல்கிறேன்."

"சீ."

"ஆமாம், இத்தனைப் பெரிய மாளிகையில் வேறு அறைகளே கிடையாதா? யார் வந்தாலும் இங்கேயே வந்து தொலைக்கிறார்களே?"

"இந்த அறை ஒரு வேளை ராசியான அறையாக இருக்கலாம்."

"அப்படித்தான் இருக்க வேண்டும் ரோகிணி. ஆமாம் அதெப்படி இவ்வளவு சரியாகச் சொல்கிறாய்?"

"போதும். . ."

"எது?"

"இதுதான்."

"ஒன்றுமே தொடங்கவில்லை. அதற்குள் போதுமென்றால் எப்படி?" என்று கூறி அவளை நெருங்கி வலது கரத்தைப் பற்றினான் பார்த்திபன். அவள் உதற நினைத்தாள். ஆனால் உதறவில்லை. சற்றுப் பொறுத்து உதற முயன்றாள். ஆனால் முடியவில்லை. அவனதுபிடி இறுகியது. அவனது மற்றொரு கரம் அவளது இடையைத் தேடிச் சென்றது. கரங்களின் சேட்டைகளால் அவளது உடல் அவனை நாடி நெருங்கியது. நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் போகவே தண்டனையைப் பெற அவனது முரட்டு உதடுகள் அவளது மல்லிகை இதழ்களை நெருங்கின. ஆனால் இணைய விருந்த நேரத்தில் அவனாகவே சற்று விலகினானாதலால் அவளது பூவிதழ்களில் படவேண்டிய அவனது உதடுகள் காதோரத்தில் ஆழப்பதிந்தன. கைகள் அவளது முதுகை வளைத்துப் பிடித்தன. இறுக்கினான்.

மனங்கள் தொட்டுக் கொள்வதோடு காதல் முடிந்து விடுவதில்லை, என்பதையும் காதலர்களின் புற ஸ்பரிசங்கள் இடம்பெறும்போதுதான் அது பூரணமாகிறது என்பதையும் புரிந்து கொண்டு பறைசாற்றுவதுபோல் நடந்துகொண்டார்கள்,

tamilebooks.net

அவர்கள். கருத்தொருமித்த காதலர்களுக்குக் கிடைக்கும் தனிமையானது ஒரு வரப்பிரசாதம் என்பதற்கு உதாரணம் சொல்வதுபோல் ஆனந்தித்தார்கள். தொட்டுக் கொள்ளவும் கட்டிக் கொள்ளவும் உரிமை கிடைத்துவிட்டால் அது எது வரைக்கும் செல்லும் என்பதைப் பார்த்துவிடத் தீர்மானித்தவர் களைப்போல் லயித்துக் கிடந்தார்கள். இத்தழுவல்களும், அரவணைப்புகளும் இன்ப விஷமங்களும் அரை நாழிகைக்கு நீடித்தன. அதற்குப்பின் தெளிவு பெற்று, சுயநிலைக்குத் திரும்பிய பார்த்திபன் "ரோகிணி" என்று மெல்ல அழைத்தான்.

"ம்" என்றாள் அவள் தலையை உயர்த்தாமலேயே.

"போதும்..." என்று தொடர்ந்து சொன்னான் பார்த்திபன்.

"நீ போய் உறங்கு. காலையில் பார்க்கலாம்..." என்றான் அவன் மேலும்.

"ம்" என்றாள் அவள் அதிகம் பேசமுடியாமல்.

பார்த்திபன் அங்கிருந்து எழுந்து மறு அறைக்குச் சென்றான்.

மறுநாள் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அவன் புறப்பட்டபோது அவளும் அவனுடன் வரவிரும்பினாள். காதல் அவனைச் சங்கடப்படுத்தியது. கடமை அவனைத் தயங்க வைத்தது. தன் பொறுப்புக்கள் சம்மந்தமாக அவளை அழைத்துச் செல்ல முடியாமலிருந்த அவன் காதல் மயக்கத்தால் அவளை விட்டுவிடவும் முடியாமல் இருந்தான். முடிவில் வேறு வழியின்றி இருவருமே புறப்பட்பட்டார்கள் மாறு வேடங்களில்.

வழியில் செல்லும்போது, "நான் நேற்று கேட்டதற்குப் பதிலே சொல்லவில்லையே! நீ எதற்காக இங்கே வந்தாய்?" என்று கேட்டான்.

"நான் பதில் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்" என்றாள் அவள்.

"அப்படியானால் நம்பமுடியாத மாதிரிதான் நீ நடந்து கொள்வாயா?"

"அதில்லை. நான் சொல்லப்போவது உண்மையை. அதைச் சில நேரங்களில் நம்பத் தயங்குகிறவர்கள் உண்டு..."

"பீடிகை போடுவதாலேயே சில விஷயங்கள் நம்ப முடியாமல் போய் விடுவதுண்டு ரோகிணி. ஆகவே நேராகவே சொல்லி விடலாம் நீ..."

"சொல்கிறேன், என் பெரிய தந்தை பராக்கிரம பாஹு மன்னரால் வேவு பார்க்க சோழநாட்டிற்கு அனுப்பப்பட்டவர்

tamilebooks.net

நான்" அவள் பேசிய தோரணை நம்பிக்கையை விளைவித்ததால் அவளது கூற்று உண்மையாக இருக்கும் என்று நம்பினான் பார்த்திபன். அதோடு அவளிடம் உண்டாகியிருக்கும் காதலைக் கொண்டே அவளை வேவுத் தொழிலிலிருந்து விலக்கித் தன் வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்றும் நம்பினான்.

ஃஃ ஃஃ ஃஃ

இதற்கிடையில். . .

சேந்த மங்கல எறி வீரப்பட்டினத்தில் பார்த்திபனை விட்டு விட்டு கங்கை கொண்ட சோழபுரத்திற்குப் புறப்பட்டுப் போன ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் அதிபதியான நாராயண சம்புவரையர் இரண்டு நாள் பயணத்திற்குப் பின் சோழநாட்டுத் தலைநகரை அடைந்தார். வழியிலெல்லாம் அவரது எண்ணங்கள் சோழ அமைச்சரான பெரிய பல்லவராயரையே சுற்றிச்சுற்றி வந்தன. சேதிநாட்டுச் சிற்றரசரோடு பேசியபடி சோழநாட்டின் தற்போதைய நிலைமை களுக்கெல்லாம் பெரிய பல்லவராயனே மூளையாக இயங்குகிறான் என்று உறுதியாக நம்பினார். அப்படி இயங்கும் சக்தி அவருக்கு உண்டு என்பது சம்புவரையருக்கு நன்றாகத் தெரியவந்திருந்தது. பொறாமை காரணமாயும், பூசல் காரணமாயும் அமைச்சரின்பேரில் சம்புவரையர் புழுதிவாரித் தூற்றினாலும் உள்ளுக்குள் அவரைப் பற்றிய சரியான மதிப்பீட்டையே வைத்திருந்தார். ஒரு செயலைச் செய்வதற்கு வேண்டிய கருவிகளையும், ஏற்ற காலத்தையும், செய்யும் வகையையும், செயலின் அருமையையும் நன்கு யோசித்துச் செய்பவனே அமைச்சன் என்ற வள்ளுவரின் வாக்கிற்குத் தெள்ளியதோர் உதாரணமாய்ப் பெரிய பல்லவராயர் விளங்குபவர் என்பது சம்புவரையர் அறிந்த விஷயம்தான். உண்மையை அறிந்து வைத்திருந்தாலும் பதவி ஆசைகள் அவரை நியாய ஸ்தானத்திலிந்து அறிந்து வைத்திருந்தன. நியாயம் தவறிய மனிதன் நிதானம் தவறுகிறான். இல்லாத வற்றைக் கற்பித்துக்கொள்கிறான். பகையை வளர்க்கிறான். பயன் பெறவும் பழிவாங்கவும் துடிக்கிறான். இத்துடிப்பு அரசியல் வாதிகளுக்குச் சற்று அதிகமாதலால் நாராயண சம்புவரையர் நிரம்ப எதிர்பார்த்தவராய்ச் சென்றார். தனக்கு அப் பல்லவராயர்கள் தரும் உபசரிப்பை நிராகரித்து அவர்களது முகங்களில் கரியைப் பூசி சாயம் வெளுக்கிற மாதிரி நடந்துவிட்டு வரவேண்டும் என்றெல்லாம் தீர்மானித்த வண்ணமாய்த் தலைநகரை அடைந்தார்.

tamilebooks.net

14

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"

— குறள், 547

கங்கை கொண்ட சோழபுரத்தின் கோட்டை வாசலில் கோலாகமான வரவேற்பை எதிர்பார்த்த சம்புவரையருக்குச் சாதாரண கொம்பொலிகூடக் கிடைக்கவில்லை. சோழ நாட்டிலேயே இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்தது ஜெயங்கொண்ட சோழ மண்டலமேயாதலால் அதன் அதிபதிகள் தலைநகருக்கு விஜயம் செய்கிறார்களென்றால் பெரிய அமர்க்களமாக இருக்கும். தலைநகரம் விழாக்கோலம் பூண்டிருக்கும். பேரிகைகளும் கொம்புகளும் ஒலிக்கும். வேட்டுக்கள் சப்திக்கும். படைகள் அணிவகுத்து நிற்கும். சோழ அமைச்சர் எதிர் கொண்டழைக்க வந்து நிற்பார். யானையின் மீது அமரவைத்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். அரண்மனையில் பெரிய விருந்து நடக்கும். ஊர் முழுவதும் அன்று அன்னதானம் நடைபெறும். சாழீச்சுரர் ஆலயத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப் பெறும். அப்படியெல்லாம் அமர்க்களப்படும் வரவேற்பு தற்போது பெயருக்கும் இல்லை. தன் வரவை முன் கூட்டியே தெரிவித்திருந்தும் இப்படியொரு மயான அமைதி நிலவியதைக் கண்ட சம்புவரையருக்குத் தன் முகத்தில் கரிபூசியது போலிருந்தது. ஏமாற்றத்தால் அவரது முகம் சிவந்தது.

கோட்டை வாசலில் காவல் வீரர்கள் காட்டிய மரியாதையை ஏற்றுக்கொள்வதற்குப் பதில் அவர்களைச் சுட்டெரித்து விடுவது போல் எரி பார்வையை வீசிய வண்ணம் உள்ளே நுழைந்து அரண்மனையை அடைந்தார். அங்கேயும் அவரைக் கேட்பாரில்லை. புரவியை விட்டு இறங்கிய அவர் ஆத்திரத்தால் புரவியை மோதி அடித்துவிட்டு உள்ளே பிரவேசித்தார்.

கங்கை கொண்ட சோழபுரத்தின் அரண்மனை கங்கை கொண்ட சோழனால் நிர்மாணிக்கப்பட்டு அவன் வழி வந்தவர்கள் அனைவராலும் புதுப்பிக்கப்பட்டு வந்ததால் தற்போது காண்போரை மயக்கும் வனப்போடு திகழ்ந்தது. அதிலும் சித்திர மண்டபமானது குலோத்துங்க சோழனால் அழகுபடுத்தப்பட்டதால் தேவசபைபோல் காட்சியளித்தது. அவர் நுழைந்த போது சித்திரமண்டபத்தில் அமைச்சர் பெரிய பல்லவராயரும், சேனாதிபதி அண்ணன் பல்லவராயனும்,

tamilebooks.net

காஞ்சீபுர பரமேஸ்வரனும் இருந்தார்கள். சம்புவரையரைக் கண்டதுமே அமைச்சர் சிரமம் பாராமல் எழுந்துவந்து, "வரவேண்டும் வரவேண்டும். நேற்றே எதிர்பார்த்தேன்" என்று கூறி இருக்கையைக் காட்டிவிட்டு அமர்ந்தார்.

"நேற்றே எதிர்பார்த்துமா வரவேற்புக்கு ஆயத்தம் செய்யவில்லை?" என்று கேட்க நினைத்த சம்புவரையர் அதைக் கேட்காமல் சித்திரமண்டபத்தை நோட்டம் விட்டார். அமைச்சரைப் பொறுத்தவரை சலனம் எதுவுமில்லை. ஆனால் அண்ணன் பல்லவராயனும் பரமேஸ்வரனும் சம்புவரையரை வெறுப்புடன் பார்த்தார்கள். அவரது சதிவேலைகள் அவர் களுக்கு நன்றாகவே தெரிந்திருந்ததால் அவரை அச்சித்திர மண்டபத்தில் காணவும் பிடிக்கவில்லை. எழுந்து சென்றுவிட எண்ணினார்கள். அப்போது சம்புவரையர் பேசிய பேச்சு அவர்களது கவனத்தைக் கவர்ந்ததோடு அங்கேயே இருக்கவும் வைத்தது.

மண்டபத்தை நோட்டம் விடுவது போல் பார்த்து மௌனம் சாதித்த சம்புவரையர் அமைச்சரைப் பார்த்து "தலைநகரில் எனக்களித்த மாபெரும் வரவேற்புக்கு மகிழ்ச்சி. உங்களுக்கெல்லாம் நன்றி சொல்ல நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றார் விஷமமாக.

அவரது பேச்சில் இருந்த விஷமத்தை அறிந்த அண்ணன் பல்லவராயனுக்கு என்னவோ போலிருந்தது. சூடாகப் பேசிவிடவும் துடித்தான். ஆனால் அமைச்சர் குறுக்கிட்டு பொறுமையாகச் சொன்னார்.

"மன்னிக்க வேண்டும். நாட்டு நிலைமைகளை உத்தேசித்து ஆர்பாட்டங்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இல்லாது போனால் தங்களை இத்தலைநகரம் கோலாகலமாக வரவேற்றிருக்கும்..."

"ஆகா. இந்த ஜெயங்கொண்ட சோழமண்டலத்தானின் பேரில் பேரமைச்சர் வைத்திருக்கும் மதிப்பும் அபிமானமும் இணையற்றவை என்பது எனக்குத் தெரியாதா என்ன?" என்று மீண்டும் விஷமமாகச் சொன்னார் சம்புவரையர்.

அண்ணன் பல்லவராயன் தற்போதும் குறுக்கிட்டுப் பேச முயன்றான். இயலவில்லை. அமைச்சர் குறுக்கிட்டு, "ரொம்ப நாட்களாக நீங்கள் இங்கே வரவில்லை என்று நினைக்கிறேன்" என்றார்.

"எதற்கு வரவேண்டும் நான்? எனக்கென்ன இங்கே வேலை?" அலட்சியமாகக் கேட்டார் சம்புவரையர்.

tamilebooks.net

"சோழநாட்டின் முதுகெலும்பே ஜெயங்கொண்ட சோழ மண்டலம்தான். அதன் அதிபதியான நீங்கள் எப்படி ஒதுங்கியிருக்க முடியும்?"

"நான் அத்தனை முக்கியமானவனோ..."

"அதிலென்ன சந்தேகம்?"

"அதனால்தான் இஷ்டப்படி இங்கே ஆட்சி நடக்கிறதா?"

"சிற்றரசர் சொல்வது விளங்கவில்லை."

"இதில் விளங்காமல் போவதற்கு என்ன இருக்கிறது? இப்போது இங்கே நடப்பது ஆட்சிதானா?"

"ஏனிப்படிக் கேட்கிறீர்கள்?"

"மன்னனே இல்லாமல் இருப்பதுதான் ஆட்சியா?"

"இல்லை என்று யார் சொன்னது?"

"இருப்பதாகச் சொல்வது பொய்யாகும் போது இல்லை என்று தானே அர்த்தம்?"

"சம்புவரையரே... இங்குள்ள ஆட்சி புதிராக இருக்கலாம். ஆனால் பொய்யில்லை. அதோடு இன்னொன்று. இங்குள்ள ஆட்சியை அமைத்தது எங்களில் யாருமல்ல. அமைத்தவர் இளவரசர். அவரை நீங்கள் நம்பலாம்."

"ஆட்சியை அமைத்தவரைப் பற்றி இங்கே கேள்வி இல்லை. ஆள்பவர் யார் என்பதுதான் கேள்வி. அதைச் சொல்லுமே..."

"எனக்குத் தெரியாது."

"உமக்குத் தெரியாதா?"

"ஆம் நண்பரே... இளவரசனின் அறிவிப்பு வந்தது. அதைத் தொடர்ந்து ராஜ முத்திரை பொறிக்கப்பட்ட அரசு ஆணைகள் வருகின்றன. ஆனால் மன்னர் வரவில்லை."

"மன்னரில்லாமல் ஆணைகள் மட்டும் எப்படி வரும்? திகம்பர மந்திரவாதிகள் அனுப்புகிறார்களா?"

"எனக்கே புரியாத புதிர் நண்பரே. ஆனால் ஒன்று... ராஜ முத்திரையைக் கையாளக் கூடியவர் மன்னர் ஒருவர் மட்டும்தான். இதில் யாரும் சந்தேகப் படுவதற்கில்லை."

இதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்தார் நாராயண சம்புவரையர். அவரது முகத்தில் அவநம்பிக்கை பரிபூரணமாக நிலவியது. அதைப் பேச்சிலும் காட்ட முற்பட்ட அவர், "அந்தக் கதையெல்லாம் என்னிடம் சொல்லாதீர் பல்லவராயரே. ராஜ

tamilebooks.net

முத்திரையைக் கையாளக்கூடிய உரிமை மன்னருக்கு மட்டுமே உண்டு என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை வழக்கப் படுத்தியவர் யார்? இரண்டாம் ராசராச சோழத்தேவர். அவர் மாண்டு விட்டபின் அவர் உண்டாக்கிவைத்த இப்பழக்கமும் தொடரவேண்டும் என்று என்ன கட்டாயம் இருக்கிறது? அவரது வழக்கத்தைச் சொல்லி ராஜமுத்திரையை நீங்களே பொறிப்பதை யார் தடை செய்ய முடியும்?" என்று இரைந்தார்.

அவரது இப்பேச்சைக் கேட்டபின் அண்ணன் பல்லவராயர் மேற்கொண்டு பொறுத்திருக்க முடியாதவனாய் இடையில் குறுக்கிட்டு, "சம்புவரையரே" என்றான்.

மிகவும் சூடாகக் கேட்டு விட்டதாய் எண்ணிக் கொண்டிருந்த சம்புவரையர் சேனாதிபதி அழைத்ததுமே, அவனுக்காகத் திரும்பி, "என்ன?" என்றார் அலட்சியமாக.

"மன்னரது ஆணையொன்று இங்கே பிறப்பிக்கப்பட்டு ஒரு திங்கள் ஆகிறது" என்றான் சேனாதிபதி.

"ஓகோ. . ."

"அதிலுள்ள விதிகளின்படி தற்போதைய ஆட்சியைப் பற்றியும், ஆள்பவரைப் பற்றியும் விமர்சிப்பதும் துர்ப்பிரச்சாரம் செய்வதும் ராஜ துரோகமாகும். அதைச் செய்பவர்களுக்குக் கடும் தண்டனை உண்டு. அத்தண்டனையை விதிக்கும் உரிமை கோட்டையைக் காக்கும் எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது."

அண்ணன் பல்லவராயர் என்ன சொல்ல வருகிறார் என்பது தெளிவாகப் புரிந்தது சம்புவரையருக்கு. முகமும் கண்களும் சிவக்க எரிமலையான அவர், "ஓகோ, என்னை நீ சிறை செய்து விடுவாயோ? செய்யேன் உனக்குத் தைரியமிருந்தால்" என்றார் கடுமையான குரலில்.

"சம்புவரையரே, இவ்வளவு நேரமாக அதை நான் செய்யாததற்குக் காரணம் தைரியமில்லை என்பதால் அல்ல. உங்கள் மேல் உள்ள மரியாதையாலும், பல நாட்களாக நீங்கள் இச்சோழவள நாட்டிற்குச் செய்த சேவைகளை எண்ணிக் கொண்டிருந்தாலும்தான். இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்" என்றான் அண்ணன் பல்லவராயன்.

சம்புவரையருக்குக் கோபம் தலைக்கேறியது. "பல்லவராயா, நீ யாரோடு பேசிக் கொண்டிருக்கிறாய் தெரியுமா?" என்று மிரட்டுவதுபோல் கேட்டார்.

அண்ணன் பல்லவராயன் அசரவில்லை. "யாரிடம் பேசுகிறோம், என்ன பேசுகிறோம் என்பதெல்லாம் தெரியாம

tamilebooks.net

லேயே பேசுகிற பழக்கம் பல்லவராயர்களுக்கு இல்லை" என்றான்.

"அது மட்டுமல்ல. பேச வேண்டியவைகளையும், செய்ய வேண்டியவைகளையும் காலமறிந்து செய்வதில் பல்லவ ராயர்கள் தவறுதில்லை. இந்த உண்மை எங்களை விட தங்களுக்கே நன்றாகத் தெரியும்" என்றான் பரமேஸ்வரன்.

சம்புவரையர் அமைச்சரின் பக்கம் திரும்பினார். "என்ன பல்லவராயரே இதுதான் நீங்கள் எனக்குக் காட்டும் மரியாதையா? நேற்றுப் பிறந்தவர்கள் என்னைப் பார்த்துக் கொக்கரிப்பதுதான் உங்கள் அபிமானத்திற்கு அடையாளமா? மலையைப் பார்த்து நாய்கள் குரைப்பதால் மலை ஒன்றும் ஆகி விடுவதில்லை" என்றார்.

இதைக் கேட்டதும் காஞ்சீபுர பரமேஸ்வரன் ஆசனத்தை விட்டு எழுந்துகொண்டு, "ஏதோ இன்னொரு முறை சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"ஒரு முறையென்ன, ஓராயிரம் முறை சொல்லக் கூடியவன் நான். சாதாரண சலசலப்புகளுக்கு அஞ்சி விடுபவர்களல்ல இந்தச் சம்புவரையர்கள். . . ."

"சம்புவரையரே, எங்களையெல்லாம் நேற்றுப் பிறந்தவர்கள் என்கிறீர்கள். . . நாய் என்கிறீர்கள். அதிலிருந்தே நேற்றுப் பிறந்தவர்கள் எப்படிச் செயல்படுவார்கள் என்பது புரிந்திருக்கும். வீட்டைக் காக்கும் நாய்கள் எப்படி நடந்துகொள்ளும் என்பதும் புரிந்திருக்கும். திறமை இருக்குமானால் அதை வாயில் காட்ட வேண்டாம். வாளில் காட்டுங்கள். சோதித்து விடுவோம்."

"இந்தக் கணமே தயார். எடு உன் வாளை. ம். . ." என்று கூறி உடைவாளைப் பெயர்த்தார் சம்புவரையர்.

அந்த நேரத்தில் குறுக்கிட்ட அமைச்சர், "பொறுங்கள் சம்புவரையரே, பொறுங்கள். உங்களது வீரவாள் வெளிப்பட வேண்டிய இடம் இதுவல்ல. களம் கண்ட நீங்கள் கண்ட இடத்திலும் வாளை வீசவேண்டாம். உங்களுக்கு நான் எப்படிச் சொல்லி விளங்க வைப்பதென்றுதான் புரியவில்லை" என்றார்.

"நான் புரிய வைக்கிறேன். பல்லவராயரே, தொண்டை மண்டலம், சேதி நாடு, கொடும்பாளூர் ஆகியவற்றைக் கட்டிக் காக்கும் பல்லாயிரம் வீரர்களையும் கொண்டு வந்து நிறுத்துகிறேன். அப்போது புரிந்துவிடும்" என்றார் சம்புவரையர்.

"கடல் கடந்த நாட்டு எதிரிகளைச் சந்தித்து வென்றவர்கள் சோழர்கள். அவர்களால் உங்களது கூட்டத்தவரை இமைக்கும்

tamilebooks.net

நேரத்தில் சந்தித்து அழித்துவிட முடியும்" என்றான் பல்லவராயன் சூடாக.

"அமைச்சரே, உன் சகோதரனுக்குப் புத்தி மழுங்கியிருக்க வேண்டும். ஆகவே தான் ஏதேதோ பேசுகிறான். ஆனால் உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். என் ஜெயங் கொண்ட சோழமண்டலத்தைப் பொறுத்ததுதான் உங்கள் சோழநாடு. அதன் ஆதரவு இல்லாத பட்சத்தில் சோழநாடு இரண்டு நாட்களுக்குக்கூட நிற்காது."

"நீதி அப்படி எழுதப்படவில்லை சம்புவரையரே. உலகத்தவரைக் காக்கும் மன்னன் முறை தவறாமல் செங்கோல் செலுத்தினால் அச் செங்கோல் அவனையும் அவன் நாட்டையும் காக்கும் என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது. இங்கு நடக்கும் நல்லாட்சி உம்மைப் போன்றோரின் கண்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் சிலரது கண்களுக்குத் தெரியவில்லை என்பதால் உண்மைகள் பொய்யாகிவிடுவதில்லை. சீரழிந்து போவதுமில்லை. உங்களது தொண்டைமண்டலம் மட்டுமல்ல, இதர சோழமண்டலங்கள் ஒவ்வொன்றையும் பொறுத்துத்தான் சோழ நாட்டின் மேன்மை இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அந்த மண்டலங்களின் சக்தியானது தர்மத்தின் பேரில்தான் அளக்கப்படுமே தவிர சதியின் பேரிலும் சூழ்ச்சிகளின் பேரிலும் அளக்கப்படுவதில்ல. சம்புவரையரே, நெற்பயிர் முளைக்கும்போது புல்லும் கூடவே முளைக்கும். இரண்டிற்கும் வித்தியாசம் தெரியாது. ஆனால் அந்த ஒற்றுமை அதிக நாட்களுக்கு நீடிப்பதில்லை. புல் எது பயிர் எது என்று புலப்படத் தொடங்கியதும் பயிரைக் காப்பவன் புற்களைக் களைந்துவிடுகிறான். சோழநாட்டில் இருக்கிற மண்டலங்களில் புல் எது பயிர் எது என்று புலப்படக்கூடிய காலம் வந்துவிட்டது. எதை நீக்கி எதைக் காக்கவேண்டும் என்பதும் தெரிந்துவிட்டது. விரைவிலேயே விளைவுகள் உங்களுக்குப் புரியும். வீணாகப் பலம் பற்றிப் பேசி மிரட்ட வேண்டாம்" என்று ஆவேசமாகவும், அழுத்தம் திருத்தமாகவும் பேசி நிறுத்தினான் சேனாதிபதி.

இருவரது வாக்குவாதங்களும் மேன்மேலும் பெருகும் போல் தோன்றியதாலும் அப்படிப் பெருகுவது நல்லதல்ல என்று தீர்மானித்ததாலும் அமைச்சர் குறுக்கிட்டு, "நீ பேசாமல் இரு தம்பீ" என்று அண்ணன் பல்லவராயனிடம் கூறிவிட்டு சம்பு வரையரிடம் "நண்பரே, நீங்களும் இவனோடு பதிலுக்குப் பதில் பேசிக்கொண்டிருக்க வேண்டாம். நாளைக்கு ஆலோசனை அவையைக் கூட்டி விவாதிப்போம். அதுவரையில் அரண்மனையில் தங்கி ஓய்வெடுங்கள்" என்று சமாதானமாகப் பேசி அனுப்பி வைத்தார்.

tamilebooks.net

சம்புவரையர் சென்றபின், "தம்பி, நீ வரவர நிதானத்தை இழந்துவிடுகிறாய். இது நல்லதல்ல" என்று அண்ணன் பல்லவராயனைப் பார்த்துச் சொன்னார் அமைச்சர்.

"அண்ணா, நான் நியாயத்திற்குப் புறம்பாகப் பேசியிருந்தால் தவறுதான். தங்களை இகழ்ந்து அவர் பேசியதைக்கூட நான் பொருட்படுத்தவில்லை. நமது வீரத்தையே இகழ்வது போல் பேசியதால்தான் நானும் பேசவேண்டியதாயிற்று. வந்தது முதற்கொண்டே விபரீத தொனியில் பேசிக் கொண்டிருக்கும் அவரைத் தண்டிப்பதற்கே நமக்கு உரிமை உண்டு. நானோ வெறும் பேச்சைத்தான் உச்சரித்தேன்" என்றான் சேனாதிபதி.

"ஆம் ஐயா. அதோடு மன்னரது கட்டளைகளை விமர்சிப்பவர்களைத் தண்டிக்க உரிமைபெற்றவர் இவர். அந்த உரிமையில் அவர் பேசியது தவறில்லை" என்றான் பரமேஸ்வரன்.

"உங்களது நியாயங்களைப் பற்றி மட்டுமே பேசிப் பயனில்லை. மற்றவர்களது நியாயங்களையும் யோசித்துப் பார்க்க வேண்டும். மன்னரது கட்டளைகளை விமர்சிப்பது ராஜதுரோகமாக இருக்கலாம். ஆனால் மன்னரைப் பற்றி சம்புவரையர் போன்றவர்களுக்குச் சந்தேகம் வருவது தவறாகக் கருத முடியாது. அவரது நிலையில் யார் இருந்தாலும் சந்தேகப்பட்டு தான் ஆகவேண்டும்" என்றார் அமைச்சர்.

"எனக்கும் இந்த விஷயம் என்னவோ போல்தான் இருக்கிறதண்ணா. சம்புவரையர் கூட உங்களைச் சந்தேகிப்பதின் மூலம் நீங்கள்தான் கட்டளைகளை பிறப்பிக்கிறீர்கள் என்று எண்ணிக்கொண்டு இருந்துவிடலாம். ஆனால் நாம் எப்படி அவ்வாறு இருக்க முடியும்? உங்களுக்கும் கட்டளைகளுக்கும் சம்பந்தமில்லை என்பது பிரத்யட்சமான உண்மை. அப்படியிருக்கையில் நாம் யார் மீது சந்தேகம் கொண்டு திருப்தியடைய முடியும்?"

"நாங்கள் அனைவரும்கூட அரச கட்டளைக்குப் பணிந்து நடக்கிறோமே தவிர உள்ளுக்குள் மன்னன் யார் என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலை ரொம்ப நாட்களுக்கு நீடிக்காது என்றே தோன்றுகிறது" என்று சொன்னான் பரமேஸ்வரன்.

"ஏன் அண்ணா, உண்மையாகவே உங்களுக்கு இது விஷயமாக ஒன்றும் தெரியாதா? நம்மை ஆளும் மன்னன் யார்? நமக்கு ஆணைகளைப் பிறப்பிக்கும் மன்னன் யார்? எதுவும் தெரியாதா?" என்று கேட்டான் அண்ணன் பல்லவராயன்.

tamilebooks.net

இதைக் கேட்டதும் பெரிதும் கலங்கினார் பெரிய பல்லவராயர்.

15

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

—குறள், 200

அண்ணன் பல்லவராயன் கேட்ட சந்தேகம் பெரிய பல்லவராயருக்குக் கவலையை அளித்தது. "நீயே என்னைச் சந்தேகிப்பது மிகவும் துரதிர்ஷ்டமானதுதான் தம்பி" என்று வார்த்தைகளாலும் தன் கவலையை வெளிப்படுத்திக் கொண்டார் அவர்.

"தம்பி, நீயும் நானும் ஒரு தாய் மக்கள் என்றாலும் நாட்டைக் காக்கும் பணியில் வேறு வேறு பொறுப்பில் இருகிறோம். நமக்கு நமது உறவு பெரிதல்ல. நாட்டின் நலம் பெரிது. இதில் எனக்குத் தெரிந்தும் உனக்குத் தெரியாததுமாய் ஒரு விஷயம் இருக்கும் என்று நம்புகிறாயா? நாட்டைக் காக்க அப்படியொரு விஷயம் இருக்கும் என்பதுதான் உன் எண்ணமா?" என்று கேட்டார் அமைச்சர்.

"அண்ணா, நான் சந்தேகப்பட்டு உங்களிடம் கேட்கவில்லை. சம்புவரையர் போன்றவர்கள் செய்யும் கெடுபிடிகளைக் கண்டே கேட்கிறேன்" என்றான் சேனாதிபதி.

"சம்புவரையர் சந்தேகிப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை தம்பி. அவரது எண்ணங்களுக்கு ஏற்ப சந்தேகத்தைக் கற்பித்துக் கொள்கிறார் அவர். உருவாகிவிடும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள விரும்புபவர்களைப் போலல்லாமல் தீர்க்க முடியாத சந்தேகங்களை உருவாக்கிக் கொள்ளவே விரும்புகிறார் சம்புவரையர். எந்த ஒன்றின் ஆதாயத்திற்கோ தற்போதைய சம்பவங்களில் சந்தேகத்தைத் தூவுகிறாரே தவிர இயற்கையான சந்தேகம் அல்ல அது."

"அண்ணா, அவரது நோக்கம் தான் என்ன?"

"எதுவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். தேச பக்தியாக இருக்க முடியாது என்பதை மட்டும் நிச்சயம் சொல்ல முடியும். அவரது பேச்சில் நாட்டு நிலைமையின் பேரிலான அக்கறையைவிட நம் பேரிலான ஆத்திரமே நிறைந்திருந்ததை நீ கண்டிருக்கலாம். நாட்டை விசுவாசிக்கும்

tamilebooks.net

எவனும் வெந்த புண்ணில்வேலைப் பாய்ச்ச மாட்டான். நாட்டை மதிக்கும் எவனும் சுய கௌரவத்தைப் பெரிதாகக் கருத மாட்டான். ஒழுங்கை விரும்பும் எவனும் பிறரை அவமானப் படுத்த மாட்டான். சம்புவரையரோ இம்மூன்றையும் செய்கிறார். ஆகவே அவரிடம் நாட்டைப் பற்றிய உண்மையான அக்கறை நிச்சயம் இருக்க முடியாது."

"தம்பி, எதிரிலி பெருமாள் அரியணை ஏற மக்கள் ஆட்சேபித்தார்கள். அதிகாரிகள் முணுமுணுத்தார்கள். நாட்டில் கலகங்கள் பெருகின. பூசல்கள் வலுத்தன. இந்த நிலையில் மர்ம மன்னன் ஆட்சிக்கு வந்து ஆணைகளைப் பிறப்பித்தான். ஆணைகள் கடுமையாக வெளிப்பட்டன. அதே சமயம் நியாயமாகவும் இருந்தன. எதிரிலி பெருமாளும் அகன்றார். மக்களும் அதிகாரிகளும் கண்டார்கள். ஆட்சேபிக்கவோ முணுமுணுக்கவோ இடமின்றிப் போயிற்று. ஆள்பவன் யார் என்று தெரியாமல் போனாலும் ஆட்சியில் குறைவில்லாமல் இருந்ததை அறிந்தார்கள். வாழ்க்கை சகஜநிலைக்குத் திரும்பியது."

"இந்த சகஜ நிலை திரும்பியதைச் சம்புவரையரைப் போன்றவர்கள் எதிர்பார்க்கவில்லை. மக்களிடம் உண்டாகும் அதிருப்தியையும் சந்தேகத்தையும் நன்றாக விசிறிவிட்டு அதில் தத்தம் முடியினை உலர்த்திக் கொள்ள நினைத்தவர்களுக்கு ஏமாற்றமாய்ப் போயிற்று. நாராயண சம்புவரையர் அதிகமாகவே ஏமாந்திருக்கிறார். மக்களின் அதிருப்தியை எப்படியாவது மீண்டும் உண்டாக்கிவிட விரும்பியிருக்கிறார். அதற்கு வழி நம்மோடு மோதி தன் மீது அனுதாபத்தை மக்களிடம் உண்டாக்கிக் கொள்வதுதான் என்று தீர்மானித்தே இங்கே வந்திருக்கிறார். இத்தனை நாட்களாகத் தலையே காட்டாதவர் தற்போது காட்டுகிறார் என்றால் அதிலிருந்தே நீ புரிந்து கொண்டிருக்க வேண்டும். நீயோ புரிந்து கொள்ளாமல் அவரது பகையைப் பெரிதாக்குகிற வகையில் அவரசப்பட்டு ஏதேதோ பேசி விட்டாய். அவரது முயற்சியை எளிதாக்கி விட்டாய். இதை அவர் கண்வைத்து கால்வைத்து விஸ்வரூப மாக்கி, மக்களிடம் உலவவிடுவார். விளைவு என்னாகும் தெரியுமா? மீண்டும் அதிருப்தி வரும். அதுமட்டுமல்ல. மக்கள் நம்மை எதிர்க்கவும் தலைப்படுவார்கள். அப்படி நடந்தால் மர்ம மன்னனென்ன, உண்மை மன்னனே வந்தாலும்கூட ஒன்றும் செய்வதற்கில்லை."

"சம்புவரையரது விஸ்வரூபம் நமக்குத்தான் விரிவாகத் தெரியுமே தவிர மக்களுக்குத் தெரியாது. அதைத்தான் சதிகாரர் கள் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். மக்களின் பலவீனம் வெளிப்படும்போது சதிகாரர்களும்

tamilebooks.net

சுயநலக்காரர்களும் கொஞ்ச சாமர்த்தியத்தைக் காட்டியே வென்று விடுகிற காலம் இது. இதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் தம்பீ. சம்புவரையர் ஒரு களைப்பயிர் என்பது எனக்கு எப்போதோ தெரியும். ஆனாலும் ஏன் நீக்காமல் இருந்தேன்? காலமும் நேரமும் மக்களின் போக்கையும் உத்தேசித்து தான்.

கயவன் என்று தெரிந்தால்கூட உடனடியாக அகற்றி விடுவதென்பது அரசியலில் இயலாத ஒன்று. ஏனென்றால் கயவர்களும் அயோக்கியர்களும்தான் மக்களை அவர்களது பலவீனத்தால் எளிதில் கவர்ந்து விடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களிடம் நாம் உணர்ச்சி வசப்பட்டு பேசுவது ஆபத்தானது. பயன் தரத்தக்க சொற்களைப் பேசவேண்டும். இல்லையென்றால் பேசாமலிருந்துவிட வேண்டுமே தவிர பயனின்றிப் பேசக்கூடாது. நீ அவரோடு இத்தனைப் பேசி என்ன பயன்? அவரது சந்தேகமும் தீரப் போவதில்லை. சதியும் ஓயப் போவதில்லை. மாறாக இரண்டுமே அதிகரிக்கத்தான் போகின்றன. திருப்திதானா உனக்கு?"

பெரிய பல்லவராயர் பேசியதில் நிரம்ப உண்மை இருந்தாலும் தன் செயலில் தவறிருப்பதாக சேனாதிபதிக்குப் படாததால் "அண்ணா, தற்போதைய ஆட்சி பற்றி விமரிசிப்பவர்கள் தண்டனைக்குரியவர்கள் என்ற அரசு கட்டளையை நான் அறிவுறுத்தியது தவறா?" என்று கேட்டான்.

"அது தவறில்லை தம்பீ. கொடிய விலங்குகளைப் பிடிக்கும் உரிமை பெற்றவன் கூட அந்தந்த விலங்குகளின் தன்மைக்கு ஏற்பத்தான் வெவ்வேறு வழிகளை மேற்கொள்வானே தவிர ஒரே விதமாக நடந்துகொள்ள மாட்டான். சிக்கலான அரச கட்டளைகளை அறிவிப்பதும் நிறைவேற்றுவதும் அப்படிப்பட்டவைதான். வீதிகளில் மக்களைச் சிறைசெய்வது போல் சிற்றரசர்களைச் செய்துவிட முடியாது" என்று விளக்கிய பெரிய பல்லவராயர், "சரி, இனியாவது எச்சரிக்கையாக நடந்து கொள். நாளைக்கு அவையைக் கூட்டி ஆலோசிக்கலாம் என்று கூறியிருக்கிறேன். அதில் நீங்கள் இருவரும் கலந்துகொள்ள வேண்டாம். நானிருந்து கொண்டு ஒருவழியாகச் சமாளித்துக் கொள்கிறேன்" என்றார்.

தனக்கென்று ஒதுக்கித் தரப்பட்ட மாளிகையை அடைந்த நாராயண சம்புவரையர் அங்கே செய்து வைக்கப்பட்டிருந்த வசதிகளையெல்லாம் கண்டாரானாலும் மனத்திலென்னவோ அசதியே கொண்டார். அரண்மனையில் தன்னையே மிரட்டுவதுபோல் சேனாதிபதி அண்ணன் பல்லவராயன்

tamilebooks.net

பிரயோகித்த சொற்கள் இன்னும் அவரை உறுத்திக் கொண்டிருந்தன.

எதிரிலி பெருமாள் அரியணை ஏறுவது சம்மந்தமாகப் பல்லவராயர்களுடன் அவர் கருத்து வேறுபட்டுப் போயிருந் தாலும் இன்று போல் என்றுமே இப்படி வெளிப்படையாகவும் ஆவேசமாகவும் மோதிக்கொள்ள நேர்ந்ததில்லை. நேற்றுவரை அவருக்குள் கொதித்துக் கொண்டிருந்த சதிக்குழம்பும், பொறாமைச் சோறும் இன்று நடந்த நேரடி மோதலுக்குப் பின் பொங்கி வெளியில் வழியும் நிலைக்கு வந்துவிட்டதால் பற்களை நறநறவெனக் கடித்தபடி மஞ்சத்தில் வந்தமர்ந்தார்.

நீராட்டி, சீராட்டி, ஆலவட்டம் வீசி தேகத்தைப் பிடித்து விடவும், விரும்பும் உணவைக் கேட்டுச் சமைக்கவும் காத்திருந்த பணியாட்களை ஏறெடுத்தும் அவர் பார்க்கவில்லையாதலால் அவர்கள் ஒன்றும் புரியாமல் சிக்கித் திணறிக் கொண்டிருந் தார்கள். அரசியலில் உண்டாகும் பகையின் வேகம் எத்தகையது என்பதை அவரது நிலை தெளிவாக உணர்த்தியது.

மிக முக்கியமான மண்டலாதிபதியான தடம்கூட மர்ம மன்னனின் கட்டளையைக் கூறி மிரட்ட முடியுமானால் இந்தப் பல்லவராயர்கள் எதையும் செய்யத் துணிந்து விட்டதாகத்தான் எண்ண வேண்டும் என்று கருதிய அவர் 'நானும் சளைத்தவனல்ல' என்று கூறிக் கொண்டார். 'தானும் துணிய வேண்டியது தான்' என்று முணுமுணுத்தார்.

பெரிய பல்லவராயரை மக்கள் மதித்தாலும் அவர்கள் பயப்படுவதென்னவோ தன்னைக் கண்டுதான் என்பதை நினைவுகூர்ந்த அவர், மக்களைத் தன் வழிப்படுத்த அச்சம்தான் பயனான ஆயுதம் என்றும் கணக்குப்போட்டு அதற்கேற்ப திட்டமும் தீட்ட முனைந்தார்.

அந்த நேரத்தில் அவரிருந்த அறையில் நுழைந்தார் ஒருவர்.

அவரைக் கண்டதும் சம்புவரையரின் முகம் மேலும் சிவந்தது. "உன்னை யார் உள்ளேவிட்டது?" என்று அவரிடமே கேட்டார்.

அந்த மனிதர் இதைக் கேட்டுப் புன்னகை செய்துவிட்டு, "எனக்கு யார் அனுமதியும் தேவையில்லை அல்லவா?" என்றார்.

"ஏன்?" கேட்டார் நாராயண சம்புவரையர்.

"நான் சோழநாட்டுத் தனாதிகாரி" என்றார் அவர் இயல்பாக.

tamilebooks.net

"இது எனக்குத் தெரியாதென்பது உன் எண்ணமா?"

"பின் ஏன் கேட்டீர்கள்?"

"இது என் மாளிகை."

"ஆம்."

"இங்கு நான் இருக்கும் வரை எனக்குச் சொந்தம். தெரியுமல்லவா?"

"தெரியாமல் போகுமா?"

"அப்படியானால் அனுமதியின்றி நீ எப்படி நுழையலாம். என் மாளிகை என்று ஆகிவிட்ட பின் எவனாய் இருந்தாலும் அனுமதியில்லாமல் நுழையக்கூடாது. தெரியுமல்லவா?"

"அந்த அனுமதி எனக்கெதற்கு?"

"நீ என்ன கொம்பனா?"

"இல்லை."

"பின்?"

"உங்கள் இதயத்திலேயே நுழைந்து விட்டவன் நான்."

"இல்லை. இல்லை. நுழையவில்லை. இன்னொருமுறை அப்படிச் சொல்லாதே."

"ஏன்?"

"துரோகிகளுக்கு என் இதயக்கதவுகள் திறக்க மாட்டா."

"துரோகியா நான்?"

"ஆம்."

"துரோகி நான் என்றால் நண்பன் யார்? தியாகி யார்?"

"துரோகிகளுக்கு அது புரியாது."

"எனக்குப் புரியும்."

"சம்புவரையர்!" என்று இரைந்தார் நாராயண சம்புவரையர். பின்பு தொடர்ந்து "சம்புவரையர் குலத்தில் பிறந்துவிட்டு நீ செய்திருக்கும் துரோகத்திற்கு உன்னை இன்னும் விட்டு வைத்திருக்கிறேன் என்றால் ஏதோ போன ஜன்ம புண்ணியம் என்று எண்ணிக் கொள். வந்த வேளை நல்லவேளை என்று கருதிச் சொல்லாமல் போய்விடு. நீ செய்திருக்கும் செயலுக்கு விளக்கம் வேறு சொல்ல வேண்டுமா நான்" என்றார்.

சோழநாட்டுத் தனாதிகாரியான சோழ சம்புவரையர் இதைக் கேட்டு முன்போலவே புன்னகை செய்துவிட்டு "உண்மையில் நான் துரோகியானால் இங்கிருந்து ஓடிவிடுவேன்

tamilebooks.net

என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்? சம்புவரையர்கள் அப்படிச் செய்ய மாட்டார்களே?" என்று கேட்டார். சற்று பொறுத்த பின், "நிரூபிக்க முடியாத குற்றத்தைச் சுமத்திய பழி உங்களுக்கு வேண்டாம்" என்றார்.

விளக்கம் சொல்லும் விருப்பம் நாராயண சம்புவரையருக்கு இல்லையென்றாலும் குற்றம் சாட்டும் வெறி ஊறிக்கிடந்ததால் "ஓகோ" என்று உறுமிவிட்டு "உனக்குத் தரப்பட்ட வேலை என்ன?" என்று கேட்டார்.

"உங்களுக்கு ஒத்துழைப்பு தந்து உதவுவது" என்றார் தனாதிகாரி.

"அதற்கு அர்த்தம் இங்கே விபரீதமான மர்மவேலைகள் நடந்து கொண்டிருக்கும்போது பேசாமல் உட்கார்ந்து கொண்டிருப்பதுதானா?"

"நான் பேசாமல் அமர்ந்திருந்தேனா?"

"மர்ம மன்னன் இங்கே தோன்றியதும் அது விஷயமாக என்னிடம் ஏன் எதுவும் தெரிவிக்கவில்லை? ஏன் என்னைச் சந்திக்கவில்லை?"

"மர்ம மன்னனைப் பற்றி நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டுமா? இது விஷயமாக உங்களைச் சந்திப்பதால் என்ன சாதித்திருக்க முடியும்?"

"இங்கேயே அமர்ந்துகொண்டு என்ன சாதித்து விட்டாய்?"

"நான் இங்கிருந்து கொண்டு செய்து வந்த காரியம் என்னவென்று உங்களுக்கே தெரியும்."

"நான் ஒப்படைத்த பணி என்ன என்பதுதான் எனக்குத்தெரியும். அதை நீ செய்தாயா என்பது தெரியாது."

"நீங்கள் ஒப்படைத்த பணிதான் என்ன?"

"தலைநகரில் மக்களையும் அதிகாரிகளையும் எதிரிலி பெருமாளுக்கு எதிராகத் திருப்பச் சொல்லியிருந்தேன்."

"அதை நான் செய்யவில்லையா? மக்களும் அதிகாரிகளும் போர்க்கொடி ஏந்தியதை நீங்கள் காணவில்லையா?"

"என்ன பிரயோஜனம் அதனால்? மர்ம மன்னன் முளைத்து அனைத்தையும் அசைத்துப் போட்டுவிட்டானே. போர்க்கொடி ஏந்தியவர்கள் பெயர்ந்ததே தெரியாமல் அல்லவா அடங்கி விட்டார்கள்?"

tamilebooks.net

"இந்தச் செய்தியைச் சொல்லவா நான் உங்களைச் சந்திக்கவில்லை என்று கோபிக்கிறீர்கள்? பார்த்திபன் தான் இருக்கிறானே!"

"அது கிடக்கட்டும். நீ செய்த காரியம் பயனில்லாமல் போய்விட்டது. இந்த நிலையில் இங்கிருந்து கொண்டு என்ன பயனுள்ள காரியத்தைச் செய்தாய்?"

"அதைச் சொல்லத்தான் வந்தேன் நான்."

"சொல்."

"அதை நேரிலேயே பார்க்கலாம். என்னோடு வாருங்கள்."

நாராயண சம்புவரையரின் முகத்தில் முதல்முறையாக வியப்பு தெரிந்தது. 'இவனும் புத்திசாலித்தனமாக எதையாவது செய்திருப்பானோ?' என்று நினைத்த அவர் வார்த்தைகளால் தெரிவித்துக் கொள்ளாமல் தனாதிகாரியுடன் புறப்பட்டார்.

வழியில் தனாதிகாரியிடம், "மர்ம மன்னன் யாரென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் நாராயண சம்புவரையர்.

"அது யாராக இருந்தால் நமக்கென்ன? தங்களைத் தவிர யாராக இருந்தாலும் நமக்குத் தேவையில்லாதவர்கள்தான். ஆகவே நமது திட்டங்களில் மாற்றம் எதுவும் தேவையில்லை" என்றார் தனாதிகாரி.

"அதற்கில்லை சம்புவரையா. எனக்கு அந்தப் பெரிய பல்லவராயன் திருச்சிற்றம்பலமுடையானின் பேரில்தான் சந்தேகமாக இருக்கிறது. அவன் மிகுந்த ராஜ விசுவாசம் உடையவன். அவன் பேரில் அவனே மர்ம மன்னனாக நடந்து கொள்கிறான் என்று நினைக்கிறேன் நான். அவனாக இருந்துவிட்டால் நான் அரியணையில் அமர்வதென்பது பகற்கனவாகிவிடும். ஏனென்றால் என்னைப் பற்றி நன்றாகத் தெரிந்தவன் அவன். ஆகவேதான் சேதிநாட்டு காடவராயனையும் கொடும்பாளூரானையும் படைகளோடு தயாராக இருக்கும்படி சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்."

இதைக் கேட்டுச் சிரித்தார் சம்புவரையர். "அமைச்சரோடு போர் தொடுப்பதாக உத்தேசமா உங்களுக்கும்?" என்று கேட்டுவிட்டு, "அதற்கேன் இத்தனை நாட்களாகக் காத்திருக்க வேண்டும்?" என்று வினவினார். மேலும் தொடர்ந்து, "அந்த வேலையே வேண்டாம். மக்களை இனியொரு தலைமுறை வரை நெருங்க முடியாத விபரீதத்தில் நம்மைக் கொண்டுபோய் விட்டுவிடும் காரியம் அது. பெரிய பல்லவராயரின்பேரில் மக்களுக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு. அவரை வெளிப்படையாக பகைத்துக்கொள்வதென்பது மக்களிடம் அவநம்பிக்கையை

tamilebooks.net

வலுவில் வரவழைத்துக் கொள்வது போன்றது. நாம் சூழ்ச்சியில் இறங்கியிருப்பதே அதனால்தான்" என்றார்.

கடைசியில் "அமைச்சர் நிச்சயமாக மர்ம மன்னனல்ல. வீணாகக் குழம்ப வேண்டாம்" என்று தெரிவித்துக் கொண்டார்.

ஒரு நாழிகை பயணத்திற்குப் பின் இரு சம்புவரையர் களையும் சந்தித்தான் ஒருவன். "இவர்தான் நமக்கு உதவப் போகிறவர்" என்றார் தனாதிகாரி.

16

"யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

—குறள், 341

சம்புவரையர்கள் இருவரும் தலைநகரிலிருந்து புரவிகளில் பிரயாணம் செய்து அரசலாற்றங்கரையை அடைந்தார்கள். புரவிகளை ஆற்றங்கரை மரங்களில் கட்டிப் போட்டுவிட்டு அந்த மரங்களில் கட்டிப் போடப்பட்டிருந்த பரிசல்களில் ஒன்றை அவிழ்த்துக் கொண்டார்கள். அரசலாற்றில் கணிசமான நீர் ஓடியதாலும், ஓடிய நீரின் வேகம் அதிகமாய் இருந்ததாலும் சற்றே சிரமப்பட்டு மறுகரையை அடைந்தார்கள். அங்கே நின்றிருந்ததொரு மனிதன் இருவரையும் சந்தேகத்துடன் நோக்கினான். தனாதிகாரி தன் ஆபரண முடிப்பிலிருந்த இளம்பிள்ளைக் கபாலம் பொறித்த கழலினை எடுத்துக் காட்டியதும் அந்த மனிதன் மிகுந்த பணிவோடு அவர்களுக்கு வணக்கம் செலுத்தினான். அவர்களை வழிகாட்டி அழைத்துச் சென்றான். ஆற்றங்கரை ஓரமாகவே காடாய்த் தழைத்திருத்த புதர்களின் வழியாகவும் கணக்கற்ற மரங்களின் ஊடாகவும் சென்றார்கள். வழியில் பல பாழ்மண்டபங்களையும் அவர்கள் கண்டார்கள். ஒரு காலத்தில் சிறப்பாய்த் திகழ்ந்துச் சீரழிந்து போய்விட்டத் திருபுறம்பியத்திற்குத் தாம் வந்துவிட்டதை அறிந்த நாராயண சம்புவரையர் வியந்தார். பொழுது பகலானாலும் பார்ப்பதற்கு இரவாகவே தெரியும் அளவிற்கு இருண்டு கிடந்த அந்த வனாந்திரத்தின் கோடியில் இருந்த பாழ்மண்டபம் ஒன்றை அடைந்தார்கள். மண்டபத்தின் வடிவமே தெரியாத வகையில் காட்டுக் கொடிகள் மேலே படர்ந்து அதை ஒரு பசுமையான மலை என்றே எண்ண வைத்தது. அந்த மண்டபத்தின் வாயிலில் நின்றிருந்த இரு உருவங்களைக் கண்டதும் சந்தேகப்பட்ட நாராயண சம்புவரையர் "இவர்கள்" என்று இழுத்தார்.

tamilebooks.net

"காபாலிகர்கள்" என்று வார்த்தையை முடித்தார் தனாதிகாரி.

மரவுரியும், மண்டையோட்டு மாலையும், கட்டுப்பாடற்ற கலைந்த கூந்தலும், சூலமேந்திய கோலமுமாய் பயங்கரச் சொரூபம் கொண்டு நின்ற காபாலிகர்களைக் கண்டதுமே நாராயண சம்புவரையருக்கு ஒரு மாதிரியாகி விட்டது. "நாம் இங்கே வந்திருக்கும் இடம்..." என்று மீண்டும் சந்தேகத் தொனியில் ஆரம்பித்ததும், "காபாலிகமடம்" என்று கூறிய தனாதிகாரி, "பல்லவர்காலத்தில் பரந்திருந்து கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவலாகக் சிதறி முதலாம் குலோத்துங்கர் காலத்தில் அனாதைகளாகிவிட்ட அனைத்துக் காபாலிகர்களும் தலையெடுக்க முடியாத நிலையில் தலை மறைவாக இங்கே வாழ்கிறார்கள். இங்கே ஆங்காங்கே உள்ள பாழ்மண்டபங் களிலும் நிலவறைகளிலும் உள்ள காபாலிகர்களைச் சேர்த்தால் ஒரு படையையே நடத்தலாம்" என்று மேலும் கூறிக்கொண்டே உள்ளே நுழைந்து அங்கே மர ஆசனத்தில் இருந்த பேர்வழி ஒருவனைச் சுட்டிக்காட்டி "இவர்தான் நமக்கு உதவப் போகிறவர். காபாலிகரின் பிரதான தலைவர் ருத்திரக் காபாலிகர்..." என்றார்.

அவர் சுட்டிக் காட்டிய இடத்தைச் சுற்றிலும் ஒரே துர்நாற்றமாய் இருந்தது. ருத்திரக் காபாலிகரின் எதிரிலேயே பலிபீடம் இருந்தது. அதைச் சுற்றிச் சிதறிக்கிடந்த எலும்புகளும், அழுகிய தோள்களும், சதைப் பற்றுகளும், ரோமக்குப்பைகளும் அந்தத் துர்நாற்றத்தின் மூலகாரணங்களாய் பறைச்சாற்றிக் கொண்டிருந்தன. அத்தனைத் துர்நாற்றத்தின் இடையிலும் நிஷ்டையில் அமர்ந்திருந்த ருத்திரக் காபாலிகரைக் கண்ட நாராயண சம்புவரையருக்கு "உண்மையில் இது நிஷ்டை தானா?" என்றும் "இந்த இடத்தில் கூட தியானம் செய்ய முடியுமா?" என்றெல்லாம் சந்தேகம் எழுந்தது. அந்த இடத்தை விட்டு வெளியே வந்தார்.

"இமைக்கும் நேரத்தில் எண்ணி விடக்கூடிய சொற்ப எண்ணிக்கை உடைய இந்த அற்பக் காபாலிகர்களால் நமது சிக்கலான அரசியல் காரியத்தில் என்ன சாதித்து விட முடியும் சம்புவரையா?" என்று வினவினார் நாராயண சம்புவரையர்.

"ஐயா, மதம் தலையிடாத அரசியலோ அல்லது அரசியல் தலையிடாத மதமோ எங்கிருக்கிறது சொல்லுங்கள். மதங்கள் அரசியலை மட்டுமல்ல, ஆட்சியையே ஆட்டிப் படைக்கும் நிலைகூட தூரத்து நாடுகளில் நிலவுகின்றது. இந்த அடிப் படையில் தான் காபாலிகர்கள் நமது அரசியல் காய்களாக

tamilebooks.net

அமையப் போகிறார்கள். செல்வாக்கு இழந்து கிடக்கும் இவர்களுக்கு ஆசை காட்டி வைத்திருக்கிறேன். இழந்த செல்வாக்கைப் பெறுவதில் இக்காபாலிகர்கள் துடிப்பாய் இருக்கிறார்கள். அத்துடிப்பில் எதையும் செய்யத் தயாராகவும் இருக்கிறார்கள். இதில் நமக்குத் தோல்வி இல்லை."

நாராயண சம்பூவரையருக்கு நம்பிக்கை இல்லை. "காட்டுமிராண்டித் தனமான நாகரீகம் கொண்ட இவர்களா அரசியல் நிலைமையை மாற்றியமைத்துவிடப் போகிறார்கள்?" என்று எண்ணினார் அவர். அதைத் தனாதிகாரியிடம் கேட்க முற்பட்டபோது ருத்திரக் காபாலிகர் நிஷ்டையிலிருந்து விடுபட்டாராதலால் பேசாமல் நிறுத்திக்கொண்டார்.

ருத்திரக் காபாலிகரின் நிஷ்டை கலைந்ததுமே அருகிலிருந்து காபாலிகர்கள் சாம்பிராணிப் புகையினை எழுப்பினார்கள். மாமிசங்களின் துர்நாற்றத்திலிருந்து கொண்டு சாம்பிராணி கொளுத்திப் புகைத்தது சம்புவரையருக்கு வியப்பாக இருந்தது. அதுமட்டுமல்ல. அந்த நிஷ்டாபதிக்கு இதர காபாலிகர்கள் காட்டிய உபசாரங்களும் மரியாதைகளும் கூட வேடிக்கையாக இருந்தன. சாம்பிராணி புகையை அடுத்து மெல்லிய தாரைகளும் மேளங்களும் முழங்கின. சில காபாலிகர்கள் பாலிமொழியில் கர்ண கொடூரமான குரலில் துதிப்பாடல்களைப் பாடினார்கள். சிலர் தாண்டவ மாடினார்கள். அதையுமடுத்துப் பலர் உடற் பயிற்சியும் வாட் பயிற்சியும் செய்து காட்டினார்கள். பிறகு பலிபீடத்தில் மான்குட்டி ஒன்று கொண்டு வரப்பட்டு பலி கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்பே வாயைத் திறந்து பேசினார் ருத்திரக் காபாலிகர்.

கெட்டுப்போன தொண்டையில் கிழச்சிங்கம் உறுமுவது போல் பேசிய அவருக்கு நாராயண சம்புவரையரைப் பாலி மொழியிலேயே அறிமுகம் செய்தார் தனாதிகாரி. இன்னாரெனத் தெரிந்ததுமே ஆசனத்தை விட்டு எழுந்து வந்து நாராயண சம்புவரையரின் கைகளைப் பிடித்துக்கொண்டார் மதத் தலைவர்.

நாராயண சம்புவரையருக்கு ஏதோ கரிய கரடி யொன்றினிடம் சிக்கிவிட்ட மாதிரி தோன்றவே அவசரம் அவசரமாகக் கைகளை விடுவிடுத்துக்கொண்டு தனாதிகாரி யிடம், "சற்று தொலையில் போய் பேசலாம் சம்புவரையா இங்கே இன்னும் நின்று கொண்டிருந்தால் வாந்தியே வந்துவிடும் போலிருக்கிறது" என்று கூறி வெளியில் வந்தார்.

மூவரும் மண்டபத்திற்கு அருகிலிருந்த மல்லிகைப் பந்தலில் அமர்ந்தார்கள். அங்கே காட்டு மல்லிகைப் பூக்கள் கணக்கற்று

tamilebooks.net

பூத்துக் குலுங்கினாலும் காபாலிகத் தலைவர் கூடவே இருந்ததாலோ என்னவோ... ஏதோ பட்டுமெத்தையில் பூதம் அமர்ந்தாற்போல் பொறுத்தமற்ற கூட்டாக இருந்ததால் எரிச்சலடைந்த ஜெயங்கொண்ட சோழமண்டலத்து அதிபதி "இவர் செய்யப் போவது என்ன?" என்று தனாதிகாரியிடம் கேட்க, அவர் காபாலிகரைக் கேட்க அந்தக் காபாலிகர் பாலி மொழியில் சொன்னார்.

"என்ன சொல்கிறார் இவர்?" அவசரமாகக் கேட்டார் நாராயண சம்புவரையர்.

தனாதிகாரி சற்றுத் தயங்கிட்டு "முதலில் எல்லோரும் மொட்டையடித்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

சம்புவரையருக்குக் கோபம் வந்து விட்டது. "சாம்புவரையா, நீயென்ன விளையாடுகிறாயா?" என்று கடுகடுத்தார்.

"நம்மைச் சொல்லவில்லை. நாம் மொட்டையடித்துக் கொள்ள வேண்டியதில்லை. காபாலிகர்கள் தான் அடித்துக் கொள்ளப் போகிறார்கள். அதைத்தான் சொல்கிறார் இவர்..." என்றார் தனாதிகாரி.

சம்புவரையருக்குக் கோபம் அதிகமாகி விட்டது. "காபாலிகர்களை மொட்டையடிப்பதுதான் இத்தனை நாட்களாக இருந்து நீ தீட்டிய திட்டமா? இவர்கள் மொட்டை யடித்துக் கொண்டால் அரசியல் நிலைமை தலைகீழாகிவிடுமா? இதென்ன உளறல்? இதுவா உன் சாதனை?" என்று சீறினார்.

"நாராயணர் அவரசப்படக்கூடாது" என்றால் ருத்திரக்கபாலிகர்.

அவர் தமிழில் இப்படிப் பேசியதும் இருவருமே வியந்தார்கள்.

அதைக் கண்ட காபாலிகர், "எனக்குத் தமிழ் தெரியும். ஆரியம் தெரியும். கிரேக்க பாஷையும் யவனர் மொழியும் தெரியும். பலமொழிகளைத் தெரியாதவன் தலைவனாக முடியாது..." என்றார்.

"இத்தனை நாட்களாக ஏன் தமிழில் பேசவில்லை?" என்று கேட்டார் தனாதிகாரி.

"நீங்களே என்னிடம் தமிழில் பேசவில்லையே. பாலி மொழியில்தானே பேசினீர்கள்!" என்று வினவினார் காபாலிகர்.

"இங்கே இருப்பவர்கள் தமிழ் தெரியாதவர்கள் என்று கேள்விப்பட்டேன்" என்றார் தனாதிகாரி.

tamilebooks.net

"கேள்விப்படுவது வேறு. உண்மை வேறு அல்லவா? சம்புவரையரே, நீர் கேள்விப்பட்டது முழுக்கமுழுக்க உண்மையுமல்ல. பொய்யுமல்ல. என்னையும் ஒரு சிலரையும் தவிர மற்றவர்களுக்குத் தமிழ் தெரியாதுதான். . . தமிழிலேயே பேசுவோம்" என்று கூறிவிட்டு நாராயண சம்புவரையரைப் பார்த்து, "நான் கூறியது உண்மைதான். இங்கிருக்கும் காபாலிகர்கள் அனைவரும் மொட்டையடித்துக் கொள்ள வேண்டியது முதல் காரியம்" என்றார்.

"அடுத்த காரியம் யாத்திரைக்குப் புறப்பட வேண்டியது தானா?" என்று எரிச்சலோடு கேட்டார் நாராயண சம்புவரையர்.

காபாலிகர் அசரவில்லை. "ஒரு வகையில் நீங்கள் சொல்வது உண்மைதான். இங்கிருந்து ஒட்டு மொத்தமாகக் கிளம்புவது யாத்திரை மாதிரிதான்" என்றார்.

"சோழ சம்புவரையர் அரசியல் நிலைமைகளை விளக்கியிருப்பான் என்று நினைக்கிறேன். அரசியல் பரிகாரம் கோரி பேசியிருப்பான் என்று கருதுகிறேன். ராஜாங்க சம்மந்தமாக உதவி கேட்டிருப்பான் என்று நம்புகிறேன்" என்றார் நாராயண சம்புவரையர் - ஒருவேளை காபாலிகர் சம்மந்தமில்லாமல் பேசிக்கொண்டிருக்கிறாரோ என்றெண்ணி.

"அது விஷயமாகத்தான் பேச வந்திருக்கிறேன்" என்றார் காபாலிகர்.

"சோழ நாட்டு அரசியலை மாற்றுவதற்கும், நீங்கள் மொட்டையடித்துக் கொள்வதற்கும் என்ன சம்மந்தம்?" அறைவது போல் கேட்டார் நாராயணர்.

"அதில்லை. சுவமாதித்தேவர் ஒரு விரதத்தை மேற்கொள்கிறார்" என்றார் காபாலிகர்.

"இதுவும் சம்மந்தமில்லாத விஷயம்தான்."

"அதாவது அந்த சிரேஷ்டர் விரதம் மேற்கொள்ளப் போவது சாதாரண காரணத்திற்காக அல்ல. சோழ நாட்டுமக்களின் சுபிட்சத்திற்காகவும், சோழ நாட்டைப் பீடிக்கும் சனியாக வந்து முளைக்கவிருக்கும் சிங்களத்து நாசத்தை விலக்கவும் தான். . ."

"இதையெல்லாம் யாரய்யா உம்மை கேட்டது? யாரோ ஒரு சாமியார் விரதமிருந்து விட்டால் நாடு தாக்கப்பட்டுவிடுமா? எங்களைப் போன்ற அனுபவசாலிகளே திணறுகிறவகையில் பூசல்கள் உண்டாகியிருக்கும்போது ஒரு சாமியார் விரதமிருந்து நீங்களெல்லாம் மொட்டையடித்துக் கொண்டால்

tamilebooks.net

போதுமா?"** என்று கேட்ட அவர் தனாதிகாரியின் பக்கம் திரும்பி, "என்ன சம்புவரையா, இதுதான் நீ தீட்டிய அரிய திட்டமா?" என்று அருவெருப்புடன் கேட்டார்.

"திட்டம் அதுவல்ல ஐயா, தலைநகரில் சுவாமித்தேவர் தொடங்கப் போகும் விரதத்தையொட்டி அவருக்கு ஆதரவு தரும் வகையில் நமது காபாலிக நண்பர்கள் மொட்டையடித்துக் கொண்டு சைவ அடியார்கள் போலவும், வைணவ அடியார்கள் போலவும், புத்த—ஜைன அடிகளாரைப் போலவும் தலை நகருக்குப் போவார்கள். விரதம் மேற்கொள்ளும் சிரேஷ்டருக்கு ஆதரவாக அன்னதானம் போன்ற அறச் செயல்களைச் செய்யும் இவர்களுக்கு அங்கே பெருமதிப்பு இருக்கும். விசேஷ மரியாதை களும் சலுகைகளும் கிடைக்கும். அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு முக்கியமான கேந்திரங்களைத் தலைநகரில் பிடித்துக் கொண்டு திடீரென ஒருநாள் நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்வார்கள். அதே நேரத்தில் பல்லவராயர்கள் உட்பட பலரும் மாளிகைகளில் எதிர்பாராத விதத்தில் சிறையாவார்கள். மர்ம மன்னனின் ஆணைகளாக அவை பறைகொட்டி மக்களுக்குத் தெரிவிக்கப் படும். அக்குழப்பம் சிங்களவர் படையெடுப்பின் முன்னால் திசை திருப்பப்படும். சம்புவரையர் ஆட்சிப் பொறுப்பேற்பார். சிங்களத்தவரை எதிர்க்கும் ஆயத்தங்கள் செய்யப்படும். அந்த ஆயத்தங்களில் மக்களின் மூளைகளை மெழுகிவிடலாம்" என்றார் தனாதிகாரி.

நாராயண சம்புவரையர் உடனடியாக எதுவும் பேசவில்லை. சிந்தனையில் ஆழ்ந்தார். தனாதிகாரியின் திட்டம் மிகவும் பயங்கரமாக இருந்தது. அதே சமயம் துணிகரமானதாகவும் இருந்தது. இப்படியொரு திட்டத்தை முற்றிலும் அவர் எதிர்பார்க்கவில்லை.

அவர் பேசுவதற்குள் குறுக்கிட்டுப் பேசினார் கபாலிகர்.

** தட்சிணலாடத்தில் பிறந்தவரான சுவாமித்தேவர் என்பவரிடம் இலங்கைப் படையினர் இராமேஸ் வரத்தில் நடத்திய அக்கிரமங்களுக்கு என்னசெய்வதென கேட்கப்பட்டபோது இலங்கைப் படையினரைச் சில விரோதிகளாகக் கருதிய அவர் அவர்களது அக்கிர மங்களை ஒரு முடிவிற்குக் கொண்டுவரும் பொருட்டுப் பூசையொன்றை 28 நாட்களுக்கு நடத்தினர்.

—ஆரப்பாக்கம் கல்வெட்டுச் செய்திகளாய் இவற்றைத் தன் நூலில் திரு நீலகண்ட சாஸ்திரிகள் குறிப்பிட்டுள்ளார்.

—பக்கம் 368.

tamilebooks.net

"எந்தெந்த பொருள்களின் மீதுள்ள ஆசையை விலக்கிக் கொள்கிறோமோ அந்தந்த பொருள்களினால் வரக்கூடிய கஷ்டங்களிலிருந்தும் நாம் விலகிக் கொள்வது போலத்தான் நாங்களும் எங்கள் மதத்தின் பேரிலும் சம்பிரதாயங்களின் பேரிலும் உள்ள ஆசைகளை உங்கள் பொருட்டுத் தியாகம் செய்கிறோம். எங்கள் சிகையை நீக்கி வேடம் தரிப்பதால் நாங்கள் அனைவரும் "வெறுக்கும் காபாலிகர்கள்" என்ற அவப் பெயரிலிருந்து தப்புகிறோம் என்பதும் உண்மைதான். ஆனால் புது ஆபத்தில் சிக்கிக் கொள்கிறோம் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது."

நரபலியிடும் காபாலிகர் ஆசையை விட்டுவிட்டதாகப் பேசியது விந்தையாக இருந்தது நாராயண சம்புவரையருக்கு. அக்காபாலிகரின் பேச்சில் நிரம்ப முரண்பாடுகள் இருந்ததையும் கவனிக்கவே செய்தார் அவர். காபாலிகர் போடும் பீடிகை எதற்கு என்பதும் அவருக்குப் புரிந்தது. ஆனாலும் அதைப் பற்றி பிரஸ்தாபிக்காமல் திட்டம் பற்றிய தன் சந்தேகத்தைக் கேட்கலானார்.

17

"எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே செய்தற்கு அரிய செயல்"

—குறள், 490

"திடீரென ஆயிரக்கணக்கில் காபாலிகர்கள் மொட்டை யடித்துக்கொண்டு கங்கைகொண்ட சோழபுரத்தில் பிரவேசித் தால் சந்தேகம் உண்டாகாதா?" என்று கேட்டார் நாராயண சம்புவரையர்.

"உண்டாகாது" என்று அழுத்தம்திருத்தமாகக் கூறிய தனாதிகாரி, "நாட்டு சுபிட்சத்திற்காக மேற்கொள்ளப்படும் விரதம் இது. மேற்கொள்ளும் மனிதரோ ராஜ விசுவாசி. அவருக்கு ஆதரவு திரட்ட எத்தனை பேர் திரண்டாலும் மக்கள் சந்திக்கவே விரும்புவார்களே தவிர சந்தேகிக்க மாட்டார்கள். அதோடு காபாலிகர்களென்றும் படைபோல் திரண்டு தலை நகரில் பிரவேசிக்கப் போவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாய் சாதுரியமாகவே செல்வார்கள். செல்லும் அவர்கள் முதல் முதலில் அறச் செயல்களிதான் ஈடுபடப் போகிறார்கள். மிகவும் பொறுத்தமாக அமையுமே தவிர சந்தேகத்தை விளைவிக்காது. அரசியலில் சதிசெய்ய நினைக்கிறவர்களின் போர்வை அறச் செயல்கள்தான்."

tamilebooks.net

"அதைப் போர்த்திச் செயல்பட்டவர்கள் பெரும்பாலும் தோற்றதில்லை" என்றார்.

ருத்திரக் காபாலிகர் குறுக்கிட்டு, 'இப்படி அறச் செயல்களில் ஈடுபட்டு, மக்களின் ஆதரவையும் மதிப்பையும் பெறும் காபாலிகர்கள் அவர்களாலேயே முக்கிய கேந்திரங் களுக்கு அனுப்பப்படுவார்கள். அரசாங்கத்தினரும் அதற்கு இடம் கொடுத்தே ஆக வேண்டும். அவ்வாறு முயன்று முக்கிய இடங்களைப் பிடித்துக்கொண்டு அவர்கள் சாமர்த்தியமாகச் செயல்படுவார்கள்.

பல்லவராயர்கள் முதலானோர் பேரில் மக்களிடம் சிறுகச் சிறுக நஞ்சைத் தூவி குறிப்பிட்ட ஒருநாளில் நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்வார்கள். பல்லவராயர்களும் மற்றவர்களும் இரவோடு இரவாக அவரவர்களது மாளிகைகளில் சிறை செய்யப்படுவார்கள். அச்செயல்கள் மர்மமன்னனின் ஆணைகளாய்ப் பறைச் சாற்றப்படும். அதே சமயம் சிங்களப் பண்டையெடுப்பு பற்றியும் சோழ நாட்டிற்கு உருவாகும் ஆபத்து பற்றியும் பிரஸ்தாபிக்கப்படும். அந்த நிலையில் சம்புவரையர்களான நீங்கள் இருவரும் நாட்டைக் காக்கும் பொறுப்பேற்று தண்டநாயகர்களாகப் பொறுப்பேற்பீர்கள். சிங்களத்தவரை முறியடிக்கும் திட்டங்களைத் தீட்டுவீர்கள். மக்களிடம் நிலவும் குழப்பம் குறைந்து கவனம் உங்கள் மீது திரும்பும். சிங்களவரின் செயல்களுக்குச் சிறைப்பட்டிருக்கும் பல்லவராயர் முதலானவர்களின் பேரில் பழி சுமத்தப்படும். இதற்கிடையில் மர்ம மன்னன் மாண்டு விட்டதாகச் செய்தியைக் கிளப்பி எவனோ ஒருவனது பிணத்தைக் காட்டி நாடகமாடி விட்டால் மர்ம மன்னனின் சகாப்தம் முடிவடையும். மர்ம மன்னன் உண்மையாகவே வெளிப்பட்டால்கூட மக்கள் நம்ப மாட்டார்கள்.

தன்னை மர்மமாக வைத்துக் கொண்டு மக்களைப் பைத்தியக்காரர்களாக்கிய மர்ம மன்னனை மக்களைக் கொண்டே பைத்தியக்காரனாக்கி விடலாம். நீங்களும் அவ்வப் போது மக்களின் பேரில் அக்கறை காட்டிக் கொண்டிருந்தால் உங்கள் மீது அவர்களுக்குப் பிரேமை உண்டாகிவிடும். நீங்கள் அரியணை ஏறுவதில் சிரமமிருக்காது" என்று கூறிவிட்டு, "இந்த விஷயங்கள் ஒவ்வொன்றையும் ரொம்ப ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். சற்றுத் தவறினாலும் படுபாதாளத்தில் விழ வேண்டியதுதான்" என்றார்.

நாராயண சம்புவரையர் தற்போது ரொம்பவும் திருப்தியடைந்தவராகக் காணப்பட்டார். அவரது மனத்தில்

tamilebooks.net

கனவுலகம் விரிந்தது. மர்ம மன்னன் முளைத்து மண்ணைப் போட்டு விட்டத் தற்போதைய நிலையில் இதைவிடச் சிறந்த திட்டம் வேறு இருக்க முடியாது என்று தீர்மானித்த அவர் திட்டத்தை அங்கீகரித்தார். இரண்டு நாட்களுக்கு அங்கேயே இருந்து காபாலிகர்களுக்கு நடந்த சிட்சைகளைக் கவனித்தார். திட்டங்கள் அக்கக்காக அலசப்பட்டன. பிறகு இரு சம்புவரையர்களும் தலைநகருக்குத் திரும்பினார்கள்.

வழியில் வினவினார் நாராயணர்:

"சம்புவரையா, இந்தக் காபாலிகரை நம்பிக் காரியத்தில் இறங்கலாமா?"

"ஏனிப்படி கேட்கிறீர்கள்?"

"இவர்கள் உண்மையிலேயே நமது திட்டத்திற்கு உதவுவார்களா?"

"அதில் சந்தேகமே வேண்டியதில்லை. ஏனென்றால் நமது வெற்றியில்தான் அவர்களுக்கு ஆதாயமே இருக்கிறது."

"என்ன ஆதாயம்?"

"அவர்களது மதத்தைப் பிரதான மதமாக அங்கீகரிப் பதாகவும் சலுகைகள் பலவற்றை அளிப்பதாகவும் வாக்களித் திருக்கிறேன். அவற்றைப்பெற அவர்கள் உதவியே ஆகவேண்டும். ஆட்சி கிடைக்கட்டும். எல்லா காபாலிகப் பெருச்சாலிகளையும் நாய்களைப் போல் அடித்துக் கொன்று விடுகிறேன்."

இருவரும் தலைநகரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது நாராயண சம்பவரையர் சொன்னார்:

"சம்புவரையா, நாம் இருவருமாகச் சேர்ந்து போக வேண்டாம், நீ பிரிந்து தனியாகப் போ. கோட்டைக்குள் நமது வீரர்களைத் தயாராக வைத்திரு. பல்லவராயன் அழைத்திருக்கும் மந்திராலோசனைக்குப் பெயருக்குப் போய் நல்லபிள்ளையாக நடித்துவிட்டுக் காஞ்சிபுரம் திரும்புகிறேன். பிறகு இங்கே விரதம் தொடங்கியபின் நம் திட்டத்தைத் தொடங்குவோம்."

இருவரும் பிரிந்தார்கள். ஆனாலும் இருவரது மனநிலை மட்டும் ஒன்றாகவே இருந்தது. அடுத்த அல்லது அதற்கடுத்த அல்லது அதற்கும் அடுத்த பௌர்ணமி நாளில் சோழர் ஆட்சி தங்கள் கைகளுக்கு வருவது நிச்சயம் என்று எண்ணிக் குதூகலித்தார்கள்.

tamilebooks.net

ஆனால் இப்படியெல்லாம் பூரித்துவிட்ட நாராயண சம்புவரையர் தலைநகருக்கு வெகு சமீபத்திற்குப் போனபின் பேரதிர்ச்சி அடைய வேண்டியவரானார்.

தலைநகருக்கு சமீபத்தில் வியர்க்க விறுவிறுக்க அவரை எதிர்கொண்ட பார்த்திபன் பதட்டத்துடன் அவரை நெருங்கி, "ஐயா நில்லுங்கள். தலை நகருக்குள் நுழைய வேண்டாம். திரும்புங்கள்"என்றான்.

வேறு யாராவது இப்படிக் கூறியிருந்தால் அவர் பொருட்படுத்தியிருக்க மாட்டார். ஆனால் கூறியவன் பார்த்திபன் என்றாலும் அவன் சொல்வது உண்மையாகவே இருந்து வந்ததாலும் தற்போது சற்று நிதானித்த அவர் "ஏன் நுழைய வேண்டாம் என்கிறாய்?" என்றார்.

பதிலுக்கு இடியை எடுத்து வீசினான் பார்த்திபன் "தங்களைச் சிறைசெய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன."

"சம்புவரையர் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனார். பிறகு "இது யார் செய்யும் ஏற்பாடு?" என்று கடுமையான குரலில் கேட்டார்.

"அமைச்சரது ஏற்பாடாகத்தான் இருக்கவேண்டும்."

"நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது. இந்தப் பல்லவராயன் தான் மர்மமன்னன்" என்று முணுமுணுத்த சம்புவரையர் "டேய் பல்லவராயா உன் திறமையை என்னிடமா காட்டுகிறாய்? இரு இரு இரண்டே திங்களில் உன்னை இருட்டறையில் தள்ளுகிறேன்" என்று இரைந்துவிட்டு, "அப்படியானால் நான் காஞ்சிக்கே திரும்பிவிட வேண்டியதுதான் என்றுச் சொல்லாமல் சொல்கிறானா அவன்?" என்று கேட்டார்.

"ஐயா, தாங்கள் காஞ்சிக்கும் செல்வதற்கில்லை."

"ஏன்?"

"சென்று பயனில்லை"

"அதுதான் ஏன்"

"தங்கள் பதவி பறிக்கப்பட்டு விட்டது."

"என்ன?"

அதள பதாளத்தில் விழுந்தது போலிருந்தது அவருக்கு.

"உண்மைதான் ஐயா. தங்களது பதவியைப் பறித்து காஞ்சீபுரம் பரமேஸ்வரனுக்கு அளித்திருக்கிறார்கள். அங்கே

tamilebooks.net

உள்ள படைகள் எந்த எதிர்ப்பையும் சமாளிக்க ஆயத்தப்படுத்தப் படுகின்றன" என்றான் பார்த்திபன்.

சம்புவரையர் ஏன் எதற்கு என்றெல்லாம் அவனைக் கேட்கவில்லை. மிதமிஞ்சிய விதத்தில் காரியங்கள் நடக்கின்றன என்பது தெளிவாகப் புரிந்ததால் ஆழ்ந்த யோசனையில் வீழ்ந்தார் அவர். ஆகாச கோட்டைகட்டிய வேளையில் அடியில் இருந்த மண்ணும் பெயர்ந்தாற்போல் மோசம் போய்விட்டதை உணர்ந்தார். பல்லவராயரின் செயல் வேகம் மின்னல் வேகமாயும் அதிலுள்ள கடுமை இடியைவிட மோசமாயும் இருந்ததை அறிந்த அவர் பார்த்திபனை அழைத்து அவனது காதில் எதையோ கூறிவிட்டு, "நீ உடனடியாக ருத்திரக் காபாலிகரைச் சந்தித்து நான் சொன்ன செய்தியைக் கூறிவிட்டு கொடும்பாளூருக்கு வந்து சேர். நானிப்போது அங்கே போகிறேன்" என்று மேலும் சொல்லிவிட்டுப் புரவியைத் திருப்பிச் செலுத்தினார்.

ஃஃ ஃஃ ஃஃ

வானைத் தொட்டு வட்ட நிலவுடன் உறவாடுவது போல் உயர்ந்திருந்த அந்த அரண்மனை விதானத்தின் உச்சியில் எரிந்த விளக்கு மதுரை மாநகர் முழுதிற்கும் அடையாளம் காட்டுவது போல் அமைந்திருந்தது மட்டுமின்றிப் பூண்டோடு அழித்துவிடவிருந்தச் சிங்களத்துத் தண்ட நாயகனைப் பார்த்துச் சிரிப்பது போலவும் தோன்றியது. வையை ஆற்றின் கரையில் அமைந்திருந்த பேரரண்மனையின் அப்பெரிய விதானத்தின் மேல் கட்டில் கொற்கை முத்துக்கள் பதித்த கட்டிலில் பொற்சிலை போல் அமர்ந்திருந்தாள் பாண்டிமாதேவி.

முத்துக்கள் ஒளிராது போனாலும் தன் முகத்தில் என்றுமே புன்னகையை ஒளிக்காதவளான அவ்வரசியின் முகம் இன்று மாறுபட்டுப்போய்ப் பழுப்பேறிய தங்கம்போல் மங்கிக் கிடந்தது.

உச்சி நேர இரவில் அந்த உச்சி விதானத்தில் நச்சி வந்து வீசிய காற்று முடிந்த மட்டும் அவளை மகிழ்விக்க முயன்றும் முடியாமல் போனதால் விதானச் சுவற்றைத் தழுவிக் கிடந்த காஞ்சி மரங்களில் மோதிப் பேரிரைச்சல் போட்டுக்கொண்டிருந்தது.

மாலை முகிழ்த்து விட்டால் மங்கல வாத்தியங்களை மீட்டி மகிழ்விப்பதையே வேலையாகக் கொண்டிருந்த கூடல் தேவரடியார்கள் கூட வேண்டாமென அரசியால் விலக்கப் பட்டிருந்தார்களாதாலால் அந்தி மாலை முதல் அந்தகாரம் பூத்து முற்றியது வரை சோபையற்றுக் கிடந்தது விதானம். நிலவு

tamilebooks.net

வானில் வந்த வேளையில் விதானத்திற்கு வந்திருந்தாள் தேவி. ஆனால் அவள் முகம் நிலவாய் ஒளிரவில்லை. இருளாய்க் கறுத்திருந்தது. நேரம் வளர வளர வானத்துக் கோலங்கள் அதிக அழகைக் காட்டின. அவளது முகத்திலோ அழகுக்களை மங்கிக் கொண்டு வந்தது.

இந்த நேரத்தில் உள்ளே நுழைந்த சேவடி ஒருத்தி; "மன்னர் வருகிறார் அம்மா..." என விருட்டென்று கூறிவிட்டு ஓடினாள்.

மன்னன் வருகிறானென்றால் மேகத்தின் பின்னாலிருந்து வெளிப்படும் நிலவுபோல் அறைக்குள்ளிலிருந்து வெளிப்பட்டு முகம் மலர நின்று வாய் நிறைய உபசரித்து மன்னனை உள்ளே அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்த பாண்டிமாதேவி தற்போது நிலை பெயராமல் சிலைபோலவே அமர்ந்திருந்தாள்.

மதுரை மாநகரைப் பெற்று விட்ட வெற்றிப் பெருமிதத்தில் நகரின் நாலாபக்கங்களுக்கும் சென்று நானாவிதமக்களைச் சந்திப்பதிலும் அளவளாவி மகிழ்விப்பதிலும் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தவனும் அம்மதுரை மாநகரின் தற்போதைய மன்னனுமான குலசேகர பாண்டியன் அந்தப் புரத்தின் பக்கமே அதிகம் வராதிருந்து இன்றுதான் வந்து கொண்டிருந்தானாதலால் தேவி ஊடலில் இருப்பாள் என்று எதிர்பார்க்கவே செய்தான். அதற்கேற்றாற் போலவே தேவியும் வாயிலுக்கு வந்து வரவேற்காததோடு மஞ்சத்திலும் முகத்தைத் திருப்பியவாறு அமர்ந்திருந்தாள்.

உள்ளே நுழைந்த மன்னன், "இதென்ன தேவி, ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? எரியும் தீபமாய் வாசலில் நின்று வரவேற்க வேண்டிய நீ அணைந்த விளக்குபோல் இருப்பதேன்? பாண்டிய நாடும் மக்களும் என் வெற்றியினைப் பாடிப்பரந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நீ சோகச் சிலையாய் அமர்ந்திருக்கிறாயே! இதென்ன கோலம் உனக்கும் ஒரு கவலையா?" என்று வினவினான்.

"எனக்கென்று கவலை எதுவும் இருக்காதா?" என்று கேட்டாள் தேவி.

"உன்னை மணந்த நாள் தொட்டு இன்று வரை நீ கவலைப்பட்டதாக நான் கண்டதில்லை தேவி"

"இப்போது நான் கவலைப்படுகிறேன் பிரபு. வேதனையே படுகிறேன்.'

"வெற்றியலைகள் வானுயர எதிரொலிக்கும் இந்த நேரத்திலா உனக்கு வேதனை?"

tamilebooks.net

"பிரபு, உண்மையிலேயே மகிழவேண்டிய வெற்றி தானா இது?"

"இதென்ன இப்படிக் கேட்கிறாய்? மதுரையின் ஆட்சி பீடத்தைக் காப்பற்றுவதும் அதில் அமருவதும் சாதாரண விஷயங்கள் என்றா நினைக்கிறாய்? இச்சம்பவம் பாண்டியர் பரம்பரைக்கே ஒரு பொற்காலம்."

"இல்லை பிரபு. இது நிச்சயமாக நமக்கொரு இருண்ட காலம்தான். . ."

மன்னன் மருண்டான்.

"என்ன சொல்கிறாய் தேவி?"

"பிரபு, மதுரையின் ஆட்சி பீடம் அரியதாய் இருக்கலாம். அது கிடைத்ததுகூட, பெருமை படத்தக்கதுதான். ஆனால் அதற்கு முயன்ற விதம் பெருமை தரக்கூடியது தானா? இல்லை அரசே. ரொம்பவும் வேதனைப்படக்கூடிய விஷயம். . ."

"பராக்கிரம பாண்டியனை அழித்து விட்டேனே, அதையா சொல்கிறாய்."

"ஆம் . . ."

"அரசியல் நெறிதெரியாமல் பேசாதே தேவி. அரசியலில் மிக முக்கியமாகக் காக்கப்படவேண்டியது மரபுதான் என்பது உனக்குத் தெரியாதா? தந்தைக்குப்பின் தனயன் என்ற முறை தவறாமல் அரசியலில் பாதுகாக்கப்பட்டால்தான் அரசியல் ஒழுக்கம் காப்பாற்றப்படும். அந்த ரீதியில் நடந்த சம்பவங்களைச் சற்று அலசிப்பார்."

"இந்த பராக்கிரம பாண்டியன் என் தந்தைக்குப் பிறகு முறையாக முடிசூட வேண்டியவன் தானா? இல்லை தேவி. நான் சிறுவனாய் இருந்துவிட்ட காரணத்தாலேயே தற்காலிகமாய் ஆட்சிப் பொறுப்பேற்றவன் அவன். நான் பருவமடைந்த பின் அவன் செய்திருக்க வேண்டியதென்ன? ஆட்சிபீடத்தை எனக்கு அளிக்கவேண்டியதுதானே? அவன் அதைச் செய்தானா? இல்லை. என் உரிமையை எனக்கு மறுத்தான். மரபை உதாசீனப் படுத்திப் பேரம் பேசினான். மதுரையை அவனும் தென்பாண்டிய நாட்டை நானும் ஆளலாம் என்ற ஏற்பாட்டைச் செய்தான். அதில் எனக்குத் துளியும் சம்மதமில்லை. ஆனாலும் அப்போது நிலவிய உள்நாட்டு கலகத்தையொட்டியும் அண்டைநாடுகளின் பூசல்களைக் கருதியும் அந்த ஏற்பாட்டைத் தற்காலிகமாக ஒப்புக் கொண்டேன். மதுரையின் மன்னனாய் அவன் தொடர்ந்தான். நான் தென் பாண்டிய நாட்டின் அரசனானேன்."

tamilebooks.net

"அதற்குப் பின் பலமுறை என் உரிமையை அவனிடம் வலியுறுத்தினேன். புரிந்துகொள்ள வேண்டிய நீதியை அவன் புரிந்து கொள்ளவில்லை. அனுசரிக்க வேண்டிய நியாயத்தையும் மேற்கொள்ளவில்லை. தன் தலையில் வளர்த்துக்கொண்ட பேனை ஒழிக்கக் கொள்ளிக் கட்டையை கொண்டு வந்த மாதிரி சிங்கள மன்னனை உதவிக்கு அழைத்தான் அந்த வஞ்சகன். சிங்களத்தானைப் பற்றி உனக்குத் தெரியாது தேவி. உதவ வந்து ஊடுறுவ நினைக்கும் பாதகன் அவன்.

"சிங்களர்களின் மோதலில் சிந்தும் குருதியைக் குடிக்கும் குள்ளநரிக்கு ஒப்பான அவன் தமிழகத்தில் நுழைவதற்கும் நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கும் வித்தியாசமே இல்லை. அவனும் நுழைந்து பராக்கிரம பாண்டியனும் இணைந்து கொண்டால் பாண்டிய நாட்டின் கதி அதோ கதிதான் என்பதை உணர்ந்து கொண்டேன் நான்."

"அந்த வகையில் பராக்கிரம பாண்டியனை எவ்வளவுக் கெவ்வளவு விரைவாகத் தீர்த்துக் கட்டுகிறோமோ அதுதான் நல்லதென தீர்மானித்தேன். அதற்கு அரிய சந்தர்ப்பமும் வந்தது. அரிய சந்தர்ப்பம் வரும்போது எந்த விதத்திலாவது அதைப் பயன்படுத்திக் கொள்வதுதான் அரசியல் விவேகம் தேவி."

"அந்த சந்தர்ப்பத்தில் சொந்த உணர்ச்சிகளையோ, நியாய அநியாயங்களையோ பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஆகவேதான் அவனது குடும்பத்தை அழித்தேன். பாம்புக்கு பால் வார்க்கவிருந்த குலம் அழிந்துவிட்டது தேவி. நாடு காப்பாற்றப்பட்டு விட்டது. இது பொற்காலமில்லையா நமக்கு?"

"உங்கள் ரீதிலேயே பார்த்தால்கூட நாடு காப்பாற்றப் பட்டுவிட்டதாக எப்படிக் கொள்ள முடியும்? பராக்கிரம பாண்டியனின் மகன் தப்பிவிடவில்லையா?"

"அவன் எங்கேயும் போய்விட முடியாது தேவி. சரியான வலை பின்னப்படும். அந்தப் பாம்புக் குட்டியும் பிடிக்கப்படும்" என்று ஆணித்தரமாக எடுத்துச் சொன்ன குலசேகரப் பாண்டியன், "பெண்மனம் இவற்றாலெல்லாம் சற்று வேதனைப்படும்தான். அதற்கொரு பரிகாரம் செய்கிறேன் தேவி. கலலைப்படாதே" என்றான்.

"பரிகாரமா?"

"நான் அப்படித்தான் எண்ணுகிறேன். தவறுகளைச் செய்து விட்டால் நாம் ஆண்டவனிடம் தானே மன்னிப்பு கேட்கிறோம்? அந்த வகையில் நானும் மதுரை மாநகரைக் கட்டிக் காக்கும் அன்னை மீனாட்சியிடம் மன்னிப்புக் கோரிவிட்டேன்.

tamilebooks.net

அதுமட்டுமல்ல. நீண்ட நாளாக இருந்த குறையை நிவர்த்தி செய்யவும் ஏற்பாடு செய்து விட்டேன்."

"அதென்ன பிரபு?"

"நம்மையெல்லாம் ரட்சிக்கும் அன்னை மீனாட்சிக்குத் தனியாக ஆலயம் அமைக்கவும் ஏற்பாடு செய்து விட்டேன்..."**

"உண்மையாகவா?"

"ஆம் தேவி, தற்போது சுந்தரேஸ்வரர் ஆலயத்திலேயே எழுந்தருளியிருக்கும் அன்னைக்குத் தனி ஆலயம்"

ஒன்றினைச் சிறப்பாகத் தீர்மானித்து உலகத்தோர் காலமெல்லாம் போற்றிப் பாராட்டும்படி செய்யவிருக்கிறேன் தேவி. இனி மதுரையென்றாலே மீனாட்சியம்மனை அனைவரும் உச்சரிக்கும்படி ஆலயம் அமையும். கவலையை விடு. கசப்பு மண்மீது வளரவிருக்கும் கற்பக விருட்சத்தை எண்ணி சந்தோஷப்படு. நம்மைச் சூழ்ந்திருப்பது இருண்ட காலமல்ல, பொற்காலம் தான் என்பதை உணர்ந்து கொள்."

இப்படிக்கூறிய பாண்டிய மன்னனின் முகம் மலர்ந்தது. அதில் பெரும் சாம்ராஜ்ய கனவு விரிந்தது. அதைப் புலப்படுத்தும் வகையில் மேலும் தொடர்ந்து பேசினான் அவன். ஆனால் அவனது கனவு உடைகிற மாதிரி திடீரென உள்ளே நுழைந்தான் அவனது புதல்வனும் பாண்டிய இளவலுமான விக்கரம பாண்டியன். அவன் உதிர்த்த சொற்கள் மன்னனின் தலையில் இடியென இறங்கவும் செய்தன.

** குலசேகர பாண்டியன் காலத்திற்கு முன்பு மதுரை மீனாட்சியம்மனுக்குத் தனி ஆலயமில்லை. குல சேகர பாண்டியன்தான் தன்னுடைய காலத்தில் அப்படி தனி ஆலயம் ஒன்றை அம்பாளுக்கு அமைத்து 'மதுரைக் கோட்டை'க்கு வெளியில் நான்கு திக்குகளிலும் காவல் தெய்வங்களை அமைத்து அவைகளுக்குக் கோயில்களையும் கட்டினான்.

—பக்கம் 111 —112.
திரு. கி. பழனியப்பன்
'கோயில் மாநகர்'

tamilebooks.net

18

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்"

—குறள், 461

பொற்காலம் முகிழ்த்துவிட்டதென தன் மனத்துள்ளே விரிந்திருந்த கனவை விவரிக்க முற்பட்ட குலசேகர பாண்டியன், "தேவி, பராக்கிரம பாண்டியனை அழித்தது குறித்து வேதனைப்பட்டாயே, உண்மையில் அவன் அழிந்த பிறகே நமக்கு நல்வினைகள் நிகழ்ந்திருக்கின்றன. பாம்பென்று அறியாமல் அவன் அழைத்துவிட்ட சிங்களக் கும்பலை எப்படி ஏமாற்றிவிட்டேன் தெரியுமா? குறுக்கு வழியில் ஆதாயம் பெறுவதையே குல வழக்கமாய்க் கொண்டவர்கள் அந்தச் சிங்களவர். ஆகவேதான் அவர்கள் படையெடுத்தபோது குறுக்கு வழியைத்தான் தேர்ந்தெடுப்பார்கள் என்று ஊகித்தேன். தமிழகத்தில் அவர்கள் ஊடுறுவதாக இருந்தால் அது நான் முதலாவதாக ஆண்ட தென்பாண்டி மண்டலமாகத்தான் இருக்கும் என்று எதிர்பார்த்தேன். அப்படி அவன் வரும் பட்சத்தில் அவர்களுக்கு அரைக்காசு கூட கிடைக்க முடியாத வகையில் அனைத்து செல்வதையும் கொண்டு வந்து விட்டேன் இங்கே. பாவம் அவன். வெறும் களஞ்சியங்களைத்தான் கைப்பற்ற முடிந்தது அவனால்..."

இங்கே குறுக்கிட்ட தேவி, "அங்கே மக்கள் நிரம்ப மாண்டுவிட்டார்களாமே! சேதமும் அதிகமாமே?" என்று வினவினான்.

"போரென்றும் படையெடுப்பென்றும் வந்துவிட்டால் இத்தகைய நாசங்கள் விளைந்துதான் தீரும் தேவி. தற்போதைய இலங்காபுரன் ஏறக்குறைய அரக்க சுபாவம் கொண்டவனாதலால் நாசமும் சேதமும் சற்றே அதிகம். அவன் செய்திருப்பது அட்டூழியங்கள். அதிருக்கட்டும். அதற்கெல்லாம் அவன் அனுபவித்தே தீரப் போகிறான். அப்படி அவன் தென் பாண்டிய நாட்டில் இறங்கியதும் சிங்களத்திற்கும் தமிழகத்திற்கும் பாலமாய் இருந்த ராமேஸ்வரத்தை நான் மீட்டு என் வசப்படுத்திக் கொண்டேன். என்னையறியாமல் சிங்களத்திலிருந்து எந்த உதவியும் அவனுக்குக் கிடைக்காது. அது மட்டுமல்ல. பொன்னமராவதியில் என்னுடைய படையின் கணிசமான பிரிவு ஒன்று தயாரான நிலையில் இருக்கிறது. இலங்காபுரன் இந்த அற்ப தென் பாண்டி நாட்டு வெற்றிக்குப் பிறகு மதுரையை நோக்கி நகர்வான். நான் அவனை

tamilebooks.net

எதிர்கொள்ளும் வேளையில் பொன்னமராவதிப் படை பின்னால் வளைத்துக் கொள்ளும். பிறகு அவனும் அவனது படைகளும் பிணங்களாகத்தான் வெளியேற முடியும். போதுமா தேவி? பொற்காலம் உதித்துவிட்டதாகச் சொன்னேனே, நம்புகிறாயா இப்போது?"

"நம்பிப் பயனில்லை தந்தையே" என்று இடையே ஒரு குரல் குறுக்கிட்டது. அதையடுத்து உள்ளே நுழைந்தான் விக்கிரம பாண்டியன்.

இளம் பிராயமும் இன்முகமும் கொண்டவனாய் நுழைந்த தன் மகனைக் கண்டு முகம் மலர முற்பட்ட குலசேகர பாண்டியன் மகனின் அபசகுனமான பேச்சைக் கேட்டு மலர்ச்சியை விலக்கிக் கொண்டு குழம்பியவனாய் கேட்டான்.

"என்ன சொல்கிறாய் விக்கிரமா நீ? நம்புவதால் ஏன் பயனில்லை?"

"நம்புகிற மாதிரி நடக்கவில்லையென்றால் பயனில்லை தானே?" என்றான் விக்கிரமன்.

"பொன்னமராவதியில். . ."

"என்ன ஆயிற்று?" விபரீத தொனியில் கேட்டான் மன்னன்.

"நாம் தோற்றுவிட்டோம்."

"என்ன சொல்கிறாய் நீ? அங்கு போரே துவங்கவில்லை விக்கிரமா."

"நாம் துவக்கவில்லைதான்."

"அப்படியானால்?"

"இலங்காபுரன் துவக்கிவிட்டான்."

"அவன் எப்போது அங்கே போனான்?"

"தெரியவில்லை."

"தெரியவில்லையா?"

"ஆம் தந்தையே. அனைத்தும் திடீரென நடந்து விட்டன்."

"அதெப்படி முடியும்? வையையின் தென்கரையில் இருந்தவன் பொன்னமராவதிக்குப் பறந்தா போயிருப்பான்? தொண்டியிலும் பாசிப்பட்டினத்திலும் இருக்கும் நமது படைகளுக்குத் தெரியாமல் அவன் எப்படி அங்கே போகமுடியும்?"

விடுவிடுவென கேள்விகளைக் கேட்டான் பாண்டிய மன்னன். அதற்கு விக்கிரம பாண்டியனிடமிருந்து விரிந்தது ஒரு

tamilebooks.net

கதை. அதைக் கேட்கக் கேட்க இலங்காபுரனின் பயங்கரத் திட்டத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டான் குலசேகர பாண்டியன். சற்று முன் பொற்காலம் முகிழ்த்து விட்டதாய் எண்ணியது சரிதானா என்று கூட யோசிக்கத் தலைப்பட்டான்.

ஃஃ ஃஃ ஃஃ

உண்மையிலேயே குலசேகர பாண்டியன் அசந்து போகிற மாதிரித்தான் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தான் சிங்களத்து தண்டநாயகன். ரோகண நங்கை அவனது தென்பாண்டி மண்டலத்து வெற்றியை 'முயல்வேட்டை' என குறைத்துக் கூறிவிட்டுப்போன பின் நன்றாக விழித்துக் கொண்ட அவன் தீர்க்கமாக யோசிக்கவும் முற்பட்டான். தொடக்கத்தில் அவன் எண்ணியதுபோல் தமிழகத்தை விழுங்கி ஏப்பம் விடுவதென்பது சாமான்யமான காரியமல்ல என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்டு மாறுபட்ட வகையில் அவன் திட்டங்களைத் தீட்டியபோது உபதளபதிகள் குழம்பிப் போய் அவனிடம் வினவினார்கள்.

"இதில் குழம்ப என்ன இருக்கிறது?" என்று கேட்டான் இலங்காபுரன்.

"தளபதி, நீங்கள் சொல்கிற திட்டங்களைக் கேட்கும் போது போரிட வேண்டிய அவசியம் நமக்கு இல்லையோ என்று எண்ணத் தோன்றியது. அது உண்மையா? போரிடப் போவதில்லையா நாம்?" என்று வினவினான் சிங்கன்.

"சிங்கா, போரின்றி எதையும் நாம் சாதிக்கப் போவதில்லை. போர் நிச்சயம். அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். ஆனால் போரை மட்டுமே நம்பி நாம் வெற்றி பெற முடியாது என்பதை மட்டும் நன்றாகத் தெரிந்துகொள்."

"வேறென்ன வேண்டும் என்கிறீர்கள்?"

"குள்ளநரித் தந்திரம்."

"தந்திரமா?"

"ஆம் சிங்கா. ராமேஸ்வரத்தை வென்று தென்பாண்டி நாட்டையும் நாம் வசப்படுத்தினோமே, இன்று நமது நிலை என்ன? நாம் பிடித்த ராமேஸ்வரத்தைப் பாண்டியர்கள் மீட்டுக் கொண்டார்கள். எப்படி முடிந்தது அது. . . போரினாலா. . ."

"இல்லை."

"தென்பாண்டி மண்டலத்தை நாம் வென்றோமே நமக்கு எவ்வளவு செல்வம் கிடைத்தது. . ."

tamilebooks.net

"எதுவுமில்லை."

"ஏன் கிடைக்கவில்லை... போரிட்டும் நமக்கேன் பயனில்லாமல் போய்விட்டது. எல்லாம் பாண்டியனின் தந்திரம் தான் சிங்கா. போரில்லாமல் வெறும் யுக்திகளைக்கொண்டே நம் செயல்களை அர்த்தமில்லாதவைகளாக்கி விட்டான் அவன். இது மேலும் தொடர்ந்தால் நமது கதி..."

"அதோகதிதான்."

"அது மட்டுமல்ல நம்மைப்பற்றிச் சிங்கள மாமன்னர் கொண்டிருக்கும் அவ நம்பிக்கையும் உறுதியாகிவிடும்."

"உண்மைதான் தளபதி."

"ஒரு காரியத்தைத் தொடங்குமுன் அதனால் ஆகக் கூடியதென்ன என்பதையும் அவற்றால் நிகர லாபமென்ன என்பதையும் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். இந்தக் கணக்கை முதலில் நான் சரியாகப் போடவில்லை. இப்போது போடுகிறேன். ஆகவேதான் தந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டங்களைத் தீட்டத் தீர்மானித்தேன். அரசியலில் வெற்றிபெறுவது எளிது. ஆனால் பெற்ற வெற்றியை நிலைக்கச் செய்வது எளிதல்ல. நிலைத்திருக்க வேண்டுமானால் முன்னெச்சரிக்கையுடன் காரியங்களைச் செய்ய வேண்டும். அதற்குத் தேவை தந்திரங்கள்."

இவ்வாறு பீடிகை போட்ட இலங்காபுரன் தொடர்ந்தான்:

"உபதளபதிகளே, நானிங்கு வருவதற்கு முன்னால் தமிழகத்தைப் பற்றி உங்களுக்கெல்லாம் கூறியிருந்தேன். இத்தமிழகத்தில், நிர்வாகம் மிகவும் சிறப்பானது, இணையற்றது. கட்டுக்கோப்பான அமைப்பை உடையது. பாண்டிய நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள். இந்நாட்டை ஒருவன் ஆண்டாலும் உண்மையில் நிர்வாகமானது பலரால் நடைபெற்று வருகிறது. இந்த மண்டலம் பல வள நாடுகளாகவும், கோட்டங்களாகவும், ஊர்களாகவும் பகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் தனித்தனி தலைவர்களால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. பாண்டிய மண்டலத்தின் மன்னனை நாம் வீழ்த்துவது கூட ஒரு வகையில் எளிதாக அமைந்துவிடலாம். ஆனால் அந்த வீழ்ச்சியைக் கொண்டு இங்கே நாம் ஆண்டுவிட முடியாது. இந்தக் கட்டுக் கோப்புகளை வகையாகச் சிதைக்க வேண்டும். இந்த நிர்வாக அமைப்பைக் குலைத்தால் தான் நமது வெற்றியை நமக்கு அனுகூலமாகவும் நிலையாகவும் ஆக்கிக்கொள்ளலாம். எனவே போரை மேலும் நடத்துவதற்கு முன் இந்த நிர்வாகக் கட்டுக் கோப்பை நமது தந்திரத்தால் குலைப்போம்..."

tamilebooks.net

இலங்காபுரன் தமிழக நிலைமையை விவேகத்துடன் அலசுவதைக் கண்ட உபதளபதிகள் சிரத்தையோடு மேலும் அவன் சொல்ல விருந்ததைக் கேட்கத் தயாராய் இருந்தார்கள். இலங்காபுரன் தொடர்ந்தான்:

"முதலில் நாம் வெற்றி பெற்றிருக்கும் இந்தத் தென்பாண்டி மண்டலத்தை எடுத்துக் கொள்வோம். இங்கே நமது வெற்றி நிலைத்திருக்க வேண்டுமானால் நமது படைகள் ஆங்காங்கே காவல் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் இப்போது நமக்கு அதற்கெல்லாம் சாத்தியமில்லை. எனவே மாண்டுவிட்ட பராக்கிரம பாண்டியனின் சகாக்களுக்குத் தூதனுப்பி யிருக்கிறேன்..."

"ஏன்?"

"எப்போது பராக்கிரம பாண்டியன் நமது உதவியைக் கோரினானோ அதிலிருந்தே அவனுக்கு அடங்கி வேலை செய்தவர்களும் அவனுக்கு வேண்டியவர்களும் நமக்கு வேண்டியவர்களாகிறார்கள். பராக்கிரம பாண்டியன் வேண்டுமானால் கொலை செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் அவனுடன் இருந்த எல்லோருமே மாண்டு போயிருக்க முடியாது. நல்ல சந்தர்ப்பத்தைக் கருதி இங்கேயே மறைந்து உறைந்து கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை அழைப்போம்..."

"உங்கள் அழைப்பிற்கு அவர்கள் ஏன் வரவேண்டும்? உங்களால் பராக்கிரம பாண்டியரைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டதே."

"இருக்கலாம். ஆனால் பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியன் உயிருடன் இருக்கிறான். அவன் முடி சூடுவானானால் அவர்களெல்லாம் பலனடைவார்கள் அல்லவா?"

"ஆம்."

"வீரபாண்டியன் முடிசூட நாம் முயற்சி செய்தால் தானே உண்டு? நமது உதவியில்லாமல் வீரபாண்டியன் எதையும் சாதிக்க முடியாது. ஆகவே நாம் அழைத்தால் அவர்கள் வராமல் போகமாட்டார்கள்."

"அவர்களைத் தென்பாண்டி மண்டல ஊர்களுக்குக் காவல் செய்யும்படி நியமிக்கப் போகிறீர்களா?"

"ஆம். இதனால் பல நன்மைகள் நமக்கு வேண்டிய வர்களாதலால் நாம் சொல்கிறபடி காவல் புரிவார்கள். அப்படிக் காவல் புரிவதால் இந்த இடைக்காலத்தில் அவர்களுக்கு வேலை

tamilebooks.net

கிடைத்த மாதிரியும் இருக்கிறது. அதோடு அவர்கள் தமிழர்களே ஆதலால் தென்பாண்டி மக்களும் அதிக எதிர்ப்பைக் காட்ட மாட்டார்கள். இந்தப் பகுதிகளைப் பற்றி தொல்லை யில்லாமல் நாம் மற்ற வேலைகளைக் கவனிக்கலாம்.

"நல்ல திட்டம்"

"பொறுத்தமான திட்டமும்கூட. நான் அனுப்பிய ஒற்றர்கள் மூலம் பதினைந்து பேர் கிடைத்திருக்கிறார்கள். அவர்கள் காவல் அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள். . ."

"அப்படி நியமிக்கப்பட்டால் பிறகு தென்பாண்டி மண்டலத்தில் புதியதொரு கட்டுக் கோப்பு உண்டாகி விடு மல்லவா?"

"உபதளபதி, இது ஒரு தற்காலிக கட்டுக்கோப்புதான். வீரபாண்டியனை ஆட்சியில் அமர்த்துவதாக ஆசை காட்டி இவர்களை இந்தப் பொறுப்பில் வைத்திருப்போம். மதுரையை நாம் பிடித்ததும் அனைவரையும் நிமிட நேரத்தில் குழிதோண்டி புதைத்து விடலாம். ஒரு வேளை வீரபாண்டியன் ஆட்சியில் அமர நேர்ந்துவிட்டாலும் அவன் வெறும் கைப்பொம்மை யாகத்தான் இருக்கப் போகிறான். அவனை நமது மன்னர்தான் இயக்கப் போகிறார். ஆகவே கவலைப்பட எதுவுமில்லை."

"திட்டம் இவ்வளவுதானா?" என்று வினவினான் நுளம்பன்.

"இல்லை முக்கியத் திட்டமே இனிதான் இருக்கிறது" என்று கூறிய இலங்காபுரன் "கடலழகி . . ." என்று அழைத்தான்.

அடுத்த சில நொடிகளில் அங்கே தங்கச் சிலைபோல் அங்கம் மிளிர வந்து நின்றாள் கடலழகி.

"கடலழகி, நீ சோழநாடு சென்று சேகரித்து வந்த செய்திகளைச் சொல். . ." என்றான் இலங்காபுரன்.

சொன்னாள் அவள்.

உபதளபதிகள் பிரமித்துப் போனார்கள்.

ஃஃ ஃஃ ஃஃ

"கேட்டீர்கள் அல்லவா?" என்றான் தண்டநாயகன்.

"கேட்டோம். . ."

"சோழநாட்டில் பயங்கர கலவரம் நடைபெறவிருக்கிறது. அது மட்டுமல்ல. அங்கு யாருக்கும் புரியாத சூதும் நடை

tamilebooks.net

பெறுகிறது. ஆகவே நமது கவனம் சோழநாட்டின் மீதும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அதைக் கண்காணிக்கவும் சமயம் பார்த்து சோழ நாட்டில் ஊடுறுவவும் மிக முக்கியமான கேந்திரம் ஒன்றிருக்கிறது. . .”

“அது. . .”

“பொன்னமராவதி”

“பொன்னமராவதியா?”

“ஆம். பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் எல்லைக் கோடாய் அமைந்திருக்கிறது பொன்னமராவதி. அதைக் கவர்ந்து கொண்டால் அங்கிருந்தபடி இருநாடுகளையும் ஒரு சேர கண்காணிக்கமுடியும். கவர்ந்துகொள்ள முடியும். . .”

“உடனே செயலில் இறங்க வேண்டியதுதானே? பொன்ன மராவதியைப் பிடிக்க எவ்வளவு நேரம் ஆகப்போகிறது?” என்று கேட்டான் சிங்கன்.

இதைக் கேட்டதும் இலங்காபுரனின் இதழ்களில் புன்னகை தோன்றியது. அந்த புன்னகையுடனேயே பேச முற்பட்ட அவன் “பொன்னமராவதியைப் பிடிப்பது அவ்வளவு எளிய கரியமல்ல சிங்கா” என்றான்.

“ஏன் அப்படி?”

“பொன்னமராவதி எங்கிருக்கிறது தெரியுமா?”

“சோழ—பாண்டிய நாட்டு எல்லையில் இருப்பதாக நீங்களே சொன்னீர்கள்.”

“ஆம். இங்கிருந்து நேர் வடக்கில் இருக்கிறது. அது மட்டுமல்ல. பொன்னமராவதியை அடைய வேண்டுமானால் பாண்டியப் பாசறை இருக்கும் இரண்டு பெரிய ஊர்களைத் தாண்டிச் செல்ல வேண்டும். . .”

“அதாவது. . .”

“தொண்டியையும் பாசிப்பட்டினத்தையும் தாண்ட வேண்டும். . .”

“தளபதி, இவையிரண்டும் பொன்னமராவதிக்குச் செல்லும் பாதையில் இல்லை. கிழக்கில் கடற்கரையோரமாக இருக்கின்றன.”

“உண்மைதான். ஆனால் நம்மை நெருங்கி விடமுடியாத அளவிற்குப் பெரும் தூரத்திலொன்றும் அவையில்லை. நமது படை நகருவது தெரிந்ததுமே அங்கிருக்கும் பாண்டியர் படை நகர்ந்து நம்மை எதிர்கொள்ள அதிக நேரமாகாது. அதுமட்டுமல்ல.”

tamilebooks.net

"வேறென்ன?"

"ஒருவேளை அவையிரண்டுக்கும் தெரியாமல் நாம் சற்று முதலில் முன்னேற முயன்றால் பிறகு தொண்டிக்கும் பொன்னமராவதிக்கும் இடையில் நாம் சிக்கிக் கொள்வோம்."

"பேராபத்தான நிலை அது. . ."

"தவிர பொன்னமராவதியில் நிலை நமக்குத் தெரியாது. அங்குள்ள படைபலம் அதிகமாயிருந்தால் நம் கதி மேலும் மோசமாகி விடும். . ."

"வேறெப்படி பொன்னமராவதியை அடைய முடியும்."

"தந்திரத்தால் அடையமுடியும். . ."

"என்ன தந்திரத்தால்?"

"சிங்கா, நாமிருக்கும் இடத்திற்கும் பொன்னமராவதிக்கும் நட்ட நடுவில் இருக்கிறது மங்கலம்."

"ஆம் ஆம்."

"மிகவும் சிறப்பான இடம் அது. ஏறக்குறைய அது ஒரு நாற்சந்தி மாதிரி. அதன் வடக்கே பொன்னமராவதி. கிழக்கே தொண்டி. தெற்கில் நாம். மேற்கில் மதுரை. அந்த இடத்தை நாம் வசப்படுத்திக் கொண்டால் பொன்மராவதியை அடையலாம்."

"போரிட்டா?"

"போரால் அதை நெருங்கினால் அனைவரும் எச்சரிக்கை யடைந்து விடுவார்கள். ராஜதந்திரத்தால் நெருங்க வேண்டும்."

"எப்படி?"

"மங்கலத்தின் காவல் தலைவன். . ."

"ஆம் மழவராயன்"

"ஆம் சிங்கா. மங்கலத்தின் காவல் தலைவனான மழவராயனை நாம் வசப்படுத்திவிட்டால் மங்கலம் நமக்குச் சாதகமாக இருக்கும்."

"முடியுமா அது?"

"வலையை விரித்தாயிற்று."

"அதில் அவன் விழவேண்டாமா?"

"விழச் சம்மதித்து விட்டான்."

"உண்மையாகவா?"

"என் தூது தோற்றதில்லை சிங்கா! என்னைச் சந்திக்க சம்மதித்துவிட்டான் மழவராயன். அந்தச் சந்திப்பிற்குப்பின்

tamilebooks.net

உயிருடன் திரும்புவானானால் எனக்கு உடன்பட்டு விட்டதாய் எண்ணிக் கொள்ளலாம்."

"உடன்பட வில்லையென்றால்"

"அவனது பிணம்தான் மங்கலத்திற்குத் திரும்பும்."

அழுத்தம் திருத்தமாய் இவ்வாறு சொன்ன இலங்காபுரன், "பாண்டிய மண்டலத்தின் நிர்வாகத்தில் இன்று வேண்டுமானால் மழவராயன் சாமானியமானவனாய் கருதப்படலாம்; ஆனால் பின் காலமெல்லாம் அவனை அனைவரும் எண்ணி எண்ணிப் புழுங்கும் விசேஷ மனிதனாய் அவனை மாற்றப் போகிறேன். பாண்டியர் அரசியல் திருப்பத்திற்கு இந்த மங்கலம் முக்கிய தளமாகப் போகிறது. மதுரையில் நான் விரைவிலேயே நுழைந்து விடுவேன். என்னை நம்பாதிருக்கும் சிங்கள மாமன்னரும் அசந்து போய் நுழைவார் மதுரை மாளிகையில்" என்று கூறிவிட்டு "என்ன சொல்கிறீர்கள்?" என்பதுபோல் பார்த்தான் அனைவரையும்.

"மழவராயனுக்கு என்ன வலை விரித்தீர்கள்? சொல்லவில்லையே" என்றான் நுளம்பன்.

"இதோ." என்று கூறிய இலங்காபுரன் கடலழகியின் கையில் இருந்த ஓலைச் சுருளை எடுத்து வீசினான் நுளம்பனிடம்.

ஓலையை அனைவரும் படித்தார்கள்.

"நேர்த்தியான வலை" என்று அனைவரது உதடுகளும் முணுமுணுத்தன.

19

"செய்வானை நாடி வினைநாடி காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்"

—குறள், 156

"மழவராயருக்குச் சிங்களத்துத் தண்டநாயகன் விடுக்கும் ஓலை.

நானும் என் படைகளும் அடுத்து நெருங்கப் போவது மங்கலம்தான்.

எனது படைகள் ராமேஸ்வரத்தில் ராமநாதபுர மண்டலத்திலும் நிகழ்த்தியவைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

போர் என்று வந்துவிட்டால் நாங்கள் எந்தத் தயக்கத்தையும் காட்டுவதில்லை.

tamilebooks.net

இதை நீங்கள் உணருவதால் நீங்களும் உங்களது எழிற் பட்டிணமும் காக்கப்படுவீர்கள்.

பாண்டியர் அரசியல் நிலைமை உங்களுக்கே தெரியும்.

அரசியல் விவேகம் பற்றியும் நான் விவரிக்க வேண்டியதில்லை.

எனக்கு ஒத்துழைப்பு நல்கும் பட்சத்தில் உமக்குப் பல நன்மைகள்.

அதில் முக்கியமானது நான் அளிக்கும் பரிசு.

எனவே விரைவில் என்னைச் சந்தியுங்கள்.

விரும்பவில்லையென்றால் விரைவில் மங்கலத்தில்— போரில் நான் சந்திக்கிறேன்.

—இலங்காபுரன்.

"படித்தீர்களா?" என்று கேட்டான் இலங்காபுரன்.

"படித்தோம்" என்றார்கள் உபதளபதிகள். "நேர்த்தியான வலை" என்றான் நுளம்பன். "மழவராயனை இந்த ஓலை ஆடவொட்டாமல் செய்து விடும்" என்றான் சிங்கன். "நமக்கு வெற்றிதான்" என்றான் கடாரத்தின் உபதளபதி.

"உண்மைதான். மழவராயனின் நிலை தெரிந்தே இந்த ஓலையை அனுப்பினேன் நான். அவன் இன்னேரம் வீரம் பேசி தன்னை அழித்துக் கொள்ள மாட்டான். வாய்ப்பைப் பயன்படுத்தி உதவவே முன்வருவான். எனவே பொன்னமராவதி நமக்குக் கிடைத்த மாதிரிதான். அதைப் பிடித்த மாத்திரத்தில் தொண்டியையும் பாசியையும் துரிதமாகத் தாக்கிப் பிடித்து விடவேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் பாண்டியரின் கடல்வாயில் அடைபடுகிறது. மதுரையில் இருக்கும் குலசேகர பாண்டியனை நம்மை நோக்கி இழுக்க அது போதும். போர்க்களத்தில் என்னை வென்றவர் யாருமில்லை. ஆகவே மதுரையை விட்டு வெளிப்படும் பாண்டியனின் கதை என்னால் முடித்து வைக்கப்படும்" என்று முழங்கினான் இலங்காபுரன்.

"ஏன் தளபதி, ராமேஸ்வரத்தை மறந்து விட்டீர்களா?" என்று கேட்டான் ஓர் உபதளபதி.

"என்ன அதற்கு?"

"ராமேஸ்வரம் இப்போது நம்வசம் இல்லை. பாண்டியனிடம் இருக்கிறது."

"சரி."

tamilebooks.net

"அது. தொண்டிக்கும் பாசிக்கும் முன்னால் இருக்கிறது."

"சரி."

"மதுரை தொண்டிருக்கும் பாசிக்கும் முன்னால் இருக்கிறது."

"சரி."

"இடையில் நாம் சிக்கிக் கொள்வோம்."

"உபதளபதி, ராமேஸ்வரம் நமக்கு ஒரு பொருட்டே அல்ல. பாண்டியன் அதை மீண்டுக் கொண்டதெல்லாம் தன் தந்திர நுட்பத்தைக் காட்டிக் கொள்ளத்தானேயன்றி வேறெதற்கு மில்லை. அந்தக் கையகலத் தீவில் மாபெரும் படைகளை வைத்துக்கோண்டு நம்மைப் பாண்டியன் மிரட்டுவான் என்று எண்ணுவது அறிவீனம். அந்தத் தீவைப் பற்றிய கவலையை விடும். சிங்களத்திற்குச் செய்தியனுப்பி விட்டேன். அங்கிருந்து இரண்டு கலங்கள் வந்தால் போதும். ராமேஸ்வரத்தைக் கரைத்துப் பொடியாக்கிவிடலாம்."

மந்திராலோசனை அத்துடன் முடித்துவிடவே அனைவரும் கலைந்தார்கள். பாசறையில் இருவர் மட்டுமே இருந்தார்கள். அவர்கள் இலங்காபுரனும் கடலழகியும்தான். தக்க பருவமும் ஒத்த ஆசையும் கொண்ட இரு பாலர்கள் தனித்திருந்ததால் அழுந்திக்கிடந்த உணர்ச்சிகள் தலை விரித்தாடத் தொடங்கின. இங்கே இலங்காபுரனிடம் திருப்தியும் மகிழ்ச்சியும் நிரம்பியிருந்ததால் கடலழகியைப் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருக்க முடியாதவனாய் அவளது கரத்தைத் திடீரெனப் பற்றி இழுத்து விட்டானாதலால் ஒடிந்த கிளை போல் அவன் மீது விழுந்தாள் அவள். அவளைத் தன் மரம்போன்ற கைகளால் மடியிலேயே அழுத்திக் கொண்ட அச்சிங்களவன், "திறமையும் அழகும் ஒரு சேரப் பெற்ற பெண் நீ ஒருத்தி தான் கடலழகி. என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

"முதலில் என்னை விடுங்கள்" என்றாள் அவள்.

"முடியாது!" திட்டவட்டமாகச் சொன்னான் இலங்காபுரன்.

"என்னது?"

"அழகை எவராவது விட்டுவிடுவார்களா, அதுவும் கிட்டியிருக்கும்போது?" கேட்டான் அவன்.

"உடல் வலிக்கிறது" என்றாள் அவள்.

"வலிக்கத்தான் செய்யும் கடலழகி. வேறுவழியில்லை" என்றான் அவன்.

"நான் செய்த உதவிக்கு நீங்கள் தரும் பரிசு இதுதானா?"

tamilebooks.net

"நீ செய்திருக்கும் உதவி இணையற்றது; ஆடவனால் கூடசெய்ய முடியாதது."

"அதனால்தான் இந்தப் பரிசைத் தந்திருக்கிறீர்களா? விடுங்கள் என்னை."

"இன்று விட்டுவிடுகிறேன். நீயும் தப்பி விடலாம். ஆனால் ஒருநாள். . ."

"ஒரு நாள்?"

"உன்னை விடாமல் வைத்திருக்கும் நிலை வரத்தான் போகிறது."

"அந்த நாள்?"

"நம் மணநாள். சிங்களத்தில், ரோகண மாளிகையில்" என்று கூறிய இலங்காபுரன் அவளை விடுவித்தான்.

அதே நேரத்தில் பாசறையில் மழவராயன் வந்து விட்டதாகச் செய்தி கிடைத்தது.

ஃஃ ஃஃ ஃஃ

மங்கலத்தின் காவல் தலைவனான மழவராயனுக்குப் பிராயம் ஐம்பது இருக்கலாம். சுமார் இருபத்தைந்து வீரர்களுடன் பாசறையில் வந்திறங்கிய அவனைச் சிங்களவீரர்கள் உற்சாகமாக வரவேற்றாலும் அவற்றையெல்லாம் பெரிதாக எண்ணிக் கொள்ளும் வகையிலோ அவற்றாலெல்லாம் திருப்திபடுகிற வகையிலோ அவனில்லை. வரண்டு கிடந்த அவனது முகமே அதைப் பறை சாற்றியது நீண்ட பயணத்தால் அவனது உடலில் பெரும் அசதி விரவிக்கிடந்ததென்றால் அதை அதிகப்படுத்திக் காட்டும் வகையில் என்ன காரணத்தாலோ அவனது முகத்தில் கவலை ரேகைகள் படிந்து கிடந்தன.

சிங்களத் தண்டநாயகனின் பாசறைக்கு முன்னால் வந்திறங்கிய அவன் எதன் பேரிலும் கண்களையும் கவனத்தையும் திருப்பாமல் கூடாரத்திற்குள் நுழைந்தான். உள்ளே இப்போது இலங்காபுரன் இல்லை. நீராடச் சென்றிருப்பதாகச் சொல்லப் பட்டது. உண்மையில் இலங்காபுரன் நீராடச் செல்லவில்லை. மழவராயன் வருவதாகக் கேள்விப்பட்டதுமே கூடாரத்தை விட்டு வெளியேறினான் அவன். மழவராயனின் மனநிலையை மறைவிலிருந்து அறிந்து கொள்ளும் பொருட்டு.

அவ்வாறு மறைந்திருந்து கண்டுகொண்ட அவன் ஓரளவிற்கு மகிழ்ச்சியும் கொண்டு கூடாரத்திற்கு வந்து

tamilebooks.net

சேர்ந்தான். அவனும் மழவராயனும் ஒருமுறை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டார்கள்.

"உங்கள் வரவிற்கு என் நன்றி" என்றான் இலங்காபுரன்.

மழவராயன் சற்று யோசித்துவிட்டு, "அப்புறம்?" என்று ஏதோ கதையைக் கேட்பவன் போல் கேட்டதும், சற்றே வியப்புற்ற இலங்காபுரன், "அப்புறமா?" என்றான்.

"ஆம் தண்டநாயகரே. . . சம்பிரதாயச் சொற்கள் இன்னும் ஏதேனும் இருந்தால் சீக்கிரம் சொல்லி முடியுங்கள்."

"ஏனப்படி?"

"எனக்குச் சம்பிரதாயங்கள் பிடிப்பதில்லை. சம்பிரதாய வார்த்தைகளுக்கு நான் பதிலும் கூறுவதில்லை."

"உங்கள் பழக்கம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது மழவராயரே. . ."

"இதுவும் சம்பிரதாய வார்த்தைதான்."

இதைக் கேட்டுக் கடகடவென்று சிரித்த இலங்காபுரன், "நன்று நன்று" என்று சிலாகித்துக்கொண்டு, "ஓலையை நன்றாகப் படித்தீர்களல்லவா?" என்று கேட்டான்.

"நிதானமாகவும் படித்தேன்" என்றான் மழவராயன்.

"நன்றாகவும் நிதானமாகவும் படித்துவிட்டு, நேரிலும் வந்திருக்கிறீராதலால் உம்மிடம் விவேகமான பதிலை எதிர் பார்க்கிறேன்" என்று இலங்காபுரன் பரிபூரணமான நிதானத்துடன் கூறினான்.

"நானிங்குத் தயக்கமின்றி வந்திருப்பதிலிருந்து யாரைக் கண்டும் எதைக் கண்டும் அஞ்சுபவனில்லை என்பது உமக்குப் புரிந்திருக்கும் இல்லையா?"

"மேலே சொல்லும்"

"ஆகவே ஓலை மூலம் வெளியிட்ட உமது மிரட்டலைக் கண்டு நான் அஞ்சவில்லை."

"நான் மிரட்டியிருக்கிறேனா?"

"போரில் சந்திப்பதாகக் கூறியிருப்பதும் நாசத்தை விளைவிப்பதாகச் சொல்லியிருப்பதும் மிரட்டல்கள் தானே?"

"மழவராயரே, உமக்குச் சம்பிரதாயங்கள் என்பதெல்லாம் பிடிக்காத மாதிரி எனக்குச் சுற்றி வளைத்துப் பேசுவதும், பெயருக்குப் பேசுவதும் பிடிக்காத விஷயங்கள் போருக்கும், பெரும் நாசத்திற்கும் தயங்கமாட்டேன் என்று தான் நான் ஓலையில் கூறியிருக்கிறேன். அவை மிரட்டலுக்காகக் கூறப்

tamilebooks.net

பட்டவையல்ல என்பதைத் தென்பாண்டி மக்களைக் கேட்டால் சொல்வார்கள்."

"நான் சொல்வதெல்லாம் போர் என்று சொன்னால் பயந்து போய் நான் பணிந்து விடுவேன் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம் என்பதுதான்."

"நீர் அப்படி எண்ணுவீரானால் பேச்சை இத்துடன் நிறுத்திக்கொண்டு போரிலேயே சந்தித்துக் கொள்ளலாம்."

"வேண்டாம். போர் செய்வதற்காக நானிங்கு வரவில்லை" என்று கூறிக்கொண்ட மழவராயன் சற்றே தணிந்த நிலையில், "என்ன உதவியை எதிர்பார்க்கிறீர்கள்" என்று வினவினான்.

"முதலாவது, பாண்டியனுக்கு நீர் உதவக்கூடாது."

"ம். . ."

"இரண்டாவது, உமது மங்கலம் வழியாக எனது படைகள் பொன்னமராவதியை அடைய வழி தர வேண்டும்."

"ம். . ."

"மூன்றாவது, பாண்டியனைப் பற்றிய விவரங்களை எனக்குக் கூறி உதவ வேண்டும்."

"ம். . ."

"என் படைகளுக்குத் தேவையான உணவளிக்க வேண்டும்."

"இவ்வளவுதானா?"

"என் கட்சியில் இருக்க வேண்டும்—சிறிது நாட்களுக்கு."

"இவற்றையெல்லாம் செய்தால் நீர் என்மீது போர் தொடுக்க மாட்டீர். நாசம் விளைவிக்க மாட்டீர்."

"ஆம்."

"பரிசு?"

"உமது இன்றைய நிலை மறையும். புதிய நிலை மலரும். அது உயர்ந்த நிலையாக இருக்கும்."

"அதாவது. . ."

"நீர் மேலை மங்கலத்தை விரும்புகிறீராம். . ."

"ஆம்."

"அது மிகவும் செழிப்பான பகுதி வேறு."

"உண்மை."

"அந்தச் செழிப்பான பகுதி உமக்குச் சொந்தமாகும். அதற்கு நீர் மன்னராகலாம். சுதந்திரமாய் ஆட்சி செய்யலாம்."

tamilebooks.net

"எவ்வளவு துரதிஷ்டம்?"

"ஏன்?"

"நீர் சிங்களவர். வேற்று நாட்டுக்கு வந்து வேற்று நாட்டு மண்ணை எனக்களிப்பதாகச் சொல்கிறீர். இது துரதிஷ்டமானதில்லையா?"

"பாண்டிய மன்னன் இவ்வாறு அளிக்க முன் வருவதாயிருந்தால் எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை" என்று சொன்ன இலங்காபுரன், மழவராயனின் முகத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "ஏன் மழவராயரே, நீர் பராக்கிரம பாண்டியரின் கட்சியா? அல்லது குலசேகரனின் கட்சியா?" என்று வினவினான்.

"நான் யார் கட்சியிலும் இல்லை. நடுநிலைமையே வகித்தேன்."

"மழவராயரே, அரசியலில் போய் நடுநிலைமை வகித்ததாகச் சொல்கிறீரே, அப்படி இருக்க உமக்கு அறிவுரை சொன்னவன் யார்? அரசியலில் சந்தர்ப்பத்தைத் தவிர நம்மைக் காக்கும் கருவி வேறு எதுவும் இல்லை. நடு நிலைமை வகித்த உம்மை இன்று இரண்டு பாண்டியர்களுமே அல்லவா கைவிட்டு விட்டார்கள்? இந்த நிலை துரதிஷ்டமானதா, அல்லது எங்கிருந்தோ வந்த நான் உமக்கு அளிக்க முன் வருகிறேனே, இது துரதிஷ்டமானதா? சொல்லும்."

மழவராயன் உடனடியாக இது விஷயமாக எதுவும் பேசவில்லை. சற்றுப் பொறுத்து, "நான் இந்த உதவிகளை யெல்லாம் செய்வேன் என்று எதிர்ப்பார்க்கிறீர்களா?" என்று கேட்டான்.

"நீங்கள் உதவவில்லையென்றால் என் வழியைப் போரினால் தேடிக்கொள்கிறேன்" என்றான் இலங்காபுரன்.

"என்னிடம் உதவி கோருவதற்கு என்ன காரணம்?"

"அரசியல் விவேகி நீர். புரிந்து கொள்ளும் மழவராயரே. நான் விளக்கிச் சொல்ல என்ன இருக்கிறது? ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தேன். அதைச் செய்யக் கூடியவர் நீர்தான் என்பதை உணர்ந்தேன். உம்மால் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதை அறிந்தேன். அதற்கான காலமும் நிலவுகிறது என்பதையும் தெரிந்து கொண்டேன். செயலைச் செய்பவன் — அவன் செய்யக்கூடிய செயல் — அச்செயல் நிறைவேற்றப்படும் சமயம் இம்மூன்றையும் ஆராய்ந்து முனைபவன்தான் வெற்றி பெறமுடியும். ஆகவேதான் நீர் அழைக்கப்பட்டிருக்கிறீர் உதவிக்கு."

tamilebooks.net

"தண்டநாயகரே, பாண்டியனை உமக்கு நான் காட்டிக் கொடுத்தால் நாளைக்குப் பாண்டிய நாட்டு மக்கள் என்னை இகழ்வார்கள்."

"அதனால்தான் ஒரு பாண்டியனை இன்னொரு பாண்டியன் கொலை செய்துகொண்டான் போலிருக்கிறது" என்று இகழ்ந்து கூறிய இலங்காபுரன், "இன்றைய நிலையைப் பாரும் மழவராயரே. பாண்டியனைப் பாண்டியனே கொன்றிருக்கிறான். மக்களென்ன அவனைத் தூற்றிக் கொண்டா நிற்கிறார்கள்? நடுநிலைமை வகித்து நின்றீர்களே நீங்கள், உங்களையென்ன வாழ்த்திக் கொண்டா இருக்கிறார்கள்?"

"அரசியலில் அசம்பாவிதங்கள் நடக்கும்போது மக்கள் சந்தர்ப்பங்களைத்தான் கவனிக்கிறார்களே தவிர சம்பவங்களை அல்ல. மக்களுக்கு யார் ஆள்கிறார்கள் என்பதை விட எப்படி ஆள்கிறார்கள் என்பதுதான் முக்கியம். அதைத்தான் அவர்கள் பார்க்கிறார்கள். சிங்கள மன்னரால் தற்போதைய பூசல்களை ஒழித்து வீரபாண்டியரின் மூலம் நல்லாட்சி தரமுடியும். அப்படி முடியும் பட்சத்தில் பாண்டியனை எங்களுக்கு நீங்கள் காட்டிக் கொடுப்பதை மக்கள் இகழ்வார்களா? பாராட்டுவார்கள் மழவராயரே. உமது நடவடிக்கையால் நல்லாட்சியும், நல்ல திருப்பமும் கிடைத்ததாக மகிழ்வார்கள். உம்மைப் போற்றுவார்கள். நீர் காணப்போவது இந்த நிலையைத்தானே தவிர மக்கள் இகழும் நிலையை அல்ல. மழவ நாடு உமக்குக் கிடைப்பதென்பது எளிதான விஷயமல்ல என்பதையும் நீர் மறந்து விட வேண்டாம்" என்று மிகவும் சாதுரியமாகப் பேசினான் இலங்காபுரன்.

அவனது பேச்சு மழவராயரின் மூளையை முற்றிலுமாய்ச் சலவை செய்திருந்தது. பாண்டியனாகத் தனக்கு மேலை மங்கலத்தை அளிப்பதென்பது குதிரைக் கொம்புதான் என்பதையும் தற்போதைய வாய்ப்பை விட்டால் தான் கடைத்தேற முடியாது என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்ட மழவராயன், "உம்மை எப்படி நம்புவது?" என்று முடிவாகக் கேட்டான்."

"உமக்கு நம்பிக்கை வர என்ன செய்யவேண்டும் என்று நீரே கூறும். செய்ய சித்தமாய் இருக்கிறேன்" என்று மழவராயரின் பேரிலேயே சாமர்த்தியமாகத் திரும்பினான் இலங்காபுரன்.

மழவராயனுக்கு என்ன பேசுவதென்று விளங்கவில்லை. "சரி தண்டநாயகரே. . . உமக்கு நான் உடன்படுகிறேன். உதவுகிறேன். இன்று முதல் நாம் நண்பர்கள். பொன்னமராவதி வீழ்ந்ததும் எனக்கு உமது பரிசு கிடைக்கவேண்டும்." என்றான்.

tamilebooks.net

"மகிழ்ச்சி மழவராயரே. . . நிச்சயம் செய்கிறேன். போய் ஓய்வெடுத்துக் கொள்ளும். இரவில் போர்த் திட்டங்களைப் பற்றிப் பேசுவோம்" என்று கூறிய இரலங்காபுரன், மழவராயன் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி கட்டளையிட்டான்.

ஃஃ ஃஃ ஃஃ

அன்றிரவு மிகவும் திருப்தியான முறையில் மந்திராலோசனை துவங்கியது.

திட்டத்தை விளக்க முற்பட்ட இலங்காபுரன், "மழவராயரே, உம்மிடம் தற்போதுள்ள படை எண்ணிக்கை எவ்வளவு?" என்று கேட்டான்.

"ரொம்ப அதிகமும் இல்லை. ரொம்பக் குறைவும் இல்லை" என்றான் மழவராயன்.

"சுற்றி வளைக்க வேண்டிய அவசியமோ மறைத்துப் பேசவேண்டிய அவசியமோ இங்கில்லை. ஆகவே நேரடியான பதில்களையே சொல்லும்."

"சுமார் பத்தாயிரம் இருக்கும்."

"நல்லது" என்று சிலாகித்த இலங்காபுரன், "உமது பெரும் படை அணிவகுத்து தொண்டியை நோக்கி முன்னேற வேண்டும் மங்கலத்திலிருந்து" என்றான்.

"எனது படையா"

"ஆம். ஆனாலும் உமது படை போரில் ஒன்றும் இறங்க வேண்டாம். அதைச் சிங்கள வீரர்கள் பார்த்துக் கொள்வார்கள்"

"அதெப்படி"

"மழவராயரே, நீர் அணிவகுக்கும் உமது படையின் முகப்பிலும், ஓரங்களிலும் என் வீரர்கள் சொற்ப எண்ணிக்கையில் இருப்பார்கள். எதிரிகளுக்கு இந்தப் படைகள் ஒட்டு மொத்தமாகச் சிங்களப் படைகள் என்றே கருத வழிவகுக்கும். அதற்கு ஏற்ப உங்கள் வீரர்கள் அனைவரும் சிங்களக் கொடிகளையே ஏந்தி நிற்கட்டும். முடிந்தவரை எங்களைப் போலவே உடுப்புகளை அணிந்திருக்கட்டும்."

"எதற்காக இப்படி?"

"இவ்வாறு அணிவகுக்கும் படை தொண்டியை நோக்கி நகர வேண்டும். தொண்டியைத் தாக்க வேண்டாம். தாக்குவது போல் போக்கு காட்டிக் கொண்டிருந்தால் போதும்."

tamilebooks.net

"அதாவது. . ."

"திடீர் திடீரென எல்லைப் புற காடுகளைக் கொளுத்துங்கள். ஊர் முகப்புகளை நாசப்படுத்த முனைவது போல் போக்குக் காட்டுங்கள். போரெதிலும் ஈடுபட வேண்டாம்."

"சரி. . ."

"இப்படி மூன்று நாட்களுக்குக் கண்ணாம்பூச்சி விளையாட்டு நடத்துங்கள். தொண்டி, பாசிப்பட்டினம் ஆகிய இரண்டு ஊர்களில் கவனமும் உங்கள் மீதே இருக்கும். பொன்னமராவதியை யாரும் கவனிக்க மாட்டார்கள்."

"புரிகிறது."

"எது?"

"நாங்கள் இப்படி நடந்து கொண்டிருக்கும்போது நீங்கள் பெரும் படையுடன் மங்கலத்தின் வழியாகப் பொன்னமரா வதியை அடைந்து விடுவீர்கள்."

"ஆம்."

"ஏன் தண்டநாயகரே, நாங்கள் தொண்டியை நோக்கிப் போகிற வேளையில் மதுரையில் இருக்கும் குலசேகரப் பாண்டியன் எங்களுக்குப் பின்னால் வந்தால்?"

"வரமாட்டான் வருபவனாய் இருந்தால் இப்போதே வந்திருப்பான். மதுரைக் கோட்டையை விட்டு அவன் வெளியே வருவது அவனுக்கு மிகவும் ஆபத்தானது. அதோடு அவனை வெளியே இழுக்கத்தானே அனைத்தையும் செய்கிறேன். நீர் எண்ணுகிற மாதிரி அவன் உம்மை நோக்கி வந்தால் நமக்கு காரியம் எளிதாகி விடுகிறது. நீர் தொண்டியைத் தாக்கும். நான் குலசேகரப்பாண்டியனை மங்கலத்தில் சந்தித்துக் கொள்கிறேன்" என்ற இலங்காபுரன், "அவன் அவ்வளவு சீக்கிரமாக வெளியே வரமாட்டான்" மழவராயரே. அந்தக் கவலையை விடும். இரண்டு நாட்களுக்கு நீர் தொண்டியில் போர் நாடகம் ஆடிவிட்டு, மங்கலத்திற்கே பின்வாங்கிவிடும். மற்றதை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான்.

"என்ன செய்வீர்?"

"பொன்னமராவதியிலிருந்து ஒரு பிரிவை அனுப்பித் தொண்டியை அழித்து விடுகிறேன்."

"அதற்கு முன்பாகவே எங்களைப் பற்றிய உண்மையை அறிந்து தொண்டிப் படைகள் பொன்னமராவதியை நோக்கி வந்தால் என்ன செய்வீர்?"

tamilebooks.net

"பொன்னமராவதியில் ஆர அமர்ந்தபடி அவற்றை முறியடித்து அனுப்புவேன்."

இதைக் கேட்டுச் சிரித்த மழவராயன், "ஏதோ பொன்னமராவதி உமது கைகளுக்குக் கிடைத்துவிட்ட மாதிரிப் பேசுகிறீர்களே? தண்டநாயகரே, பொன்னமராவதியில் பாண்டியனின் கணிசமான படைப்பிரிவு ஒன்றிருக்கிறது. பொன்னமராவதி கோட்டை பலமானது. அதன் தலைவனான நிஷதராசன் பெரும் திறமைசாலி" என்றான்.

"நீர் இருக்கும்போது எனக்குக் கவலையில்லை மழவராயரே. . ."

"நான் என்ன செய்ய முடியும்?"

"காதை இப்படிக் கொண்டு வாரும்" என்று கூறிய இலங்காபுரன் மழவராயனின் செவியில் ஏதோ ரகசியம் பேசினான்.

அவனது ரகசிய வார்த்தைகள் தேள் கொட்டுவது போலிருந்தன மழவராயனுக்கு தன் விதியை எண்ணித் தன்னை நொந்து கொள்ளவும் செய்தான்.

20

"வினைபகை என்றிரண்டில் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத்தெறும்."

—குறள் 674

மழவராயன் பொன்னமராவதியைப் பற்றிப் பிரஸ்தாபித்து அதைப் பற்றியதொரு பிரமையை உண்டாக்கியதும், "நீர் இருக்கும்போது எனக்கென்ன கவலை?" என்று கூறிக்கொண்ட இலங்காபுரன் அந்தப் பிரமையை உடனடியாக உடைக்கும் வகையில், "பொன்னமராவதிப் போரில் நீர் உதவ வேண்டும். ஆனால் போரில் கலந்து கொள்ள வேண்டியதில்லை" என்றான்.

மழவராயனுக்கு உடனே சற்று கோபம் உண்டாகி விடவே, "தண்டநாயகரே, என் வீரம் குறித்தும் வாளைக் குறித்தும் சந்தேகம் வந்து விட்டதா உங்களுக்கு? சோதித்துக் கொள்ள விரும்பினால் இங்கேயே நானதற்குத் தயாராக இருக்கிறேன்" என்றான்.

"மழவராயரே, ஒன்றைத் தெரிந்து கொள்ளும் - வீரமில்லாதவரை நான் நாடுவதில்லை. சந்தேகத்திற்குரியவரிடம் உதவி கோருவதுமில்லை. உமது வாளுக்கு இப்போது

tamilebooks.net

வேலையில்லை. அதைவிடக் கூர்மையான அறிவுக்கே முக்கிய வேலையிருக்கிறது. அதைத்தான் சோதிக்கப் போகிறேன் நான்."

"எப்படி?"

"பொன்னமராவதியின் கோட்டைத் தலைவன் உமது நண்பன்தானே?"

"ஆம்."

"பிறகென்ன? எளிதாகிவிட்டது."

"எது?"

"உற்ற நண்பனுக்கு நீர் ஓர் அழைப்பு விடுத்து மங்கலத்தில் விருந்து வைத்தாலென்ன? குறைந்தா போய் விடுவீர்"

"விருந்தா? இப்போதா? எதற்கு?"

"அப்போதுதான் நான் அங்கே விருந்துண்ணலாம்."

"எங்கே?"

"பொன்னமராவதியில்."

மழவராயனுக்கு இலங்காபுரனின் திட்டம் மெள்ள மெள்ள புரியலாயிற்று பொன்னமராவதி கோட்டைத் தலைவனை வஞ்சமாக மங்கலத்திற்கு அழைத்து சிறை செய்துவிட்டால் இலங்காபுரன் பொன்னமராவதியைப் பிடிக்க வசதியாக இருக்கும் என்பதே அவனது திட்டம் என்பதைப் புரிந்து கொண்ட மழவராயன் "தண்ட நாயகரே, நிஷதராசனை நான் சிறை செய்து விட்டால் நீங்கள் வெற்றி பெற்று விடுவீர்களா?" என்று கேட்டான்.

"நிச்சயம்."

"நிஷதராசன் இல்லாவிட்டாலும் கோட்டையை அவ்வளவு எளிதாகப் பிடிக்க முடியாது."

"அதாவது உடல் மிகவும் வலுவானது என்கிறீர்."

"உடலா?"

"ஆம். கோட்டை உடல். கோட்டைத் தலைவன் தலை. தலையை நீர் நீக்கி விடுகிறீர்."

"நீக்கி விட்டால். . ."

"தலையில்தானே மூளை இருக்கிறது?"

"சரி."

"மூளை போனபின் வெற்றுடலுக்கு வலுவேது? மழவராயரே, தலையை நீக்கும் வேலையை நீர் பார்த்துக்

tamilebooks.net

கொண்டால் போதும். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். அந்த நிஷதராசன் குலசேகர பாண்டியனை ஆதரிப்பவன். எனவே நீரும் குலசேகரனை ஆதரிப்பவர் போல் நடியும். அவனிடம் குலசேகர பாண்டியனுக்கு ஆதரவு தருவது பற்றிப் பேசும். உம்மை நம்புவான். அந்த நம்பிக்கைப் போர்வையை அவன் மீது போர்த்தி நட்புக் கயிற்றால் இறுகக் கட்டி மங்கலத்திற்குக் கொண்டுவந்து சிறையில் வையும். அதற்குப்பின் உமது படைகளைத் தொண்டிக்கு அனுப்பும். பிறகு நானிருக்கிறேன்."

மழவராயன் மேற்கொண்டு எதையும் பேசவில்லை. இலங்காபுரனின் திட்டங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்ட அவன் அதிலிருந்த ஆபத்தையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான். திட்டங்கள் வெற்றியைத் தேடித்தராமல் போகாது என்றாலும் அவற்றால் தனக்கு அவப் பெயர் கிடைப்பது நிச்சயம் என்பதையும் உணர்ந்து கொண்ட அவன் மனஅழுத்தம் நிரம்பியவனாய் இலங்காபுரனிடமிருந்து விடைபெற்றான்.

மழவராயனின் உதவிகள் இங்காபுரனைப் பொறுத்தவரை வரப்பிரசாதங்களாகவே அமைந்தன. அவனது திட்டங்கள் அப்பழுக்கின்றி இருந்தாலும் மழவராயனின் உதவியின்றி வெற்றிபெற முடியாது என்பதை நன்றாய் அறிந்திருந்தான் அச்சிங்களன். நாளைப் பற்றியும் வேளை பற்றியும் அவனுக்கு நம்பிக்கையில்லைதான். ஆனால் நடந்த சம்பவங்கள் என்னவோ 'அவன் வந்த வேளை நல்ல வேளை' என்று நிரூபிக்கிற மாதிரிதான் இருந்தன.

மங்கலத்திற்குத் திரும்பிய மழவராயன் ஒரே வாரத்தில் நிஷதராசனைச் சிறை செய்துவிட்டு, இலங்காபுரனுக்குச் செய்தியை அனுப்பிவிட்டு, தன் படைகளைத் தொண்டிக்கு அனுப்பியும் வைத்தான். அவனது நடவடிக்கைகளை அசையாத இமைகளோடு கவனித்தபடி இருந்த இலங்காபுரனும் பொன்னமராவதியை நோக்கித் தன் படைகளை நகர்த்தினான். இடையில் தனது படைகள் மதுரையை நோக்கி வந்து கொண்டிருப்பதாகப் பொய்ச் செய்தியையும் உலவ விட்டான். இதனால் மதுரையிலும் தொண்டியிலும் குழப்பம் ஏற்பட்டன.

இலங்காபுரனை நோக்கிப் படைகளை நடத்தலாம் என்றான் விக்கிரம பாண்டியன். குலசேகரப் பாண்டியனோ அவனது யோசனையை ஏற்கவில்லை. மதுரையை விட்டு நகருவது பேராபத்து என்று கூறி நிராகரித்தான். தொண்டியில் இருந்த படைகளோ இலங்காபுரனின் பொய் செய்தியால்

tamilebooks.net

குழம்பியிருந்தபோது அவைகளை மழவராயனின் படைகள் நெருங்கின.

இந்த நிலையில் தொண்டிப் படைகள் அங்கேயே தேக்கப்பட்டன. மழவராயன் படைகளும் தம் திட்டப்படி தொண்டிப் படைகளுடன் நேரடித் தாக்குதலில் ஈடுபடவில்லை. எல்லையில் நாச வேலைகளைத் திருட்டுத்தனமாகச் செய்வதில் முனைந்தன. அப்படைகளைச் சிங்களப் படைகள் என்றே நம்பியிருந்த நிலையில் அவைகளின் நடவடிக்கைகளையும் நோக்கத்தையும் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தான் தொண்டியில் இருந்த பாண்டியர் உபதளபதி வங்கார முத்தரையன்.

குழப்பப் புகை நன்றாகப் புகைந்து விட்டிருந்த நிலையில் இலங்காபுரனின் படைகள் புயல்போல் ஊடுருவி பொன்னமராவதியை அடைந்தன. அவன் எதிர்பார்த்த மாதிரியே காரியங்களும் நடந்தன. நிஷதராசன் இல்லாத பட்சத்தில் திடீரெனத் தோன்றிய மாபெரும் இலங்காபுரனின் படைகளைக் கண்ட பொன்னமராவதிப் படை திகைத்தது. கோட்டை முற்றுகையை நிறுவிய இலங்காபுரன் கோட்டையில் இருந்த உபதலைவனுக்கு ஓலை ஒன்றையும் அனுப்பினான். அந்த ஓலையில் நிஷதராசன் சிறை பிடிக்கப்பட்டச் செய்தியையும், மழவராயனின் நடவடிக்கையையும் வெளிப்படையாகத் தெரிவித்து கோட்டை நிர்க்கதியில் இருப்பதை உணர்த்தி அதைத் தன்வசம் ஒப்படைக்கும்படி மிரட்டியிருந்தான். அவன் எண்ணிய மாதிரியே பொன்னமராவதிப் படைகளால் அவற்றை நம்பாமல் இருக்க முடியவில்லை. நம்பிய காரணத்தால் திகிலடைந்தன. திகில் குழம்ப வைத்தது. குழப்பம் செயலற்றிக்கச் செய்தது. இவற்றையெல்லாம் கணக்கிட்டு வைத்திருந்த இலங்காபுரன் ஓலையனுப்பிய கையுடன் திடீர்த் தாக்குதலையும் துவக்கினானாதலால் கோட்டைப் போர் எளிதில் முடிந்தது. பாண்டியர் படைகளைக் காட்டிலும் பலமடங்கு பெருத்திருந்த சிங்களப்படை மணல் வீட்டை எதிர்ப்பதுபோல் கோட்டையைத் தாக்கிக் கதவுகளைத் தகர்த்தன. கோட்டைக்குள்ளும் போரென்ற பெயரில் நாச வேலைகள் நடந்தன. பாண்டிய வீரர்கள் தயவு தாட்சண்யமின்றி கொல்லப்பட்டார்கள். பாண்டிய வீரர்களைச் சிறை செய்வதில் அக்கறை காட்ட வேண்டாம் என்றும் முடிந்தவரை கொன்று விடும்படியும் இலங்காபுரன் திட்டமாகக் கட்டளையிட்டிருந்தானாதலால் அரக்கனிடம் சிக்கிய குழந்தைகளைப்போல் பாண்டிய வீரர்கள் அழிக்கப்பட்டார்கள். கோட்டை சிங்களவர் வசமாயிற்று.

tamilebooks.net

பொன்னமராவதியைப் பிடித்த கையுடன் தனது படைகளில் பெரும்பகுதி ஒன்றைத் தொண்டியை நோக்கி நடத்தினான் இலங்காபுரன். அவனப்படி முன்னேறிய வேளையில் மழவராயனின் படைகள் தொண்டியிலிருந்து பின்வாங்கிக் கொண்டதால் தொண்டியில் இருந்த பாண்டியர் முகாமில் பீதியும் குழப்பமும் வலுத்தன. தோன்றக் கூடாத இவ்விரண்டும் தோன்றி விட்ட நிலையில் இலங்காபுரனின் படைகளும் அங்கே தோன்றி விட்டதால் பிரளய கால கலக்கமே உண்டாயிற்று.

வெற்றி மிதப்பில் இருந்த இலங்காபுரன் மேலும் வெற்றி பெற வேண்டிய நிலையில் வெறித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டான். போர் பேரிகைகள் தொண்டித் துறைமுகமெங்கும் எழுந்தன. ஆனால் இந்த பேரொலிகளின் எதிரொலிகளில் பெரும் அட்டகாசத்தையே நடத்தியது சிங்களப்படை. போர் நெறிகள் சிங்களக் கொடிகளைப் போலவே காற்றில் பறக்க விடப்பட்டன. போர் ஒழுக்கம் அக்காற்றில் அடித்துச் செல்லப் பட்ட தூசுகளாய் மறைந்து போயின. தொண்டியில் இருந்த பாண்டியரின் போர்ப் பாசறைகள் மட்டுமின்றி நகர மக்களின் வீடுகளும், குடியிருப்புப் பகுதிகளும் கொளுத்தப்பட்டன. எதிர்பட்டவர்கள் சிங்களவரின் வாள் பட்டு மரணத்தின் வாய்ப்பட்டார்கள். ஒதுங்க நினைத்தவர்களும் மறைய முயன்ற வர்களும் விரட்டப்பட்டு வெட்டப்பட்டார்கள். தமிழகத்திற்கு என்ன வந்து விட்டாதோ என மக்களெல்லாம் கதறி ஓடும் அளவிற்குத் தன் நடவடிக்கைகளைத் தேர்ந்தெடுத்துச் செய்தான் இலங்காபுரன். செய்யும் செயலையும் படை நடவடிக்கை களையும் மிச்சமின்றிச் சரிவரச் செய்யாது விட்டுவிட்டால் அந்தக் குறையானது பிறகு பெரிய கேடு விளைவித்து விடுமாதலால் அனைத்தையும் கச்சிதமாகச் செய்தான். அவனது படைவீரர்களின் வாளுக்கும் வாளை நிகர்க்கும் கைகளுக்கும் பலியானவர்கள் சிந்திய ரத்தம் ஆறாகி கரைபுரண்டோடி வங்கக் கடலில் விழுந்ததால் காலமெல்லாம் நீலத் துகில்போல் நிலவும் அக்கடலும் செங்கடலாகியது. இல்லையென்றால் இலங்கையின் அரச மரபு நூலான மகாவம்சம் 'இலங்காபுரன் தொண்டியிலும் பாசியிலும் போரிட்டு நீல வங்கக் கடலைக் குருதியால் சிவப்பாக்கினான்' என்று அவனைப் பாராட்டியிருக்குமா?

ஃஃ ஃஃ ஃஃ

புயலின் அட்டகாசத்திற்குச் சிறிதும் குறைவில்லாத அழிவு வேலைகள் பாண்டிய மண்டலத்தில் பரவலாக நடந்திருந்த நிலையில் பாண்டியர் தலைநகரான மதுரையம்பதியில்

tamilebooks.net

பேரரண்மனைக்கூடத்தில் அமர்ந்திருந்தவர்கள் புயலின் வாசனையைக் கூட அறியாத தொலைதூரத்து மலைப் பாறைகளைப் போல் சோகச் சிகரங்களாக அமர்ந்திருந்தார்கள். மன்னன் முதல் பல்வேறுபட்ட அதிகாரிகளும் தளபதிகளும், தலைவர்களும் அமர்ந்திருந்த அந்த அவையில் என்ன காரணத்தினாலோ நீண்டநேரமாக அமைதியே நிலவியது. பேச முடியாதவர்களாய்ச் சிலரும் பேச விரும்பாதவர்களாய்ச் சிலரும் அங்கிருந்தார்கள். இந்த நிலையில் மன்னனே அமைதியைக் கலைக்க முற்பட்டு, "ஆலோசனை அவையில் நீண்ட நேரமாக அமைதி நிலவுவதைப் பார்த்தால் இது ஆலோசனை அவைதானா என்று சந்தேகமாக இருக்கிறது. உங்கள் அனைவரது அமைதிக்கும் காரண மென்னவென்பதும் புரியவில்லை" என்றான்.

அங்கிருந்தவர்கள் சங்கடம் அடைந்தார்கள். பிறகு பிரதம சேனாதிபதி பேச முற்பட்டு, "எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏதேதோ நடந்து விட்டன" என்றான் ஏதோ பீடிகையைப் போடுவது போல்.

"அதாவது பொன்னமராவதி பிடிபட்டு விட்டதைச் சொல்கிறீரா?" என்று வினவினான் மன்னன்.

"அது மட்டுமல்ல முக்கியத் துறைமுகமான தொண்டியும், பாசிப் பட்டினமும் கூட சிங்கள வசமாகி விட்டன" என்றான் சேனாதிபதி.

"பாண்டிய நாட்டின் கடல்வாயில் அடைபட்டுவிட்டது" என்றான் கடற்படை தளபதி.

"சோழ பாண்டிய எல்லையின் பிரதான கோட்டையான பொன்னமராவதி தற்போது இலங்காபுரனின் கையில் இருப்பதால் இரு நாடுகளையும் இருந்த இடத்திலிருந்தபடியே கவனிக்க வசதியாகிவிட்டது. . ." என்றான் வேறொரு தளபதி.

"முக்கியப் பட்டினங்கள் பறிபோனது மட்டுமல்ல. ஊர் மக்களுக்குப் பெரும் நஷ்டம் உண்டாகியிருக்கிறது. மக்களில் நிரம்ப பேர் கொல்லப்பட்டு விட்டார்கள் நம்மைச் சபிக்கும் அளவிற்குத் துயரங்கள் நேர்ந்துவிட்டன" என்றான் பாசிப் பட்டினத்தின் கோட்டைத் தலைவன் கருணாகரத்தேவன் இலங்காபுரனுடன் போர் நிகழ்ச்சி தோல்வியுற்று வந்திருந்ததால் அவனுடலில் போர்க் காயங்கள் பசுமையாக இருந்தன.

இப்படிப் பலர் சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்ட மன்னன் தன் புதல்வனின் பக்கம் திரும்பி, "நீ ஒன்றும் சொல்லவில்லையே விக்கிரமா" என்றான்.

tamilebooks.net

"நான் எதையும் கூற விரும்பவில்லை தந்தையே..." என்றான் விக்கிரம பாண்டியன். அவன் குரலில் வறட்சி தெரிந்தது.

"ஏனப்படி?" வினவினான் மன்னன்.

"பேச்சுக்கள் பயனில்லாமல் போகும்போது மேன் மேலும் பேச யாரும் விரும்ப மாட்டார்கள்..."

"என்ன சொல்கிறாய் நீ..."

"நான் பேசியவைகளைக் கேட்வும் ஏற்றுக் கொள்ளவும் இங்கு எவரும் இல்லாதபோது நான் மௌனமாய் இருப்பதே சரி..."

"விக்கிரமா, நீ நாட்டின் இளவரசன். உன் மீது நிரம்ப பொறுப்புக்கள் இருக்கின்றன."

"ஆகவே தான் பேசினேன். யோசனைகளைச் சொன்னேன். நீங்கள் நிராகரித்து விட்டீர்கள்."

"நீ சொன்ன யோசனை தான் என்ன?"

"தந்தையே, இலங்காபுரன் தென்பாண்டி மண்டலத்தை விட்டுப் புறப்பட்டதுமே அவனை நோக்கிப் படைகளை செலுத்தும்படி கேட்டுக் கொண்டேன் நான். மதுரையை நோக்கி அவன் முன்னேறுவதாய்க் கிடைத்த செய்தியெல்லாம் நம்பத்தகுந்தவைகளல்ல என்றேன் நான். நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லை..."

இங்கே குறுக்கிட்டான் சேனாதிபதி.

"நமது படைகள் இளவல் கூறியபடி நகர்ந்திருந்தால் இலங்காபுரனைப் பொன்னமராவதியை அடைய முடியாமல் செய்திருக்கலாம். மேலை மங்கலத்தில் அவனை நாமும், பொன்னமராவதிப் படைகளும், தொண்டிப் படைகளும், பாசிப் படைகளும் நாற்புறங்களில் வளைத்து எளிதில் ஒடுக்கியிருக் கலாம். அந்த வாய்ப்பு போய் விட்டது."

மன்னன் புன்னகையொன்றை உதிர்த்துவிட்டுச் சொன்னான்:

"நீங்கள் அனைவரும் ஒருபுறமாகவே யோசிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இலங்காபுரனின் கண்ணோட்டத்தில் சற்று யோசியுங்கள். அவன் தற்போது செய்த போர்களும் சரி... இதர நடவடிக்கைகளும் சரி... எதற்காக என்று யோசித்தீர்களா? நம்மை மதுரையை விட்டு வெளியே இழுக்கதான். மதுரையின் மீதே கண்ணாய் இருக்கின்றான் அவன். அவன் அனுப்பிய வஞ்சகமான செய்திகள் கூட இந்த நோக்கத்தைத்தான் தெரிவிக்கின்றன. அப்படி இருக்கும்போது அவனைத் தேடி நாம் செல்ல நினைப்பது விவேகமானதுதானா? நீங்கள் சொல்வது

tamilebooks.net

போல் நாம் முன்னேறுவதாகவே வைத்துக் கொள்வோம். அதில் நமது வெற்றி நிச்சயம் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? நம்மை வெளியேறும் பட்சத்தில் எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று யோசிக்காமலா இருப்பான்? அவனது முயற்சியில் நமது மழவராயன் தந்திருக்கும் உதவியையும் ஆதரவையும் மறந்து விடாதீர்கள். அவன் நம் கட்சியில் இருந்திருந்தால் நீங்கள் எண்ணுவது போல் இலங்காபுரனை மங்கலத்தில் ஒடுக்கி விடுவது சாத்தியமாகலாம். ஆனால் அவன் துரோகியாகி விட்ட நிலையில் உங்கள் யோசனை எப்படி நிறைவேறும்? பெரும்படையுடன் வந்திருப்பவன் இலங்காபுரன். அவனைத் தேடி நாம் போனால் படையின் ஒரு பகுதியை நம்மைச் சந்திக்க விட்டுவிட்டு மற்றொன்றைப் பொன்னமராவதிக்கு அனுப்பி யிருப்பான். மழவராயனின் படை வெளிப்படையான போரிலேயே ஈடுபட்டுத் தொண்டியையும் பாசியையும் கவனித்துக் கொள்ளும். ஒரேசமயத்தில் நமது அனைத்துப் படைகளும் ஒடுக்கப்பட்டுவிடும்..."

"மன்னவா, தற்போது மட்டும் நாம் என்ன சாதகத்தைப் பெரிதாய் அடைந்துவிட்டோம்? மதுரை நிலைத்திருக்கிறதே தவிர மற்றதெல்லாம் போய்விட்டன. கடல் வழி நமக்குத் தடைபட்டு விட்டது. கடல் பட்டிணங்கள் அவன் வசமிருக்கின்றன. ராமேஸ்வரமும் அவன் வசமாகியிருக்கும். சிங்களப் படைகள் சிங்களத்திலிருந்து மேலும் வரவும் தமிழகத்தில் நிம்மதியாய் நுழைந்து அணிவகுக்கவும் அவனுக்குத் தற்போது வசதியாகிவிட்டது. ஒட்டுமொத்தமாய் அவனது படைகள் மதுரையை நோக்கி நகர்ந்து தாக்கும் அளவிற்கான சாத்தியங்களும் அதிகரித்துவிட்டன இப்போது" என்றான் சேனாதிபதி.

"சேனாதிபதி சொல்வது சரியானது தந்தையே அவனை பலமடைய நேரமும் வாய்ப்பும் நாம் தரவேண்டாம். அடுத்தடுத்த போர்களால் சற்றே பலவீனப்பட்டிருக்கக்கூடிய இந்நிலையில் அவனை நோக்கி நாம் முன்னேறுவோம். அவனை விரட்டியடிக்க இதுதான் நல்ல சந்தர்ப்பம்" என்றான் இளவல் விக்கிரம பாண்டியன்.

பலரும் அவன் கருத்தையே ஆமோதித்தார்கள். அப்போது முக்கிய செய்தியுடன் அவையில் பிரவேசித்தான் பாண்டிய ஒற்றன்.

tamilebooks.net

21

**"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொள்
தாமரைக் கண்ணான் உலகு"**

—குறள், 113

அவையோரது கவனமெல்லாம் ஒற்றனின் பால் திரும்பியது.

ஒற்றனும் சம்பிரதாயங்களையும் பீடிகைகளையும் பெரிதாகக் காட்டிக் கொள்ளாமல், "மன்னவா, மாண்டு விட்ட பராக்கிரம பாண்டியரின் புதல்வர் வீரபாண்டியரின் இருப்பிடம் தெரிந்துவிட்டது" என்று கூறி நிறுத்தினான்.

அவையோரின் முகங்களிலெல்லாம் வியப்புக்குறி வெளிப்பட்டது.

"எங்கிருக்கிறான் அவன்? "வினவினான் மன்னன்."

"மேலை மங்கலத்தில்."

"மழவராயனின் ஊரிலா இருக்கிறான்?"

"ஆம் மன்னவா. . . அங்கே வீரபாண்டியர் மட்டுமில்லை. . ."

"வேறு யார் இருக்கிறீர்கள்?"

"இலங்காபுரன் இருக்கிறான்."

இதைக் கேட்டதும் மன்னனின் முகத்தில் சிந்தனை படர்ந்தது.

"பொன்னமராவதியைப் பிடிக்க உதவியதால் மழவ ராயனுக்கு மேலைமங்கலம் இலங்காபுரனால் தானமாகத் தரப்பட்டது. இப்போது அங்கே வீரபாண்டியனும் இருக்கிறான். இலங்காபுரனும் இருக்கிறான். சதி செய்வதற்கு ஏற்ற இடம்தான்" என்று கூறிக் கொண்ட மன்னன் ஒற்றனிடம் "வேறு சேதி ஏதாவது உண்டா?" என்று வினவினான்.

"தன் ஆதரவாளர்களைத் திரட்டி கணிசமான படைப் பிரிவொன்றினை அமைத்திருக்கிறார்."

"அதெப்படி தெரியும் உனக்கு?"

"நானே நேரில் ஒட்டுக் கேட்டேன்."

"எங்கே?"

"மேலைமங்கலத்தில்."

"படை திரட்டப்பட்டிருப்பதாய் சொன்னது யார்?"

tamilebooks.net

"வீரபாண்டியர்."

"இலங்காபுரனிடம் சொன்னனா?"

"ஆம்"

"வேறு?"

"அறிய முடியவில்லை."

ஒற்றனை அவையை விட்டு அனுப்பிய மன்னன் அவையில் எதையும் பேசாமல் வெளியேறினான். அதையடுத்து வீரபாண்டியனின் படை எங்கே மறைந்திருக்கிறது என்பதை அறிந்து வரும்படி பற்பல ஒற்றர்களை ஏவினான். நாட்கள் பத்து ஆகியும் அது பற்றி விவரமேதும் கிடைக்கவில்லை அவனுக்கு. இந்த விவகாரத்தில் அவனுக்குள் ஏதோ ஒருவித சந்தேகம் இருந்து கொண்டே வந்ததால் இலங்காபுரனை நோக்கிப் படைகளை நகர்த்தும் யோசனையை நிராகரித்தான். அதோடு விக்கிரம பாண்டியனை மதுரையை விட்டே மறைந்து விடும்படி கூறிக்கொண்ட போது திகைத்துப் போய் நின்ற பாண்டியன், "என்ன சொல்கிறீர்கள் தந்தையே? நாடு ஆபத்தில் இருக்கும்போது நாட்டை விட்டு நான் ஓடிவிடுவதா?" என்று குழம்பியவனாய்க் கேட்டான்.

"ஆம் விக்கிரமா. நீ மதுரையில் இருக்கக் கூடாது" திட்டவட்டமாகச் சொன்னான் மன்னன்.

"ஏன்?"

"நாடு ஆபத்தில் இருக்கிறது."

"அப்படியிருக்கும்போது இங்கல்லவா இருக்க வேண்டும் நான்?".

"இல்லை விக்கிரமா. நாமும் நம் நாடும் இதுவரை கண்டிராத பேராப்த்தில் சிக்கியிருக்கிறோம். நமக்கு ஆதரவு தரவேண்டிய மழவராயன் சதியில் இறங்கியிருக்கிறான். இலங்காபுரனின் நடவடிக்கைகளால் சிங்களவரின் கை ஓங்கியிருக்கிறது. இந்த நிலையில் மறைந்திருந்த நச்சுப் பாம்பான வீரபாண்டியனும் வெளிப்பட்டு அவர்களோடு சேர்ந்து கொண்டிருக்கிறான். போதாத குறைக்கு அவன் தனிப்படையொன்றைத் திரட்டியிருக்கிறான். அதன் இருப்பிடமும் தெரியவில்லை. அசைவும் தெரியவில்லை. அனைத்தையும் பார்க்கும்போது விபரீதங்களை நான் எதிர்பார்க்கிறேன் விக்கிரமா."

"என்ன விபரீதங்கள் அவை?"

tamilebooks.net

"இப்போது என்னைக் கேட்காதே. நீயே அவற்றைப் புரிந்து கொள்ளும் வேளை வரும்."

"நான் இங்கிருந்து போய்விட்டால் விபரீதங்கள் நீங்கிவிடுமா?"

"விக்கிரமா, இலங்காபுரனைப் பற்றி உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. அவன் செய்கிற போரைப் பற்றியும் உனக்குத் தெரிந்திருக்கும். போர் என்ற பெயரில் பெரும் நாசங்களை விளைவிக்கும் அரக்கன் அவன். நம்மை எதிர்நோக்கியிருக்கும் இப்போர் முந்தைய போர்களைவிடக் கடுமையாக இருக்கும். அது மட்டுமல்ல. நான் செய்த தவறை இலங்காபுரன் நிச்சயமாகச் செய்ய மாட்டான்."

"நீங்கள் செய்த தவறா?"

"ஆம். பராக்கிரம பாண்டியனைக் கொன்ற நான் வீர பாண்டியனைத் தப்ப விட்டுவிட்டேன் அல்லவா?"

"புரிகிறது தந்தையே."

"எது?"

"நானிங்கு இருந்தால் இலங்காபுரன் என்னைக் கொன்று விடுவான் என்கிறீர்கள்."

"ஆம்."

"ஆக, உயிருக்கு பயந்து என்னை ஓடிவிடச் சொல்கிறீர்கள்."

"இல்லை மகனே இல்லை. அப்படி நான் சொல்வே னானால் உன் வாளாலேயே என்னை வெட்டிப் போடலாம். நான் அதைச் சொல்லவில்லை."

"பின்?"

"விக்கிரமா, சாதாரண குடிமகன் உயிருக்கும் உன் உயிருக்கும் வித்தியாசம் உண்டு."

"வித்தியாசமா?"

"ஆம். சாதாரண குடிமகன் ஒருவனது உயிர் வீழுமானால் ஒரு வீடு விழுகிறது. உன் போன்றோரது உயிர் போகுமானால் உனக்குப் பின்னால் ஒரு நாடே விழுகிறது. ஒரு மரபே விழுகிறது. புரிகிறதா நான் சொல்வது?"

விக்கிரமன் மௌனமாக நின்றான்.

தன் தந்தையின் பேச்சையும் பேச்சின் உறுதியையும் மௌனமாய் அலசிப் பார்த்த விக்கிரமனுக்கு ஒரு விஷயம் மட்டும் திட்டவட்டமாய்ப் புரிந்தது. இலங்காபுரன்

tamilebooks.net

உண்டாக்கியிருக்கும் போர்ப் புயலில் தன் தந்தையால் மதுரையைக் காக்க முடியாது என்பதுதான் அது. அதோடு அப்புயலில் தன் உயிருக்கும் உத்திரவாதமில்லை என்று கருதியே தன்னைத் தலைமறைவாகி விடும்படி கூறுகிறான் என்றும் ஊகித்துக் கொண்ட பாண்டிய இளவல் "சரி தந்தையே" என்றான் வறண்ட குரலில்.

மகனின் மனக்கவலையை நன்றாக உணர்ந்திருந்த குலசேகர பாண்டியன் வேறு வழியில்லாததையும் உணர்ந்திருந்தானாதலால் மகனைத் தற்போது அனுதாபத்துடன் நோக்கி, "உன்னை இவ்வாறு செய்யச் சொல்வதற்காக என்னை மன்னித்துவிடு விக்கிரமா. நான் செய்து விட்ட சில தவறுகள் தான் இப்போது இப்படியொரு தர்மசங்கடத்தை உனக்கு விளைவித்து விட்டது. பராக்கிரமனைக் கொன்றதில் காட்டிய விவேகத்தை இலங்காபுரனை ஒடுக்கும் விஷயத்தில் நான் காட்டாமல் போய்விட்டேன். அது இன்று விபரீதமாக விஸ்பரூபமெடுத்திருக்கிறது. நம்மைக் காத்துக் கொள்ளும் காரியத்திற்கு வழி இல்லாத அளவிற்கு நிலைமை வளர்ந்து விட்டது. சிங்களப்புயல் நன்றாய் வலுத்துவிட்டதால் நான் இப்போது பலவீனமான நிலையில் இருக்கிறேன். நீயும் என்னுடன் சேர்ந்து பலவீனத்திற்குரிய பலன்களை அனுபவிக்கக் கூடாது விக்கிரமா. ஆகவே நீ உடனடியாகக் கொங்கு நாட்டிற்குச் செல். நான் தருகிற ஓலையை மன்னரிடம் கொடு. போர் முடியும் வரை நீ வெளியே தலையைக் காட்டவேண்டாம். போரின் முடிவைப் பொறுத்து மற்ற நடவடிக்கைகள் இருக்கும்" என்று இறுதியாகக் கூறி நிறுத்தினான்.

ஃஃ ஃஃ ஃஃ

மறுநாள் குலசேகர பாண்டியனின் மகன் பெருத்த சோகத்துடன் கொங்கு நாட்டை நோக்கிப் பயணப்பட்ட அதே நேரத்தில் மேலை மங்கல மாளிகையில் பராக்கிரம பாண்டியனின் மகனான வீரபாண்டியனோ சுகமான சூழலில் சந்தோஷமாக அமர்ந்திருந்தான். இலங்காபுரன் மழவராயனை அனுப்பி மலைநாட்டில் இருந்த வீரபாண்டியனை அழைத்து வந்த நாளிலிருந்தே மேலை மங்கலத்தில் அந்தக் குறிப்பிட்ட மாளிகையில் பெண்களின் நடமாட்டமும் மதுவின் நடமாட்டமும் மிகுந்திருந்தன.

இளவரசனாய் முடிசூடிய நாளிலிருந்தே மதுவையும் மாதர்களையும் இடைவிடாமல் தூய்க்கும் பழக்கத்தை அவன் மேற்கொண்டானாதலால் எந்த நிலையிலும், எந்த இடத்திலும்

tamilebooks.net

அவையிரண்டும் அவனுக்குத் தேவையாயிருந்தன. அதை உணர்ந்தபோது சிங்கள வீரர்களுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. "எவனுக்காக நாடுவிட்டு வந்திருக்கிறோமோ அந்த மனிதன் இப்படிக் கொஞ்சமும் பொறுப்பின்றி நடந்துகொள்கிறானே?" என்று கவலைப்பட்டார்கள் பலர்.

'வெறும் குடிகாரனான இந்த அற்பனுக்காகவா பெரும் படைகளை நடத்துவது?' என்று வெறுத்தார்கள் சிலர். 'நாட்டை இழந்த விசனமில்லாமல் நங்கையரைக் கட்டிக் கொண்டு ஆட விரும்பும் இவன் மீண்டும் நாட்டைப் பெற்றால் என்ன செய்யப் போகிறான்?' என்று சந்தேகப் பட்டார் ஒரு சாரார். மழவராயன் கூட அந்த ரீதியில் கவலைப்பட்டான். ஆனால் இலங்காபுரனிடமோ இது விஷயமாகத் துளிக்கவலையுமில்லை. வீர பாண்டியனின் நடவடிக்கைகள் அவனுக்குப் பெருத்த மகிழ்ச்சியையே அளித்திருந்தன.

பாண்டிய மரபினருக்கு உதவவே வந்திருந்தாலும் பாண்டிய மரபினரில் எவரையும் ஆட்சி பீடத்தில் அமர்த்தும் இதயப் பூர்வமான எண்ணம் அவனுக்கும் சரி. . . அவனது மன்னனான பராக்கிரமபாகுவுக்கும் சரி... கொஞ்சமும் இல்லாததால் வீரபாண்டினின் பொறுப்பின்மை அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

பொறுப்பில்லாதது மட்டுமின்றி அவனது நாட்டமெல்லாம் மயக்கம் தரும் மதுவிடமும் மாதரிடமும் பிணைந்தும் கிடந்ததால் 'இதைவிட அருமையான சந்தர்ப்பம் வேறு இருக்க முடியாது' என்று கருதினான் இலங்காபுரன்.

வீரபாண்டியனை வீரத்திற்கும் விவேகத்திற்கும் பெயர் பெற்றவனாகவே எதிர்பார்த்திருந்த அவன் அப்படிப்பட்டவனை வீரத்திற்கும் விவேகத்திற்கும் சம்மந்தமில்லாதவனாய் அடித்து விட என்ன பாடுபட வேண்டியதிருக்குமோ என்று யோசித்திருந்தான். ஆனால் அதற்கு வேலையே இல்லாத வகையில் வீரபாண்டியனின் சொரூபம் உண்மையாகவே பலவீனமாய் இருந்துவிட்டதால் தேனை உண்டவனாய் களித்து வீர பாண்டியனை மேலும் மேலும் அறிவுக்குருடனாய் ஆக்கும் விதத்தில் அழகிகளை அடுத்தடுத்து மாளிகைக்கு அனுப்பி வைப்பதில் கவனம் செலுத்தினான். இதற்கிடையில் வீர பாண்டியனின் பார்வை கடலழகியின் மேல் விழுந்து விட்டதால் வேறு வழியின்றி அவளையும் அனுப்பினான் இலங்காபுரன்.

அழைப்பதற்கு வீரபாண்டியனும் அனுப்புவதற்கு இலங்காபுரனும் தயாராய் இருந்தாலும் இருவருக்கும் இணங்கும் நிலையில் கடலழகி இல்லை. அவளது நிலை பற்றியோ

tamilebooks.net

நெஞ்சத்தைப் பற்றியோ கவலைப்படாத இலங்காபுரன் சதுரங்கக் காய்களை நகர்த்துபோல் அவளை மாளிகைக்கு அனுப்பிவிட்டான். அவனிடம் எதிர்ப்புக்காட்ட இடமின்றி பெயர்ந்த கடலழகிக்கு மாளிகையில் இடமிருந்ததால் வீரபாண்டியனைப் புறக்கணித்தாள்.

மாளிகையினுள் அவள் பிரவேசித்தபோது வீரபாண்டியன் ஆறு அழகிகளுடன். . . அரை நினைவுடன் காமமலையென விழுந்து கிடந்தான். அவன் தனித்திருந்தால் கூட கடலழகிக்கு அவன் மீது விருப்பம் உண்டாக்கியிருக்க முடியாதுதான்.

அந்த வகையில் பெண்ணாக விரும்பி ஏற்றுக் கொண்டு விட முடியாத வெறியனான வீரபாண்டியன் தற்போது மிகவும் கேவலமான நிலையில் இருந்தானாதலால் மிகுந்த வெறுப்புக்கு ஆளான கடலழகி அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

மதுவின் உக்கிரத்தால் பார்வையின் உக்கிரத்தைப்பாதி இழந்திருந்த பாண்டியனுக்கு கடலழகியை அடையாளம் தெரியவில்லை. ஆறோடு ஏழாகக் கருதி காமம் சொட்டும் வார்த்தைகளால் அவளை அழைத்துக் காமுகச் சேட்டைகளை வெளிப்படுத்தவும் முயன்றான். அவள் நெருங்க மறுத்தாள். கொஞ்சம் கொஞ்சமாய் அணைப்பில் இருந்த ஆறு அழகிகளும் அகன்று, மதுவின் மயக்கமும் கலைந்து அவன் தெளிவுற்றதும் கடலழகியை அடையாளம் தெரிந்து கொண்டான். விரும்பி அழைக்கப்பட்டவள் வந்திருக்கிறாள் என்பதை உணர்ந்த அவன் தன் ஆடைகளைச் சரி செய்து கொண்டு அவளைப் பார்த்துப் புன்னகை யொன்றைப் பரம திருப்தியுடன் உதிர்த்தான்.

காமுகனான அவனுக்கு அப்போதே அவளை அடைவதால் கிடைக்கக்கூடிய இன்பத்தைப் பற்றிய கற்பனை பிறந்தது. சொர்கத்தைப் பற்றி எண்ணிக் கொண்டான். தேவலோகத்தை எண்ணிக் கொண்டான். தான் விரும்பும் இந்த அழகுப் பெட்டகத்தின் தோளைத்தழுவி அதில் துயிலும் இன்பமானது அந்த தேவலோக சொர்க்கத்தில் இருப்பதாய்ச் சொல்லப்படும் இன்பத்தைப் போல் இருக்குமா என்றெல்லாம் கற்பனை செய்தான். பிறகு கற்பனையைத் தொடரும் பொறுமையை இழந்து "ஏன் அங்கேயே தயங்கி நிற்கிறாய்? வா. கடலழகி நான் யார் என்று தெரியாதா? நான்தான் வீரபாண்டியன்..." என்றான் சம்பிரதாபத்துடன்.

அவன் நின்ற இடத்தில் இருந்தபடியே, "விரும்பாதவளைப் போய் அழைக்கிறாயே, இதுதான் அரச நாகரீகமா?" என்று சூடாகவும் மரியாதையின்றியும் கேட்டாள்.

அந்த நேரத்திற்குப் பேச்சு அவ்வளவாகத் தேவையில்லாத ஒன்று. அதோடு வீரபாண்டியனும் பேச விரும்பவில்லை.

tamilebooks.net

என்றாலும் கூட அவளைத் திடீரென அடைந்துவிட முடியாம லிருந்ததால் அவளுடன் பேச முற்பட்டு "இந்த நேரத்தில் நாகரீகத்தைப் பற்றியெல்லாம் பேசுவது சரியில்லை கடலழகி. பேசாமல் வா. . ." என்றான்.

"நாகரீகம் என்பது எப்போதும் கடைபிடிக்க வேண்டிய விஷயம். வீரபாண்டியருக்கு இது தெரியவில்லை போலிருக் கிறது. . ." என்றாள் அவள்.

அவனோ "தெரியும் கடலழகி. தெரியும். நீதான் ஒன்றைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறாய்" என்றான்.

"என்ன அது?"

"எதையுமே கடைபிடிக்கத் தேவையில்லாத நேரம் என்று ஒன்றுண்டு. அது இப்போது நிலவுகிறது. உனக்கது தெரியவில்லை."

"உன்னோடு வாதாட நான் தயாராக இல்லை. . ."

"மிக்க மகிழ்ச்சி"

"எதற்கு. . ."

"என் விருப்பமும் அதுதான். இப்போது நமக்குள் பேச்சும் வாதமும் எதற்கு?"

அவன் பேச்சைக் கேட்டு விழித்தாள் கடலழகி.

அதைக்கண்ட வீரபாண்டியன், "கடலழகி, நீ பேசிக் கொண்டிருப்பதிலோ தயங்கிக் கொண்டிருப்பதிலோ பயனில்லை. அர்த்தமுமில்லை. பெண்கள் அழகாக இருப்பது வெறும் காட்சிப் பொருள்களாக இருப்பதற்கில்லை. ஆண் களால் அனுபவிக்கப் படுவதற்குத்தான். இங்கே உன்னை அடைய விரும்புபவன் வெறும் வழிப்போக்கனல்ல. வீர பாண்டியன். நாளை மதுரா புரியில் மன்னனாய் அமரப் போகிறவன். அது நிச்சயமாகி விட்டது கடலழகி. அப்படி நான் முடிசூடும் வேளையில் நீ அரசியாக அமரப் போகிறவள். அத்தகைய நீ இப்போது என்னை விரும்புவது தான் சரி. என் விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் சரி. வா கடலழகி வா" என்றான்.

"முடியாது."

"இப்படிச் சொல்வதால் ஒரு பயனுமில்லை."

"ஏன்."

"உன் விருப்பப்படி இங்கே எதுவும் நடக்காது."

"வேறு யாருடைய விருப்பப்படி நடக்குமாம்?"

"இலங்காபுரனின் விருப்பப்படி."

"ஓகோ."

tamilebooks.net

"ஆமாம் கடலழகி. நீ என்னோடு அனுசரித்துப் போக வேண்டும் என்பது இலங்காபுரனின் விருப்பம். சுருங்கச் சொன்னால் என் விருப்பமே அவனது விருப்பமும். அதை அவன் நிறைவேற்றியே ஆகவேண்டும். ஏனென்றால் நாளைக்கு அவனுக்கு அமைச்சர் பதவியை அளிக்கப் போகிறவன் நான்."

"முட்டாள். என்ன பதவிகளை வேண்டுமானாலும் நீ அளித்துக் கொள். ஆனால் நினைத்த மாதரியெல்லாம் பெண்ணிடம் அன்பைப் பெற்றுவிட முடியாது. அவளும் அளிக்க மாட்டாள்" என்று கூறிவிட்டு வெளியேறினாள் கடலழகி.

வீரபாண்டியன் அவளைப் பொருட்படுத்தியிருக்க வேண்டியதில்லைதான். ஆனால் காமுகனின் சுபாவம் அவனை அவ்வாறு இருக்க விடவில்லை. பலரையும் அனுபவிக்கிற காமுகனுக்கு எல்லாமும் ஒன்றுதான். அதேசமயம் ஒரு சிறு தடை மட்டும் வந்து விட்டால் அவனுக்குப் பெரிய பிரச்சினை போலாகி விடுகிறது. கடலழகியின் மறுப்பை அவன் பெரிய விஷயமாகவே எண்ணிக் கொண்டான். அவளை அடையாமல் போவதைப் பெரும் நஷ்டமாகக் கருதினான். முடியாதென்று கூறிவிட்டுப்போன அவளை மேலும் இரண்டு முறை மாறுபட்ட நேரங்களில் அணுகினான். அவளோ நெருப்பாய்ச் சிவந்து புகையாய் விலகி ஓடினாள்.

அவளது நடவடிக்கை வீரபாண்டியனுக்கு மானப் பிரச்சனையாய் வந்து முடிந்தது. ஆசை நிறைவேறாத நிலையில் அழிவை உண்டாக்கிவிடத் தீர்மானித்தான் அந்தக் காமுகன். தனக்கு இணங்காதவளை ஒழித்துவிட முடிவு செய்த அவன் இலங்காபுரனிடம் சென்றான். அந்த வேளை அவனைப் பொறுத்தவரை நல்ல வேளையாயிற்று . இலங்காபுரன் ஏதோ பெருத்த சினத்தில் ஆழ்ந்திருந்த வேளை அது. அப்போது அவனை நெருங்கிய வீரபாண்டியன், "என்ன தண்டநாயகரே, உமது இலட்சணம் இதுதானா? நீ எமக்கு உதவுகிறீரா அல்லது வேரோடு சாய்க்க முயல்கிறீரா?" என்று கடுகடுத்தான்.

"நான் மலை நாட்டில் இருந்தபோது படைகளைத் திரட்டிக் கொண்டிருந்ததாகப் பொய்யாக ஒரு செய்தியை உருவாக்கி அதை குலசேகர பாண்டியனிடம் அனுப்பினீர் அல்லவா?"

"அதற்கென்ன இப்போது?"

"அச்செய்தி பொய்ச் செய்தி என்பது தெரிந்துவிட்டது குலசேகரனுக்கு."

"எப்படித் தெரிந்தது?"

"உமது அருமைக் காதலியால்."

tamilebooks.net

"என்னது?"

"தண்டநாயகரே, கடலழகி உமது காதலி. அதை மறைத்து அவளை நீர் என்னிடம் அனுப்பினீர். அந்தப் பாதகத்தைக் கூட என்னால் மறந்துவிட முடியும். ஆனால் காதலி என்ற பெயரில் பயங்கரச் சதிகாரி ஒருத்தியை நம்முடன் வைத்துக்கொண்டு அழிவைத் தேடுவதை நிச்சயமாக ஏற்கவும் முடியாது. மறக்கவும் முடியாது. ஒரு தமிழ்ப் பெண் தமிழ்நாட்டிற்கு எதிராக உமக்கு உதவுவாள் என்று எப்படி நம்பினீர்?"

இலங்காபுரனின் கை மீசையின் மீது வந்து நின்றது. அவனது முகம் விகாரமாயிற்று. பற்களை நறநறவென கடிக்கவும் செய்தான் அவன்.

22

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

—குறள், 666

கடலலைகள் நாற்புறமும் தொட்டுத் தாலாட்டும் இலங்காபுரியின் பெருநகரான அநுராதபுரத்தின் பேரரண் மனையின் பிரதான நிலாமாடத்தில் நின்றபடி நாற்புறமும் பார்வையை ஒட்டி மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் அறிகுறியாக இன்பப் புன்னகையொன்றை உதிர்த்தான் பராக்கிரமபாகு. அப்படி இன்பப் புன்னகை உதிர்த்த அந்த வேளையில் சிங்கள மன்னனுக்குத் தன் மூதாதையார்கள் கண்ட கனவுகளும் நினைவிற்கு வந்தன. அதுமட்டுமல்ல. அந்தக் கனவுகள் கடைசியில் கனவுகளாகவே போய்விட்டதும் அவனது நினைவிற்கு வந்தன. அதுமட்டுமல்ல. கைக்கெட்டும் தூரத்தில் இருந்த பெண்ணை அடைய முடியாமல் போன சிங்கள மன்னர்கள் அவனுக்கு நினைவிற்கு வந்த போதுகூட அவனது புன்னகை மாறவில்லை. தமிழகத்தை விழுங்க முடியாமல் போன சிங்கள மன்னர்கள் சில நேரங்களில் சில தமிழ் மன்னர்களால் சிங்களத்தை விழுங்கவிட்டு நின்றதையும் எண்ணினான் பராக்கிரமபாகு. அப்போதும் அவன் கவலைப்படவில்லை. நினைத்தாலே கசக்கும் சம்பவங்கள் நினைவிற்கு வந்தும் இனிப்பை உண்டவனைப் போல் அவன் இருந்தான் என்றால் அதற்கு காரணம் இருக்கவே செய்தது. பலமுறை, முயன்று கிடைக்காமல் போன தமிழகம் தற்போது தனது தண்ட நாயகனால் கிட்டத்தட்ட கிடைத்துவிடுகிற நிலைக்கு வந்து விட்டதாகத் தோன்றியதால் சிங்களமன்னன் பழைய கசப்புகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. மூதாதையர்களின்

tamilebooks.net

கனவுகளுக்கு உண்டான நிலை நிச்சயமாய்த் தனக்கு வரப்போவதில்லை என்று கருதினான். ஆதலால் தற்போது கனவின் எல்லைகள் பெருத்துவிட்டிருந்தன.

அவனிடம் உருவான புன்னகை பெரும் சிரிப்பாகவும் விரிந்திருக்கும். ஆனால் அந்த வேளையில் அங்கே பிரவேசித்தார் அமைச்சர். மன்னனின் புன்னகையைக் கண்டு மகிழ்ந்த அவர், "இலங்காபுரனின் படைகள் மதுரையை அடைந்து கோட்டை முற்றுகையைக் கூடத் துவக்கி விட்டன மகாராஜா" என்றார் ஆர்வத்துடன்.

"தெரியும்" என்று முகத்தை திருப்பாமலேயே சொன்னான் பராக்கிரம பாகு.

"வீரபாண்டியரும் மழவராயரும்கூட படை நடத்திச் சென்றிருக்கிறார்கள்" என்று தொடந்தார் அமைச்சர்.

"அதுவும் தெரியும்" என்றான் மன்னன்.

"விக்கரம பாண்டியன் மதுரையில் இல்லை. அதோடு கொங்கு நாட்டுப் படைகள் குலசேகரனுக்கு உதவ புறப்பட்டிருக்கின்றன" என்றார் அமைச்சர்.

மன்னன் இதற்கும் வியப்பைக் காட்டவில்லை. "தெரிந்த விஷயங்கள்" என்றான்.

அமைச்சருக்கு மேலே என்ன பேசுவதென்று விளங்கவில்லை. மன்னனுக்கு இனியும் விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருக்க விரும்பாமல், "புதிய உத்தரவுகள் ஏதாவது உண்டா?" என்று வினவினார்.

"புதிய உத்தரவுகளா?" என்று விளித்த மன்னன் அமைச்சரின் பக்கம் திரும்பி, "என்ன உதரவுகளை எதிர் பார்க்கிறீர்?" என்று கேட்டான்.

"இலங்காபுரனுக்கு உதவிப்படைகள் ஏதாவது அனுப்பலாமா என்பது குறித்து..." இழுத்தார் அமைச்சர்.

"மந்திரி, உதவிப் படைகளை எப்போது அனுப்ப வேண்டும்?"

"தேவைப்படுகிறபோது."

"இப்போது தேவைப்படுகிறதா?"

"வந்து..."

"மந்திரி, பிரதான படைகள் தத்தளிப்பது போல் நமக்குத் தோன்றினால் நாம் உதவிப் படைகளை அனுப்புவது அவசியம். தற்போது நிலைமை அப்படியா இருக்கிறது?"

tamilebooks.net

"இல்லை."

"உதவிப் படைகளைச் சில முக்கிய காரணங்களுக்காக நம்மவர்கள் கேட்டிருக்க வேண்டும். இலங்காபுரன் அப்படி ஏதாவது கேட்டானா?"

"இல்லை."

"பின் எதற்கு உதவிப் படை?" என்று கேட்ட பராக்கிரம பாகு, "ஒரு காரியத்தைச் செய்ய நினைப்பவர்கள் அந்த நினைப்பில் உறுதியாக நின்றால் நிச்சயமாக அதைச் செய்து முடிப்பார்கள். அந்த நிலையில் தற்போதிருக்கிறான் இலங்காபுரன்" என்று கூறிவிட்டு மேலும், "உமக்கு இலங்காபுரனைப் பற்றி என்ன தெரியும்?" என்று வினவினான்.

அமைச்சர் பதில் சொல்வதற்குள் அவனாகவே குறுக்கிட்டு, "மந்திரி, இலங்காபுரன் சுய பலத்தில் நம்பிக்கை உள்ளவன். தோல்விகளையும் சமாதானங்களையும் விரும்பாதவன். ரோஷக்காரன். இவற்றையெல்லாம்தான் நான் சோதித்தேனே, தெரியாதா உமக்கு?" என்று கேட்டான்.

"அதாவது. . ."

"இலங்காபுரனின் மீது குறையைச் சுமத்தி ரோகண நங்கையை அனுப்பினேனே எதற்கு? சோதிக்கத்தான் மந்திரி. சோதனையில் வென்று விட்டான் இலங்காபுரன். நான் அனுப்பிய ஓலை சாசனத்தை எனக்கே திருப்பிவிட்டான். வெற்றி பெறாமல் இலங்கைக்குத் திரும்பமாட்டேன் என்றும் கூறியிருக்கிறான். இதெல்லாம் எதை உணர்த்துகின்றன? அவனது தன்னம்பிக்கையும் வைராக்கியத்தையும்தான் மந்திரி. நான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே செயல்படுகிறான் இலங்காபுரன். இப்போதைக்கு அவனுக்கு உதவிப் படை எதுவும் தேவையில்லை. உதவிப் படைகளைத் தமிழ் நாட்டிலேயே சம்பாதித்துக் கொண்டான் அந்த சாமர்த்தியசாலி" என்று பாராட்டிக் கூறிய மன்னன், "மந்திரி, தமிழகத்தார் இப்படியொரு போரை நம்மிடமிருந்து கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது எனக்கு. மக்கள் என்ன, மன்னன் கூட எதிர்பார்க்கவில்லை. ஆகவே தான் குலசேகரப் பாண்டியன் பொன்னமராவதி தொண்டி ஆகிய முக்கிய கேந்திரங்களை இழந்தும் மதுரைவிட்டு வெளியே வர மறுக்கிறான்.

நான் சிங்களத்திலிருந்து அனுப்பியது படையல்ல, புயல். அந்த உக்கிரமான நிலையைத்தான் நீரும், நானும் தற்போது பார்க்கிறோம். இந்த நாசத்திலிருந்து தமிழகம் தப்புவது துர்லபம்" என்றான்.

tamilebooks.net

"எந்தப் புயலும் ஒருநாள் பலவீனப்பட்டுத்தானே ஆக வேண்டும்?" வினவினார் மந்திரி.

"அந்த நிலை வரும்போது வேறொரு புயல் தயாராக இருக்கும் உதவிப் படைகளாக. இப்படி அடுத்தடுத்து எழுந்து வீசும் புயல்களிலிருந்து தமிழகம் தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. முடிவில் நானும் பிரளயமாகத் தோன்றுவேன்" என்று மிகுந்த சந்தோஷத்துடன் கூறிய மன்னன், "இலங்காபுரனைப் பற்றிக் கவலைப்படாதீர். அவன் வெல்லப் போவதும், வீரபாண்டியன் என்னும் பொம்மையை அரியணையில் அமர்த்தப் போவதும் சிங்களத்தின் நிழல் தமிழகம் முழுக்கப் பரவப் போவதும் உறுதி. நீர் ஒரு சிறு படையைக் கடலுக்கு அனுப்பி அங்கேயுள்ள சொற்ப பாண்டியப் படைகளை அழித்துவிட்டு வரச் சொல்லும். அது மட்டுமல்ல, நமது இன்றைய வெற்றிப் பாதைக்கு முதல் தளமாய் அமைந்தது ராமேஸ்வரம். அங்கே எனது ஞாபகார்த்தமாக ஒரு காரியம் செய்தாக வேண்டும். நமது படைகள் அங்கே அழிக்காமல் விட்ட சோமேஸ்வரர் ஆலயத்திற்குச் சில திருப்பணிகளைச் செய்ய விரும்புகிறேன் நான். முதலில் கர்ப்பகிரகத்தைப் புதுப்பித்து ஸ்ரீகாரியத்தைத் தொடங்க ஏற்பாடு செய்யும். அக்காரியம் பின்னால் உதவும் நமக்கு"**

மன்னனின் பேச்சையடுத்துச் சற்று மௌனம் சாதித்த அமைச்சர், "நம் ரோகண நங்கை..." ஏதோ இழுத்தார்.

"அவளுக்கென்ன? சோழநாட்டில் இருக்கிறாள்?" என்றான் பராக்கிரம பாகு.

"அவள் போய் பல நாட்கள் ஆகின்றன."

"உண்மை."

"செய்தி எதுவும் அனுப்பவில்லை."

"அனுப்ப மாட்டாள்."

"ஏன்?"

"அனுப்பும்படி நான் சொல்லவில்லை."

"பின்?"

(** இராமேஸ்வரத்திலுள்ள சோமேஸ்வரர் ஆலயத்தில் கர்ப்பகிரகத் திருப்பணியை இலங்கை மன்னன் பராக்கிரம பாகு செய்ததாக அவ்வாலயத்தில் உள்ள ஒரு குறிப்பு தெரிவிக்கிறது) என்றான்.

tamilebooks.net

"காதலிக்கும்படி மட்டுமே சொல்லியிருக்கறேன்." என்று கூறி விஷமமாகப் பார்த்த மன்னன், "புரியவில்லையா மந்திரி? சோழ நாட்டில் நல்ல புளிய மரமாய் ஒன்றைப் பார்த்துக் காதலிப்பாள்" என்றான்.

"காதலித்துக் கல்யாணம் செய்து கொள்வாளாக்கும்."

"அது அவளிஷ்டம். நான் சொல்லவில்லை."

"மகாராஜா, தாங்கள் சொல்வது?"

"மந்திரி, காதல் போர்வையில் ஒற்றறிப் போகிறவள் அவள். நாம் விழுங்கப் போகும் சோழ நாட்டிற்கு அவள் தான் ஆணிவேர். அவள் ராஜதந்திரி. கடலழகியைப் போல் ஏமாற மாட்டாள். சிங்களப் பெண் அல்லவா அவள்? சரியான நேரத்தில் அவள் இலங்காபுரனுடன் சேர்ந்து கொள்வாள்."

"மகாராஜா நானே கேட்கவேண்டும் என்றிருந்தேன்."

"கேளும்."

"இலங்காபுரன் கடலழகியைக் கொன்றுவிட்டான்."

"ஆம்."

"அது மழவராயனுக்குப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது."

"இருக்கலாம். ஆனால் வீரபாண்டியனுக்குப் பிடித்திருக் கிறதே" என்று கூறிய பராக்கிரம பாகு, "மந்திரி, மழவராயனால் இனி நமக்கொன்றும் ஆக வேண்டியதில்லை. அதோடு அவனும் தற்போது இலங்காபுரனை எதுவும் செய்து விட முடியாது. ஆகவே மழவராயனின் கவலையை யாரும் பொருட்படுத்த வேண்டியதில்லை. அதோடு இன்னொரு விஷயம். வீர பாண்டியனின் பேச்சைக் கேட்டு இலங்காபுரன் கடலழகியைக் கொன்றதாகத்தான் பேச்சு நிலவுகிறது. உண்மை அதுவல்ல. அவளைச் சமயம் பார்த்துக் கொன்று விடும்படி இலங்காபுரனுக்கு ரகசிய செய்தி அனுப்பியவனே நான்தான்."

"அவள் பலவகையில் நமக்கு உளவறிந்தாலும், தமிழ் நாட்டுப் பெண் என்பதை மறந்துவிடக் கூடாது. எந்த நேரத்திலும் சொந்த நாட்டு உணர்ச்சி தலையெடுக்கலாம் அந்த நிலை உருவானால் அவளை இனம் கண்டுகொள்ள முடியாமல் போய்விடும். பிறகு அவளால் விபரீதங்கள் உண்டாகிவிடும். ஆகவேதான் இறுதிக்கட்ட போர் நடவடிக்கையில் ஈடுபட நேரும்போது அவளை உயிருடன் விட்டுவைக்க வேண்டாம் என்று இலங்காபுரனிடம் சொல்லியிருந்தேன் நான்."

tamilebooks.net

"அவன் அது விஷயமாக யோசித்துக் கொண்டிருக்கும் போது அதிஷ்டவசமாக வீரபாண்டியனே வந்து உதவி விட்டான். இனி பழி வந்தாலும் வீரபாண்டியனின் மீதுதான் வரும். அதோடு கடலழகியைக் கொன்றதைக் 'களப்பலி' என்று இலங்காபுரன் பிரகடனப் படுத்தியிருக்கிறான். அது போகப் போக மழவராயனைச் சாந்தப்படுத்திவிடும்" என்றான்.

பராக்கிரம பாகுவின் தந்திர ஏற்பாடுகளைக் கேட்டு மலைத்துப் போய் நின்றார் சிங்கள அமைச்சர்.

ஃஃ ஃஃ ஃஃ

பராக்கிரம பாகுவின் கனவுகள் ஏறக்குறைய வெற்றி பெறக்கூடிய வகையில்தான் இலங்காபுரனின் நடவடிக்கைகளும் இருந்தன. கடலழகியைக் களப்பலியாகக் கொடுத்து விட்டு மூன்று அணிகளாகத் தன் படைகளைப் பிரித்தான். அவன் ஓர் அணியையும், மழவராயன் ஓர் அணியையும், வீரபாண்டியன் ஓர் அணியையும் தலைமை வகித்தார்கள்.

படைகளுக்கு வேண்டிய உணவு வகையறாக்களை முடிந்த மட்டும் மேலை மங்கலத்திலேயே சேமித்துக் கொடுத்தான் மழவராயன். அந்த வகையில் உணவுப் பொருட்களும் போர் ஆயுதங்களும் மருத்துவ மூலிகைகளும் பெரும் வாகனங்களில் அவற்றுக்குப் பின்னால் வந்தன.

புறப்பாட்டிற்கு முன்பாக நடந்த மந்திரலோசனை யின்போது மழவராயனின் மூலம் மதுரையின் கோட்டை அமைப்பு பற்றியும் அதன் உள் பாதுகாப்பு வெளிபாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றியும் இலங்காபுரன் விளக்கமாகத் தெரிந்து கொண்டான். எனவே கோட்டை முற்றுகையை எப்படி அமைப்பது என்றும் தாக்குதலை எப்படித் தொடுப்பது என்றும் அவனுக்குள் திட்டமும் உருவாயிற்று. அந்த விவரங்களை வெளியே யாரிடமும் தெரிவித்துக் கொள்ளவில்லை.

மேலை மங்கலத்திருந்து தென் மேற்கில் நகர்ந்து வையையாற்றின் மத்திம பாகத்தில் ஆற்றைக் கடந்து தென்கரைக்கு வந்த அவன் தென் கரையோரமாகவே படைகளை நடத்தினான். மதுரையை நோக்கி. வழியில் எந்தவித மோதலையும் நடத்தாமலும், நாசவேலைகளைச் செய்யாமலும், அதிக ஓய்வெடுக்காமலும் சென்றது படை. தன் படைவரவு பற்றி எந்தவித ரகசியமும் தேவையில்லை என்று இலங்காபுரன்

tamilebooks.net

கூறியிருந்தபடியால் படைகள் பெரும் ஆரவாரத்துடன் புயல்போலவே சென்றன.

அவன் அதுவரை வெற்றி கொண்டிருந்த பகுதிகளிலெல்லாம் கணிசமான காவற்படைகளை நிறுத்தியிருந்ததாலும், பராக்கிரம பாண்டியனுக்கும் மழவராயனுக்கும் வேண்டியவர்களையே தலைவர்களாக நியமித்திருந்ததாலும், தான் மதுரையை நோக்கி நகரும் பட்சத்தில் அப்பகுதிகளைக் குலசேகரபாண்டியன் எதிர்ப்பதற்கோ மீட்பதற்கோ வழியில்லை என்பதைச் சந்தேகமின்றி அறிந்திருந்தானாதலால் தற்போது பெரும் சாந்நி நிலவிற்று அவனிடம். இவ்வாறு திருப்தியுடனும் திடசித்தத் துடனும் சென்ற அவன் மதுரையில் கிழக்கு வாசலின் சமீபத்தை அடைந்தபோது கோட்டையின் புறப் பாதுகாப்பில் இருந்த சிறு மாற்றமொன்றைச் சுட்டிக்காட்டினான் மழவராயன்.

கோட்டைப் பகுதியின் கடைசி வெளி அரணாக காட்டுமரங்கள் நிரம்பி காவற்காடு இருக்குமென்று மந்திராலோசனை அவையில் கூறி இருந்தான் மழவராயன். அந்தக் காவற்காட்டுக்கும் வெளி அரணாக முற்றிலும் காய்ந்ததும் பட்டுப்போனதுமான மரங்கள் நிரம்ப இருந்ததைத் தற்போது கண்டார்கள் அவர்கள். அதைச் சுட்டிக்காட்டின மழவராயன், "இந்தக் காய்ந்த மரங்களை இதுவரை நான் கண்டதில்லை. இவை இப்போதுதான் இருக்கின்றன. இதனால் உண்டாகக் கூடிய ஆபத்து என்ன தெரியுமா?" என்று கேட்டான்.

இலங்காபுரனுக்கு அதன் ஆபத்து தெரிந்தே இருந்தது. இருந்தாலும் காட்டிக் கொள்ளாமல் "என்ன ஆபத்து?" என்றான்.

"நாம் இவற்றைக் கடந்து காவற்காட்டிற்குள் போனதும் இந்தமரங்கள் திடீரெனக் கொளுத்தப்பட்டுவிடும். நாம் பின் வாங்க முடியாது. அதேசமயம் முன்னேறவும் முடியாமல் காவற்காட்டின் அந்தப் புறத்தில் பகைவர்கள் மறைந்திருந்து தாக்குவார்கள்."

"எப்படித் தாக்குகிறார்கள் என்று பார்க்கலாம்" என்றான் இலங்காபுரன்.

"வேண்டாம் இலங்காபுரா. விபரீதத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளாதே. இந்தக் காய்ந்த மரங்களை நாமாகவே வெட்டி அகற்றி விடுவோம். அல்லது நுழைவதற்கு முன்பாக நாமாகவே கொளுத்தி அழித்து விடுவோம்" என்றான் மழவராயன்.

tamilebooks.net

இதைக் கேட்டுப் புன்னகையை உதிர்த்த இலங்காபுரன் "நீர் கூறியபடி செய்ய இடமுண்டு என்பது குலசேகர பாண்டியனுக்குத் தெரியாதா? அதற்கு மாற்று ஏதாவது வைத்திருக்க மாட்டானா? மழவராயரே, திட்டங்களையும் சம்பவங்களையும், நாமாகவே சிக்கலாக்கிக் கொள்ள வேண்டாம். என் வழியில் வாரும், பார்த்துக் கொள்ளலாம்" என்றான்.

மழவராயனுக்கு என்ன சொல்வதென்று விளங்கவில்லை. பேசாமல் இலங்காபுரனைத் தொடர்ந்தான். காய்ந்த மரங்களால் ஆன வேலியைக் கடந்து படைகள் கொஞ்சம் கொஞ்சமாய்க் காட்டு மரங்கள் நிறைந்த காவற் காட்டிற்குள் பிரவேசித்தன. மதுரைக் கோட்டையின் வடமதிற்சுவற்றை யொட்டி வையை ஆறு ஓடியதால் அந்தப்புறத்தில் தனியாக வெளி அரண்கள் இல்லை. ஆறே ஓர் அரணாக அமைந்திருந்தது. மற்றபடி அந்தக் காய்ந்த மரங்களால் ஆன அரணும் காவற்காடுமே கோட்டையின் இதர கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய முப்புறங்களில் அமைந்திருந்தன. படைகளைக் காவற்காடுகளுக் குள்ளேயே நகர்த்தி மூன்று திக்குகளிலும் வியாபிக்கவிட்டான் இலங்காபுரன். அவ்வாறு படைகள் நகர்ந்து மூன்று புறங்களிலும் காவற் காட்டை ஆக்கிரமித்துக் கொண்டன. இதற்கிடையில் வேறொரு விபரீதத்தைச் சுட்டிக் காட்டினான் மழவராயன். காவற்காட்டிற்கு வெளியே காணப்பட்ட காய்ந்த மரங் களாலான வேலி காவற்காட்டின் உட்புறத்திலும் கணிசமாக இருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்லிய அவன் "நாம் தொலைந் தோம்" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர் மழவராயரே?" என்று சகஜமாகக் கேட்டான் இலங்காபுரன்.

"இதுகூடப் புரியவில்லையா உமக்கு? காவற்காட்டின் இரு ஓரங்களிலும் காய்ந்த மரவேலி இருக்கிறது. இரண்டு வேலிகளும் சம காலத்தில் கொளுத்தப்பட்டால் நாம் தப்ப முடியாது. நம் கதி அதோ கதிதான்."

இதைக்கேட்டுச் சற்று யோசித்த இலங்காபுரன் சிறிது நேரம் சென்றதும் "ஏன் மழவராயரே, நீர் நினைக்கிற மாதிரி அந்த வேலிகள் கொளுத்தப்படுமானால் இரவில் தானே கொளுத்தப்படும்?" என்று கேட்டான்.

"இரவில் என்றால் ஏதோ சாவகாசமாக நடக்கும் என்று நினைக்காதே. நாமிங்கு வந்தது இன்னேரம் பாண்டியர்களுக்குத் தெரிந்திருக்கும். இன்றிரவே கொளுத்தி விடுவார்கள்."

tamilebooks.net

"நல்லது" என்று சொல்லிக்கொண்ட இலங்காபுரன், "சரி மழவராயரே, நீர் போய் காட்டின் மத்திம பாகத்தில் இருக்கும் அதாவது நமது படைகள் தங்கியிருக்கும் இந்தக் காட்டிலுள்ள மரங்களின் கிளைகளை ஆங்காங்கே வெட்டி வைக்கும்படி சொல்லுங்கள். வெட்டும் வேலை ரகசியமாக இருக்கட்டும்" என்றான்.

"நான் சொன்னதிற்கும் நீ சொல்வதற்கும் என்ன சம்மந்தம்."

"இரவில் சொல்கிறேன்..."

இரவு வந்தது. சம்மந்தத்தை இலங்காபுரனும் சொன்னான். அதைச் சோதிப்பதுபோல் காவற்காட்டின் வெளிப்புறத்தில் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது அதை தொடர்ந்து உட்புற வேலியும் தீப்பற்றிக்கொண்டது விரைவிலேயே இலங்காபுரன் எதிர்பார்த்த சம்பவமும் தொடங்கியது. மழவராயன் உட்பட அனைவரும் வியந்தார்கள்.

23

"ஏனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி இல்லார்கண் இல்லது அரண்."

—குறள், 750

காவற்காட்டின் வெறிப்புறத்திலும் உட்புறத்திலும் ஒரே சமயத்தில் தீப்பற்றிக் கொண்டிருந்தாலும் இரண்டுக்கும் சிறு வித்தியாசம் இருந்தது. வெளிப்புறத்தில் பற்றிய தீ உக்கிரமமாக இருந்தது. உட்புறத்தில் பற்றிய தீயோ மந்தமாக இருந்தது போகப் போக அந்த மந்தமான தீயும் அணைந்து போய் கரும்புகை உண்டாயிற்று. அந்த புகை மண்டலம் வளரத் தொடங்கிய சிறிது நேரத்தில் அதற்குப் பின்னாலிருந்து அம்புகள் பல எழுந்து காவற்காட்டிற்குள் வந்து விழுந்தன. அதை மழவராயனுக்கும் வீரபாண்டியனுக்கும் சுட்டிக் காட்டிய இலங்காபுரன், "நான் சொன்னபடி நடக்கிறது பார்த்தீர்களா? நமக்குப் பின்புறத்தில் உக்கிரமான தீயை உண்டாக்கி நம்மை இக்காட்டிலேயே தேக்குவதும் நமக்கு முன்னால் புகையை உண்டாக்கி எதையும் பார்க்க முடியாமல் செய்து, முன்னேற ஒட்டாமல் தடுத்து, அதே சமயம் சரமாரியாக அம்புகளை எய்து நம்மை அழிப்பதுமே எதிரிகளின் நோக்கம். இன்னும் சிறிது நேரத்தில் காவற்காட்டை நோக்கி முப்புறங்களிலும் சரமாரியான அம்புகள் வந்து விழும். அவற்றில் விஷ அம்புகளும் இருக்கலாம். ஆகவே நாம் வெட்டிய மரக்கிளைகளைக் காட்டின் உட்புற முகப்புகளில் பாதுகாப்பாகப் போட்டுவிட்டு அனைவரும் குனிந்தும் படுத்தும்

tamilebooks.net

மறைந்து கொள்ளுங்கள். வெளிப்புறம் பற்றியிருக்கும் தீ நம்மை அணுகுவதற்கு வழி இல்லை. முடிந்தவரை புரவிகளையும் யானைகளையும் காட்டின் மத்திய பாகத்திலேயே வைத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

அவன் கூறியபடியே அனைத்தும் நடந்தன. புகை மண்டலத்தை ஊடுருவி காட்டிற்குள் ஏராளமான அம்புகள் சரமாரியாக வந்து விழுந்தன. ஆயினும் இலங்காபுரனின் முன்னேற்பாடுகளால் அந்த அம்புகள் பெரும்பாலும் வெட்டப்பட்ட கிளைகளின் மீதும் பக்கத்திலுமே விழுந்து பயனற்றுப் போயின. இந்த மறைமுகத் தாக்குதல் சுமார் இரண்டு நாழிகை வரை நீடித்தது. பிறகு திடீரென நின்றது. அதைக் கண்ட மழவராயன் "திடீரென நின்று விட்டதே, எப்படி?" என்று வினவினான்.

"அம்புகள் நம்மைத் தாக்கி நம்மவர் மாண்டு போய் மரணக் கூச்சல்கள் போட்டபடி இருந்தால் அம்புகள் தொடர்ந்து விழுந்து கொண்டே இருக்கும். அப்படி எதுவும் ஆகவில்லையே! அதை உணர்ந்து தாக்குதலை நிறுத்தி விட்டார்கள். அதோடு வெளிப்புறத் தீயும் பெரும்பாலும் ஓயும் நிலைக்கு வந்துவிட்டது. இனியும் அது நமக்குத் தடுப்புச் சுவராக அமைய முடியாதல்லவா?" என்றான், இலங்காபுரன்.

இந்த வகையில் முதல் எதிர்ப்பை முறியடித்த இலங்காபுரன் அடுத்த நடவடிக்கையை எடுக்கப் புகை ஓயும்வரைக் காத்திருந்தான். புகை மண்டலம் பொழுது விடிந்த பின்பே முழுதுமாய் ஓய்ந்தது. பாதி எரிந்தும் பாதி தீய்ந்துமாய் நின்ற காய்ந்த மரங்களை வெட்டி நீக்கிய இலங்காபுரன் மழவராயனிடம் "என்ன மழவராயரே, மதுரையின் புறக் காவல் அரண்களைப் பற்றி நீர் சொன்னது சரியில்லை போலிருக் கிறதே" என்று கேட்டான், எதிரே எதையோ பார்த்துவிட்டு. அவனுக்கு முன்னால் கணிசமான தூரத்திற்கு கருவேல மரங்கள் நிரம்பத் தென்பட்டன. காவல் காட்டிற்கும் கோட்டைச் சுவற்றுக்கும் இடையே இப்படி முள்வேலி இருக்கக் கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அப்படியொன்று இருப்பதாக மழவராயனோ வீரபாண்டியனோ சொல்லவும் இல்லை. எனவே எதிர்பாராத இந்தப் புதிய தடையைக் கண்ட இலங்காபுரன், "கோட்டையின் அரண்கள் பலமாகத்தான் இருக்கின்றன. இருந்தாலும் என்ன பயன்? அதைக் காக்கும் ஆட்கள் சரியில்லை யென்றால் கணத்தில் இவையனைத்தும் அழிந்துவிடும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு மழவராயனிடம், "இந்த வேலியையடுத்து கோட்டை அகழிதானே இருக்கிறது?" என்று வினவினான்.

tamilebooks.net

"அகழி மட்டுமல்ல, கணக்கற்ற முதலைகளும் இருக்கின்றன" என்றான் அருகிலிருந்த வீரபாண்டியன்.

"அகழியின் ஆழம் எவ்வளவு இருக்கும் தெரியுமா?" என்று மேலும் வினவினான் இலங்காபுரன்.

"பத்தடிக்குக் குறையாமல் இருக்கும்."

"நல்லது. மழவராயரே, தளபதிகளே, நீங்கள் நமது வீரர்களைக் கொண்டு இந்தக் கருவேல மரங்களையெல்லாம் சாய்த்துத் துண்டுகளாக வெட்டுங்கள். வெட்டிய துண்டுகளை அகழியில் போய்ப் போடுங்கள்."

"அப்படிப் போட்டால் நீரின் மட்டம் உயர்ந்து வெளியே வரும்" என்றான் ஓர் உபதளபதி.

"நீர் மட்டுமல்ல. முதலைகளும் வெளியே வரும்" என்றான் வீரபாண்டியன்.

"வந்தால் மிகவும் நல்லது" என்றான் இலங்காபுரன்.

"அதாவது. . ."

"உபதளபதி, கோட்டையை விட்டு வெளியே வருவது குலசேகரனுக்கு எப்படிப் பலவீனமானதோ அப்படித்தான் நீரைவிட்டு முதலைகள் வெளியே வருவதும். ஆகவே வெளியேறும் முதலைகளை வெட்டிப் போடுங்கள். அநேகமாக நீங்கள் இந்த மரங்களை வெட்டி அகழியில் எறியும்போதே அவைகள் அழுந்தி சாக நேரிடும். ஆகவே அந்தக் கவலை வேண்டாம்" என்று கூறிய இலங்காபுரன், "மற்றொரு முக்கிய விஷயம். இந்த வேலைகளை நீங்கள் செய்யும் அதே நேரத்தில் வில் வீரர்கள் கோட்டை மதில்களைக் குறிவைத்தபடி நிற்கட்டும். மதில்களின் மேலோ அல்லது துளை மாடங்களிலோ எதிரிகளின் தலைகள் ஏதாவதுதெரிந்தால் நாணேற்றி உடனே அழித்துவிடவேண்டும். அவர்கள் எறிந்த அம்புகள் தான் நிரம்ப இருக்கின்றனவே" என்றான்.

"இலங்காபுரா, இந்த முள் வேலியை அழித்துவிட்டால் கோட்டைக்கும் காவல் காட்டுக்கும் இடையே பெரும் பொட்டல் உண்டாகி விடுகிறதே! அப்படி உண்டாகிவிட்டால் நமது படைகள் கோட்டை வாயிலை எப்படி நெருங்குவது?" என்று கேட்டான் மழவராயன்.

"அதற்குத் தனித் திட்டம் இருக்கிறது. பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான் இலங்காபுரன்.

அவனது கட்டளைகள் செம்மையாக நிறைவேற்றப்பட லாயின. கருவேல மரங்கள் பெரும் சத்தத்துடன் சாய்க்கப் பட்டு,

tamilebooks.net

வெட்டப்பட்டு, அகன்ற அகழியில் தடால் தடாலென போடப்பட்டன. ஒரு சேர அவ்வாறு போடப்பட்டதால் நீரில் இருந்த முதலைகளின் வால்கள் துண்டிக்கப்பட்டதாலும், இதர பகுதிகளில் பலமான காயங்கள் விளைந்ததாலும் அவை போட்ட கர்ணகொடூரமான சத்தங்கள் காவற்காட்டை பயங்கரமாக ஊடுறுவிச் சென்றன. அகழி வெகுவேகமாகத் தூர்க்கப்பட்டு வருவதைக் கோட்டைக்குள் இருந்த பாண்டிய வீரர்கள் உணர்ந்தாலும் சிங்கள வீரர்களின் மீது அம்புத் தாக்குதலைத் தொடுக்க முடியாதவகையில் சிங்கள வில் வீரர்கள் மதில்புறத்தைக் குறிபார்த்தபடி நின்றிருந்தார்கள். எனவே மதிலின் மேல் தளத்திலிருந்த அம்பெறியும் பொறிகள் இயக்கிவிடப்பட்டன. ஆனால் அவை ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி மட்டுமே அம்புகளை வீசியதால் சிங்கள வீரர்கள் தங்களை எளிதில் காத்துக் கொண்டார்கள். இதற்கிடையில் இலங்காபுரனை நெருங்கி உபதளபதி ஒருவன் "ஐயா, அகழியில் நீர் மட்டம் வேகமாக உயருகிறது" என்றான்.

"இதில் வியப்பென்ன உபதளபதி? ஏராளமான மரங்களை அதில் வீசும்போது நீர்மட்டம் உயராமல் என்ன செய்யும்?" என்றான் இலங்காபுரன்.

"நீர்மட்டம் உயர்வதின் வேகம் அசாதாரணமாக இருக்கிறது. சந்தேகமாக இருக்கிறது" என்றான் உபதளபதி.

இலங்காபுரனுக்குப் பளிச்சென்று ஒரு விஷயம் புரிந்தது. அகழிக்கு கோட்டையின் உள்ளேயிருந்து நீர் அனுப்பப் படுவதாலேயே தற்போது நீரின் மட்டம் மிக வேகமாக உயர்கிறது என்பதை உணர்ந்துகொண்டான். இதற்கிடையில் உபதளபதி குறுக்கிட்டு "நீர் இந்த ரீதியிலேயே வந்து கொண்டிருக்குமானால் அகழிக்கு மேல் நீர்மட்டம் உயர்ந்து நாம் கருவேல மரங்களை வெட்டி உண்டாக்கியிருக்கும் பொட்டலை வெள்ளக் காடாக்கிவிடும். அந்த வெள்ளம் எவ்வளவிற்குப் பெருகும் என்று சொல்ல முடியாது. அதோடு அந்த வெள்ளத்தில் அகழியிலிருக்கும் முதலைகளும் வெளியேறும். அவற்றிடம் சிக்கினால் யானைகளால் கூட மீள முடியாது. படைகளின் நிலையும் சொல்ல வேண்டியதில்லை. தடுமாறும் நமது படைகள். அந்த நிலையில் கோட்டை வீரர்களுக்கு நம்மை அழிப்பதொன்றும் பெரிய காரியமாக இருக்க முடியாது."

இந்த நிலையில் மழவராயனும் வந்து ஆபத்தை விவரித்தான்.

இலங்காபுரனோ இதனால் அசரவில்லை. உபதளபதிகளை அழைத்து, "கோட்டையின் முப்புறங்களிலும் அகழியிலிருந்து

tamilebooks.net

நீண்ட கால்வாய்கள் மூன்றை அமையுங்கள். மூன்றும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கட்டும். அவற்றின் மறுகோடி இந்தப் பொட்டலின் ஓரமாகச் சென்று வையையாற்றில் போய் முடியட்டும். இப்படிச் செய்வதால் அகழியில் உயரும் நீர் கால்வாய்களில் விழுந்து வையையில் போய்ச் சேர்ந்து விடும். வெள்ளம் தவிர்க்கப்படும்." என்றான்.

அவனது உபாயத்தைக் கேட்டு அனைவரும் வியந்தார்கள். பிறகு பேய்களைப் போல் அசுர வேகத்தில் செயல்பட்டு கால்வாய்களை வெட்டலானார்கள். கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்த நீர் மட்டம் இலங்காபுரன் கூறியபடியே மூன்று புறங்களிலும் சுரண்டப்பட்டன. கால்வாய்களில் வழிந்து பரவலாகப் படர்ந்து வையையை நோக்கிப் புரண்டு விட்டது.

விரைவிலேயே இந்த ஏற்பாடு கோட்டைக்குள் இருந்தவர்களுக்குப் புரிந்திருக்க வேண்டும். அதை உணர்த்தும் வகையில் கோட்டைக்குள்ளிருந்து அகழிக்கு வந்து கொண்டிருந்த நீர் நின்றது. அதைக்கண்டு தன் திட்டம் வெற்றி பெற்றதை உணர்ந்த இலங்காபுரன் விரைவிலே கருவேல மரங்கள் முழுவதையும் வெட்டிப்போட்டு அகழியைத் தூர்த்தான். கால்வாயில் ஓடிய நீரும் காலியாயிற்று.

காவல் காட்டிற்கும் கோட்டைச் சுவற்றுக்கும் இடையே கூப்பிடுதூரம் இருந்ததையும் அப்பகுதி கோட்டையின் மூன்று புறங்களிலும் வெறும் வெட்டவெளியாக இருந்ததையும் கண்டான்.. தன் படைகளைக் கோட்டையைச் சுற்றி வட்டவடிவில் அணிவகுத்து முற்றுகையிடும்படி பணித்தான். அதுவரையில் சம்பவங்கள் விரைவாகவும் எதிர்பார்த்தபடியும் நடந்திருந்தாலும் அதற்குப் பிறகு கோட்டைக் குள்ளிலிருந்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

குலசேகர பாண்டியனைக் கோட்டையை விட்டு வெளியே இழுத்தாலொழிய அவனை வெல்வது கடினம் என்று எண்ணியிருந்த இலங்காபுரன் பல்வேறு போர் முறைகளைக் கடைபிடித்தும் அவனை வெளியே இழுக்கமுடியாமல் முடிவில் அவனை நோக்கிப் புறப்பட்டு பலவிதமான தடைகளைக் கடந்து வந்து தற்போது நான்கைந்து நாட்களாய் ஒன்றும் தோன்றாமல் முற்றுகையிட்டுக் கொண்டிருக்க நேர்ந்ததை எண்ணிச் சற்றே கவலையும் கொண்டான்.

கோட்டையை விட்டு குலசேகர பாண்டியன் வர மறுத்ததிலிருந்தே கோட்டைக்குள் இருக்கும் வரை அவனது பலம் ஓங்கியே இருக்கும் என்பதை உணர்ந்த இலங்காபுரன் அந்த விதத்தில் குலசேகர பாண்டியனின் படையெண்ணிக்கை

tamilebooks.net

கோட்டைக்குள் கணிசமானதொரு படை உள்ளே வைத்துக் கொண்டு ஏன் அவன் எந்தவித நடவடிக்கையிலும் இறங்காமல் இருக்கிறான் என்று யோசித்துக் குழம்பினான் இலங்காபுரன்.

கோட்டைக்குள் இருக்கவே விரும்பும் குலசேகர பாண்டியன் அதற்கேற்பவே உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருப்பான் என்று தோன்றியது. இப்படிப் பலபடி யோசித்த இலங்காபுரன் தானாக ஏதாவது நடவடிக்கை எடுத்தாலொழிய குலசேகர பாண்டியனின் பலத்தைச் சோதிக்க முடியாது என்று முடிவிற்கு வந்தான்.

ஃ ஃ ஃ

இலங்காபுரன் இவ்வாறு யோசித்துக் கிடந்த அதே நேரத்தில் கோட்டைக்குள் இருந்தவர்களும் ஆலோசனையில் இறங்கியிருந்தார்கள்.

ஆலோசனை அவையைக் கூட்டி கணிசமான நேரம் கடந்திருந்தும் அங்கிருந்தோர் ஆலோசனை எதிலும் இறங்காமல் பேதலித்துப் போனவர்களைப் போல் பேச்சற்றுக் கிடந்ததைக் கண்ட பாண்டிய மன்னன், "பாண்டிய நாட்டின் பிரதான தளபதிகள் ஆலோசனை அவைக்கு வந்து வழக்கம் போலவே பேச்சற்று அமர்ந்திருக்கிறீர்கள். அதற்கான காரணத்தை அறியலாமா?" என்று மெல்ல வினவினான் புன்சிரிப்புடன்.

அவனது அந்த வார்த்தைகள் சிலையென அமர்ந்திருந்தவர் களின் செவிகளில் ஊடுருவி அவையின் சுவர்களில் எதிரொலித்து ஓய்ந்தது.

"பாண்டிய நாடு பேராபத்தில் சிக்கியிருக்கிறது. . . " என்று அமைச்சர் எழுந்து பேசத் துவங்கினார்.

"அது சகஜம்" என்றான் குலசேகர பாண்டியன். அனைவரும் அவனை ஏறெடுத்துப் பார்த்தார்கள் சந்தேகத்துடன்.

அதைக் கண்ட மன்னன் "நாடு என்று ஒன்றிருந்தால் அதற்கு பேராபத்துக்கள் எப்போதும் தோன்றலாம் இது சகஜம். அதுவும் நம் பாண்டிய நாட்டிற்குக் கொஞ்ச காலமாக அடுத்தடுத்து பேராபத்துக்கள் தோன்றிய வண்ணமாய் இருக்கின்றன. இனியும் பற்பல பேராபத்துகள் தோன்றக் கூடும். ஆனால் வீரர்கள். . . அதுவும் பாண்டியர்கள் இத்தகைய ஆபத்துகளையெல்லாம் கண்டு அஞ்சி விடுவதில்லை. அயர்ந்து விடுவதில்லை. வீரத்தின் உறைவிடமே பாண்டியர்கள்தான். இல்லையென்றால் தலையாலங் கானத்தில் பாண்டியர் நெடுஞ்செழியர் தன்னந்தனியாக இருந்து கொண்டு பல்வேறு பட்ட ஏழு மன்னர்களைப் புறங்கண்டிருக்க

tamilebooks.net

முடியுமா? ஆட்சியில் ஆபத்துகளும் தோல்விகளும் சர்வ சகஜமாய் வந்துவிட்டுப் போகும் காற்றைப் போன்றவை. அவை குறித்து இங்கே யாரும் வாடிப் போய்விட வேண்டியதில்லை. நிலைமையைக் குறித்து ஆலோசித்து அவரவர் கடமைகளை அவரவர் நிறைவேற்றுவோம். முடிவு அன்னை மீனாட்சியின் அருட்கரங்களில் இருக்கிறது. . .” என்றான்.

அவனது வார்த்தைகள் அனைவருக்கும் சற்றே தெம்பை ஊட்டின.

கோட்டைத்தளபதி எழுந்து “இலங்காபுரனைத் தடுக்கவும் அழிக்கவும் நாம் எடுத்த முயற்சிகள் தகர்ந்து விட்டன. நம் அகழியையும் அவன் தகர்த்துவிட்டான்” என்றான்.

“இவையெல்லாம் பழைய கதைகள். இப்போது பேசத் தேவையில்லாத விஷயங்கள். . .” என்றான் மன்னன்.

“புதிய நடவடிக்கை எதையும் இலங்காபுரன் எடுக்கவில்லை” என்றான் தளபதி.

“இதுவரை நடவடிக்கைகளை எடுத்ததெல்லாம் நான்தான். ஆகவே எந்தப் புதிய நடவடிக்கைகளையும் நம்மிடமிருந்து தான் அவன் எதிர்பார்க்கிறான். ஆகவே அவனிடம் நடவடிக்கைகளை எதிர்பார்த்தால் பயனில்லை” என்றான் மன்னன்.

“நமது நடவடிக்கை என்ன என்பதை மன்னர் சொன்னால் செயல்படுத்தத் தயாராக இருக்கிறோம்” என்று சாமர்த்திய மாகச் சொன்னான் கோட்டைத் தலைவன்.

அவனது பேச்சை உள்ளுக்குள் ரசித்த மன்னன், “கோட்டைத் தலைவரிடம் திட்டங்கள் எதுவும் இல்லையா?” என்று வினவினான்.

இந்த நிலையில் அவையில் பிரவேசித்த உபதளபதி ஒருவன் “மன்னவா சிங்களப் படைகள் அனைத்தும் தெற்கு வாயிலுக்கு முன்பாகத் திரண்டிருக்கின்றன” என்றான்.

“உண்மையாகவா?” என்று வினவினான் கோட்டைத் தலைவன்.

“ஆம் ஐயா. நேற்று இரவோடு இரவாக அவை தெற்கு மதில் புறமாக நகர்ந்து விட்டன. கிழக்கு மேற்கு பக்கங்களில் படைகள் பெயருக்குக் கூட இல்லை. . .”

“நன்றாகப் பார்த்தாயா? கிழக்கு மேற்குப் புறங்களில் உள்ள காவற்காடுகளில் ஒளிந்திருக்கலாம். . .”

tamilebooks.net

"அதற்கு வழி இல்லை தளபதி. அந்த இரு புறங்களிலும் உள்ள காட்டு மரங்கள் பற்றி எரிகின்றன. அவர்கள்தான் பற்ற வைத்திருக்க வேண்டும்."

"இதென்ன விந்தையாக இருக்கிறதே! அவனது நோக்கம்தான் என்ன?" என்று வியந்தான் கோட்டைத் தலைவன்.

"தெற்கே திரண்டிருக்கும் படைகள் காட்டு மரங்களை மும்முரமாக வெட்டுவதிலும் பெரும் துண்டுகளை உருவாக்கு வதிலும் ஈடுபட்டிருக்கின்றன. அவற்றை யானைகளிடம் கொடுத்துத் தெற்கு வாயிலில் இடைவிடாத தாக்குதல்களைத் தொடுப்பதே அவர்களது உத்தேசம் என்று தெரிகிறது. மொத்தப் படைகளையும் தெற்கு வாயிலிலேயே தொடர்ந்து செலுத்தினால் கதவுகளைத் தகர்த்து விடலாம் என்பது அவர்களது நோக்கமாக இருக்கலாம். . ."

உபதளபதிகளின் செய்திகளைக் கேட்டு அவரவர்களும் தனித்தனியாக யோசனையில் ஆழ்ந்தார்கள். மேற்கு, கிழக்கு வாயில்களை அனாதரவாக இலங்காபுரன் விட்டுவிட்டது ஏன் என்பது அவர்களுக்கு விளங்கவில்லையென்றாலும் ஏதோ சதி நடக்கிறது என்று மட்டும் சந்தேகிக்க முடிந்தது.

இதற்கிடையில் அன்று பகலில் பாண்டியர்கள் எதிர்பார்க்காததொரு சம்பவம் நடந்து விட்டது. திடீரென சிங்களர் தரப்பிலிருந்து உயரே எழுந்து வந்த தெற்கு மதில் புறத்தில் சரமாரியான எரியம்புகள் விழுந்தன. மதில் தளத்தில் வீரர்கள் கூடுவதற்கு முன் எரியம்புகள் அத்தளத்தில் தயாராக வைத்திருந்த எண்ணைக் கொப்பரைகளில் விழுந்து எண்ணையுடன் சேர்ந்து பெரிதாக எரிந்தது. கணிசமான கொப்பரைகள் காலியான பின்பே பாண்டிய வீரர்கள் தளத்தை அடைய முடிந்தது.

சிங்கள வீரர்களின் அந்த திடீர் நடவடிக்கை உண்டான மாதிரியே திடீரென நின்றது. இதையடுத்து பாண்டிய வீரர்கள் தெற்கு வாயில் தளத்திற்கு இதர மதில் தளங்களிலிருந்த எண்ணை கொப்பரைகளைக் கொண்டு வந்தார்கள். அன்று மாலை அவர்களுக்கு வேறொரு வதந்தி கிடைத்தது. அனாதரவாகக் கிடக்கும் கிழக்கு மேற்கு ஆகிய வாயிற் பகுதிக்கு இலங்காபுரனின் படைப்பிரிவுகள் மேலை மங்கலத்திலிருந்து வந்து சேரவிருக்கின்றன என்ற செய்தி கிடைத்தது.

குலசேகர பாண்டியனால் அதை நம்பவும் முடியவில்லை. நம்பாதிருக்கவும் முடியவில்லை. இலங்காபுரன் சில நாட்களாக நடவடிக்கை எதுவும் எடுக்காத மாதிரி தோன்றியது உண்மையல்ல; என்றும் அந்த நாட்களில் மேலை மங்கலத்திற்குச்

tamilebooks.net

செய்தியனுப்பி படைப்பிரிவுகள் வருவதற்குக் கட்டளை யிட்டிருப்பான் என்று வாதிட்டார்கள் தளபதிகள். முடிவில் குலசேகர பாண்டியன் தன் திட்டத்தைக் கூறினான்.

"தளபதிகளே, நமக்குக் கிடைத்த செய்தி உண்மையாக இருந்தாலும் சரி, பொய்யாக இருந்தாலும் சரி, நாம் அதற்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தெற்கு வாயிலில் கூடியுள்ள சிங்களப்படைகளை உடனடியாக அழித்தால் தான் உண்டு. அதற்கு இன்றிரவே நாம் முயலவேண்டும். இன்று நள்ளிரவு வரை கிழக்கு மேற்குப் பகுதியைக் கண்காணியுங்கள். இப்போதைய நிலைமையே அப்போதும் நிலவினால் வானத்தில் எரியம்பு ஒன்றை எரித்துத் தெரியப்படுத்துங்கள். நமது படைப் பிரிவுகள் இரண்டு, அனாதரவாய் இருக்கும் கிழக்கு, மேற்கு வாயில்களைச் சத்தமில்லாமல் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியேறி மதிலோரமாகவே தென் திசைக்கு முன்னேற வேண்டும். தெற்கு வாயிலில் தாக்குதலைத் தொடுக்கத் தயாராக இருக்கும் சிங்களப்படைகளை இருபுறத்திலும் இடுப்பில் தாக்குவோம். தாக்குதல் தொடங்கிய பின் தெற்கு வாயிலைப் பகிரங்கரமாகவே திறந்துகொண்டு நமது பிரதான படையை வெளியே கொணருவோம். முப்புறமும் நாம் தாக்கினால் சிங்களவர் தப்ப இடமிருக்காது. அவர்களை அழித்துவிட்டால் பிறகு படைப் பிரிவு வந்தாலும் நமக்குக் கவலையில்லை..."

குலசேகர பாண்டியனின் திட்டம் அப்போதைய நிலைமைக்குப் பொறுத்தமாய் இருந்ததால் அனைவரும் ஒப்புக் கொண்டார்கள். நள்ளிரவில் நிகழப் போகும் பயங்கரத்தைக் காண பயந்தோ என்னவோ அன்று நிலவும் வானில் காணவில்லை. கும்மிருட்டுக்குப் பேர்போன அந்த அமாவாசை நாளின் இரவும் வந்தது.

அந்தச் சமயத்தில் கோட்டைக்குள்ளிருந்து ஒற்றை எரியம்பு ஒன்று வானத்தில் உயரே எழுந்தது.

24

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்."

—குறள், 494

கோட்டைக்குள்ளேயிருந்து வானத்தில் உயரே எழுந்த ஒற்றை எரியம்பை கிழக்குப் புறக்காவற்காட்டில் அவிந்து கொண்டிருந்த தீயிக்குப் பின்னாலிருந்த இலங்காபுரன்

tamilebooks.net

கவனித்தான். தற்போது நிகழ்ச்சி எதிர்பார்த்த மாதிரியே நடப்பது குறித்தும், அதற்குத்தகுந்த முன்னேற்பாடுகளைத் தான் செய்திருந்தது குறித்தும் அவன் பெரும் திருப்தியை அடைந்தான்.

தகுதியான இடத்தை அமைத்துக்கொண்டு போரையும் தீவிரமாகச் செய்தால் தன்னை வென்று விடலாம் என்று கோட்டைக்குள் இருந்தபடி மனப்பால் குடிக்கும் பாண்டியன் அந்த எண்ணத்தை இழந்து தோற்பது உறுதி என்று நம்பினான் அவன்.

ஆகவேதான் நான்கு நாட்களாக முற்றுகையிட்டும் குலசேகர பாண்டியன் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால், தான் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் தான் உண்டு என்று தீர்மானித்த இலங்காபுரன் தீவிர யோசனைக்குப் பிறகு தன் படைகளை ஒன்றாக்கி ஒரு தனிப்பிரிவைத் தவிர மற்றவை அனைத்தையும் தெற்கு வாசல் பக்கமாகக் கொண்டு வந்தான்.

குறிப்பிட்டதொரு தனிப்பிரிவை மட்டும் கிழக்குப் புற காவல் காட்டிற்குள் மறைத்து வைத்தான். அந்தப் படைகளும், மேற்குப் பகுதியிலும் மரங்களுக்குத் தீவைத்து படைகள் எதுவும் இல்லாமல் அனாதரவாய் இருப்பதாகக் கோட்டைக்குள் இருப்போர் நம்பும்படி செய்தான். அவர்களது கவனமெல்லாம் தெற்கு வாயிற்புறம் திரும்பும் வகையில் அப்பகுதியில் எரியம்புத் தாக்குதல்களை நடத்தியும், உதவிப் படைகள் மேலை மங்கலத்திலிருந்து வருவதாக வதந்திகளை உண்டாக்கவும் செய்தான்.

அதே சமயம் தன் நடவடிக்கைகளால் குலசேகர பாண்டியன் உள்ளபடியே நம்ப மாட்டான் என்றும் அனாதரவாய் இருக்கும் வாயில்களை இரவு நேரத்தில் ரகசியமாகத் திறந்து கொண்டு படைகளை வெளியே நடத்திவந்து தெற்குப் புறத்தில் தாக்க முற்படுவான் என்றும் எதிர்பார்த்தான். வானத்தில் ஒற்றை எரியம்பு ஒன்று எழுந்ததைக் கண்டதும் அவனது ஊகம் உறுதியாயிற்று. அதற்குத் தகுந்த முன்னேற்பாடுகளையும் அவன் செய்து வைத்திருந்தான்.

குலசேகர பாண்டியனின் ரகசியத் தாக்குதல் எப்போது நடந்தால் அனுகூலமானது என்று யோசித்து அவன் அதற்காக அமாவாசை நாளையே தேர்ந்தெடுத்து காரியங்களைச் செய்திருந்தானாதலால் அன்றிரவு நடுநிசிக்குச் சற்று முன்பு கிழக்குப் புறக் காவற்காடுகளில் இருந்த தன் படைகளில் வாள் வீரர்களை மெதுவாக நகர்ந்து கிழக்கு வாயிலின் இரு புறங்களிலும் மதிலையொட்டி நின்று கொள்ளும்படியும், வாயிற்

tamilebooks.net

கதவு ரகசியமாகத் திறக்கப்பட்டு குலசேகர பாண்டியனின் படைகள் வெளியே வரும்போது உடனடியாகத் தாக்காமல் கணிசமான படை வெளியேறிய பின்பு இருபுறங்களிலும் வாள் தாக்குதலையும் அம்புத் தாக்குதலையும் செய்யும்படி கூறியிருந்தான்.

அத்தகைய திடீர் தாக்குதலால் குலசேகராபாண்டியனது படைகள் திணறும் என்றும் அந்த நேரத்தில் கிழக்குக் காவற் காட்டிலிருந்து புரவிப் படைகளுடன் தான் கண வேகத்தில் வந்து மோதினால் அவனது படைகளை எளிதில் நிர்மூலமாக்கி வாயிலில் புகுந்துவிடலாம் என்றும் சொல்லியிருந்தான்.

எனவே நள்ளிரவு நேரம் நெருங்கவிருந்தபோது அவனது காலாட் படைவீரர்கள் காவற்காட்டிலிருந்து மெல்ல மெல்ல வெளியேறி தரையில் படுத்தவண்ணம் கிழக்கு மதிலை நோக்கி வேகமாக ஊர்ந்தார்கள். பொழுது ஓடிவிட்டிருந்ததாலும், அமாவாசை நாளாய் இருந்ததாலும் அவர்களை கும்மிருட்டானது பூரணமாக மறைத்துக் கொண்டது. எந்த நேரத்திலும் ரகசியப் படைகளைச் சந்திக்கத் தயாராக இருந்தார்கள் அவர்கள்.

இதுபோன்ற ரகசியப்படை மேற்கு வாயிற்புறத்திலும் வெளிப்படலாம் என்று கருதிய இலங்காபுரன் அதற்கும் ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தான். தெற்குப் புறத்திலிருக்கும் பெரும்படையில் ஒரு பிரிவு மட்டும் தனித்தே அணிவகுத்துக் காத்திருக்க வேண்டும் என்றும் மேற்கு வாயிற்புறத்திலிருந்து குலசேகர பாண்டியனின் படைகள் நெருங்கும் பட்சத்தில் அவற்றைச் சந்திக்க வேண்டும் என்றும் அவன் கட்டளையிட்டிருந்தான்.

இப்படிச் சகல முன்னேற்பாடுகளையும் செய்திருந்த நிலையில் ஒற்றை எரியம்பையும் கண்டானாதலால் அவனது மகிழ்ச்சிக்கு எல்லையில்லாமல் போயிற்று. காட்டில் இருந்த தன் புரவிப் படைகளை ஆயத்தப்படுத்திக் கொண்டு நின்றான். காட்டின் முகப்பில் உண்டாகியிருந்த தீ அவிந்துபோய் இங்குமங்குமாய் மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. எந்த வினாடியிலும் கிழக்கு வாயில் திறக்கப்படலாம் என்று அவன் காத்திருந்த அந்த நிலையில் திடீரென எதிர்பாராத திருப்பம் ஒன்று உண்டாயிற்று.

அவனிருந்த காவற்காட்டின் பின்புறம் திடீரென 'டமடம' வென்று பேரிகைகளும் கொம்புகளும் பெரிதாக ஒலித்தன. அதைக் கேட்டுக் குழம்பினான் இலங்காபுரன். இந்தப் பேரிகை ஒலி அந்தப் பிராந்தியத்தையே கலக்குகிற மாதிரி எதிரொலித்ததாலோ என்னவோ அவன் எதிர்பார்த்த கிழக்கு

tamilebooks.net

வாயில் திறக்கவில்லை. மதிலோரத்தில் நின்ற அவனது படைகளும் குழம்பின.

தளபதியொருவனை உடனே மதிலோர வீரர்களிடம் அனுப்பிய இலங்காபுரன் பிற உபதளபதிகளிடம் "அநேகமாக நமக்குப் பின்னால் பேரிகைகள் கொட்டிவரும் படை குலசேகர பாண்டியனுக்கு உதவ வரும் கொங்கு மன்னனின் படைகளாகத்தான் இருக்கும். ஆகவே நமது திட்டம் மாறுகிறது" என்று கூறிவிட்டுத் தொடர்ந்தான்.

"நமது புரவிப் படைகள் இந்தக் காட்டின் முகப்பில் இரண்டு பக்கங்களில் இரு பிரிவுகளாக நிற்கட்டும். கொங்கு நாட்டுப் படைகள் இக்காட்டைக் கடந்து செல்லும்போது நாமிருப்பதை தெளிவாகப் பார்க்க முடியாது. கணிசமான படை நம்மைக் கடந்த பின் இருபுறங்களிலிருந்தும் நாம் பாய்வோம். நம்மைக் கடந்து சென்றுவிடும் வீரர்களை மதிலோரத்தில் இருக்கும் வீரர்கள் கவனித்துக் கொள்வார்கள்."

இலங்காபுரன் இவ்வாறு சொல்லிப் படைகளை ஆயத்தப் படுத்துவதற்கும் கொங்கு மன்னனின் படை காவற்காட்டில் முன்னேறி வருவதற்கும் சரியாக இருந்தது. அதைக் கவனித்த இலங்காபுரன் அதே சமயம் கொங்கு மன்னனின் படையில் ஆங்காங்கே பந்தங்கள் வருவதையும் கவனிக்கவே செய்தான். அந்த பந்தங்கள் படையின் முகப்பில் இல்லாததையும் சற்றுத் தள்ளியே இருந்ததையும், அந்தப் படைகள் சற்று வேகமாக முன்னேறுவதையும் கண்டு ஓரளவு திருப்தியும் கொண்டான். சிறிது நேரத்தில் கொங்கு மன்னனின் படைகள் காட்டு முகப்பைக் கடக்கலாயின. அந்த நிலையில் எந்த வித போர் முழக்கத்தையும் செய்யாமல் திடீரென புயல்வேகத்தில் அவனது படைகள் இரு புறங்களிலிருந்தும் பாய்ந்து ஊடுருவின.

காட்டின் முகப்பைத் தாண்டி பொட்டலுக்குப் போய் விட்ட புரவிப் படைகளின் மீது மதிலோரத்தில் இருந்த வீரர்கள் வில்லை நாணேற்றி அம்புகளை எய்தார்களாதலால் அம்புகள் புரவிகளின் உடலில் தைத்தன. எனவே அவை தத்தம் மேலிருந்த வீரர்களைக் கீழே தள்ளி இடறி விழுந்தன. பக்கவாட்டத்தி லிருந்து பாய்ந்த இலங்காபுரன் காட்டிற்குள் தாக்குதலை எளிதாகச் செய்ய முடியாததை உணர்ந்ததாலும் வேறொரு காரணத்தாலும் மெல்லமெல்ல தன் படைகளைப் பொட்டலுக்கு இழுத்து வந்துவிட்டதால் தற்போது இருதரப்பு படைகளும் பொட்டலில் மோதிக் கொண்டன.

இலங்காபுரனின் திடீர் தாக்குதலால் கொங்கு நாட்டுப் படைகள் மிகவும் சிதறிய நிலையில் போரிட்டுக்

tamilebooks.net

கொண்டிருந்தது. போரிடுவதற்கு முன்னால் தளபதியொருவன் மூலம் மதிலோர வீரர்களுக்கும் தெற்கு வாசல் படைகளுக்கும் இலங்காபுரன் செய்தியனுப்பியிருந்தானாதலால் தற்போது தெற்கு வாசல் பக்கத்திலிருந்து புரவிப்படை பிரிவொன்று இருளில் நகர்ந்து தற்போதைய போர்க்களத்தில் கலந்து கொண்டதால் கொங்கு நாட்டுப் படைகள் பெரிதும் தடுமாறின.

அங்கே போரிடுவது கொங்கு நாட்டுப் படைகள் தான் என்பது கோட்டைக்குள் இருந்தவர்களுக்குத் தெரிந்து தான் இருந்தது. ஆனால் கிழக்குத் திசைப் பொட்டலில் நடந்த அப்போரில் கொங்கு மன்னனுக்கு உதவ அவர்களால் முடியவில்லை.

கிழக்கு மதிலில் இருந்தபடி அம்புத் தாக்குதல் நடத்தினால் அம்புகள் சிங்கள வீரர்களை மட்டும் தாக்காது என்பதையும் உணர்ந்ததாலும் அமாவாசை இருட்டில் யாரையும் சரிவர அறிந்து கொள்ள முடியாததாலும் செயலற்று இருந்தார்கள்.

இதை உணர்ந்தே போரைப் பொட்டலுக்கு இழுத்து வந்திருந்தான் இலங்காபுரன். ஏற்கனவே கொங்கு மன்னனின் படைகள் சிதறியும் அழிந்தும் விட்ட நிலையில் இணையற்ற தந்திரம் ஒன்றைக் கையாண்டான் இலங்காபுரன். திடீரென மூன்று முறை கொம்பை எடுத்து ஊதிவிட்டு பேரிகைகளை முழக்கினான். அதுமட்டுமல்ல. அவனது படைகளே "குலசேகர பாண்டியர் வாழ்க" என்றும் "கொங்கு மன்னர் வாழ்க" என்றும் இடைவிடாமல் வாழ்த்தொலியை எழுப்பின. அம்முழக்கம் மேன்மேலும் கேட்கவே இலங்காபுரன் எதிர்பார்த்த மாதிரி கோட்டைக்குள் இருந்த பாண்டியர் படைகள் கொங்கு நாட்டுப் படைகள் வெற்றி பெற்றதாகவே எண்ணி ஏமாந்து அப்படைகளை அழைத்துக்கொள்ள கிழக்கு வாயிலைத் திறந்தன. அந்த வினாடிக்கே காத்திருந்த இலங்காபுரனின் படைகள் பாண்டியர் வாழ்த்து கோஷங்களைத் தொடர்ந்து போட்டபடி நுழைந்தன-புயலைப்போல். உண்மையில் அனைவருமே சொல்லிக் கொண்டிருந்த சிங்களத்துப் புயல் தற்போதுதான் புயலாக நுழைந்தது.

நுழைவதற்கு முன் இலங்காபுரன் எழுப்பிய மும்முறைக் கொம்பொலியைக் கேட்டதும் தெற்கு வாயிலில் இருந்த அவனது படைகள் தாக்க வேண்டியதற்கான சமிக்ஞையைப் புரிந்துகொண்டு ஆயத்தமாயின. ஆனால் தெற்கு வாயிலில் உள்ளே இருந்த பாண்டியர் படைகளோ இலங்காபுரன் படைகள் எழுப்பிய போலி வாழ்த்தொலிகளைக் கேட்டுச் சற்றே குழம்பின.

tamilebooks.net

அந்த நிலையைப் புரிந்துகொண்ட சிங்களப் படைகள் வீரபாண்டியனின் தலைமையில் இயங்கின. யானைப் படையை முன்னால் அனுப்பிய வீரபாண்டியன் அவற்றிடம் நீண்ட காட்டு மரத் தண்டுகளைக் கொடுத்துக் கோட்டைக் கதவை இடிக்கும் படி பணித்தான்.

அவனால் விரட்டபட்ட யானைகள் மீது மதிலின் மேலிருந்து அம்புகள் வந்து விழுந்தபோது வெகுண்டு வீறிட்ட வண்ணம் மூர்க்கத்தனமாக ஒன்றிரண்டு பின் வாங்கித் திரும்பி ஓடி வந்தன.

இப்படி நடப்பது சகஜமாதலால் அதை உணர்ந்திருந்த வீரபாண்டியன் யானைப் படையின் பின்புறம் இதர படைகளை அணிவகுக்காமல் அப்படையில் இருபுறமுமே அமைத்திருந் தானாதலால் தற்போது அப்படிப்பட்ட யானைகள் திரும்பி ஓடியபோது பெரும் சேதம் எதுவும் விளையவில்லை.

யானைகளை விட்டுக் கதவுகளை இடிக்கச் சொன்ன வீரபாண்டியன் தன் விற்படைகளை இடைவிடாமல் மதிலின் மேல்புறங்களை நோக்கியும், மதிலில் ஆங்காங்கே தெரிந்த துளைமாடங்களை நோக்கியும் அம்பெய்யும் படியும் மதிலுக்குச் சற்று விலகியிருந்து கொண்டே போர் புரியும் படியும் கட்டளையிட்டான்.

அவனது ஏற்பாட்டினால் மதில்மீது பாண்டிய வீரர்களால் நின்று அம்பெய்யவோ, எண்ணைக் கொப்பரைகளைக் கவிழ்க்கவோ முடியாமல் போயிற்று. விற்பொறிகளை இயக்கவிட்டுவிட்டு மட்டுமே போயிருந்தார்களாதலால் அப்பொறிகள் சிறிது நேரம் வரை அம்புகளைப் பொழிந்தன.

இதற்கிடையில் கிழக்கு வாயிலில் கணிசமான குதிரைப் படைகளுடன் நுழைந்த இலங்காபுரன் படையின் முதல் பாதியைப் போரில் ஈடுபடுத்த விடாமல் பின் பாதியை மட்டும் கிழக்கு வாயிலின் உட்புறத்தில் போரிடப் பணித்துவிட்டு உட்புறமாகவே ஊடுருவித் தெற்கு வாயிலை அடைந்தான். அங்கு அடைந்ததும் மூன்று முறை கொம்பூதிவிட்டு அங்கிருந்த பாண்டியர் படைகளுடன் போரிடலானான்.

ஏற்கனவே வீரபாண்டியனின் படைகள் வெளியில் இருக்கும்போது இலங்காபுரனின் படைகள் எதிர்பாராத விதமாக உட்புறத்தில் வந்துவிட்டதால் குழம்பிப்போன பாண்டியர் படை இலங்காபுரனோடு கைகலக்கலாயின.

அந்த நிலையில் இலங்காபுரனின் கொம்பொலியைக் கேட்ட வீரபாண்டியன் உட்புறத்தில் இலங்காபுரன் வந்து

tamilebooks.net

விட்டான் என்பதை உணர்ந்துகொண்டு கதவுகளை வெகு வேகமாகத் தாக்கினான். வீரர்கள் பலர் கயிறுகளையும், பெரும் வலைகளையும் வீசி மதிலின் மீது ஏறத் தலைப்பட்டார்கள்.

அவர்களுக்கு உட்புறத்திலிருந்து எதிர்ப்பு வரவில்லை யாதலால் எளிதில் மதிலில் ஏற முடிந்தது. அத்துடன் உட்புறமும் போரிட்டுக் கொண்டிருந்த விரர்கள் உட்புறத்தில் இருந்தபடியே வாயிலை மறைத்திருந்த சுவற்றைத் தள்ளி கதவுகளையும் திறந்து விட்டார்களாதலால் வீரபாண்டியனின் படைகள் பெரு வேகத்துடன் உள்ளே நுழைந்தன.

அந்த நிலையில் மேற்கு வாயிலருகே பேரிகையொலி கேட்டது. அதைக் கேட்டதும் இலங்காபுரன் இடையில் வைத்திருந்த சங்கை எடுத்து பலமாக ஊதினான். மேற்கு வாயில் வழியாக வெளியேறி பின்புறமாக வந்து தாக்க நினைத்த குலசேகர பாண்டியனின் படைகள் இச்சங்கொலியைக் கேட்டுக் குழம்பின. சமாதானமாகிப் போவதற்கே ஊதப்படும் சங்கொலி தற்போது கேட்கவே யார் சமாதானமானார்கள் என்பது புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று அப்படைகளால்.

ஆயினும் அவற்றுக்குத் தலைமை வகித்த குலசேகர பாண்டியன் அதைச் சட்டை செய்யாமல் பேரிக்கைகளை பலமாக ஒலித்த வண்ணம் மேற்கு வாயிலைத் திறந்து கொண்டு புரவிப் படைகளுடன் முன்னேறினான். அப்படி முன்னேறிய அவனது படைகள் தெற்கு வாயிலை அணுகத் திரும்பியபோது அங்கே தயாராகக் காத்திருந்தது நுளம்பனின் படை.

இலங்காபுரனின் சங்கொலி நுளம்பனுக்கு எச்சரிக்கை அடையாளமாகச் சொல்லப்பட்டதால் வீரபாண்டியனின் படைகளிலிருந்து தனியே பிரிந்து அணிவகுத்து நின்றிருந்த அவன் சங்கொலியைக் கேட்டதுமே மேற்கு வாயிலிலிருந்து பாண்டியர் படை வருகிறது என்பதை ஊகித்துக் கொண்டு தன் போர் முறையைத் தயார் செய்து கொண்டான்.

பறவையின் இறக்கையைப் போல் அணிவகுத்து நின்றிருந்த அவன் குலசேகர பாண்டியனின் படை தெற்கு வாசல் நோக்கித் திரும்பியதுமே இறக்கைகளை மிக வேகமாக நகர்த்தினானாதலால் இறக்கைகளுக்குள் பாண்டியர் படை சிக்கியது. அவை பின்வாங்க முடியாதபடி மதில்சுவர் தடுத்து விட்டதால் அவை தத்தளித்தன.

இதற்கிடையில தெற்கு மதிலில் ஏறியிருந்த வீரபாண்டி யனின் வீரர்கள் அங்கே தளங்களில் பாண்டியர்கள் தயாராய் வைத்திருந்த எண்ணைக் கொப்பரைகளை மதிலை ஒட்டி இருந்த

tamilebooks.net

குலசேகரப் பாண்டியனின் படைகள் மீதே கவிழ்த்தார் களாதலால் கொதிக்கும் எண்ணை தங்கள்மீது வீழுந்ததால் சித்திரவதைக்கு ஆளாகி மரணக் கூச்சல் போடலானார்கள்.

அந்தச் சித்திரவதையிலிருந்து தப்பமுடியாத வகையில் நுளம்பனின் படைகள் மேன்மேலும் நெறித்துத் தாக்கியதால் தன் நிலையைச் சந்தேகத்திற்கு இடமின்றி உணர்ந்த குலசேகர பாண்டியன் தன் கழுத்தில் இருந்த வலம்புரி சங்கை எடுத்து மாறி மாறி மூன்று முறை ஊதினான். அதை அடுத்து அவனது படைகள் மெதுவாகப் பின்வாங்கியது. நுளம்பனும் சற்றே விலகினான். இறக்கைகளிலிருந்து விடுபட்டு முழுதுமாய் பின்வாங்கிய குலசேகர பாண்டியனின் படை காவல் காட்டில் போய் மறைந்தன.

பாண்டிய மன்னன் ஓடிவிட்டதால் நுளம்பனின் படைகள் வெற்றிப் பேரிகைகளை முழக்கின. அதை அங்கீகரிப்பது போல் கோட்டைக்குள்ளிருந்தும் இலங்காபுரனிடமிருந்தும் இடை விடாத கொம்பொலிகள் எழுந்தன. அனைத்து ஒலிகளும் அடங்குகிற மாதிரி கதிரவனும் கீழ்த் திசையில் வெள்ளை வெளேரென்றுத் தோன்றினான்.

ஃஃ ஃஃ ஃஃ

ஒரு வாரம் கழிந்தது.

கங்கைகொண்ட சோழபுர அரண்மனை.

"வீரபாண்டியன் மதுரையில் முடிசூடிவிட்டானாம்" என்றபடி உள்ளே பிரவேசித்தான் அண்ணன் பல்லவராயன்."

அந்தச் செய்தி அவ்வளவாக விரும்பக்கூடிய செய்தியல்ல என்பதை அங்கிருந்தவர்களின் முகங்களே தெளிவாகக் காட்டின. பெருமூச்சொன்றும் வெளிப்பட்டது அனைவரிடமிருந்தும்.

"குலசேகர பாண்டியன் இருக்குமிடம் தெரியவில்லை" என்றான் அண்ணன் பல்லவராயன்.

"தன் வினை தன்னைச் சுடும்" என்றார் அமைச்சர் பெரிய பல்லவராயர். அனைவரும் அவரைப் பார்த்தார்கள். "வீரபாண்டியனை மறையவிட்டு குலசேகர பாண்டியன் ஆள வந்தான். இன்று குலசேகர பாண்டியனை மறையவிட்டு வீரபாண்டியன் ஆள வந்திருக்கிறான். அவன் செய்த வினை அவனைச் சுட்டிருக்கிறது" என்றார் அமைச்சர் மேலும்.

tamilebooks.net

"எல்லாம் அந்தக் குள்ளநரி இலங்காபுரனின் வேலை" என்று கடுகடுத்தான் அண்ணன் பல்லவராயன்.

கடுகடுப்பும் சினமும் அண்ணன் பல்லவராயனுக்கு மட்டுமல்ல—கங்கை கொண்ட சோழபுரத்து மக்கள் அனைவருக்குமே இருந்தது. எங்கிருந்தோ வந்து பாண்டிய நாட்டில் பெரும் மாற்றத்தை விளைவித்துவிட்ட இலங்காபுரனைப் பற்றிப் பலவாறாகப் பேசிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் யாரும் எதிர்பாராத பேரதிர்ச்சி ஒன்று அண்ணன் பல்லவராயன் அவையில் பேசிய தினத்திற்கு மறுநாள் விளைவித்தது.

அன்று விடியற்காலை நேரத்தில் கங்கைகொண்ட சோழபுரத்தை அடையும் தெற்கு, கிழக்கு ராஜ பாட்டைகள் இரண்டிலும் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பெரும் படைப் பிரிவுகள் இரண்டு மிக வேகமாக முன்னேறி வருவதை மக்கள் கண்டார்கள். படைகள் எழுப்பிய முழக்கங்களிலிருந்தும் ஆங்காங்கே தெரிந்த போர்க் கொடிகளிலிருந்தும் நெருங்கி வரும் படைகள் சிங்களப் படைகள் என்பதும் தெரியவந்தது.

சோழ நாட்டு மக்கள் இயற்கையிலேயே வீரத்திற்குப் பேர் போனவர்கள்தான் என்றாலும் தற்போதைய திடீர் படைப் பிரவேசத்தினால் அச்சமே அடைந்தார்கள். அத்துடன் சோழநாட்டில் அரசியல் குழப்பங்கள் நிலவிய அந்த நிலையில் சிங்களப் படைகள் வேறு முளைத்து விட்டதால் பிரமை பிடித்தவர்களைப் போல் குழம்பினார்கள். ஏற்கனவே மர்ம மன்னனின் ஆணைகளால் குழம்பிக்கிடந்த அவர்கள் தற்போதைய நெருக்கடியைக் கண்டு கதிகலங்கினார்கள்.

இலங்காபுரனின் இயல்பும் சிங்களப் படைகளின் தன்மையும் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்ததால் தற்போது மக்கள் நானாவிதக் கூச்சலிட்ட வண்ணமாய் கலைந்து ஓடினார்கள். மர்ம மன்னனையும் சிங்களப் படைகளையும் சபித்த வண்ணமாய்ச் சென்றார்கள்.

அடுத்த சில நிமிடங்களில் போர் முரசுகள் ஒலித்தன. கோட்டைக் கதவுகள் தடார் தடாரெனச் சாத்தப்படும் பேரொலிகள் எழுந்தன. படைவீரர்களின் கூக்குரல்களும் திடீர் ஆரவாரங்களும் விண்ணைப் பிளந்தன. ஒருவாறாக சிங்களப்படைகள் கங்கைகொண்ட சோழபுரக் கோட்டையை முழுவதுமாய் வளைத்துக் கொண்டு முற்றுகையை அறிவித்து கொம்புகளை ஊதின.

tamilebooks.net

இதற்கிடையில் சிங்களப் படைகளைப் பற்றிய முக்கிய விஷயம் ஒன்று தெரிய வந்தது. படைகளுக்குத் தலைமை வகித்து வந்திருப்பது இலங்காபுரன், என்பதே அது. இது தெரிந்தபின் மக்கள் மட்டுமின்றி பல்லவராயர்கள் கூட கவலைப்பட லானார்கள். அந்த இலங்காபுரன் வெறும் மனிதனல்ல என்பதும் பெரும் அரக்கன் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அது மட்டுமல்ல, போர் என்ற பெயரில் கூடலிலும் தென்பாண்டி நாட்டிலும், தொண்டி, பாசிப்பட்டினம் ஆகிய இடங்களிலும் அவன் நடத்திய நாசவேலைகள் சோழநாட்டில் பிரசித்தமா யிருந்தபடியால் அவன் கால் வைத்த இடமும் கண்பட்ட இடமும் துலங்காதென்று கருதினார்களாதலால் அவனது வரவு சோழநாட்டிற்குப் பெரும் பீடை என்றும் மகா நாசம் என்றும் நினைத்தார்கள்.

கோட்டைக்குள் அவசர மந்திராலோசனை அவை கூடவும் செய்தது.

25

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்."

—குறள், 388

"இதென்ன அண்ணா பெரிய விபரீதமாக இருக்கிறது! இலங்காபுரனுக்கும் அவன் மன்னனுக்கும் பாண்டிய நாட்டின் மீது மட்டும் கண்ணில்லை. நம் நாட்டின் மீது உண்டு என்பது நமக்குத் தெரிந்ததுதான். ஆனால் இத்தனைச் சீக்கிரமாக அதுவும் திடீரென முளைப்பான் என்று யார் எதிர்பார்க்க முடியும்? அதெப்படி திடீரென முளைத்தான்?" என்று தன் வியப்பையும் அதிர்ச்சியையும் தெரிவித்துக் கொண்டான் அண்ணன் பல்லவராயன்.

"தேவையற்றவைகளைப் பேசத்தான் அவையைக் கூட்டினாயா?" எரிந்து விழுந்தார் அமைச்சர்.

திடீர் மாற்றத்தினால் அமைச்சர் அதிர்ந்து போயிருக்கிறார் என்பதை அவரது எரிச்சலின் மூலம் தெரிந்து கொண்ட அண்ணன் பல்லவராயன் அதே சமயம் இருக்கும் நிலைமையை மறைத்துச் சொல்ல முடியாமல் கூறலானான்:

"அண்ணா, பலகாலமாகச் சோழர்கள்தான் படை யெடுத்துப் போயிருக்கிறார்களே தவிர பகைவர்கள் சோழ நாட்டை நோக்கிப் படையெடுத்து வந்ததில்லை. அதுவும் இந்த கங்கை கொண்ட சோழபுரத்தைப் பகைவர் வளைத்ததில்லை.

tamilebooks.net

முதலாம் ராஜேந்திரரால் நிர்மானிக்கப் பட்டதிலிருந்து எந்தப்பகைவனும் இந்தவெற்றித் திருநகரை நெருங்கியதில்லை. அதனாலேயே இயல்பாக நாம் இக்கோட்டையைப் பலமாக வைத்துக் கொள்ளவில்லை. பாதுகாப்புகளையும் பெரிதாக அமைத்துக் கொள்ளவில்லை. தற்போது கோட்டைக்குள் சில ஆயிரம் வீரர்களே இருக்கிறார்கள். திருபுறம்பியத்தில் இருக்கும் படை முகாமிற்கு உடனடியாக அழைப்பனுப்பவும் வாய்ப் பில்லை. நேரமுமில்லை. பாதிப் படைகளை நமது இளவரசர் அழைத்துப் போய்விட்டார். இங்கே பலநாட்களாகத் தங்கியிருந்த படைத் தலைவர்களும் இப்போது இங்கில்லை. காஞ்சியில் இருக்கிறார்கள். திடீர்முற்றுகையை எதிர்பார்க்க வில்லையாதலால் கோட்டைக்குள் உணவுப் பொருட்களும் தானிய வகைகளும் போதிய கையிருப்பு இல்லை. மொத்தத்தில் நாம் நிர்க்கதியாய் இருக்கிறோம். ஒரு வாரத்திற்குக் கூட நம்மால் எதிரியைத் தேக்கி வைக்க முடியாது. அதுமட்டுமல்ல. போர் என்று துவங்கி விட்டால் கொலை என்ற வார்த்தையைத் தவிர வேறெதையும் உச்சரிக்காதவன் இலங்காபுரன். அவன் தன் வேலையைக் காட்டத் துவங்கி விட்டால் மக்களின் வெறுப்பும் நம்மீது விழும்..."

தற்போதும் அமைச்சர் எரிச்சலுடன் தான் பேசினார்:

"கோட்டையை வைத்திருக்கும் லட்சணம் நன்றாக இருக்கிறது. நீ சொல்வதைப் பார்த்தால் நம் கதி அதோ கதி தானா?"

அண்ணன் பல்லவராயன் நிதானத்தை இழக்காமல் "கோபப்படாதீர்கள் அண்ணா, மோசமான நிலைமை நகரைச் சூழ்ந்திருக்கிறது. நாச மேகங்கள் தழைத்திருக்கின்றன. அழிவு மழை மக்கள் மீது பொழிவதற்குள் நாம் ஏதாவது செய்தால்தான் உண்டு. இல்லையென்றால் பின் விளைவுகளுக்கான பழி நம் இருவரையே சாரும்" என்றான்.

"அதற்காக இலங்காபுரனின் காலில் போய் விழச் சொல்கிறாயா?" என்றார் அமைச்சர்.

அந்த நேரத்தில் கோட்டைத் தலைவன் அங்கே பிரவேசித்து, "அமைச்சர் பெருமானே, கோட்டை வாயிலில் சிங்களப்படை முகாமிலிருந்து சிவிகை ஒன்று வந்திருக்கிறது. உள்ளே சிங்களப் பெண்ணொருத்தி இருக்கிறாள். அவள் பெயர் ரோகண நங்கையாம். இலங்காபுரனின் சார்பில் தங்களைச் சந்திக்க விரும்புகிறாள் அனுமதிக்கவா" என்று கேட்டான்.

சகோதரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். கோட்டைத் தலைவன் மேலும் கூற முற்பட்டு, "ஐயா, அவள்

tamilebooks.net

ஏதாவது சதி நோக்கத்துடன் வர நினைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் நமது வீரர்கள் அவளை அனுமதிக்க முடியா தென்று உளறியிருக்கிறார்கள். அதற்கு அவள் பெண்ணுக்குப் பயந்தவர்கள்தானா சோழர்கள்? என்று கேட்டிருக்கிறாள். அவள் நாக்கைத் துண்டித்து விடவா?" என்றான்.

இதைக் கேட்டதும் அமைச்சருக்குக் கோபத்திற்குப் பதில் சிரிப்பே எழுந்தது. "பெண்ணுக்கென்ன, பேய்க்களுக்குக் கூட பயந்தவர்களல்ல சோழர்கள் என்றும் சொல்லும், அப் பெண்ணிடம் தக்க மரியாதையுடன் அழைத்து வாரும்" என்றார்.

சில நிமிடங்களில் அரண்மனை அருகே சிவிகை வந்திறங்கியது. அதிலிருந்து இறங்கிய அச்சிங்காரி சகோதரர்கள் இருந்த மாடத்தில் பிரவேசித்தாள். ஒய்யாரமாய் இருவரையும் பார்த்துவிட்டு எவரது அனுமதிக்கும் காத்திராமல் காலியாய் இருந்த ஆசனத்தில் தைரியமாய் அமர்ந்தாள். அவளது தோரணையும் பாவனையும் வித்தியாசமாக இருந்தன. சிங்களத்துச் சாயல் அவள் முகத்தில் தெளிவாய் பிரதிபலித் தாலும் அழகிற்கு அச்சாயல் ஒரு கெடுதலையும் செய்து விடவில்லை. சகோதரர்கள் மௌனத்தை அனுஷ்டித்தார்கள். அதை அவள் கலைத்தாள்.

"இலங்காபுரன் தண்டநாயகரின் தூதுவனாய் வந்திருக்கிறேன் நான்."

அவளது சகஜமான பேச்சைக் கேட்ட அண்ணன் பல்லவராயனும் கணீரென்ற குரலில், "தெரியும். அதனால் தான் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் உரிய மரியாதையும் கொடுக்கப்பட்டது" என்றான்.

"இல்லையென்றால்?" என்று கேட்டாள் ரோகண நங்கை.

"இந்நேரம் சிறையின் தரையில் போடப்பட்டிருப்பாய்" தயக்கமின்றிப் பதில் வவந்தது சேனாதிபதியிடமிருந்து.

அவள் புன்னகை செய்துவிட்டு, "என்னைச் சிறையில் அடைப்பதுடன் நிகழ்ச்சிகள் முடிந்து விடாது" என்றாள்

"இல்லையென்றால் மட்டும் பின்விளைவுகள் இருக்காதா என்ன? பின்விளைவுகள் இல்லாத விஷயங்கள் எதுவும் இல்லை பெண்ணே" என்ற அண்ணன் பல்லவராயன், "அது இருக்கட்டும். நீ வந்த விஷயம் என்ன?" என்று வினவினான்.

"சொல்லி விளக்கக்கூடிய அளவிற்குப் புரியாத விஷயம் எதுவுமில்லை என்பது தண்டநாயகரின் அபிப்ராயம். ஆகவே ஒன்றை மட்டும் கேட்கச் சொன்னார்."

tamilebooks.net

"என்னவோ?"

"எப்போது கோட்டையை எங்களிடம் ஒப்படைக்கப் போகிறீர்கள்?"

"எதற்காக ஒப்படைக்க வேண்டுமாம்?" விஷமமாகக் கேட்டான் அண்ணன் பல்லவராயன்.

"கோட்டையும் கொத்தளமும் சேதமாகாமல் இருக்க வேண்டுமென்றால் நீங்கள்தானே ஒப்படைக்க வேண்டும்?"

"தவிர்க்கப் படவேண்டிய சேதம் வீரத்திற்கும் மானத்திற்கும் தானேயன்றி கோட்டைக்கும் கொத்தளத்திற்கும் அல்ல பெண்ணே. சேதமாகும் கோட்டையைப் புதுப்பித்துக் கொள்ளலாம். வீரத்தையும் தன்மானத்தையும் அப்படிச் செய்ய முடியாது."

"பல்லவராயரே நீங்கள் இப்படிப் பேசுவீர்கள் என்று தண்டநாயகர் சொன்னார்."

"மகிழ்ச்சி."

"ஆனால் கூடவே வேறொன்றையும் சொன்னார்."

"என்ன அது?"

"வீரமும் மானமும் மட்டுமல்ல, கணிசமான படைகளும் திறமையும் தேவை என்றார். உங்களிடம் அவை. . ."

"இல்லை என்றுச் சொல்லுகிறாரோ அந்த மாவீரர்?"

"உண்மைதானே?"

"பெண்ணே, போய் உன் தண்டநாயகனிடம் சொல், எதிரியை அற்பமாக எடைபோடும் எந்தப் படைத் தலைவனும் வெற்றி பெற்றதில்லை என்று சொல். இங்கே வாழும் ஒவ்வொரு குடிமகனும் வாளெடுத்து வீசத் தெரிந்தவன் என்று சொல். தூதாக ஒரு பெண்ணை அனுப்பினால் பல்லவராயன் பல்லைக் காட்டி விடுவான் என்று நினைக்க வேண்டாம் என்று சொல். நீ புண்ணியம் செய்தவள். ஆகவேதான் தூதாக வந்ததோடு திரும்பியும் போகிறாய்..." படபடவெனப் பொரிந்தான் சேனாதிபதி.

"முன்யோசனையுடன் தான் சொல்கிறீர்களா? " இந்த பல்லவராயன் யோசிக்காமல் சொல்வதில்லை. சொன்னபின் யோசிப்பதுமில்லை."

"தண்ட நாயகரைப் பற்றி அறியாமல் பேசுகிறீர்கள். பின்னால் வருத்தப்படப் போகிறீர்கள்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள் ரோகண நங்கை.

tamilebooks.net

அவள் சென்றபின் தன் சகோதரனை நோக்கிய அமைச்சர் "அவசரப்பட்டு விட்டாயே தம்பி. யோசிக்காமல் சொல்வதில்லை என்றாயே தவிர எதை நீ யோசித்தாய்? வீராப்பு பேசி அனுப்பி விட்டாயே—எந்த உரிமையில் பேசினாய்? மர்ம மன்னரின் ஆணையின்றி நாம் எதையும் செய்வதில்லை என்பதை எப்படி மறந்தாய்? மோசம் போனோம் நாம்" பதைபதைப்புடன் பேசினார்.

ரோகண நங்கை தூதாக வந்ததும் அவளுக்குப் பல்லவராயர் அளித்த பதிலும் மக்களுக்குத் தெரியவந்த பட்சத்தில் அவர்களது பீதி அதிகமாயிற்று. இலங்காபுரன் இனித் தங்களை சும்மாவிட மாட்டான் என்று நம்பிய அவர்கள் தற்போது பல்லவராயர்களைச் சபிக்கலானார்கள். வறட்டு ஜம்பம் பேசி அனைவரையும் இந்தப் பல்லவராயர்கள் அழிக்க விருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். கோட்டையில் இருந்த வீரர்களுக்குத் தங்கள் பலம் எவ்வளவென்று தீர்க்கமாகப் புரிந்திருந்த காரணத்தால் தங்கள் கதி அதோ கதி என்பதை உணர்ந்து கொண்டார்கள். வீரம், மானம் என்ற பெயரில் தங்களைப் பலியாடுகளாய் ஆக்கிவிட பல்லவராயர்கள் முனைவதாகவும் கருதினார்கள்.

இதற்கிடையில் மக்கள் எதிர்பார்த்து பயந்த மாதிரியில்லாமல் முற்றிலும் வித்தியாசமாக நடந்து கொண்டான் இலங்காபுரன். அவனோ அவன் படைகளோ எந்தவித அழிவு வேலைகளிலும் இறங்கவில்லை. ரோகண நங்கை நகர்புறங்களில் அனுப்பப்பட்டாள். குடிமக்களிடம் வினயமாகப் பேசுவதிலும் குறைகளைக் கேட்டறிவதிலும் முற்பட்டாள். குறை சொல்ல முற்பட்ட இடங்களில் படைவீரர்களைக் கொண்டு நிறைவு செய்யப்பட்டன. படைகளால் சாதாரணமாகத் தூர்ந்து போகும்படி செய்யப்படும் குளங்களும் கிணறுகளும் ஆழப்படுத்தப்பட்டன. மக்களால் எதிரியாகக் கருதப்படாமல் தங்களில் ஒருவனாய் எண்ணப்படும் நிலைக்கு மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தான் இலங்காபுரன். மக்களாகவே அவனுக்குக் கோட்டைக் கதவுகளைத் திறக்கச் சொல்லி பரட்சி செய்வார்கள் போலிருந்தது. இந்த நிலைமையை அறிந்தார் பெரிய பல்லவராயர். மக்களின், வெறுப்புக்கிடையில் ஆட்சியும் வெற்றி பெற முடியாது என்ற சித்தாந்தத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த அவர்கள் மர்ம மன்னனிடமிருந்து ஆணையேதும் வராத நிலையில் அண்ணன் பல்லவராயனுடன் ஆலோசனை செய்து முடிவில் கோட்டைக் கதவுகளை இலங்காபுரனுக்குத் திறக்கும்படி கட்டளையிட்டார்.

tamilebooks.net

அதையடுத்துக் கோட்டை வீரர்களும் போர் பொறிகளும் அகற்றப்பட்டன. சங்கு 'பூம்பூம்' என்று ஊதப்பட்டது. பலத்த ஓசையுடன் கதவுகள் திறக்கப்பட்டன. அதையும் அடுத்துத் தன் படையில் சிறுபகுதி ஒன்றை மட்டுமே உடன் கொண்டு வெண் புரவி மேலமர்ந்து வெற்றிப் பேரிகைகள் முழங்க கோட்டைக்குள் பிரவேசித்தான் இலங்காபுரன்.

உள்ளே பிரவேசித்த அவன் மௌனமாய் நின்றிருந்த பல்லவராயர்களையும், சரணடையக் காத்திருந்த வீரர்களையும் பார்த்துப் புன்னகை மட்டுமே செய்து பின்னால் நகர்ந்தான். ஆணைகள் எதையும் பிறப்பிக்கவில்லை. மாறாக நகரின் ராஜவீதிகளில் வலம் வந்தான்.

கூட்டம் கூட்டமாய் நின்ற மக்களிடம் மகிழ்ச்சி பொங்க கைகளை ஆட்டினான். பலரை அன்புடன் விசாரித்தான். சிலரிடம், "என்னிடம் உங்களுக்கெல்லாம் கோபமா?" என்று வினவினான். "இல்லை, இல்லை" என்று மக்கள் மகிழ்ச்சி ஆராவாரம் செய்தார்கள். சிலரிடம், "நீங்கள்தான் எனக்கு முக்கியம். ஆகவேதான் போரிடவில்லை" என்றான். மக்கள் ஆரவாரம் செய்தார்கள்.

இவற்றையெல்லாம் பார்த்தபடி இலங்காபுரனின் பின்னால் வந்து கொண்டிருந்த அண்ணன் பல்லவராயன் பெரிதும் வியந்து போய் சற்றே முன்னேறி இலங்காபுரனை உன்னிப்பாய் பார்த்தான். அவனது சந்தேகம் வலுத்தது. இலங்காபுரனை நோக்கி, "தாங்கள்... தாங்கள்" என்று ஏதோ குழறினான்.

இலங்காபுரன் சகஜமாகவே, "என்ன பல்லவராயரே, என்ன சந்தேகம் உமக்கு? நான்தான் இலங்காபுரன்" என்றான்.

"இல்லை, இல்லை" மறுத்தான் பல்லவராயன்.

"அப்படியானால் உங்களுக்குப் பிடிக்காத மனிதனாய் இருக்க வேண்டும்" என்று கூறித் தன் வேஷங்களைப் புரவியின் மீதிருந்தபடியே களைந்துவிட்டு, "நான்தான் பல்லவராயரே, அனைவராலும் வெறுக்கப்பட்ட உங்கள் இளவரசன் கரிகாலன். இலங்காபுரனாக வந்தால்தான் உங்களுக்கெல்லாம் பிடிக்கிறது" என்று கூறி விஷமமாகச் சிரித்தான் சோழ இளவல் கரிகாலன்.

பல்லவராயனின் உடல் நடுங்கியது.

ஃஃ ஃஃ ஃஃ

மறுநாள் அவை கூடியது. ஏராளமான மக்களும் அதிகாரிகளும் என்றுமில்லாத ஆர்வத்துடன் வந்து

tamilebooks.net

கூடினார்கள். அவையின் பிரதான ஆசனத்தில் இருந்த கரிகாலன் எழுந்து கம்பீரமான குரலில் கூறலானான்:

"என் அருமை குடிமக்களே, அதிகாரிகளே, உங்களிட மெல்லாம் நாடகமாடியதற்கு முதலில் மன்னிப்பு கேட்க வேண்டும் நான். இரண்டாம் ராஜராஜ சக்கரவர்த்திகள் காலமானாலும் இளவரசனாய் இருந்த என்னை என்ன காரணத்தாலோ நீங்களெல்லாம் முடிசூட எதிர்த்தீர்கள்."

"அதே சமயம் சோழநாட்டின் அரியணையில் அமர்ந்த வேறு எவரும் இல்லாதது கண்டு தவிக்கவும் செய்தீர்கள். மக்களின் எதிர்ப்புகளுக்கிடையில் அரசனாவதென்பது பொருத்தமான ஒன்றுதான். அதற்காக நான் விலகிவிடத்தயார். ஆனால் இச்சோழ நாட்டை—விஜயாலயரும் பராந்தகரும் அருள்மொழி வர்மரும் ஸ்தாபித்த பொன்னி நாட்டை அழியவிட நானெப்படி தயாராக இருக்கமுடியும்? ராஜராஜனின் மக்கள் பாலகர்களாய் இருக்கையில் இதைக் காப்பது யார்? ஆகவேதான் நானும் முக்கிய நண்பர் ஒருவருமாக ஆலோசித்து நாடகமாடத் தலைப்பட்டோம்."

"அந்த நாடகத்தின் தொடக்கமாய் நான் மர்ம மன்னனானேன். கடற்படையை நடத்திச் சென்ற நானெப்படி மன்னனாக முடியும் என்று நீங்கள் அதிசயிக்கலாம். உண்மை. நான் படைகளோடு கடலோடினேன். படைகளை வணிகர்களாகத் தமிழகத்திற்கு அடிக்கடி வரும் வணிகக் கப்பல்கள் மூலம் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அதன் பொறுப்பைக் கடற்படைத் தளபதி அமரகோனிடம் ஒப்படைத்துவிட்டு வணிகனாய் உடனடியாகத் தமிழகத்திற்குத் திரும்பினேன் நான்."

"இதற்கிடையில் சோழநாட்டில் அரசியல் எப்படி நடக்க வேண்டும் என்று நானும் என் முக்கிய நண்பரும் கலந் தாலோசித்தோம். அதன் பலனாய் மர்ம மன்னனின் ஆணைகளாகச் சில ஆணைகளைத் திடீர்திடீர் என்றும், அவசியத்தையொட்டியும் பிறப்பிக்கும்படி முக்கிய நண்பரிடம் கூறிவிட்டு, அவருக்கு ராஜமுத்திரையைப் பொறிக்கும் அதிகாரத்தையும் வழங்கிவிட்டுச் சென்றேன்."

"மர்ம மன்னனின் ஆணைகளை நீங்கள் கண்டிருப்பீர்கள். அவற்றின் இயல்பான தன்மையும் சிற்சில கடுமைகளையும் கூட கண்டிருப்பீர்கள். மர்ம மன்னனின் ஆணைகளின் பேரில் உங்களுக்குச் சிறிதும் சந்தேகம் வராத வகையில் நேரம் பார்த்துச் சரியாகவும் சிறப்பாகவும் பிறப்பித்து நிறைவேற்றினார் என் நண்பர். அந்த மகாபுருஷருக்கு நான் மட்டுமல்ல இந்தச்

tamilebooks.net

சோழநாடே கடமைபட்டிருக்கிறது" என்று கூறிய கரிகாலன் பரவசத்தால் சிறிது நேரம் வரை மௌனமாக இருந்து விட்டுத் தொடர்ந்தான்.

"நான் மர்ம மன்னனாய் மாறியது பதவியைப் பிடிப்பதற்காக அல்ல. ராஜராஜ சோழரின் மரணத்திற்குப் பின்னால் உண்டான திடீர் குழப்பத்திற்கும் பூசல்களுக்கும் காரணமென்ன என்பதைக் கண்டறியவும் களைந்தெறியவும் தான். அந்த காரியத்தில் இறங்குவதற்கு முன்னால் ராஜராஜரின் அருஞ் செல்வங்களான பாலகன் குலோத்துங்களையும் சிறுமி சோழவல்லியையும் தகுந்த வகையில் பாதுகாக்க உத்தேசித்து அவர்களையும் மன்னர் குடும்பத்தாரையும் பழையாறை ஆயிரத்தளி அரண்மனையிலிருந்து அகற்றி பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லும்படி கேட்டுக் கொண்டேன் நான். அந்தக் காரியத்தைத் தட்டாமல் செய்தார் என் நண்பர்."

தற்போது பாலகர்கள் பாதுகாப்பாகவும் சீரும் சிறப்புமாகவும் என் அன்னையாரின் பராமரிப்பில் கடம்பூரில் இருந்து வருகிறார்கள். பருவம் எய்தியதும் அவர்கள் வரவேண்டிய இடத்தில் அமர்வார்கள். அணி செய்வார்கள். அது குறித்து யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

"கடம்பூர் ஏற்பாடுகளைச் செய்த நான் என் பணியைத் துவக்க ஒற்றன் பார்த்திபனானேன். சோழநாடு முழுவதும் ஒற்றனாய் உலவினேன். என் மீது மக்களுக்கு உண்டான வெறுப்பு குறித்து எனக்குப் பெருத்த அவநம்பிக்கையே இருந்தது. ஏனென்றால் என் மக்களைப் பற்றி எனக்குத் தெரியும். ராஜ மரபுகளை மதிப்பவர்கள் மக்கள். ஆட்சி செய்கிறவர்களின் பேரில் அவர்களுக்காக வெறுப்பு உண்டாவதில்லை. ஆட்சியை எதிர்க்கும் சுபாவம் இயற்கையாக அவர்களிடம் அமைந்து விடுவதில்லை."

ஆட்சி புரிகிறவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் ஏதோ ஒரு சக்தி சுயநல கும்பலாகச் செயல்பட்டுத்தான் இத்தகைய விபரீதத்தை ஏற்படுத்துகிறது. சுருக்கமாகச் சொன்னால் அரசியல்வாதிகள் சிலரது சுயநல வேட்கையினால் ஆட்சிபுரிகிறவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் பிணக்குகளும் பேதங்களும் சிறுகச் சிறுகத் தோன்றி அவர்களது ஆசைகளைப் போல் வளர்ந்து முடிவில் அவர்களாலேயே அடக்க முடியாத அளவிற்கு வளர்ந்து அமைதியைக் குலைத்துவிடுகின்றன.

சுயநலம் விரும்புவோர் அரசியலுக்கு வருவதும், அரசியலில் வருவோர் சுயநலம் விரும்புவதும் நாட்டைக் கெடுக்கும் நிரந்தர விபத்துக்கள். அந்த விபத்துக்களையே

tamilebooks.net

கண்டேன் நான். அவை பெருகுவதற்குள் உடைக்கப்பட்டால்தான் ஆட்சியில் அமைதி நிலவும் என்பதை உணர்ந்தேன். குறிப்பிட்ட அதிகாரிகள் சிலர்—மண்டலாதிபதிகள் சிலர்—தளபதிகள் சிலர்—கோட்டைத் தலைவர்கள் சிலர் இப்படிப் பலர் பயிர்களாக வளர்வதை அறிந்தேன். அவர்களிடம் பயங்கரத் திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. காபாலிகர்களைக் கொண்டு ஆட்சியை ஸ்தம்பிக்க வைத்து, பல்லவராயர்களைச் சிறை செய்து சோழர்குல விளக்குகளை அணைத்து, நாட்டை இருள வைத்து சுயநலக் கூத்தடிக்கவிருந்த அச்சதி அழிக்கப் பட்டது.

ஒற்றன் பார்த்திபனாய் இருந்து இவற்றை அறிந்த நான் மர்ம மன்னனாய் இருந்து ஆணைகளைப் பிறப்பித்து சம்மந்தப்பட்ட அனைவரையும் சிறையிட ஏற்பாடு செய்தேன். அந்தப் பிரமுகர்களின் பெயர்கள் என்னால் இங்கே உச்சரிக்கப்பட வேண்டாம். ஒற்றனாய் உலவிய காலத்தில் சிற்றிடையாள் ஒருத்தியும் எனக்கு வாய்ந்தாள். அவள் ரோகண நங்கை. ரோகணத்தின் இளவரசி. அவளன்பு பேரன்பு. இதை அதிகமாக இங்கே பிரஸ்தாபிப்பது நாகரீகமாகாது.

"இப்படி மக்களிடம் வெறுப்பையும் எதிர்ப்பையும் உருவாக்கியவர்களை ஒடுக்கிய நான் என் சக்தியை உணர்த்திக் காட்டும் வகையில் உங்களுக்கெல்லாம் அதிர்ச்சி வைத்தியம் ஒன்றைக் கொடுத்தேன். அதுதான் நான் இலங்காபுரன் வேட மிட்டதும் கோட்டையை முற்றுகையிட்டதும். இதையும் சாமானியமாகச் சாதித்துவிட முடியவில்லை. மாநக்காவரத்தி லிருந்து வணிகர்களாகத் திரும்பத் தமிழகத்திற்கு வந்து சேர்ந்த என் வீரர்கள் கங்கைகொண்ட சோழபுரத்தின் அண்டை கிராமங்களில் ரகசியமாக உறையவைத்து கோட்டையை வளைக்க சரியான நேரத்தை எதிர்பார்த்தபடியிருந்தேன்."

"ஆகவேதான் திடீரென ஒரே இரவில் படைகளைத் திரட்டி இங்கே கொண்டுவர முடிந்தது. கோட்டையின் நிலைமையை அறிந்தேன். வளைத்தேன். ரோகண நங்கையை அனுப்பி அதிகப் பிரசங்கம் செய்தேன். பல்லவராயர்களின் ரோஷத்தை உண்டாக்கினேன். அதே சமயம் உங்களையெல்லாம் நானெப்படி அழிக்க முடியும்? ஆகவே அன்பு காட்டி உங்களின் எழுச்சி மூலமே கோட்டைக் கதவுகளைத் திறக்கவும் செய்தேன். இப்படிச் செய்ததற்குக் காரணம் நான் விரும்பினால் பகைவனாகிக் கூட இச்சோழ நாட்டை வென்று முடிசூட முடியும் என்பதை நிரூபிக்கத்தான். மொத்தத்தில் என் பணி இந்த அளவில் முடிகிறது. இப்போதாவது என் மீதுள்ள வெறுப்பும் பகையும் உங்களுக்குப் போய்விட்டதா?"

tamilebooks.net

—என்று முடித்தான் கரிகாலன். அவனது குரல் தழுதழுத்து நின்றது. அதுவரை பெரும் நிசப்தத்தில் ஆழந்திருந்த அவை சலசலத்து பேராரவாரம் செய்தது.

அதைக்கண்ட கரிகாலன் பல்லவராயருக்காகத் திரும்பி, "என்ன பல்லவராயரே, தகாதது ஏதாவது செய்து விட்டிருந்தால் இந்த மர்ம மன்னனைத் தண்டிக்கலாம். . ." என்றதும் பிரமையிலிருந்து விடுபட்ட அண்ணன் பல்லவராயன் தர்மசங்கடத்துடன், "எங்களனைச் சோதித்து போதும் பிரபு. அதோ பாருங்கள் மக்களின் ஆரவாரத்தை. அவை வெறும் ஆரவாரமல்ல பிரபு. அவர்களது அங்கீகாரமும் கூட. தயைகூர்ந்து முடிசூடியருளுங்கள். . ." என்றான்.

"ஆம். ஆம். தாங்கள்தான் முடிசூட வேண்டும். . ." என்று மக்களிடையேயும் ஒரு மனதான குரல் எழுந்தது.

அக்காட்சியைக் கண்டு சற்றே சிரித்த கரிகாலன், "என் பெயருக்கும் எனக்கும் பொறுத்தமில்லை. எதிரியில்லாமல் இருக்க வேண்டும் நான். ஆனால் எனக்கு மக்களே எதிரிகளாக இருந்து விட்டார்களே, நானா எதிரிலி பெருமாள்?" என்று கேட்டான்.

"மன்னவா, உங்களுக்கு இப்போது எதிரிகள் ஒருவரும் இலர். நீங்கள் தான் மன்னர். மன்னருக்கும் மன்னர். ஆகவே இன்றிலிருந்து ராஜாதி ராஜராக இருந்து தாங்கள் சோழ மண்டலத்தைக் காத்தருள வேண்டும்" என்று பணிவோடு தெரிவித்துக் கொண்டார் அமைச்சர்.

"இராஜாதி ராஜர்!"

"வாழ்க வாழ்க!"

"சோழ மாமன்னர்!"

"வாழ்க வாழ்க!"

"புலிக்கொடி!"

"வாழ்க வாழ்க!"

மக்களின் வாழ்த்தொலி கங்கை கொண்ட சோழபுரமெல்லாம் எதிரொலித்தது. மக்களையும் நாட்டையும் கெடுத்துக் குலைக்க விருந்த பூசல்களை அறுத்துத் தன் சக்தியின் மூலம் மக்களைப் பாதுகாக்கும் தன் திறமையையும் அவன் மெய்ப்பித்தானாதலால் அன்று வரை எதிர்த்த மக்கள் இன்று வாயார வாழ்த்தி வரவேற்றார்கள். அவனைப் பெரிதும் மதித்தார்கள். முறையாகச் செய்து மக்களைப் பாதுகாக்கும் மன்னன் தெய்வமாகக் கருதப்படுவான் என்ற வள்ளுவனின் வாக்கு அங்கே அன்று மெய்யாகியது.

tamilebooks.net

ஃ ஃ ஃ

இருநாட்களுக்குப் பிறகு அந்தரங்க அவை கூடியது.

"பாண்டிய நாட்டில் குலசேகர பாண்டியன் தோற்றுப் போன விவரமெல்லாம் தங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறோம்" என்றான் அண்ணன் பல்லவராயன்.

"தெரியாமலும் இருக்கும் என்று எதிர்பார்க்கிறீரா?" என்று விஷமமாகக் கேட்டான் கரிகாலன்.

கரிகாலனின் இயல்பான விஷமத்தைக் கண்டபோது அனைவருக்கும் ஆனந்தமாக இருந்தது.

அண்ணன் பல்லவராயன் மேலும் தொடர்ந்து, "சிங்களத்துப் புயல் பெரிதும் கலக்கிவிட்டது பாண்டிய நாட்டை. இந்த நிலையில் நமது கடமை..." என்று கூறி நிறுத்தினான்.

இதைக் கேட்டதும் கரிகாலனின் முகம் கடுமையாகியது.

"சோழ நாட்டின் கடமையை நான் மறந்து விடவில்லை பல்லவராயரே, அதைச் செய்யாமல் போகமாட்டேன். ஆனால் அதற்கான நேரம் இன்னும் சரியாக வரவில்லை. நீர் குறிப்பிட்ட சிங்களத்துப் புயல் இஷ்டத்திற்கும் வீசி ஓய்ந்து விட்ட நிலைதான் தற்போதைய நிலை. இந்த நிலையில் நாம் சற்று நிதானிப்பது நல்லது. சகோதர நாட்டைக் காக்க வேண்டியது அவசியம்தான். அதே சமயம் அதை நாமாகத் தலையிட்டுச் செய்ய வேண்டியதில்லை. தோற்றுவிட்ட குலசேகர பாண்டியர் மீண்டும் அரியணையைப் பெற முயலாமல் இருக்க மாட்டார். அக்காரியம் அவரால் மட்டுமே முயலக்கூடியதல்ல. அவருக்கு உதவிய கொங்கு மன்னனும் நலிந்துவிட்ட நிலையில் நம் ஆதரவை அவராக நாடும் சாத்தியமிருக்கிறது. அந்த நேரம் விரைவிலேயே வரும். அது மட்டுமல்ல. வீரபாண்டியனை அரியணையில் அமர்த்தியிருக்கும் இலங்காபுரனின் நடவடிக்கை எப்படி இருக்கும் என்பதும் நமக்குப் புரிகிறது. பாண்டிய நாடு ஏறக்குறைய சிங்கள வசமாகி விட்ட மாதிரி தான். ஆகவே அவன் அடுத்த காரியமாக சோழ நாட்டை விழுங்க முயல்வான். அதற்கு அவனது தற்போதைய படைபலம் போதாது. மேலும் கணிசமான படைகளைச் சிங்களத்திலிருந்து தருவித்துக் கொள்வான். அதாவது இன்னொரு புயல் வரப்போகிறது தமிழகத்திற்கு. அது வரட்டும். பாண்டியரும் வருவார். அப்போது நாம் தருகிற பதிலால் சிங்களத்திலிருந்து இன்னும் பல தலைமுறைகளுக்கு ஒரு புயலும் வராமல் செய்து விடும். அது வரை இச்சிங்களத்துப் புயலை மறந்திருங்கள்" என்று கம்பீரமாகச் சொன்னான்.

tamilebooks.net

அவனது விளக்கத்தால் அனைவரும் திருப்தியடைந்த நிலையில் பல்லவராயன் பேசமுற்பட்டு, "பிரபு, சோழ நாட்டுப் பெண் கடலழகியை இலங்காபுரன் கொன்று விட்டான். . ." என்றான்.

"அவள் சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் பற்றிய விவரங்களை இலங்காபுரனுக்குச் சொன்னாலும் அவளது தீர்மானம் வேறாகவே இருந்தது. சமயம் பார்த்து இலங்காபுரனைக் கவிழ்க்கவே அந்த நாடகமாடினாள் அவள். ஆனால் எதிர்பாராத விதத்தில் இலங்காபுரனால் கொல்லப்பட்டு விட்டாள். . ." என்றான் வேறொரு தளபதி.

"தெரியும் தளபதி. தெரியும். தமிழ்ப் பெண்களைப் பற்றி எனக்குத் தெரியும். தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்த பெண்ணொருத்தியும் நம் சரித்திரத்தில் இல்லை. அக்கலையைச் சிங்களப் பெண்கள் வேண்டுமானால் சர்வசகஜமாக செய்யலாம். எனக்குப் பழக்கமான ரோகண நங்கை சிங்களவரைக் காட்டிக்கொடுத்து இலங்கையை அபகரிக்க உதவுவதாகச் சொன்னாள். நானதை ஏற்கவில்லை, அவளது அன்பைத்தவிர, இருக்கட்டும். கடலழகியின் தலையைத் துண்டித்த இலங்காபுரனின் தலையை நானே துண்டிக்கிறேன். பழி துடைக்கிறேன்..." என்று சொன்னான் கரிகாலன்.

அவையோர் சிறிது நேரத்தில் கலைந்ததும் அண்ணன் பல்லவராயன் மட்டும் சற்று நிதானித்து கரிகாலனிடம், "பிரபு, தங்களுக்கு உதவிய முக்கிய நண்பர் யார்? சொல்லக் கூடாதா என்னிடம்?" என்று வினவினான்.

"அதை மட்டும் கேட்காதீர் பல்லவராயரே. அந்தப் பெயரை நான் சொல்ல வேண்டிய காலம் வரும். அப்போது சொல்கிறேன். அந்த மகாபுருஷரின் விருப்பம் அதுதான். சற்றுப் பொறுத்திருங்கள். சோழ வரலாற்றில் அவரது உதவியும் பணிகளும் பொன்னேடுகளாகச் சமைக்கப்படும். அப்போது மனம் பூரிக்க நான் இருக்கிறேனோ, இல்லையோ நீர் இருப்பீர். வாயாரப் போற்றுங்கள் அந்தச் சோழர்குல தெய்வத்தை. . ." என்று நா தழுதழுக்கக் கூறி நிறுத்தினான் சோழமன்னன் இரண்டாம் ராஜாதிராஜன்.

ஃஃ ஃஃ ஃஃ

சீர்மல்கும் சோழகங்கம் ஏரியின் வெள்ளி நீரலைகள் கரைகளில் மோதி கங்கை கொண்ட சோழபுரனின் வரலாற்றை

tamilebooks.net

எழுதுவதுபோல் பாவனை காட்டிக் கொண்டிருந்தது. மாரிக் காலத்தில் மத்தியப் பகுதி. ஏறக்குறைய திக்கெல்லாம் இருண்டு கிடந்தது. அந்த ஏரியின் தென்கரை மண்டபத்தில் அணையாத விளக்காக விளங்கிய ரோகண நங்கையைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டிருந்த சோழ மன்னன், "ரோகிணி. . ." என்று மெல்ல அழைத்தான் அவளது செவிக்கருகில்.

"ம்" என்றாள் அவள்.

"சோழ அரியணையில் அரசியாக அமர ஏன் மறுத்து விட்டாய்?" என்று வினவினான் மன்னன்.

"தாங்கள் மட்டும் நான் தருவதாகச் சொன்ன இலங்கை சிம்மாசனத்தை ஏன் மறுத்தீர்களாம்?" என்று கொஞ்சும் தமிழில் கேட்டாள் ரோகண இளவரசி.

காட்டிக் கொடுத்து உதவுவதாகச் சொன்னதையும் அதைத்தான் மறுத்து விட்டதையுமே அவள் குறிப்பிடுகிறாள் என்பது கரிகாலனுக்குத் தெரிந்தது. அது விஷயமாக அவளோடு அதுவும் தற்போது எதையும் விவாதிக்க அவன் விரும்பவில்லை.

"அப்படியானால் பதிலுக்குப் பதில் கண்டிப்பாகச் செய்வாயா?" என்று கேட்டான்.

"ம்" என்றாள் அவள்.

"அப்படியானால் சரி. . ."

"என்னது சரி?"

"இதோ. . . இதற்கு உன் பதில் என்ன?" என்று கூறிய அவன் தன் அதரங்களை அவளது கன்னத்தில் முத்திரையாய் பதித்தான்.

பதிலுக்குப் பதிலை எதிர்பார்த்தான்.

அவளோ தருகிற நிலையில் இல்லை.

அவள் சிங்களப் பெண்தான். ஆனாலும் வெட்கப் பட்டாள் பதிலைத்தர.

"இவ்வளவுதானா நீ" என்று கேட்டு இரைந்து சிரித்தான் கரிகாலன்.

அவனை ஆதரிப்பது போல் சோழகங்கம் ஏரியும் தன் அலைக் கைகளால் கரையில் மோதி பெரிதாகச் சப்தித்தது. இடி முழக்கங்களும் வானில் எழுந்தன!

* * *

tamilebooks.net